# ஸாம-வேதம்

(தமிழ் மொழி பெயர்ப்பு)

இது
திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்களாகிய
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள்
அவர்கள் பொருள் உதவியைக் கொண்டு
பிரசுரிக்கப்பட்டது.

வேதோபநிஷத ஆசிரியர்
ம. ரா. ஜம்புநாதன்

ஜம்புநாதன் புஸ்தகசாலை
14, பள்ளியப்பன் தெரு,
சௌகார்பேட்டை :: சென்னை

யுவ வருஷம் ஐப்பசி மீ

காபிரைட் ரிஜிஸ்டர்] [விலை ரூபா ௧—௮—0

அக்ன ஆயூம்ஷி பவஸே
ஆஸு வோர்ஜமிஷன்ச ந :
ஆரே பாதஸ்வ துச்சுநாம். (ஸாமன் கூச. க.)

Printed at the Liberty Press, G. T. Madas.

உ

ஸ்ரீ விசுவலிங்கந் துணை.

# ஓர் அறிவிப்பு.

# ஆயிரம் ரூபாய் தமிழ்ப் பரிசு.

இப்போது திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்துத் தனித் தமிழ் வித்வான் முடிவுப் பரீக்ஷையில் வருஷந்தோறும் முதன் முறையிலேயே முதல் வகுப்பில் முதல்வராகத் தேறும் ஒருவருக்கு ஆயிரம் ரூபாய் வீதம் சாசுவதமாக அளித்து வருவதற்கு ஒரு மூலதனம் இருக்கும் பொருட்டு ரூபாய் நாற்பதினாயிரத்துக்குத் தமது ஆயுளை அமெரிக்காகண்டத்தில் டாரண்டோ என்னும் நகரத்திலுள்ள "தி மானுபாக்ச்சரர்ஸ் லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி" யில் இன்ஷ்யூர் செய்து 1943-ஆம் வருஷம் ஆகஸ்டுமாதம் முதல் தேதிபூர்த்தியாகிற 4, 46, 416 என்னும் எண்ணுள்ள பாலிஸியை எடுத்துக் கொண்டிருப்பதில் இன்று வரையில் செலுத்தப்பட்டிருக்கும் பிரீமியம் தொகை ரூபாய் (25,080) இருபத்தையாயிரத்து எண்பதாகிறது.

மேற்கண்டவாறு பரிசு வழங்கிவருவதில் 1929-ம் ஷூத்தில் கும்பகோணம் போர்ட்டர் டவுன் ஹாலில் பிரஹ்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் தலைமையில் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ வித்வான் வி. மு. சுப்பிரமணிய ஐயரவர்களும், 1930-ம் ஷூத்தில் திருவல்லிக்கேணி சிங்கராசாரியார் ஹாலில் கௌரவம் பொருந்திய டாக்டர் ஸர் பி. சிவஸ்வாமி ஐயரவர்கள் தலைமையில் சிதம்பரம் அண்ணாமலை யூனிவர்ஸிடியில் தமிழ்ப்பண்டிதராகவுள்ள ம-ா-ா-ஸ்ரீ வித்வான் ஆ. பூவராகம் பிள்ளை அவர்களும், 1931-ம் ஷூத்தில் சென்னை ஆண்டர்ஸன் ஹாலில் சென்னை மாகாணக்கல்வி மந்திரி கௌரவம் பொருந்திய ம-ா-ா-ஸ்ரீ திவான்பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியாரவர்கள் தலைமையில் ம-ா-ா-ஸ்ரீ வித்

வான் K. சுந்தரமூர்த்தி ஐயர் M. A., அவர்களும், 1932-ம் ஞூத்தில், மதுரை விக்டோரியா எட்வர்ட் ஹாலில் இராமநாதபுரம் ராஜா ம-ா-ா-ஸ்ரீ ஷண்முக ராஜேச்வர ஸேதுபதி மகாராஜா அவர்கள் தலைமையில் அண்ணுமலை யூனிவர்ஸிடியில் தமிழ்ப்பண்டிதராகவுள்ள டி-ா-ா-ஸ்ரீ வித்வான் T. P. பழனியப்பப் பிள்ளையவர்களும், 1933-ம் ஞூத்தில் திருச்சிராப்பள்ளி டவுன் ஹாலில் ம-ா-ா-ஸ்ரீ ஸர். டி. தேசிகாசாரியரவர்கள் தலைமையில் சென்னை யூனிவர்ஸிடி ரிசர்ச்சு ஸ்டூடெண்டாகவுள்ள ம-ா-ா-ஸ்ரீ வித்வான் கி. வா. ஜகந்நாதய்யரவர்களும், 1934-ம் ஞூத்தில் கோயம்புத்தூர் Y. M. C. A. ஹாலில் கோயம்புத்தூர் அட்வொகேட் ம-ா-ா-ஸ்ரீ ராவ்பகதூர் T. S. ராமலிங்க செட்டியாரவர்கள் B. A. B. L. M. L. C. தலைமையில் திருப்பூர் முனிசிபல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ வித்வான் A. S. நாராயணசாமி நாயுடு அவர்களும் இப்பரிசை முறையே பெற்றிருக்கிறார்கள்.

நாளது வருஷம் வட ஆற்காடு ஜில்லா திருப்பத்தூர்முனிசிபல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ வித்வான் M. வரதராஜ முதலியார் அவர்கள் ஷை பரிசை பெறுவார்களென்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

இந்த வித்வான் முடிவுப் பரீக்ஷையில் முதன் முறையிலேயே முதல் வகுப்பில் முதல்வராகத் தேறுபவர்களில் ஒருவருக்கு மேற்பட்டவர்கள் சமமான மார்க்குகள் வாங்குவார்களாயின் அவர்களுடைய பெயர்களைத் தனித்தனியே சீட்டுக்களில் எழுதித் தக்கவர்கள் முன்னிலையில் அவற்றைக் குலுக்கிப்போட்டு எடுப்பதில் தெய்வசம்மதமாக எவருடைய பெயர் கிடைக்கிறதோ அவரே ஷை பரிசைப் பெறுவதற்கு உரிமையுள்ளவராவர்.

இதனைக் கண்ணுறும் தமிழ் மாணுக்கர்கள் இந்தப் பரிசைப் பெறும்படி விசேஷமான முயற்சியுடன் தமிழைப் படிக்கும்பொருட்டு இவ்வாறு தெரிவிக்கின்றேன்.

ஸ்ரீ காசி மடம்<br>திருப்பனந்தாள்<br>4—10—1935

இங்ஙனம்,<br>சுப்பராய பிள்ளை,<br>சூபர் வைஸர்.

# AN ANNOUNCEMENT.

*Sri Kasi Mutt, Tirupanandal.*

**Thousand (1,000) Rupees prize for Tamil.**

With a view to award annually a prize of Rupees One Thousand (1,000) to the candidate that stands first in the first Class in Tamil on first appearance in the Oriental Title (Vidwan) Final Examination under Regulation 7—D of the University of Madras and with a view to make an endowment therefor His Holiness Srilasri Kasivasi Swaminatha Swamigal Avergal of Sri Kasi Mutt, Tirupanandal, has insured his life for Rupees Forty Thousand (40,000) in "THE MANUFACTURERS' Life INSURANCE COMPANY" at Toronto, America, taking Policy number 4,46,416 dated the first of August 1928, which matures on the 1st day of August 1943 and for which premiums amounting to Rupees Twenty-five thousand eighty (25,080) have been paid by his Holiness till this date.

I am glad to say that Vidwans Messrs. V. M. Subramania Ayyar, Tamil Pandit, Madras Christian College, A. Boovaraham Pillai, Tamil Pandit, Annamalai University, K. Sundaramurthi Ayyar, M.A., T. A. Palaniappa Pillai, Tamil Pandit, Annamalai University, K. V. Jagannatha Ayyar, Research Student, Madras University and A. S. Narayanaswamy Naidu, Tamil Pandit, Municipal High School, Tirupur were the recipients of the prize in the years 1929, 1930, 1931, 1932, 1933 and 1934 respectively at public meetings held for the

purpose at the Porter Town Hall, Kumbakonam, Singaracharíar Hall, Triplicane, Anderson Hall, Madras, Victoria Edward Hall, Madura, the Town Hall, Trichinopoly and the Y. M. C. A. Hall, Coimbatore under the presidencies of Brahmasri Mahamahopadyaya Dakshinatyakalanidhi Dr. U. V. Swaminatha Ayyar Avergal, Dr. Sir P. S. Sivaswamy Ayyar Avergal, The Hon'ble Dewan Bahadur S. Kumaraswamy Reddiar Avergal, Minister for Education with the Government of Madras, Srimath Shanmuga Rajeswara Sethupathi Maharaja Avergal of Ramnad, Sir T. Desikachariar Avergal, Advocate, Trichinopoly and M. R. Ry. Rao Bahadur T. A. Ramalinga Chettiar Avergal, B.A., B.L., M.L.C., Advocate, Coimbatore.

This year M. R. Ry. Vidwan M. Varadaraja Mudaliar Avergal, Tamil Pandit, Municipal High School, Tirupattur (North Arcot Dt.), is to receive the prize.

In case more candidates than one obtained an equal number of marks standing first in the first class on first appearance in the Final Examination as aforesaid, the Prize-winner will be selected with the grace of the Almighty by the casting of lots in the presence of respectable gentlemen.

I make this announcement in the hope that such Tamil students as peruse this will study Tamil with great diligence so as to win the prize.

Kasi Mutt, Tirupanandal,
4—10—1395.

SUBBARAYA PILLAI,
*Supervisor,*

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| க. | முகவுரை ... .... | க— உகூ |
| உ. | பிரபாடகக் கணக்கு ... | ௩௦— ௩உ |
| ௩. | பூர்வார்சிகம் ... ... | க— க௦௦ |
| ச. | உத்தரார்சிகம் ... ... | க௦க—உஎஅ |
| ரு. | ஸாம கண்ணுடி ... ... | உஎகூ—உஅசு |
| சு. | ஸாமக் குறிப்பு ... ... | உஅஎ—உஅஅ |


## படங்கள்


க. ஓலைகளில் கையால் எழுதப்பட்ட ஸாமவேதம்

உ. ஸ்ரீ கிருஷ்ணசுவாமி சிரௌதிகள் படம்

௩. ஒரு ஸாமகான கோஷ்டி

ச. மர உரியில் எழுதப்பட்ட வேதம்.



பனை ஓலையில் எழுதப்பட்ட ஸாமவேத முதல் இரண்டாவது
காண்ட மந்திரங்கள், கிரந்த எழுத்து.

# ஸாமவேதம்

## முகவுரை.

வேதம்

வேதம் ஒன்று. அதை ஆதியில் ரிக், யஜுர், அதர்வம், சாமம் என் நான்காய் ஸ்ரீ வியாசர் வகுத்தார். விக்ஞானமயம் ரிக்வேதம். வீரம் விளக்குவது யஜுர் வேதம். அனலையும் அறிவையும் அதர்வம் மூட்டும். சர்வேசனின் துதி மந்திரச் சேர்க்கையை ஸாமத்தில் காணலாம்.

சாகைகள்

ஆதியில் ஸாமவேதத்திற்கு ஆயிரம் சாகைகளிருந்தன. இப்போது இந்த ௧௭. சாகைகளையே அறிகிறோம்—(௧) கௌதுமம். (௨) ஜைமினீயம். (௩) ஸாத்தியமுக்ரம். (௪) நைகேயம். (௫) கௌதமம். (௬) சார்தூலம். (௭) வார்ஷகண்யம். (௮) ரௌருகிணம். (௯) சாட்யாயினம். (௧0) காலபவினம். (௧௧) பால்லவினம். (௧௨) ராணாயணீயம். (௧௩) தாண்டியம். (௧௪) சாண்டில்யம். (௧௫) கரத்விஷம். (௧௬) மாஷசராக்யம். (௧௭) காபேயம்.

கௌதுமம், ராணாயணியம்

ஆனால் இந்த சாகைகளில் நாம் அதிகமாய் கௌதுமம், ராணாயணீயத்தைப் பற்றியே அறிகிறோம். கௌதும சாகையில் அடியிற்கண்ட ஆறு பிரிவினைகள் உண்டு என பல நூல்கள் கூறும். அவை—(௧) சாராயணீயம். (௨) வாதாராயணீயம் (௩) பிராசீன தைஜஸம். (௪) அகிஷ்டகம். (௫) வைத்திருதம் (௬) அசுராயணம். ராணாயணீய பிரிவினைகள்—(௧) ராணாயணீயம். (௨) சத்திய முக்ரம். (௩) காலோபம். (௪) மகா காலோபம். (௫) லாங்கலாயனம். (௬) சார்தூலம். (௭) கௌதுமர்கள். (௮) மௌத்கலர்கள். (௯) பாராயணீயர்கள்.



பனை ஓலையில் எழுதப்பட்ட ஸாமவேத முதல் இரண்டாவது
காண்ட மந்திரங்கள், கிரந்த எழுத்து.

# ஸாமவேதம்

## முகவுரை.

**வேதம்**

வேதம் ஒன்று. அதை ஆதியில் ரிக், யஜுர், அதர்வம், சாமம் என் நான்காய் ஸ்ரீ வியாசர் வகுத்தார். விக்ஞானமயம் ரிக்வேதம். வீரம் விளக்குவது யஜுர் வேதம். அனலையும் அறிவையும் அதர்வம் மூட்டும். சர்வேசனின் துதி மந்திரச் சேர்க்கையை ஸாமத்தில் காணலாம்.

**சாகைகள்**

ஆதியில் ஸாமவேதத்திற்கு ஆயிரம் சாகைகளிருந்தன. இப்போது இந்த ௧௭. சாகைகளையே அறிகிறோம்—(௧) கௌதுமம். (௨) ஜைமினீயம். (௩) ஸாத்தியமுக்ரம். (௪) நைகேயம். (௫) கௌதமம். (௬) சார்தூலம். (௭) வார்ஷகண்யம். (௮) ரௌருகிணம். (௯) சாட்யாயினம். (௧௦) காலபவினம். (௧௧) பால்லவினம். (௧௨) ராணாயணீயம். (௧௩) தாண்டியம். (௧௪) சாண்டில்யம். (௧௫) காத்விஷம். (௧௬) மாஷசராக்யம். (௧௭) காபேயம்.

**கௌதுமம், ராணாயணியம்**

ஆனால் இந்த சாகைகளில் நாம் அதிகமாய் கௌதுமம், ராணாயணீயத்தைப் பற்றியே அறிகிறோம். கௌதும சாகையில் அடியிற்கண்ட ஆறு பிரிவினைகள் உண்டு என பல நூல்கள் கூறும். அவை—(௧) சாராயணீயம். (௨) வாதாராயணீயம் (௩) பிராசீன தைஜஸம். (௪) அகிஷ்டகம். (௫) வைத்திருதம் (௬) அசுராயணம். ராணாயணீய பிரிவினைகள்—(௧) ராணாயணீயம். (௨) சத்திய முக்ரம். (௩) காலோபம். (௪) மகா காலோபம். (௫) லாங்கலாயனம். (௬) சார்தூலம். (௭) கௌதுமர்கள். (௮) மௌத்கலர்கள். (௯) பாராயணீயர்கள்.

இப்படியே ஆயிரஞ் சாகைகளுக்குப் பல பிரிவினைகளிருந்திருக்கலாம். அந்தப் பிரிவினைகளைப்பற்றி நாம் ஒன்றுமே இக்காலத்தில் அறிவதில்லை.

இதர ஸாம நூல்கள்

ஆனல் எல்லா சாகைகளுக்கும் ஏறக் குறைய மூலமந்திரங்களான வேத மொழிகள் ஒன்றே. இந்த மந்திரங்களைப் பற்றிச் சொல்லும் பிராமாண முதலிய நூல்கள் ஆயிரக் கணக்கா யிருந்திருக்க வேண்டும். இப்பொழுதும் நாம் காணும் பிராமண நூல்களாவன. (௧) பஞ்ச விம்சம். (௨) சத் விம்சம் (௩) ஸாம விதானம் (௪) ஆர்ஷேயம் (௫) வேதா அத்யாயப் பிராமணம் (௬) தல்வ காரப் பிராமணம் (௭) வம்சப் பிராமணம், (௮) தட்சிண வம்சப் பிராமணம். சில சாம உபனிஷத்துக்கள்—(௧) சாந்தோக்கியம். (௨) கேனம். சில ஸாமவேத சூத்திரங்கள். (௧) ஆர்ஷேய கல்பம். (௨) கல்பானுபதம். (௩) உப கிரந்தம். (௪) அனுபதம். (௫) லாட் யாயனம். (௬) நிதானம். (௭) உபநி தானம். (௮) பஞ்ச விம்சம். (௯) ரிக் தந்திரம். (௧௦) ஸாம தந்திரம் (௧௧) மாத்திரா லட்சணம் (௧௨) ஸ்தோபானு ஸாம ஹாரம் (௧௩) காயத்ரீ விதானம் (௧௪) புஷ்பம் (௧௫) கோபில கிருஹ்யம் (௧௬) கர்மப் பிரதீபம் (௧௭) கிருஹ்ய சங்கி ரஹம் (௧௮) சிராத்த கல்பம்.

ஸாமனும் ஐரோப்பியர் களும்

இதைத் தவிர சாயனரால் செய்யப்பட்ட ஸாமவேத பாஷ்யம், இன்னும் ஸாம சம்பந்தமான சங்கீத நூல்களுமுண்டு. இந்த அநேக நூல்களின் ஏட்டுப் பிரதிகளை அதிகமாய் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் காணலாம். ஸாமவேதத்தைப் பற்றிய அதிக நூல்கள் டச்சுக்காரரால் அச்சடிக்கப்படுகின்றன. டாக்டர் பேக் என்பவன் ஸாமகான வேற்றுமையான கோஷங்களை யெல்லாம் கிராமபோன் ரிகார்டுகளில் எடுத்திருக்கிறன். ஜர்மனியிலும் சாமவேதத்தைப் பற்றிய பல நூல்களுண்டு. ஐரோப்பிய அமேரிக்கர்களால் அச்சடிக்கப்பட்ட நூல்கள்—(௧) பென்பி



ஸ்ரீ கிருஷ்ணசாமி பௌராதிகள்.

மொழி பெயர்த்த ஜர்மன் ஸாம வசனம். (உ) டாக்டர் காலண்டால் பிரசுரமான வடமொழி டச்சு மொழி பெயர்ப்பு ஸாம வேதம். (ங) அவனுல் அச்சடிக்கப்பட்ட கிருஹ்ய சூத்திரம். (ச) பஞ்ச விம்சபிராமணம். (ரு) உப நிஷத பிராமணம் (சு) சிரௌத சூத்திரம். (எ) டாக்டர் காஸ்டிரின் ஜர்மனி பாஷையில் செய்த புஷ்ப சூத்திரம். (அ) பஞ்சவித சூத்திரம். (கூ) எல்சிங்க் எழுதிய சத் விம்சப் பிராமணம். (க0) பர்னவால் ஜர்மனியில் மொழி பெயர்க்கப்பட்ட ஸாம விதானப் பிராமணம், (கக) பாதிரி ஸ்டீவன்ஸ் அறை குறை மொழி பெயர்த்த இங்கிலீஷ் ஸாம வேதம். (கஉ) கிரிப்பத் ஆரண்யம் முதலியவை நீங்கிய ஸாமவேதம் இங்கிலீஷ். (கங) டாக்டர் காலண்டு மொழி பெயர்த்த ஆர்ஷேய கல்ப சூத்திரம். (கச) பண்டித நௌரிஞல் செய்யப்பட்ட ஜர்மனி கோபில கிருஹ்ய சூத்திரம்.

**நமது நாட்டு ஸாம நூல்கள்**

நமது நாட்டில் ஸாம நூல்கள் அதிகமாய் அச்சாகவில்லை. வங்காளி பாஷையிலும் ஹிந்தியிலும் ஸாமவேத மொழி பெயர்ப்புகளுண்டு. சுலபமான விலைக்கு வடமொழி ஸாம வேதம் அஜ்மீர் பரோபகாரிணி சபையால் அச்சடிக்கப்பட்டுள்ளது. கிரந்தாட்சரத்தில் ஸ்ரீ கிருஷ்ணசுவாமி சிரௌதிகளால் வடமொழி ஸாமவேதம் அற்புதமாய் பிரசுரிக்கப்பட்டுள்ளது. கிரந்தாட்சர நூல் இப்பொழுது ஸ்ரீமான் வேம்பு சிரௌதிகள், ஸ்ரீ அகோர சிரௌதிகளிடம் கிடைக்கும்.

**ஸாம கானங்கள்.**

ஸாமவேதத்தை சனங்கள் மனத்தில் பதிய வேண்டுமென கானங்களாக பாக்களாக சுவாங்களுடன் ஆதியில் ரிஷிகள் அமைத்துளார்கள். இக் கானங்கள் அடங்கிய நூலுக்கு ஸாம கானம் எனப் பெயர். இந்நூலின் நான்கு பிரிவுகள். (க) வேய கானம். (உ) அரண்யே கேய கானம். (ங) ஊஹ கானம். (ச) ஊஹ்யம்.

வேய கானம். இதைப் பிரகிருதி எனச் சொல்வதுண்டு, இதில் (கள) பிர பாடகங்கள். ஆக்னேயம். வேய கானம் ஐந்திரம் பாவமானம் என்னும் பாகங்களை யுடையது. இந்த வேய கானம் பூர்வார்சிக முதல் கண்டத்தினின்று ருகூ-வது கண்டம் வரையுள்ள ஸாம மந்திரங்களைத் தழுவும், ஒரு ஸாமனுக்கு ஒரு கானமும் பல கானங்களு முண்டு. மூல ஸாம மந்திரங்கள் ருஅரு-க்கு கானங்கள் ககககள. முதல் ஸாம மந்திரத்தையும் அதற்கான மூன்று வேய கானங்களை இங்கு பார்க்கவும்.

க. உரு க உ ருகஉ, ரு உ ரு க உ
அக்ன ஆ யாஹி வீதயே க்ருணு னோ ஹவ்ய தா தயே.
க0 உ0 ருக உ
நி ஹோதா ஸத்ஸி பர்ஹிஷி.

இதற்கு கானங்கள்.

க ச உ00 க —
க. ஓம்— ஓக்னா இ. ஆயாஹிSரு வொ இ தோயா Sஉ இ—
ந
க — க 0 உ0 க —
தோ யா S உ இ—க்ருணா நோஹ வ்யதா தோயா Sஉ
க — க உ0 க க
இ— தோய்யா S உ இ நா இ ஹோ தா ஸ்ர் Sஉரு. தா
ஸ
A ரு ரு0 ச0 ஸ ரு ரு
Sஉ இ பா Sஉருச ஔ ஹோ வா. ஹீ Sஉருச ஷீ இ
சரு. ச0 ரு0 ச க 0 0 0
உ. அக்னஆயாஹிவீ. தயா இ. க்ருணாநோ ஹவ்யதாதாSஉஉ
உ க 0 0 உ க உ க —
உரு யா இ. நிஹோதா ஸதி பர்ஹாSஉரு இஷீ. பர் ஹா Sஉ:
ஸ

ரு ௫0 0 உ க ககக
இஷா ⁵உருச. ஔ ஹோவா. பர்ஹி⁵ரு ஷீ⁵ருசரு:

சரு ச0 ரு0 ச ச க 0 0
ரு. அக்னஆ யாஹி —வா⁵ரு இ தயா இ. கிருணா நோ ஹவ்

உ^ உ உ உ ரு க உ
ய த⁵க தா₅ருயே. நிஹோ தா₅உருச ஸா. தா⁵உரு இ பா
ஸா

க ரு ரு
⁵ரு— ஹா₅உருச இஷோ ₅சுஹா இ.

அரண்யே கேய கானத்தை சிலர் ஆரணம் எனச் சொல்வார்கள். அதாவது வனத்தில் கோஷிக்கப்படும் கானங்கள், அமைதியில் அறியப்படும் விஷயங்களடங்கிய பாகம் எனப்படும். இதை ஆறு பிரபாடகங்களாயும் பல அரைப் பிரபாடகங்கள் என்னும் பிரிவுகளுடன், அர்க்க பர்வம், த்வந்தவ பர்வம், விருத பர்வம், சுக்கிரிய பர்வமென நான்காய் வகுத்துளார்கள். இது பூர்வார்சிகம் சு0-சுச கண்டங்களைத் தழுவும். இத்துடன் மகா நாம்னியார்சிகம் பஞ்ச புரீஷா பதங்களுக்கும் — சுரு-சுசு. கண்டங்கள் — பிரத்யேக கானங்களுண்டு. மொத்த ஸாம மந்திரங்கள் சுரு. இதற்கு கானங்கள், உகூச.

**ஆரண்யே கேய கானம்**

அரண்ய ஸாம மந்திரம் [க. சு0. க.]

உ ரு க உ ரு கஉருக உரு கஉரு கஉ க0
க. இந்திர ஜ்யேஷ்டம் ந ஆபர ஓ ஜிஷ்டம் புபுரி ச்ரவ: யத்தி

உ0 ரு கஉரு க0க உ0
திருக்ஷேம வஜ்ரஹஸ்த ரோதஸி உ பே சுசிப்ரபப்ரா:—

0 0 0 0 0
இதற்கு ஸாம கானம். ஹா உ ஹா உ ஹா உ — ஔ ஹோ

0 ரு 0 உ 0 0 0
இந்தா ஜ்யேஷ்டம் ந ஆபரா ⁵ருஎ. ஹா உ ஹா உ ஹா உ —

க0 — — 0 க உ 0 0
ஔ ஹோ ꠰ உ — ஒ ꠰ உ ஜிஷ்டம் பூ பா ரா — ஔ ஹோ

0 க 0 0 0 0 கஉ —
வாச் ரா வா:—ஹா உ ஹா உ ஹா உ — ஔ ஹோ ꠰ உ —

0 கஉ 0 0 0
யா ꠰ உ த் — தித்நுக்ஷேமாவ — ஜ்ராஹஸ்த: — ஔஹோவா

0 க உ 0 0 0 க0 — —
ரோதாஸி, ஹா உ ஹா உ ஹா உ—ஔ ஹோ ꠰ உ — ஒ ꠰ உ

0 0 உ க 0 0 க உ
— பேஸ ாசாஇப்ரா — ஔ ஹோ வா பாப்ரா: —

0 0 0 க0 — க ப
ஹா உ ஹா உ ஹா உ — ஔ ஹோ ꠰ உ — ஒ ꠰ உ — உ

உ
ஹா ா வா ꠰ ௬ ஹா உ — வா ꠰ ௬.

மகா நாம்னியார்சிக முதல் மந்திரம்.

௬ க உ ௬ உ ௬ கர உர ௬ க உ
க. விதா மகவன் வி தா கா தும்மனுசம்ஸிஷோ. திச:

க உ ௬ க உ
சிக்ஷா சசீனும்பதே பூர்வீணும் புருவஸோ:—இதற்கு கானம்.

— க0 உ உ உ0க
க. எ ꠰ உ — விதாமகவநிதா : காதுமனுசம்ஸிஷ: — தா
வ

உ உ ௫ —
இசா ꠰ ௬க உவா ꠰ உ௬ — ஈ ꠰ ௬ச டா. எ ꠰ உ —

க 0 உ 0 0 க உ0 க க0 — க உ
சிக்ஷா சசீனும் பதா இ — பூர்வீணும் புரு ꠰ உ — வஸா ꠰

உ
௬க உ வா ꠰ உ ௬ — ஈ ꠰ ௬ச டா.

## பஞ்ச புரீஷபத முதல் மொழி.

ந உ
க. ஏ வாஹ்யே ऽ ந ऽ ந ऽ ந வ. இதற்கு கானம்.

க உ 0 க க க க க
உ. ஆ இவா. ஹியே வா ऽ உ ந ச ரு — ஹோ இ.

உ0 உ ரு
ஹோ — வாஹா ऽ நகஉ வா ऽ உந. ஈ. ऽ நச டா.

ஊஹ கானம் — பிரயோகம் சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு பயன்பட தொகுத்துள்ள கானங்களை ஊஹகானமெனச் சொல்வது. ஊஹகானம் மற்ற கானங்களைப் போல் பூர்வார்சிக உத்தரார்சிக மந்திரங்களைத் தொடர்ச்சியாய் அனுசரிப்பதில்லை. உதாரணமாய் ஊஹத்தின் முதல் கானம் கஎ வது கண்டத்தில் ஆரம்பிக்காமல் ககவது கண்டத்திலேயே ஆரம்பமாகும். ஊஹத்தில் ஏழு பர்வங்கள் — தசராத்திரம், ஸம்வத்ஸரம், ஏகாஹம், அஹீனம், ஸத்ரம், பிராயஸ்சித்தம், க்ஷுத்ரம். இதை உந பிரபாடகங்கள், பல அரைப் பிரபாடகங்கங்களாக வகுத்துளார்கள். ஊஹத்தில் மொத்த கானங்கள் கநகு.

ஊஹ்யம் — ஊஹ்யத்தை இரகசிய கானமெனச் சொல்வார்கள். இந்நூல் ஆறு பிரபாடகம் அநேக பிரபாடங்களுடனுகும். இதற்கு ஏழு பர்வங்களுண்டு அவை—(க) தசராத்ரம். (உ) ஸம்வத்ஸரம். (ந) ஏகாஹம். (ச) அஹீனம். (ரு) ஸத்ரம். (கு) பிராயஸ்சித்தம். (எ) க்ஷுத்ரம். இக் கானங்கள் பூர்வார்சிக உத்ரார்சிகத்தை அங்கங்கு தொடர்ச்சியன்னியில் தழுவி நிற்கும்: மொத்த காணங்கள் உ0க. வியாஹிருதி சாமன் எனப்படும் ஒரு இரகசிய கானமாவது—

ூ கO: 0 உ — 0 க
பூ : பூ: ஹோ இ- பூ: ஹா ऽ ௩ கஉ வா ऽ உ. ஏ — சுவர்

0 ௩ ககக ரு க உ
ஜ்யோதீ ऽ உ ௩ சூரு : புவா: புவ:—ஹோ இ—புவ :— ஹா:

— 0 க 0 ௩ ககக ரு க
ऽ௩கஉவா உ—ஏ—சுவர் ஜ்யோ தீ ऽஉ௩ சூரு: சுவா : சுவ:

உ — 0 க 0 ௩ க
ஹோ இ—சுவ: ஹா ऽ ௩க உ. வா ऽ உ. ஏ. ஸுவர் ஜ்யோதீ ऽ உ௩

கக ரு க உ
சூரு: ஸத்யாம். ஸத்யம்— ஹோ இ—ஸத்யம்—உ—ஹா ऽ௩கஉ

— 0 க 0 ௩ ககக ரு க
வா ऽ உ. ஏ—ஸுவர் ஜ்யோ தீ ऽ உ௩ ௩ சூரு: புருஷா:- புருஷ

உ — 0 க 0
ஹோஇ—புருஷா—ஹா ऽ௩ கஉ வா ऽ உ—ஏ—ஸுவர்ஜ்யோதீ

௩ ககக
ऽ உ௩ சூரு:

**ஸ்தோபங்கள்** ஸாமவேத மொழிகளுடன் ஸ்தோப மொழிகளைச் சேர்த்து மேற்கண்டவாறு ஸாமகானஞ் செய்தார்கள். ஸ்தோபம் என்றால் நிறுத்தும் இடம். ஸ்தோப மொழிகளாவன — ஹா, ஹா இ, அத, இஹ, ஈ, உ. ஏ. ஔஹோஇ, ஹிம், சுவரம், யா, வாக, ஹும். ஹாஉ உலகத்தையும், ஹாஇ வாயுவையும், அதசந்திரனையும், இத ஆத்மாவையும், ஈ அக்னியையும். உ சூரியனையும், ஏ அழைப்பதையும், ஔ ஹோ இ விசுவே தேவர்களையும், ஹிம் பிரசாபதியையும், சுவரம் பிராணனையும், யா அன்னத்தையும், வாக் விராடான்னத்தையுங், குறிக்கும். இந்த ஸ்தோப சப்தங்கள் வனம் வசிக்கும் எழுத்துப் படிப்பு இல்லாதவர்களின் சின்ன சப்தங்கள். அப்படி சப்தஞ் செய்பவர்



ஒரு சாமகான கோஷ்டி.

களை விராத்ய ஸாம கானத்தால் தீட்சையளித்து ஆரியர்களாக்கினர்கள் என பஞ்ச விம்சத்தினின்று அறிகிறேம். அப்பொழுது அவர்கள் வன வாசிகள் ஆனந்தமாக அம்மொழிகளை வேத கானங்களுடன் சேர்த்திருக்கவேண்டும். இனி இக்கானங்களின் மூலமான ஸாம வேதத்தைப்பற்றி சொல்லுவோம்.

**ஸாம வேதம்**

ஸாமத்தில் மொத்த மத்திரங்கள் கஅஎ௫. ஸாமனின் பிரத்யேக மந்திரங்கள் சுமார் அ௫ தான். ஏனெனில் கஎஉ௫ மந்திரங்கள் ரிக்வேதத்தினின்றும் மற்ற மந்திரங்கள் யஜுர், அதர்வத்தினின்றும் தொகுக்கப்பட்டவை, அம் மந்திரங்கள் எப்படி தொகுக்கப்பட்டதென அடியிற்கண்ட உதாரண மறிவிக்கும். ரிக்வேத மந்திரம்—உத்வா மன்தன்து ஸ்தோமா: கிருணுஷ்வ ராதோஅ அத்ரிவ: அவ பிரம த்விஷோ ஜஹி. இதைச் சாமனுக செய்த மந்திரம். உத்வா மன்தன்து சோமா: கிருணுஷ்வ ராதோ அத்ரிவ: அத்ரா பிரம த்விஷோ ஜஹி.

**பூர்வார்சிக**
**உத்தரார்சிக**
**ஸாமன்**

இப்படிசெய்த மந்திரங்களை யெல்லாம் பூர்வார்சிகம் உத்தரார்சிகம் என இரு பாகங்களாய் பிரித்துளார்கள். பூர்வார்சிகம் என்றல் முன்வரும் பகுதி. உத்தரார்சிகம் என்றல் பின்வரும் பகுதி. ஆர்சிக மென்றல் மந்திரத் தொகுதி. பூர்வார்சிகத்தில் பிரகிருதி ஆரணம் மகா நாம்னியார்சிகம் பஞ்ச புரீஷ பதங்கள் என்னும் பிரிவுகளுண்டு. பிரகிருதியில் ஆக்னேயம் ஐந்திரம் பாவமானம் எனப் பல பிரிவினைகளுண்டு. இப் பூர்வார்சிகத்தை ஆறு பிரபாடகங்களாய்—பாகங்களாய்—அதை க௩ அரைப் பிரபாடகங்களாயும், ௬௬ தசதி அல்லது கண்டங்களாய் வகுத்துளார்கள். உத்தரார்சிகத்தை ஒன்பது பிரபாடகங்களாயும் உ௩ அரைப் பிரபாடங்கங்களாயும் கஉக கண்டங்களாயும் பிரித்துளார்கள். ஒவ்வொரு கண்டத்திலும் பல மந்திரங்கள் உண்டு. உத்தரார்சிகத்தில் சாதாரணமாய் எல்லாம் மூன்று மந்திரத் தொகுதிகள்.

ஸாம தேவர்கள்

ஒவ்வொரு மந்திரத்திற்கும் அல்லது பல மந்திரங்களுக்கு ஒரு தேவர் அல்லது தேவதையுண்டு. அப்படியே ரிஷி, சந்தசு சுவர முண்டு. இந்நூலில் வரும் மந்திர தேவதைகள் சுமார் ருஉ. அத்தேவர்களும் அவர்கள் வரும் மந்திர எண்ணிக்கைகளும் அடியிற் காணலாம். இந்திரன்—கூருரு. பவமான சோமன்—சஎஉ. அக்னி—ஙஙஎ. பவமானன் கஉஅ. ஸோமன்—ருக. இந்திராக்னி—ஙக. மித்ர வருணர்கள்—உக. உஷை—உக. விசுவே தேவர்—உ0. அசுவினிகள்—உ0. சூரியன்—ககூ. மருத்துக்கள்—கக. சர்வ தேவர்கள்—க0. விஷ்ணு—கூ. வானம் பூமி—அ. ஆதித்தியர் சு. வைசுவா நரன்—ச. சலம், மருத்து இந்திரன், வருணன், வேனன், புருஷன், ஸார்பராக்ஞி, அப்த்வன் அகன், ஒவ்வொன்றும்—ங. அங்கிரன். அக்னி பவமானன், அதிதி, அன்னம், ஆத்மா, இந்திரனும் எல்லா தேவர்களும், ததிக்கிராவன், பசுக்கள், பஹுன், பிரஜாபதி, பிருஹஸ்பதி, பூஷணன் யூபன், ராத்திரி, ருது, வாஜினன் வாதனன், வாயு, விசுவ கர்மன், ஸர்வாத்மா, ஸரஸ்வதி, ஸரஸ்வன், ஸ்ரஷ்டன், ஸுரன், ஸோம வருணன்—ஒவ்வொன்றும்—க.

ரிஷியும் சந்தஸும்

அப்பால் இம்மந்திரங்களுக்கு வரும் ரிஷிகள் சுமார் ங00. அவர்களில் வாம தேவன், வசிஷ்டன், காண்வன் விசுவாமித்ரன் முதன்மையானவர்கள். இங்கு சாமனில் வரும் முதன்மையான சந்தசுகள்—காயத்ரீ அனுஷ்டுபு, திருஷ்டுபு, ஜகதி, பங்கதி, பிருஹதீ, ககுப் முதலியன. இங்கு அதிகமாய் வருவது காயத்ரீ சந்தசு. சந்தஸ் என்றால் வேத மந்திர நடை அல்லது யாப்பிற்குப் பெயர்.

சுவரம்

ஸாம மந்திர சுவரத்தை ஆதியில் இயல்பினின்று அமைத்தார்கள். பஞ்சவிம்ச பிராமணத்தினின்று இடி முழக்கத்தையும் மழை பொழி ஒலியையும் ரதஞ் செல்லும் சப்தத்தையும் அப்படியே இயல்பில் தோன்றும் பல சம்பவங்களை சுவரங்களாக

மந்திரங்களுக்குச் சாய்த்தார்கள், என அறிகிறோம். பூனை நாய் முதலிய மிருகங்களினின்றும் கண்வர் போலுள்ள மகரிஷிகள் கற்று குணமாக்கினார்கள். உபநிஷத காலத்தில் சுவரங்களை ஐந்து நிலைகளில் எண்ணினார்கள். க. ஹிங்காரம், உ. பிரஸ்தாவம். ங. உத்கீதம், ச. பிரதி ஹாரம். ரு. நிதனம். பதங்களில் — அடியிற் கண்டவாறு சுவரங்களை உபநிஷத ரிஷிகள் அமைத்தார்கள். முதல் ஹிங்கார சப்தம். ஒக்ன இ—பிரஸ்தாவம். ஓம் ஆயாஹி வீதயே கிருணானோ ஹவ்ய தாதயே—உத்கீதம். நிஹோதா ஸத்விபர்ஹஷி—பிரதிஹாரமும் நிதனமுமாகும்.

பழைய சுவரம்
புதிய க்ட்சி

ஆனால் இப்பொழுது ஸாம மந்திர சுவரத்தில் அபிப்பிராய பேதம் இருந்து வருகிறது. பிராசீன கட்சி, நவீன சுவரம் என இரண்டு பிரிவுகளுண்டு. ஸாமனுக்கு நூற்றுக் கணக்கான சுவரங்களுண்டு. அந்த சுவரங்களை யெல்லாம் சில குறிப்பு எழுத்துக்களால் அடையாளஞ் செய்து கொண்டு, பல தலை முறைகளாய் சொல்லிக்கொண்டு வருவது பிராசீனகட்சி. நவீன கட்சி யென்பது அடியிற் கண்ட எழு சுவரங்களால் ஸாம மந்திரங்களை யெல்லாம் சொல்வது. ஷட்ஜம், பஞ்சமம், மத்தியமம், ரிஷபம், காந்தாரம், தைவதம், நிஷாதம். இந்த எழு சுவரங்களால் ஸாம கானங்களை ஆர்மோனியத்தில் வாசிக்கலாமென ஸ்ரீ. லட்சமண சிரௌதி ஊஹகான நூலிலுள்ள குறிப்பை இங்கு எழுதுகிறோம்.




ச ரு க உ க உ ங ச ரு
யோநீ:—தஆஇ த்ரா 5 ங ஸ்த நா அகாரீ

இன்னும் இது சம்பந்தமாய் கும்பகோணம் சங்கீத வித்வான் டி. வி. நடேச சாஸ்திரிகள் சுவரத்துடன் எழுதிய ஒரு சாமமாவது.

சங்கரா பரண ராகம்.

கா ரீ ரீ கா ம ப ம ப ம க ரீ
ச0 ரு0 0 ச ந உ ந உ ந ச ரு
ஆ வோ ரா ஜா — ந ம த் — ர ஸ் ந த் ராம் |
வ ய

தா பா தா ப ப ப பா மா பா
க உ0 க உ உ உ
ஹோ — தா — ராம் — ஸ — த் ய ஜா ந ம் — ரோ

ம கா ரீ ப த த தா ப ப ம பா
ந ச ரு உ க உ ந உ
த ஸி யோ:— அ க் னிய் பு — ரா — த ந யி — தோ
ந

ம க ரீ த த ப தா பா மா த த
ந ச ரு க உ க உ க
ர சி த்தாத் | ஹி ர ண்ய நு — பா ந ம வ—

பா மா கா மா பா மா கா ரீ ரீ
உ உ ச
ஸா ऽ ந ச ந இ — கா ऽ ந ர்ணா ௵ ऽ நு த் ऽ
வ ர

ஸா ரீ ஸா

கா ருகா ம்.

ஸாம ரகசியம்

இதுவரை சொன்ன ஸாமன், வேதம், மந்திரம், தேவதை, ரிஷி, சந்தசு, சுவரத்தின் இரகசியங்களை சற்று ஞாபகஞ் செய்துகொள்வது அவசிய மாகும். சாந்தோக்யஞ் சொல்வதாவது. (க. உ.) எது சாதுவோ — சிறப்பை அளிப்பதோ — அது ஸாமன். இச் சிறப்பை நாடுபவனுக்கு எல்லா சவுகரியங்களும் தோன்றும். அசாமன் என்றால் அறமற்ற செயல். 'ஸாம என்னும் மொழியில் ஸ என்பது சுகத்தைக் குறிக்கும். அம என்பது அனலைக் குறிக்கும். இவ்விரண்டுஞ் சேர்வது ஒரு ஸாமன்,' உபநிஷத காலத்தில் சிலர் அதை நீர் நிலம் அனல் முதலியன என எண்ணினார்கள். ஆனால் ஒரு ரிஷி அதை ஆகாசமென ஸ்தாபிதஞ் செய்தார். அதாவது ஸாமனை அடைவதென்பது ஆகாசம்போல் விரிந்துள்ள எதையும் நாம் சுவாதீனஞ் செய்துகொள்ள வேண்டுமென்பதாகும். வேத மென்றால் பலமும் சத்தியுமாகும் என வேதசந்திரிகையில் கூறியுளோம். இனி மந்திர மர்மம்.

மந்திர மர்மம்

மந்திரமென்பது வெறும் மொழிகளில்லை. ஆதியில் சுவாத்மானுபவத்தால் பெரிய ரிஷிகள் அனுபவித்த உணர்ச்சி சின்னங்களாகும். நாமும் நமது நோக்கங்களில் சாய்ந்து நம்மையே அவற்றில் தியாகஞ் செய்தாலொழிய அம் மர்மங்களை அறிந்து கொள்வது அரிதாகும். இனி தேவர்களின் உண்மைகள்.

தேவ உண்மைகள்

இங்கு சொல்லியுள்ள ருஉ தேவர்களும் ஒரே தேவரான ஈசனைக் குறிக்கும். சில சமயங்களில் இவை வேறு திவ்யமான எண்ணங்களையு மறிவிக் கும். இச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீ அரவிந்தர் சொல்லும் கீழ்வரும்போலாகும் சில அமுத மொழிகளை நாம் மறக்கமுடியாது. அக்னி=தெய்வசக்தி, ருத்திரவன்மை, பிரக்ஞான சங்கற்பம். இந்திரன்=ஒளியுடனை மனம். மருத்து=பிராணன். சோமன்=தேவானந்தம். அசுவினிகள்=ஆரோக்கியம் ஆனந்த ஆரோபங்கள். ரதம்=

சக்தி சலனம். தஸ்யு=திவ்யப் பொருளின் சத்துரு. பசு= சோதி, புரோகிதன்=மனித சமூகம் உயர தெய்வீக சங்கற்ப முடன் செய்யும் செயல். தேவர்களைப் போலவே ரிஷிகளும் சில உண்மைகளை அறிவிக்கும் சின்னங்கள்.

ரிஷி யார்?

வேதகாலத்தில் ரிஷி என்றால் அறிவிற்கும் அதி உத்தமப் பொருள்களுக்கும் பெயர். அக்காலத்தில் செவிகளுக்கு விசுவாமித்ரன் எனவும், சுவாசத்திற்கு வசிஷ்டன் எனவும், பெயர். ஆனால் மந்திரங்களுடன் சொல்லப்படும் ரிஷிகள் ஆதியில் அம் மந்திரங்களின் இரகசியங்களை மானிட கோடிகளுக்கு அறிவித்தபடியால் அவர்கள் பெயர்களால் அம் மந்திரங்கள் சொல்லப் படுகின்றன. ரிஷிகளுக் கப்பால் சந்தஸை நோக்குவோம்.

நிசமான சந்தசு எது?

சதபதஞ் சொல்லவதாவது—[கO. ந] சந்தஸ் என்றால் உங்கள் சரீர சக்திக்குப் பெயர். காயத்ரீ—தலை. ப்ருஹதீ—முதுகு. திருஷ்டுபு—இடை (பலம்.) பங்கதி — முழங்கால். சந்தஸு என்றால் உணவு முதலியவற்றிற்குப் பெயர். புவி சந்தசு=உணவு. விரி சந்தசு=காற்று. வன்மை அளி சந்தசு=அக்னி. முயற்சி சந்தசு=எதிர் உலகம். மறுபடியும் பிராமணம் சொல்லவதாவது [க. ரு] ஆதியில் ஒரு ரிஷியானவர் பிரசாபதி காயத்ரியினால் சீவர்களை தன் வசமாக்கிக்கொண்டான் என ஒரு கதையை ஆரம்பிக்குங்கால் சிறுவன் ஒருவன் சந்தசால் சுவாதீனஞ் செய்யமுடியுமாவென வினவியதற்கு குழந்தையே காயத்ரீ என்றால், தலை, மூளை, திடச்செயலுக்குப் பெயர். இவற்றால் ஜயிக்கமுடியாத சீவர்களுண்டோ? எனச் சொன்னவுடன் சிறுவன் மௌனமானான். ஸ்ரீ சங்கரர் காயத்ரீ சந்தசைப்பற்றி பிருஹதாரண்யகத்தில் சொல்லவதாவது. (ரு. கச-ச) "காயத்ரீ என்பது பிராணவன்மை. பிராணவன்மை என்றால் பலம். பலத்தில் சத்தியம் நிற்கும். சத்தியம் பலத்தில் நிற்பதால் பலத்தையே சத்தியத்தைவிட பெரிதென்பார்கள், துர்பலம் தாங்கும் பலப் பொருளுண்டோ?" இந்த காயத்ரீ

சந்தசிலேயே வேதம் அதிகமாய் நிற்கும். அதாவது காயத்ரீ யான—தேகபலம், மனோபலம் சமூகபலம்—சந்தஸை அடைந் துள்ளவனே வேதத்தை தாங்கமுடியும். இதனால் பலமில்லாத வன் பராதீன மாவதால் அவன் வேதத்தை அறிய முடியா தென்பதை ஆதி ஆரியர்கள் எண்ணினார்கள் போலும்!

**சுவர சத்தியம்**

இனி சுவர சத்தியத்தியத்தைக் சொல்வோம். சாந்தோக் யம். [க. ச.] அச்சமற்றும் அழியாததும் அமி ருதமாயுள்ளதை நாடி அச்சம்நீங்கி அழியாத வனாய் அமுத வாழ்க்கை நடத்துபவன் சுவ ரத்தை அறிவான்! ஆதியில் ஆரியர்கள் இதை அறிந்து ஆரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். அவர்கள் அறிந்த சுவரங் களின் ஐந்து நிலைகளாவன. ஹிங்காரம் மூன்று வேதங்கள். பிரஸ்தாவம் மூன்று உலகங்கள். உத்கீதம் மூன்று தேவர்கள். (அக்னி வாயு ஆதித்யன்) பிரதிஹாரம், நட்சத்திரம், பட்சி கிரணமாகும். நிதனம்—ஸர்ப்ப கந்தர்வ பிதருவாகும். இதற் குச் சமுதாய சுவரமெனப் பெயர். நான் என விருதமுடன் இவற்றை அறிபவன் சக்கரவர்த்தியாவான். இதுதான் சத்திய மான சுவரமாகும். இனி ஸாமத்தில் சொல்லியுள்ள சோம னைப்பற்றிச் சொல்வோம்.

**விபரீத யக்ஞமும் சோமனும்**

இந்த வேதத்தில் அடிக்கடி யக்ஞம், சோமன் என்னும் மொழிகள் வரும். யக்ஞமென்றால் நெருப் பை மூட்டி ஓமம் வளர்த்து அதில் ஆஹுதி முதலியவற்றை அளித்து மிருகபலி செய்யும் பெரிய செயல் என பலர் சொல்லுகிறார்கள். அந்த யக்ஞத்தில் சோமன் என்னும் ஒரு செடியைக் கொண்டு வந்து 'அபிஷவண' எனப்படும் இரண்டு பலகைகளால் அதை அமிழ்த்தி ரசம் பொழிந்து—'தசாபவித்ரம்' எனப்படும்—கம் பளித் துணியால் வடிகட்டி 'துரோண கலசம்' என்னும் பாத் திரத்தில் அதை விழச் செய்து தேவர்கள் பருக அளிப்பார் கள். தேவர்களில் இந்திரனுக்கு இதைப் பருக வெகுப் பிரிய மாம். பிறகு அனைவர்களும் அருந்துவார்கள். இவனைப்

பற்றி அடியிற் கண்ட பிராமண கதைகளுமுண்டு. க. சோமன் என்னும் ராஜா கந்தர்வனிடமிருந்தான். தேவர்களும் ரிஷிகளும் அவனை விரும்பினர்கள். எப்படி அவனை அழைப்பது என எண்ணி கடைசியில் வாக்கை வனிதையாக மாற்றி கந்தர்வன் கருத்தை கலக்கி சோமனைப் பெற்றூர்கள். (ஐதரேயம்) உ. சோமன் வானத்திலிருந்தான். அவனை காயத்ரியின் உதவியால் தேவர்கள் பூமிக்குக் கொண்டுவந்தார்கள். (சதபதம்) ந. பிரசாபதிக்கு நந பெண்களுண்டு. அவன் அவர்களை சோமனுக்கு மணஞ் செய்து கொடுத்தான். ஆனல் சோமன் ரோஹிணியைத் தவிர மற்றவர்களை விரும்பவில்லை. அவர்கள் கோபமுடனுகி தந்தையை அடைந்தார்கள். சோமன் அனைவருடன் சமமாயிருப்பதாகக் கூறி கடைசியில் அவ்வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. அப்பால் அவன் க்ஷய முடனுனன். பிறகு மற்ற மனைவிகளின் முயற்சியோடு சூரியனை நாடி அவன் நோய் நீங்கினன். (தைத்திரியம்) ச. பிரசாபதி, சோமனுக்குப் பிறகு மூன்று வேதங்களைச் செய்தான். அவற்றை கையில் மூடிக்கொண்டு சோமன் சென்று விட்டான். பிரசாபதிக்கு சீதை—சாவித்ரீ, சிரத்தை என இரண்டு பெண்களுண்டு. சோமன் சிரத்தையை விரும்பினன். ஆனல் சீதா—சாவித்ரீ தந்தையினிடஞ் சென்று சோமன் என்னை விரும்புவதில்லை. ஏதாவது தந்திரஞ் செய்ய வேண்டுமென்றூள். அவர் அவள் நெற்றியில் ஏதோ வனஸ்பதி ரசத்தை திலகமாக அணிந்து அவனிடஞ் செல்லவுமென்றூர். அவள் அப்படிச் செய்யவே சோமன் அவளை விரும்பி மூன்று வேதங்களையுமளித்து அவளைக் கவர்ந்து கொண்டான். (தைத்திரியம்) இந்த யக்ஞமும் சோம விஷயங்களும் வேத விரோதமாகும்.

வேத யக்ஞம்

ஆனல் உண்மையான யக்ஞமாவது—பூமி முழுவதும் யக்ஞ பீடமாகும். இடிமுழக்கம் என்னும் ஆயுதங்களால் பூமியை ஜயித்து அதிபதியாகவும், சத்ருக்களுக்கு அணுவளவும் இடமளிக்க வேண்டாம், (சதபதம், ந. எ. உ, க.) சுவயம்பூ ஆதி

காலத்தில் தவஞ்செய்தான். எத்தனை முயன்றும் எந்த சீவனையும் செய்ய முடியவில்லை. கடைசியாக எல்லாப் பொருள்களிலும் தன் ஆன்மாவையே ஆகுதி செய்தான். அதனால் எங்கும் வியாபகமாகி தலைவனானான். (ச—ப, கஉ. எ. க. கரு) நீ எடுக்கும் செயலை முடிப்பதற்கு சாகத் தயாராவதே யக்ஞமென்பது இதன் பொருள். யக்ஞமென்றால் உங்கள் தேகத்திற்கும் பெயர். (கஉ. அ. க. க. கஎ.) வைதீக சோமபானமாவது.

ஊர்த்வ ஜிஹ்வ ஸ்திரோ பூத்வா சோமபானம் கரோதிய:
மாஸார்தேன ந ஸந்தேஹோ மிருத்யும் ஜயதி யோகவித். (ஹடயோகம்.) ஸ்திரமுடன் உயரமாக்கிய நாக்கால் சோமபானம் செய்யும் யோகி நிச்சயமாய் கரு நாளில் மிருத்யுவை ஜயிப்பான்.

வேத சோமன்

இல்லையேல் சில உபநிஷத்தில் சொல்லும் மது வித்தை அல்லது பொருள்களை அறியும் இரகசியங்களாகவும் சோமனிருக்கலாம். பிராமண சோம கதைகள் அடியிற் கண்ட உண்மைகளை விளக்கும். முதல் கதையில் கந்தர்வன் என்றால் புத்திக்குப் பெயர். இவன் சோமனைப் பற்றியதும், மயங்கும் மொழியால் இவனை ஏமாற்றி சோமனை தேவர்கள்—புலன்கள்—பற்றுவார்கள். உங்கள் தேகத்திலுள்ள திடரசத்தை பலத்தால் பெருக்கலாம் என்பது இரண்டாவது கதை. மூன்றாவது கதையில் சோமன் சந்திரனால் அவன் நாடிய பெண்கள் நட்சத்திர முதலியவை யாகலாம். நான்காவது கதையில் சோமன் சத்திய ஆரோபம். சீதா—ஸாவித்ரி அறிவாகும். சிரத்தை மனப்பூர்வமாய் சாயுஞ் சுபாவமாகும். சோமன் என்றால், ராஜா, பிரஜாபதி, விஷ்ணு, வாயு, சந்திரன், க்ஷத்ரன், பிராணன், ரேதஸ் முதலியவற்றைக் குறிக்கும் பெயர்கள் என சதபதஞ் சொல்லும். சில சமயங்களில் சோமன் என்றால் சர்வேசனையுங் குறிக்கும். இந்த யக்ஞ சோம விஷயங்கள் எல்லாம் இச்சாம துதிகளில் வரும் பல உண்மைகளை விளக்கும் சம்பவங்கள்.

இச்சோமன் நிறைந்த இவ்வேதஞ் சாய்ந்து தாய் தந்தை சகோதரி சகோதரர் மனைவி பெண்பிள்ளை

ஸாம ஆக்ஞை முதலியவர்களுடன் சேர்ந்து இந்திரனை ஈசனைத் துதிக்கவும், இந்திரன் யார் தெரியுமா? அவன் வச்சிராயுதம் தரித்தவன். இந்துக்கள் அவன் சொல்வதைக் கேட்பதில்லை என அறிந்து பூமண்டல மாண்ட அவர்களை கூலிகளாகவும், காய பலமில்லாதவர்களாகவுமாக்கி விட்டான். அவர்களை நாள்தோறும் அழித்தும் வருகிறான். ஹிந்துகாஷ்மீரம் மகமதியமாய் விட்டது. அனந்தசயனம் கிறிஸ்தவமாகிறான், ருத்திரனை ஹரிசனன் சிலுவையில் சாய்கிறான். பாமரனைப் பஞ்சமனுக்கும் உனக்குப் புவியில் புருஷன் என்னும் பெயருமில்லை. பல வடமொழி நூல் ஆசிரிய ஐரோப்பியனான பைன் என்பவன் இந்துவான உன்னை ஸ்திரீ எனச் சொல்லுகிறான். மார்கஸ் போலோ என்னும் யாத்ரீகன் தமிழ்நாடு ஆண்கள் எல்லாம் பெண்கள்போல் தோன்றுகிறார்கள் என சொல்லுகிறான். சர்க்காரும் தமிழ் இந்துக்கள் மில்டெரியில் சோல்ஜர்களாய் சேவைபுரிய அருகதையில்லை எனத் தள்ளிவிட்டார்கள். இராஜீய எலக்ஷன் விஷயத்தில் இந்து என்னும் உன் நாமமும் சுடுகாட்டில் சாம்பலாய்விட்டது. உன் குற்றமும் குறையுமே உன்னை இக்கதியிலாக்கிற்று. நீ ஸாம வேத இந்திரனை ஈசன் சொல்வதை செய்வதை நீ செவியுற்று சாதகஞ் செய்யாததினால் நீ சீரழிகிறாய். அவன் நீங்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து உபாசிக்கவும் எனச் சொல்லுகிறான். அவன் செய்வதாவது—இந்திரன் இருளை நீக்குவான். மேகத்தை அடிப்பான். அசத்தியத்தை அழிப்பான். அவனிடம் அறியாமை அலறும். அவன் விருத்திரனை ஜயிப்பான். சத்துருவினிடம் சமரஸம் நாடான். அவனை எதிர்ப்பவனில் அன்பை இல்லை அம்பையே நாட்டுவான். தயை தாட்சிண்யம் பாராமால் தஸ்யு என்னும் அடிமை எண்ணம் உள்ளவனைத் தொலைப்பான். மருத்தான பாமரனை பிராணனாக எண்ணி பயமின்னியில் ஒரு தலைவனாய் அரசுபுரிவான். சாதியை அவன் விரும்புவதில்லை. ஆண்



மரவுரியில் சாரதாலிபியினால் எழுதப்பட்டுள்ள
வேத மொழிகள்.

பெண் வேற்றுமை அவனுக்கில்லை. புவியிலுள்ள எல்லாசாதிகளும், மனிதனாய்ப்பிறந்த ஒவ்வொருவனும் அவன் மகனே.

நீயும் இவன் செய்வதுபோல் செய்து புது உயிர் பெற்று ஆண்பிள்ளையாகவும். வெறுமதத்திற்கு அடிமையானவர்களை யெல்லாம் மறுபடியும் அவன் வேத தர்மத்திற்குக் கொண்டு வரவும். அதனால் நீ இந்திரனாகி கடைசியில் உலகத்தை அரசு புரிவாய். அப்பொழுதுதான் சுவர்கத்தைப் பற்றி சிந்தனை செய்ய உனக்கு அருகதையுண்டு. அதுவரை உனக்கு சுவர்க நினைவு வேண்டாம். இதுதான் ஸாம ஆக்ஞை என நீ ஆழ்ந்து இந் நூலைப் படித்து நோக்கினால் உனக்குப் புலனாகும்.

இச் சாம ஆக்ஞைகள் நிறைந்த நூலைப்படிக்கும்பொழுது அடியிற்கண்ட விஷயங்களை கவனிக்கவும்.

**கவனிப்பு** வேதமொழிகள் மூன்று காலங்களுக்கும் உண்மை. இங்கு தோன்றும் சம்பவங்களை யெல்லாம் நிகழ்காலம் எதிர்காலத்தில் புலனாவதாக எண்ணவும். வேத ஈசனை அது, அவள், அவன், என எப்பாலினாலும் அழைப்பார்கள். வேதத்திற்குப் பிறகே சரித்திரமாகையால் மனிதன் அல்லது தேவ சம்பந்தமான ஜீவிய சரிதைகள் இங்கு இல்லை என்பதை அறியவும். இங்கு வரும் இடம் பெயர்கள் குறிப்பிட்ட ஒரு புவியின் இடத்தையோ அல்லது எவரின் பெயரையும் குறிக்காது. இந் நூலிலுள்ள கடினமொழிகளுக்கு அந்தந்த இடங்களிலேயே, அல்லது அப்பக்கங்களின் கீழே, இல்லையேல் கடைசிப்பக்கங்களிலுள்ள ஸாம கண்ணாடியில் உரைகளையும், விளக்கங்களையும் எழுதியுளோம். அங்கு சில முதன்மையான திருத்தங்களையுங் காணலாம். இந்நூலை நீங்கள் படிப்பதன்னியில் தமிழன் ஒவ்வொருவனும் ஆண், பெண், அனைவரும் படிக்க பிரசாரஞ் செய்வது உங்கள் கடமையாகும். இதையுத்தேசித்து நாம் சுலபமான விலை வைத்துளோம்.

**வேண்டுகோள்** மதுரை, ஆடுதுரை, ஸ்ரீ ரங்கம், திருவாதி, மாயவரம், திருவோடகம், காரைக்குடி, காளையார் கோவில், திருவனந்தபுரம், திருவானைக் காவல் முதலிய இடங்களிலுள்ள ஸாம வேத பாட

சாலை அதிகாரிகளே! மாணவர்களே! ஆச்சாரியர்களே! நீங்கள் இனி தமிழ் உரையுடன் ஸாமவேதத்தை அறிய முய வேண்டும். இல்லையேல் உங்களை சீவனற்ற கிராமபோ ரிகார்டுகள் என இளங்காளைகள் கூறுவார்கள். ஸாம புரோகி தர்களே! ஸாம பிராமணர்களே! ஸாமனை அறிந்து தமிழ் மொழியில் சம்ஸ்காரங்களைச் செய்வது உங்கள் முதற்கடமை யாகும். தமிழ் நாட்டிலுள்ள இந்துக்களே! திராவிடர்களே! ஆதித்திராவிடர்களே!!! சாதாரண மனிதர்களால் செய்யப் பட்ட புராண இதிகாசத் துதிகளை எல்லாம் நீக்கி ஸாமவேதத் துதிகளைச் செய்து சர்வேசன் ஆசீர்வாதத்தை அடையவும். சகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் இச் சாமத்தை அளித்து எங்கும் வேதகோஷஞ் செய்யவும். தமிழ்ச் சிறுவர்களே! நீங் களே! எதிர்காலம். வீரர்களான நீங்கள் விரும்பினால் வேதப் பிரசாரம் வளர்ந்தோங்கும். இச் சாமனால் மறுபடியும் வசிஷ் டர், வால்மீகர், துரோணர் தோன்றுவார்கள். 'நான் சாம வேதி' எனச் சொன்ன கிருஷ்ணன் தோன்றி சத்துருவை கொல்லவும் எனக் கர்ச்சனை செய்வான். சைவமான சுந்தரம் மலரும் நீங்கள், ருத்திரர்களாகி தாண்டவமாடுவீர்கள். உங்க ளுக்கு இந்த வைபவங்களை யளிக்கும் இச் சாமவேதத்தை காசி மடத்து தலைவரான ஸ்ரீ சுவாமிநாத சுவாமிகள் உற்சாகத் தால் அச்சடித்தோம். சர்க்கார் தமிழ் பரீட்சையில் முதன் மையாய்த் தேறுபவர்க்கு வருஷந்தோறும் ரூபா ஆயிரம் வெகுமதி கொடுக்கும் அவரை நீங்கள் அறிவீர்கள். தர்ம விஷ யத்தில் வைதீகன் அக்னியைப்போல் எப்பொழுதும் சுடர்விட் டெரிவான் என சதபதஞ் சொல்லும். அந்த அனல் அறிவை சோளதேசத்தில் அவரிடமே காணலாம். அவருக்கு ஈசன் திடத்தையும் தீர்க்காயுளையும் அளிக்கவேண்டும். அவரைப் போற்றி ஒரு ஆதர்ச அற புருஷன் என எண்ணுவது உங்கள் கடமை. வேறு மடாதிபதிகள் எங்கே? இருள் வீடு நீங்கி சூரிய ஒளியில் நீங்கள் வரமாட்டீர்களா? இனி சயனம் வேண் டாம். சும்மாயிருப்பது ஆபத்தாகும். படாடோபமும் பட்டா டையும் பிரிந்து பாமரர்களுக்குப் பிரசாரஞ் செய்வதே பெரிய

தர்மமென நீங்கள் அறியவும். இல்லையேல் தர்மம் எப்படி உங்களை ஆதியில் ஸ்தாபித்ததோ அதே தர்மம் உங்களை இப்பொழுது அழித்து விடுமென்பது சாஸ்திரம். சமூகத்திற்குத் தொண்டு செய்து அது அழியாமலிருக்க நீங்கள் முயன்றாலொழிய எதிர் காலம் உங்கள் கோபுரங்களை குட்டிச்சுவர்களாக்கி கிராமங்களைக் காடுகளாய் செய்து விடுவார்கள். கோவில்கட்டி இளிப் பிள்ளைப் பாடசாலைகளைக் காக்கும் தன வைசியர்களே! நீங்களும் திருப்பனந்தாள் வழியைப் பின்பற்றி எல்லா தானங்களிலும் தலைமையான வேத தானத்தைச் செய்யவும்.

அப்பொழுது புவியிலுள்ள எல்லா மொழிகளிலும் ரிக்கு யஜுர், அதர்வன் சுலபான விலையில் நாடெங்கும் தோன்றும். அப்பால் தமிழ்நாடு புது உயிரைப் பெற்று தரணியை மறுபடியும் அரசு புரிவாள். அந்தக்காலம் துரிதமாய் வரவேண்டுமென நாம் இச் சாமவேதத்தை தமிழர்கள் கைகளில் அளிக்கிறோம். குற்றங்குறை நீக்கி நீங்கள் இந்த நூலை பயன் செய்யவேண்டுமென எங்குமுள்ள பரமனை நமஸ்கரிக்கிறோம்.

நமஸ்காரம்

மகாராஜாதி ராஜனுன ஸ்ரீ விக்கிரமாதித்யன் சகம் ககூகூஉ கலி ருoஙகூ, யுவ வருஷம் ஐப்பசிமாதம் கிருஷ்ணபட்சம் சதுர்த்தசி ஹஸ்த நட்சத்திரமுடனுன வெள்ளிக்கிழமை, நரகாசுரனெழிந்த தீபாவளி. பம்பாய் அரபிக் கடற்கரையோரமுள்ள கார் என்னும் கிராமம்.

ம. ரா. ஜம்புநாதன்.

---

குறிப்பு:—தமிழ் வசனத்திற்குச் சரியான மூல சாம மந்திர எண்ணிக்கைகளை அறிய ஙo—ஙஉ வது பக்கங்களிலுள்ள பிரபாடக கணக்கைப் பார்க்கவும்.

# பிரபாடகக் கணக்கு பூர்வார்சிகம்

| க<br>கண்டங்கள் | உ<br>கண்டங்கள் | ங<br>வடமொழி பிர பாடகங்கள் | ச<br>வடமொழி பிர பாடகப் பகுதிகள் | ரு<br>மொத்த மந்திரங்கள் | சு<br>பக்கங்கள் |
|---|---|---|---|---|---|
| க - ரு | ஆக்னேய | க | முதல் பாதி | ருச | க - கூ |
| சு - க0 | காண்டம் | ,, | பின் பாதி | சஉ | கூ - கரு |
| கக - கங | | உ | முதல் பாதி | சஅ | கசு - ககூ |
| கச - கரு | | ,, | ,, | | ககூ - உஉ |
| கசு - உ0 | ஐந்திர | ,, | பின் பாதி | சகூ | உஉ - உஅ |
| உக - உரு | காண்டம் | ங | முதல் பாதி | சகூ | உஅ - ஙச |
| உசு - ங0 | | ,, | பின் பாதி | ரு0 | ஙரு - சங |
| ஙக - ஙரு | | ச | முதல் பாதி | சகூ | சங - ருக |
| ஙச - ச0 | | ,, | பின் பாதி | சகூ | ருக - ருகூ |
| சக - சரு | | ரு | முதல் பாதி | சசு | ருகூ - சுசு |
| சசு - சகூ | | ,, | பின் பாதி | ரு0 | சுசு - எக |
| சகூ - ரு0 | பாவமானம் | ,, | | | எக - எச |
| ருக - ருரு | | சு | முதல் பகுதி | ருஅ | எச - ஙஅ |
| ருசு ருகூ | | ,, | உ-வது பகுதி | சக | அங - அகூ |
| சு0 - சுச | ஆரண்யகம் | ,, | ங-வது பகுதி | ருரு | கூ0 - கூஅ |
| சுச | ங | சு | கங | சுசக | — |

| க<br>கண்டங்கள் | உ<br>காண்டங்கள் | ங<br>வடமொழி பிர பாடகங்கள் | ச<br>வடமொழி பிர பாடகப் பகுதிகள் | ரு<br>மொத்த மந்திரங்கள் | சா<br>பக்கங்கள் |
|---|---|---|---|---|---|
| சாரு | மகா நாம்னி யார்சிகம் | — | — | கூ | கூஅ - கூகூ |
| சாசா | பஞ்ச புரீ ஷபதங்கள். | — | — | க | கூகூ |

## பிரபாடகக் கணக்கு உத்தரார்சிகம்

| க<br>கண்டங்கள் | உ<br>பிர பாடகங்கள் | ங<br>பகுதிகள் | ச<br>பிரகாதம் அல்லது மந்திரத் தொகுதி | ரு<br>மொத்த மந்திரங்கள் | சா<br>பக்கங்கள் |
|---|---|---|---|---|---|
| சாஎ - எஉ | க | முதல் பாதி | உங | சாஉ | க00 - க0அ |
| எங - எஅ | ,, | பின் பாதி | உஉ | கூஉ | ககசா - கஙஉ |
| எகூ - அச | உ | முதல் பாதி | ககூ | ருரு | கஉங - சங0 |
| அரு - கூ0 | ,, | பின் பாதி | ககூ | ருகூ | கஙக - கச0 |

| ௧<br>கண்டங்கள் | ௨<br>பிர பாடகங்கள் | ௩<br>பகுதிகள் | ௪<br>பிரகாதம் அல்லது மந்திரத் தொகுதி | ௫<br>மொத்த மந்திரங்கள் | ௬<br>பக்கங்கள் |
|---|---|---|---|---|---|
| ௯௧ - ௯௭ | ௩ | முதல் பாதி | ௨௨ | ௬௬ | ௧௪0 - ௧௫௧ |
| ௯௮ - ௧0௪ | ,, | பின் பாதி | ௨௩ | ௭௬ | ௧௫௧ - ௧௬௨ |
| ௧0௫ - ௧௧௧ | ௪ | முதல் பாதி | ௨௩ | ௮௫ | ௧௬௨ - ௧௭0 |
| ௧௧௨ - ௧௧௭ | ,, | பின் பாதி | ௧௪ | ௫௯ | ௧௭0 - ௧௮௧ |
| ௧௧௮ - ௧௨௬ | ௫ | முதல் பாதி | ௨0 | ௭௮ | ௧௮௧ - ௧௯௪ |
| ௧௨௭ - ௧௩௮ | ,, | பின் பாதி | ௨௩ | ௯௪ | ௧௯௪ - ௧௯௯ |
| ௧௩௯ - ௧௪௧ | ௬ | முதல் பகுதி | ௧௧ | ௩௨ | ௧௯௯ - ௨௯௯ |
| ௧௪௨ - ௧௪௭ | ,, | ௨-வது பகுதி | ௨0 | ௫௬ | ௨0௯ - ௨௧௮ |
| ௧௪௮ - ௧௫௩ | ,, | ௩-வது பகுதி | ௨0 | ௫௪ | ௨௧௮ - ௨௨௪ |
| ௧௫௪ - ௧௫௭ | ௭ | முதல் பகுதி | ௧௬ | ௪௬ | ௨௨௪ - ௨௩0 |
| ௧௫௮ - ௧௬௧ | ,, | ௨-வது பகுதி | ௧௪ | ௪0 | ௨௩0 - ௨௩௮ |
| ௧௬௨ - ௧௬௫ | ,, | ௩-வது பகுதி | ௨௧ | ௪௨ | ௨௩௮ - ௨௪௩ |
| ௧௬௬ - ௧௬௯ | ௮ | முதல் பகுதி | ௧௪ | ௪0 | |
| ௧௭0 - ௧௭௩ | ,, | ௨-வது பகுதி | ௧௯ | ௫௪ | ௨௪௪ - ௨௫0 |
| ௧௭௪ - ௧௭௮ | ,, | ௩-வது பகுதி | ௧௮ | ௫௪ | ௨௫௧ - ௨௫௯ |
| ௧௭௯ - ௧௮௩ | ௯ | 1-வது பகுதி | ௧௮ | ௫௧ | ௨௬0 - ௨௬௭ |
| ௧௮௪ - ௧௮௬ | ,, | ௨-வது பகுதி | ௧௩ | ௩௩ | ௩௬௮ - ௨௭௩ |
| ௧௮௭ | ,, | ௩-வது பகுதி | ௯ | ௨௭ | ௨௭௩ - ௨௭௮ |

# ஸாமவேதம்

## பூர்வார்சிகம்.

### கண்டம் க.

தேவதை - அக்னி. ரிஷி. க, உ, ச, எ, கூ, பாரத்வாஜர். ங மேதாதிதி, ரு உசனர். சு. சுதீதி புருமீடர்கள். அ, வத்சர். க0, வாமதேவர்.

க. [1] அக்னியே! ஒளிவீச [2]ஹவிசை அளிக்க துதிக்கப்பட்டவனுய் [3]ஹோதாவாக [4]தர்ப்பையில் [5]உட்காரவும். உ. அக்னியே! நீ மனிதர் சமூகத்தில் தேவர்களால் நீ சகல [6] யக்ஞங்களின் ஹோதாவாக நியமிக்கப்பட்டிருக்கிருய் ங. ஹோதாவாய் சகல ஐசுவரியமுள்ளவனுய் இந்த யக்ஞத்தின் சர்வ கர்த்தாவுமான [7]தூதனுன அக்னியை அழைக்கிறேன். ச. [8] ஆகுதி செய்யப்பட்டு மூட்டப்பட்டு [9]வெண்மையாகி துதிக்கப்படுபவனுன [10]பொருள் விரும்பும் அக்னி சத்துருக்களை ஒழிக்கட்டும். ரு. அக்னியே! பிரியமாய் அதிதியான உன்னை ரதத்தைப்போல் வேத ஐசுவரியத்தை ஜயிக்கும் பிரிய நண்பனைப்போல் துதிக்கிறேன்.

---

1 ஈசனே, 2பெரும் செயல் சக்தியை 3நீதி செயல்களின் தலைவனுக 4 தேகத்தில் 5 நீ எப்பொழுதும் உட்கார்ந்திருக்கிருய்; நான் உன்னை அறியும் முயற்சியில் ஆரம்பமாகிறேன். 6 சிறந்த செயல்களின் 7 எங்கும் செல்லுபவனுன 8 அழைக்கப்பட்டு 9 சுத்தமாயுள்ள 10 புனிதம் விரும்பும்.

சு. [1] அக்னியே! சகலமான சத்துருவினின்றும் மனிதர்களின் வெறுப்பினின்றும் எங்களைப் பாதுகாக்கவும். எ. உனக்காக துதிகளை இன்னம் வேறுமொழிகளை [2] கானஞ் செய்வேன். அ. அக்னியே! [3] வரவும். இந்த சோமதுளிகளால் வளர்ச்சியாகவும். கூ. அக்னியே! [4] வத்சன் பெரிய நிலயத்தினின்று உன் மனத்தை வசீகரித்து மொழியால் உன்னை விரும்புகிறேன். க0 அக்னியே! உன்னை [5] அதர்வன் [6] ஆகாசத்தினின்று தேய்த்து தோற்றுவிக்கிறான். நீ சர்வ யக்ஞஞ்செய்பவனின் தலைவனாகும். அக்னியே! எங்கள் மேன்மையான ரட்சிப்பிற்கு ஒளியுடனான சோதியைக் கொண்டு வரவும். ஏனெனில் நாங்கள் காணும் தேவர் நீ.

---

## கண்டம் உ.

தேவதை - அக்னி. ரிஷி. க - ஆயுங்க்ஷ்வாஹி உ - வாமதேவன். ந, அ, கூ - பிரயோகன். ச - மதுச்சந்தன். ரு, எ - சுனச்சேபன். சு - மேதாதிதி. ய வத்ஸன்.

க. அக்னியே! தேவரே, திடத்திற்காக ஜனங்கள் நமஸ்காரத்துடன் உன்னை [7] துதிக்கிறார்கள். பலத்தால் பிரியமற்றவர்களை நீ நாசஞ் செய்யவும். உ. தூதராய் சகல ஐசுவரியமுள்ளவராய் [8] ஹவிஷை எடுத்துச் செல்லுபவராய் மரணமற்றவராய் யக்ஞத்தில் அதிசயரான உங்களை துதி

---

1 ஈசனே! 2 துதிக்கேற்ற செயல்களைச் செய்வேன். 3 நீ வருவதற்கு - விளங்குவதற்கு - நான் அருகதையாகிறேன். 4 உன்மகன் போலுள்ள நான் 5 அக்னியின் உண்மையை அறிபவன் 6 தியானத்தால் அறிந்து மற்றவர்களுக்கு உன்னை நன்குவிளக்குகிறான். 7 நாடுகிறார்கள் 8 நல்ல பொருள்களை.

மொழிகளால் நாடுகிறேன். ௩. யக்ஞம் செய்பவர்களின் 1 சகோதரிகளான துதிகள் உங்கள் குணங்களை நோக்கி 2 வாயுவின் முன் வருகிறார்கள். ௪. இருளை நீக்குபவனான அக்னியே! நாங்கள் தினந்தோறும் மனத்தால் நமஸ்காரம் நிறைந்து உன் அருகே வருகிறோம். ௫. துதியை யறிபவனே! ஒவ்வொரு மனிதரிலும் உண்மையான துதியை யக்ஞத்தைச் சித்தியாக்கும், 3 ருத்ரனின் பொருட்டு இந்தச் செயலைப் பிரவேசிப்பாயோ?

௬. அக்னியே இந்த சுபமான யக்ஞத்திற்கு 4 பால் பருக அழைக்கப்படுங்கால், 5 மருத்துக்களோடு வரவும். ௭. யக்ஞங்களின் ராஜாதி ராஜனாய் 6 வாலோடான குதிரைபோலுள்ள உன்னை நமஸ்காரங்களால் வந்தனஞ் 7 செய்வோம். ௮. கடல் உடை அணிந்த சுத்த அக்னியை 8 ஔர்வ, பிருகுவை போல் அப்ன வானவனைப்போல் 9 நான் அழைக்கிறேன். ௯. மனிதன் அக்னியை மூட்டுங்கால் மனத்தோடு (எந்தச்) செயலையும் செய்யவேண்டும். இருள் நீக்குபவைகளால் நான் 10 அக்னியை மூட்டுகிறேன். ௰. திவ்ய உலகத்திற் கப்பால் எழுச்சியாக்கப்பட்ட ஆதியான புராதன ரேதசின் 11 பகல் சோதியை 12 அவர்கள் அப்பால் பார்க்கிறார்கள்.

---

1 அன்புடனான. 2 வியாபகனான உன் 3 துஷ்டர்களைத் தண்டிப்பவனின். 4 பாதுகாக்க. 5 பிராணன்களோடு. 6 ஆயுதமுடனான. 7 வணங்குகிறோம். 8 நிலத்திலுள்ள அனலை 9 நீரிலுள்ள அக்னியை. 10 அறிவை. 11 ஈசனை. 12 அறிஞர்கள்.

## கண்டம் ௩.

தேவதை - அக்னி. ரிஷி - க - பிரயோகன். உ, ரு, சு - பாரத்வாஜன். ௩, ம - வாம தேவன். ச, சு - வசிஷ்டன், எ - விருபன். அ - சுனச்சேபன். க - கோபவனன். ம - காய்தேவன். கக - கண்வன். கஉ - மேதாதிதி க௩ - சிந்துத்வீபன் அம்பரீஷன் திருத ஆப்தன். கச - உசனான்.

க. பல முடனான 1 பந்துத்வத்திற்கு இங்கு உங்களை 2 வளர்ச்சியாக்கும் யக்ஞச் செயல்களில் மிகவும் 3 அதிகமாகும் அக்னியை அழைக்கிறேன். உ அக்னியானவன் கூர்மையான தேசசால் அனைத்துமான சத்துருவை சிரழிக்கட்டும். ௩ அக்னியே! சுகத்தை யளிக்கவும். நீ பெரியவனாகும். நீதேவ சனத்தை அணுகி 4தர்ப்பையிலே அமரவந்துள்ளாய். ச அக்னியே! எங்களைப் பாவத்தினின்று பாதுகாக்கவும், தேவரே! அமிருதனே! அதிசய சுடர்களால் இம்சிக்கும் சத்துருக்களை பஸ்மீகரமாக்கவும். ரு தேவரே! உன் சாதகமான 5 குதிரைகளை இணைக்கவும், துரிதமாய்ச் செல்லுபவைகள் 6 மேன்மையுடன் உன்னைச் சுமந்து செல்லுகின்றன.

சு. 7 விசர்களின் பதியே! அனைவரும் அணுகப்படவேண்டுபவனாய் அழைக்கப்படுபவனே, அக்னியே, அதிசோதியே! சுபமான வீரர் சேர்ந்தவனே, 8 உன்னை நாட்டினோம். எ. அக்னி தலைவனாகும், சொதியுலகத்தின் உயர்ந்த நிலையாவான். பூமியின் தலைவன். அவன் சகல சலம்

---

1 உறவு போலுடனான சேர்க்கைக்கு. 2 என் மனத்தில் அதிகமாய் விளங்க 3 அடிக்கடி தோன்றும் 4 உணர்வில் 5 இந்திரியங்களை 6 என் துரித செயல்கள், சீலமான எண்ணங்கள். 7 மகா சனங்களின் தலைவனே 8 மனத்தில்

ரேதசுகளை திருப்தியாக்குகிறான். அ. அக்னியே! எங்களுடைய இந்த அளிப்பை மிகவும் நூதன மொழிகளை 1 தேவர்களில் தெரிவிக்கவும். கூ அக்னியை 2 கோபவனன் மொழியால் உன்னை சனனஞ் செய்கிறார். 3 அங்கிரசனே! புனிதஞ் செய்பவனே! எங்கள் அழைப்பை செவிகொடுக்கவும். ா 4 யக்ஞஞ் செய்பவர்களுக்கு இரமணீயமான ஐசுவரியங்களை அளித்து பலத்தின் தலைவனாய் கவியான அக்னியானவன் புனிதப்பொருள்களைச் சுற்றிச் செல்லுகிறான்.

கக. 5 ரசிமிகள் அனைவருங் காண முதன்மையாய் ஞான ஐசுவரிய மளிப்பவனை திவ்யமான 6 சூரியனை உயரமாய் சுமந்து செல்லுகின்றன. கஉ யக்ஞத்திலே சத்திய செயலுடனான கவியான திவ்யனை சத்துருக்களை துவம்சஞ்செய்பவனை அக்னியைத் 7 துதிசெய்யவும். கங தேவி 8 எங்கள் ஸ்னானத்திற்கு சுகமளிக்கட்டும். எங்கள் பானத்திற்குச் சாந்தத்தையும் சுகத்தையும் ஐசுவரியத்தையும் 9 வர்ஷிக்கட்டும். கச சத்துருக்களின் பதியே! உன் சம்பந்தமான 10 பசுக்களை யளிக்கும் துதிகள் ஆத்மாவின் பிரம செயல்களை எழுச்சியாக்குகின்றன.

---

1 புலன்களில் பெருமையான செயல்களில் 2 புலன்களை வசியஞ் செய்பவன் 3 ஒளி வடிவமுள்ளவனே 4 நல்ல செயல் செய்பவர்களுக்கு யுத்தஞ் செய்பவர்களுக்கு. 5 ஞானங்கள் 6 சர்வேசனை அறிவு செயல்களை 7 நாடவும் 8 சலம் 9 பொழியட்டும். 10 சகங்கங்களை

# கண்டம் ச.

தேவதை - அக்னி. ரிஷி - க, ௩ - சம்யுனன். உ - பர்கன். ச - வசிஷ்டன். ரு - பாரத்வாஜன். சு - பிரஸ்கண்வன். எ - திருணபாணி. அ - விருபன். கூ - சுனச்சேபன். ய - சோபரி.

க. எல்லா யக்ஞங்களிலும் துதி வடிவ மொழிகளோடு உங்கள் அக்னிக்கு கானஞ் செய்யவும், பிரியமான நண்பனைப்போல் 1 சாதவேதசனை அமிருதனை நாம் பஜிக்க வேண்டும். உ அக்னியே! எங்களை ருக்வேதத்தால் ரட்சிக்கவும். யஜுர் வேதத்தால் பாதுகாக்கவும். மூன்றுகளான மொழிகளால் பலத்தின் பதியே! பாதுகாக்கவும். நான்கு வேதங்களால் காக்கவும், ௩ அக்னியே! தேவரே! இளைஞனே! புனிதமாக்குபவனே! நிர்மலமான சுடர்களால் 2 பரத்வாஜரால் மூட்டப்படும் நீ பெரிய சுடர்களால் செல்வமாய் ஒளி வீசவும். ச. நலமுடன் ஆகுதஞ் செய்யப்பட்ட அக்னியே! அறிஞர்கள், ஐசுவரிய மளிப்பவர்கள், பசு சமூகத்தை அளிப்பவர்கள், பிரியமுள்ளவர்களாக ஆகட்டும். ரு அக்னியே 3 துதிப்பவனே! மனிதர்களை ரட்சிப்பவனே! 4 கிருஹபதியே வீடு விடாதவனே! சோதி யுலகின் தலைவனே! சதாகால மிருக்கும் நீ பெரியவனுயிருக்கிறாய்.

சு. அமிருதனை ஜாதவேதசனே! உஷா ஆகாசத்தினது சோதியான ஐசுவரியமே! அதிசய 5 உஷா தேவி அறிவை, 6 அளிப்பவர்களுக்கு, அக்னியே! கொண்டுவரவும். எ அக்னியே! உன் அற்புத ரட்சையோடு ஐசுவர்யங்களை

---

1 எல்லா மறிந்தவன் 2 ஞானம் பலம் நிறைந்தவரால் 3 துதிப்பதற்கருன் 4 குடும்பத் தலைவனே. 5 உதயமாகும். 6 பரோபகாரஞ் செய்பவர்களுக்கு

எங்களுக்குத் தூண்டவும், நீ பூமியின் — பொருள்களின் — சாரதியாகும், எங்கள் சுக்கிலத்திற்கு துரிதமாய் நிலையை யளிக்கவும். அ. அக்னியே! நீயே ரட்சிப்பவன். சத்தியன். கவியாகும். எங்கும் விஸ்தாரமாயுள்ளவன், மூட்டப்பட்ட ஒளியுள்ளவனே! உன்னை மேதாவிகளான அறிஞர்கள் நினைக்கிறார்கள் அழைக்கிறார்கள். கூ அக்னியே! புனிதஞ் செய்பவனே! சனங்களில் வாழ் நாட்களின் அபிவிருத்தியை யும் துதிக்கப்படும் தனத்தையும் அருகிலுள்ள சோதியே நல்ல வழியால் பலர் விரும்பும் மேலான கீர்த்தியையும் எங்களுக்கு அளிக்கவும். க௦. சந்தோஷ மளிப்பவனே! துதிக் கப்படும் எவன் சர்வமான ஐசுவர்யங்களை சனங்களின் க்ஷேமங்களுக்கு அளிக்கிறானோ, மதுரசம் நிறைந்த பாத் திரங்களைப்போல, அந்த அக்னிக்கு துதிகள் செல்லட்டும்.

---

## கண்டம் ரு.

தேவதை - க - எ, கூ, ௰ - அக்னி, அ - இந்திரன். ரிஷி. க - வாமதேவன். உ - பர்கன். ந, எ, சௌபரி. ச - மனு. ரு - சுதீதிபுருமீடஷ்கம்பர். சு - பிரஸ்கண்வன். அ - மேதாதிதி, மேத்யாதித்தி, கூ - விசுவாமித்ரன். ௰ - கண்வன்.

க. பலத்தின் மகனான பிரியனாய் அதிசய அறிஞனான நல்ல யக்ஞனை, தூதனான சகலத்தின் அமிருதனான அக் னியை இந்த தோத்திரங்களால் உங்களுக்காக அழைக் கிறேன். உ தாய்களான சலங்களில் நீ சாய்ந்திருக்கிறாய், உன்னை மனிதர்கள் எழுச்சியாக்குகிறார்கள். துரிதமாய் யக்ஞஞ் செய்பவர்களின் [1] அளிப்பை சுமந்து செல்லுகிறாய். அப்பால் தேவர்களில் ஒளிவீசுகிறாய். ந எவனில் [2] விர

---

1 நல்லசெயலை 2 நல்ல சங்கற்பங்கள், உறுதியான செயல்கள்.

தங்கள் அளிக்கப்படுவதோ, அதிசய வழியை அறிவிப்பவனை அவன் தோன்றுகிறான். ஆரியன் பலத்தைப்பெருக்குபவனை, பெருமையுடன் தோன்றும் அவனை அக்னியை எங்களின் துதிகள் அருகில் அணுகட்டும். ச உத்கானத்தில் யக்ஞத்தில் புரோகிதனையும் அவன் மேகங்களாகவும் அக்னி, அனலாகவுமிருக்கிறான். [1] தேவர்களே! மருத்துக்களே! பிராமணஸ்பதியே! மேலான பாதுகாப்பை அடைய உங்களை [2] ருக்குக்களால் [3] யாசிக்கிறேன்.

ரு. [4] புருமீடனே! நமது ரட்சிப்பிற்கு மந்திரமொழிகளால் ஐசுவரியத்திற்கு சயன சுபாவ சோதியான சிறந்த அக்னியைத் துதிக்கவும், மானிடர்களே! அவன் சுகத்திற்கு நிலயமாவான். சூ செவி சாமர்த்தியமுள்ளவனே! செவி சாய்க்கவும். யக்ஞத்தில [5] தர்ப்பையிலே [6] மித்திரன் அர்யமான் காலையில் செல்லும் தேவர்களோடு உன்னைப்போல் செல்லும் தேவர்களோடு அக்னியே! [7] உட்காரட்டும். எ. ஒளி தாசனுடைய அக்னியானவன் பலத்தால் திவ்யமான இந்திரனைப்போல் தாயை அனு சரித்துத் துரிதமாய்ச் செல்லுகிறான், - திடமாக்குகிறான். அவன் [8] சுவர்கத்தின் நிலயத்தில் நிற்கிறான். அ. இப்பொழுது பூமியிலிருந்தோ பெரிய நட்சத்திர முதலியவைகளுடனை வானத்தினின்றோ நீ வந்து என் துதிகளால் உன் [9] சரீரத்தில் வன்மையுடனுகவும், சுபமான செயல்கள் உள்ளவனே! சனங்களைப் பூர்ணமாக்கவும்.

---

1 பூவுலகிலுள்ள பெரியார்களே, பல புருஷர்களே! அறிஞர்களின் தலைவரே. 2 சாதனங்களால் 3 நாடுகிறேன். 4 அந்தராத்மாவே 5 இருதயத்தில் 6 நட்பு நியாயம் முதலிய நீதி செயல்களோடு 7 நீ விளங்குகிறாய். 8 ஆகாசத்திலே 9 சகத்தில் எங்கும் வியாபகமாயிருக்கிறாய்.

௯. 1 வனங்களைப் புசிக்க விருப்பமுள்ள நீ அன்னையான 2 நதிகளை அடைவதானது நாசமாவது போலிருந்தாலும் நிந்திப்பதிற்கில்லை. ஏனெனில் தூரத்திலிருந்தும் நீ இங்கு இருக்கிறாய். ௧௦ அக்னியே! 3 மனுவானவான் வெகு பலர்களுக்கு சோதியான உன்னை நிலையாக்குகிறான். மானிடர்கள் நமஸ்கரிக்கும் நீ சத்தியத்துடன் சனித்து ஒளியுடனாகி ஓங்கி வளர்கிறாய்.

---

## கண்டம் ௬.

**தேவதை - ௧, ௪ - ௮, - அக்னி, ௨ - பிரமணஸ்பதி ௩ - யூபன். ரிஷி - ௧, ௭, - வசிஷ்டன். ௨, ௩, ௫ - கண்வன். சௌபரி. ௬ - ஆத்கீலன். ௮ - விசுவாமித்திரன்.**

௧. ஐசுவரியங்களை அளிக்கும் தேவர் நிரப்பப்பட்ட பூரணமான அளிப்பைப் பெற்றுக்கொள்ளட்டும், அதை வெளியில் 4 கொட்டவும், அப்பால் நிரப்பவும், ஏனெனில் தேவர் (இப்படி) உங்களைச் சுமக்கிறார், காப்பாற்றுகிறார்.

௨. 5 பிரமணஸ்பதி வரட்டும், தேவப்பிரியரான சத்தியமென்னும் சொல் சீமாட்டிவரட்டும், மனிதர்களுக்கு ஹிதமான வீரனை 6 ஐந்துவகை ஐசுவரியங்களை தேவர்கள் அளிக்கும் எங்கள் யக்ஞத்திற்கு கொண்டுவரட்டும். ௩. எங்களை ரட்சிக்க உயரமாய் நிற்கவும், சூரியனான தேவரைப் போல் நிற்கவும். சோதியான யக்ஞகர்த்தாக்களோடு உன்னை அழைக்குங்கால் வன்மை யளிப்பவனாய் உன்னதமாக நிற்கவும். ௪ ஐசுவரியத்திற்கு அழைத்துச் செல்லும் அக்னி

---

1 சலங்களை 2 வெள்ளத்தை 3 மதியுள்ளவன் 4 வழியும் வரை. 5 பக்குவமான, ஐந்து அற்புத ஞானேந்திரியங்கள் 6 அறிஞரின் தலைவன்.

யான உனக்கு, அளிப்பைக்கொண்டு வருபவன் துதிகளால் திடமாகி தன்னைப்போல் வெகு ஐசுவரியமுள்ள மகனை அடைகிறான்.

ரு. தேவர்களை நாடும் வெகு மனிதர்களுடைய உங்கள் உத்தமனான இன்னம் வேறுரிஷிகளும் ஒளி யோங்கச் செய்யும் அக்னியை [1] சூக்தங்களான சொற்களால் நாம் கெஞ்சுகிறோம். சு. சிறந்த வீரத்தினுடையவும் செல்வம் சௌபாக்கியத்தினுடையவும் மக்கட்களுடன் பசுக்கூட்டங்களோடு ஐசுவரியத்தினுடையவும் சத்துருக்களோடு யுத்தஞ் செய்பவைகளின் தலைவனாய் இந்த அக்னி இருக்கிறான். எ அக்னியே! நீ வீடுகளின் தலைவனாகும். யக்ஞத்தில் [2] ஹோதாவாகும், எல்லா வரங்களின் தலைவனே! நீ புனிதஞ்செய்பவனாகும், பெருமையான அறிஞனே! நீயே நாடத் தகுந்தவன், [3] துதிக்கவும், திரவியத்தை அடையவும். அ. பாதுகாப்பிற்கு நண்பர்களான மனிதர்களான நாங்கள் சலத்தின் மகனான சுப செல்வமுள்ள சிறந்த செயலுள்ள துரித ஜயமளிக்கும் ஹிம்சை யற்ற தேவரான உன்னை பிரார்த்தனை செய்கிறோம்.

---

## கண்டம் எ.

**தேவதை - அக்னி. ரிஷி - க - சியாவாசுவ வாமதேவர்கள். உ - வாஹர்ஷ்டவ்யன். ந - பிருஹதுக்தன். ச - நுத்ஸன். ரு - சு - பாரத்வாஜன். எ - வாமதேவன். அ ௯ - வசிஷ்டன். கO - திரிசிராஸ் த்வாஷ்டிரன்.**

க. அளிக்கவும், ஹவிஷுகளால் பிரகாசமாக்கவும், அவன் நிலயத்தில் தேவர்களை இன்பமுடனுக்கும் வீட்டின்

---

1 துதி முழக்கங்களான. 2 பெரியவனாகும் 3 நாடவும்.

தலைவனான அக்னியை நிலை நாட்டவும், நமஸ்காரத்துடன் அளிக்கப்பட்ட ஹவிஷுகளுடனான யக்ஞங்களின் நடுவே பூஜிக்கத்தகுந்தவனை அணுகவும். உ. தாய்களின் 1 ஸ்தன்ய பானத்திற்கே செல்லாத சிசுவான பாலனான அக்னியின் பலம் அற்புதம் வாய்ந்ததே 2 ஸ்தன்ய மற்றவள் அவனை சன்மமாக்கியவுடன் அவன் உடனே துரிதமாக திடமான தூதச் செயல் செய்து கொண்டு தேவர்களை நோக்கிச் செல்லுகிறான். 3 உனக்கு ஒரு சோதியாகும். 4 அங்கு வேறு, மூன்றாவதான 5 சோதியோடு 6 ஒன்று சேரவும். தேவர்களின் உயர்ந்த ஸ்தானத்தில் பிரியமுள்ளவனாய் 7 தேகம் கிரகிக்க சுபமுள்ளவனாய் சூரியனில் 8 ஒன்று சேரவும். ௪ அருகதையான ஜாதவேதசனுக்கு மனத்தால் இந்தத் துதியை ரதத்தைப்போல் செய்யுங்கால் அவன் சமூகத்தில் எங்கள் சிறந்த சித்தமானது சௌபாக்கியமுடனாகட்டும். அக்னியே! உன் நட்பிலே நாங்கள் ஹிம்சையுடனாக வேண்டாம். ரு. சோதியின் சிரோ பூதனும் சகத்தின் தூதனும் 9 வைசுவாநரனும் சத்தியத்தில் சனித்தவனாய் கவியும் கனிந்த ராஜாவுமாய் ஜனங்களின் அதிதியாயு முள்ள ரட்சகனான 10 அக்னியை தேவர்கள் 11 தோற்றுவிக்கிறார்கள். சூ அக்னியே உன் ஆகாசத்தினிட மிருந்து துதிகளால் மேகத்தின் மேலான பாக உச்சியினின்று சலத்தைப் போல்தேவர்கள் தோன்றுகிறார்கள். சண்டைக்கு சுபமான மொழிகளை வசிகரிக்கும் குதிரைகளைப் போல் பிரசித்தமான உன்னை துரிதமாய் நாடுகிறார்கள். யக்ஞத்தின் ராஜாவாய் ஹோ

---

1 பால்பருக 2 மறைந்துள்ள அவனை உன் சக்தியால் புலனாக்கிக் கொண்டதும் 3 பூமி ஒரு சொருபம் 4 சூரியன் இரண்டாவது வடிவமாகும் 5 உன் சுவயவடிவம் 6 வியாப்தமாகவும் 7 சகம் சிருட்டிக்க 8 வியாப்தமாகிறாய் 9 எங்குமுள்ள அனல் 10 ஈசனை 11 புலனாக்குகிறார்கள்

தாவான ருத்திரனை வானம் பூமியின் சத்திய யக்ஞமளிப பவராய் பொன்மயமாயுள்ள அக்னியை உங்கள் இரட்சிப் பிற்கு இடிமுழக்கம் உயிரன்னியில் செய்யும்முன் கிரகிக்க வும். அ [1] நெய்யினால் ஆகுதமான ராஜாவான சோதி வடிவ மான அக்னி துதிகளால் எழுச்சி யாக்கப்படுகிறான். யக்ஞ புருஷர்களான மனிதர்கள் ஹவிஷுகளால் துதிக்கிறார்கள். அந்த அக்னி உஷாகலத்திற்கு முன்னர் [2] உதய மாகிறான். கூ அக்னி பெரிய கொடியுடன் செல்லுகிறான். இந்த வானம் வையகத்தின் வழியாய் காலை கர்ச்சனை செய்கிறான். ஆகா சத்தினின் எல்லையினின்று அருகே வருகின்றான். சலங் களின் ஆகாசத்தில் (மின்னலாய்) மாடு பலமுடனுகிறது. கO இரண்டு கட்டைகளின்று தூரங்காணும் தூரிய சுடருடனான வீட்டின் தலைவனான அக்னி கைகளல் தூண்டப்பட்டு கருத் துக்களால் அவனை [3] குணமாக்குகிறார்கள்.

---

## கண்டம் அ.

தேவதை - க, உ, ச - அ. அக்னி ரு - சூரன். ரிஷி - க - புதகவிஷ்டிரிர்கள். உ, ருவத்ஸப்பிரின் ரு - பாரத்வா ஜன். சு - விசுவாமித்திரன். சு - வசிஷ்டன். அ - பாயு.

க. [4] பசுவைப்போல் வரும் உஷா காலத்தைக் காண சனங்களின் [5] சமித்துக்களால் அக்னி எழுச்சியாகிறான். உயரத்தில் கிளை கிளம்பும் சின்ன மரங்களைப்போல் சோதி யின் ஆகாசம் நோக்கி அவன் சுவாலைகள் செல்லுகின்றன. உ துதிகளோடு ஜயத்தின் சித்தத்திற்கு அழைத்துச் செல்

---

1 நட்பினால் 2 அறிஞர்களின் இருதயத்தில் உதயமாகிறான் 3 அவனை ஈசனை 4 பாதுகாப்பவனைப்போல் 5 நல்ல செயல் களால்

பவனாய், சுவாலையான கவசமுடன் பசுமையான சுடரோடு மதியற்றவர்களோடு மதி சூன்யமற்று சரீரங்களின் இரட்சகனாயுள்ள மகா மேதாவியாய் ஒளி வீசும் அக்னியை உத்தேசித்து அறிவான செயலை அளிக்கவும். ௩ பூஷணனே! நீ சோதியான சூரியனைப்போல் பிரகாசிக்கிறாய். வேற்றுமையான நிறங்களுடனான இரவு பகலைப்போல் ஒன்று சோதி சொரூபம் - வேறு புனிதமான தாகும்.—தானாகவே தாங்கிக் கொள்பவனே! எல்லா, 1 மாயை வன்மைகளையும் நீ ரட்சிக்கிறாய், உன் சுபமான ஐசுவரியம் இங்கு உண்டாகட்டும். ௪ அக்னியே! வெகு செயல்களுடனான பசுக்களின் ஐசுவரியத்தையும் உணவைப் போல் நித்தியமாக, உன்னை அழைப்பவனுக்கு சாதிக்கவும், எங்களுக்கு மகனும் பேரனுமாகட்டும். உன் சுபமுடனான சித்தம் எங்களுக்கு சிறதோங்கட்டும்.

---

## கண்டம் ௧.

**தேவதை - அக்னி. ரிஷி - ௧ - காயத்ரி ௨ - வாமதேவன். ௩, ௪ - பாரத்வாஜன். ௫ - மிருக்தவாஹாத்விதன். ௬ - வசூயவ ஆத்ரேயர்கள். ௭, ௮ - கோபவனன். ௯ - புநராத்ரேயர்கள், ௰ - வாமதேவன்.**

௧. அக்னியே! தடையின்றி செல்லுபவனே! எங்களுக்கு பலமுள்ள பெருஞ் சோதியைக்கொண்டு வரவும், சக்திக்கும் செல்வத்திற்கு மான வழியை எங்களுக்குத் தயார் செய்யவும். ௨ 2 ஹவ்யத்தை நியமமுடன் அளித்து உற்சாகம் நிறைந்து சுடருடனான அக்னியை எழுச்சியாக்கினால் வீரமக்கட்கள் தேவ சம்பந்தமான சுகத்தை அனுபவிக்கட்டும். ௩. சோதியுடனான உன் நிர்மலமான புகை

1 அதிசய வன்மைகளையும். 2 கடனான கடமைச் செயலை.

யானது ஆகாசத்தில் விஸ்தாரமாகி மேகாத்மர்வோடு சேர்ந்துவிடுகின்றது. புனிதமாக்குபவனே துதிக்கத் தகுந்த சோதியால் சூரியனைப்போல் பிரகாசிக்கிறாய். ச. அக்னியே! [1]மித்ரனைப்போல் நீ நிச்சயமாக மன்னனின் கீர்த்தியை யடைகிறாய், எங்கும் காண்பவனே, வசிப்பவனே, போஷிக்கும் பொருளைப்போல மகிமையை பெருக்குகிறாய். ரு எந்த அமுதமான அக்னியிலே சகல மனிதர்களும் ஹவ்யத்தை மூட்டுகிறார்களோ அந்த வெகு பிரியமான வீட்டின் அதிதியான [2] அக்னி காலையில் துதிக்கப்படட்டும்.

சா. உருக்கமான தோத்திரம் அக்னிக்காகட்டும், சோதி செல்வமான அக்னியே! உயரத்தில் ஒளி வீசவும், ராஜாவின் முதல் துணைவனைப் போல் ஐசுவரியமும் பலமும் உன் ஆகாசத்தினின்று வருகின்றன. எ. வெகு பிரியமான எல்லா பிரஜைகளின் அதிதியான உங்கள் நன்மையை நாமே எல்லா வன்மையுடன் பலத்திற்கு மனோதுதிகளால் துதிசெய்கிறோம். அ துதிகளுக்கு மித்ரனைப் போல் முதன்மையான நிலயங்களில் நிலையாக்கப் பட்ட தேவர்க்கு சோதியான அக்னிக்கு மகத்தான வாழ்நாட்களை அளிக்கவும். கூ [3] ருக்ஷமனோடு [4] சுகுதர்வனோடு பெரிய சுவாலை சமூகத்தோடு மூட்டப்பட்டுள்ள [5] விருத்திரனைக் கொல்லும் சிறந்தவனாய் உனக்கு ஹிதஞ்செய்பவனான அக்னியின் அருகே நாங்கள் வந்துள்ளோம். கO. இந்த அக்னி [6] கசியபனின் தந்தை. [7] சிரத்தை அன்னையாகும், மனுவாகும். கவியுமாவான். தேவர்களோடு சேர்ந்து வளர்பவன். பெரிய தார்மத்தால் பிறப்பவன்.

---

1 பிரிய நண்பனைப்போல் 2 ஈசன் 3 நட்சத்திரத்தோடு 4 பெரியசக்தியுடன் 5 அநீதியை 6 மனத்தின் 7 நிலயம் 8 உயரிய இயல்பால்

## கண்டம் ௧௦.

தேவதை - ௧ - விசுவேதேவர்கள். ௨ - அங்கிரன். ௩ - ௬ - அக்னி. ரிஷி - ௧ - அக்னிதாபஸன். ௨ - வாமதேவன். ௩ - வாமதேவன்-கசியபன். ௪ - பார்கஹூதி, சோமன். ௫ - பாயு. ௬ - பிரஸ்கண்வன்.

௧. சோமன், ராஜன், வருணன், ஆதித்தியன், விஷ்ணு சூரியன் பிராமணன் பிரஹஸ்பதியான அக்னியை துதிகளால் ரட்சிப்பிற்காக அழைக்கிறோம். ௨. 1 அங்கிரசர்கள் சுவர்கத்திற்குச் செல்லும் வழியை ஜயிக்கவும். (இதனால்) சுவர்கத்தின் நிலைகளை அடைந்து உயரத்தில் இவர்கள் செல்லுகிறார்கள். ௩. நீ மகத்தான ஐசுவரியத்தை அளிக்க, உன்னை அக்னியே! நன்றாய் எழுச்சியாக்குவோம். மகத்தான அழைப்பிற்கு 2வர்ஷிக்கும் (அக்னிக்கு) வானம் பூமியை நாடவும். ௪. இவனைக் குறித்து எது சொல்லபடுகின்றதோ செவியுறப்படுகின்றதோ அந்த தோத்திரம் மறுபடியும் சொல்லப்படுகின்றன. அந்தத் துதிகள் எல்லாம் அவனுக்கே, வளையக்கட்டை சக்கிரத்தைச் சுற்றியுள்ளது போல் சர்வமான கவியின் காரியங்களை அவன் சுவாதீனஞ் செய்துளான். ௫. அக்னியே! உன் தேஜசால் அரக்கனின் அழிக்கும் பலத்தை எங்கும் நாசஞ் செய்யவும். ராட்சதனின் வீரத்தையும் வீழ்த்தவும். ௬. சுப யாகத்தோடான 3 மனுவால் மலரும் சலம் வர்ஷிக்கும் வசுக்களையும் இங்குள்ள ருத்திரர்களையும் அக்னியே! நீ துதிக்கவும்.

---

1 ஞான புருஷர்கள், 2 பொழியும். 3 உன் ரட்சிப்பிலாக்கவும்.

## கண்டம் கக.

தேவதை - க - ச, எ - ய, - அக்னி, ரு - பவமானன். சு - அதிதி, ரிஷி - க - தீர்கதமன். உ, ச, விசுவாமித்திரன் - ங கோதமன். ரு - திரிதன். சு - ஹரிமிடி எ, அ, - விசுவ மனு வையசுவன். கூ பாரத்வாஜன். ய - விசுவமனர்கள்.

க. மகத்தான சிட்சகனுன சுவாமிக்கு சரணமடை பவன்போல் அக்னியே! சிரத்தையுடனுன உன் சேவகனுன நான்வெகுகொடைகளுடன் ஈசனுன உன்னை அழைக்கிறேன். உ. மேதாவிக்கு தேஜசுகளை செய்துகொண்டு சகத்தை நிலைக் கச்செய்பவனுன ஹோதாவான அக்னிக்கு மேன்மையான பழைய மொழிகளை அளிக்கவும். ங. அக்னியே வன்மை யின் மகனே, வெகு பசுக்களுள்ளவனே! எந்தவித ஐசு வரியத்தின் ஈசன் நீயேயாகும். ஜாதவேதசனே! சிறந்த கீர்த்தியை யளிக்கவும். ச. யக்ஞ மறிந்த நீ, அக்னியே! வானத்திலே திவ்யமானவர்களுக்கு [1] தேவர்களைக்கொண்டு வர்வும். ஹோதாவாய் ஆனந்த மளிப்பவனே, உன் சோதி, சத்துருக்களை வெகு தூரம் துரத்துகின்றது. ரு. நிலையான அக்னியானவன் ஐசுவரியங்களின் வழிகளை அறிகிறுன். [2] ஏழு தாய்களால் தோன்றி அறிவின் மகிமைக்குக் காரண மாகிறுன். சு. இன்று இந்த மந்திரம் சொல்லத் தகுந்தது. [3] அதிதியானவன் பகலில் எங்களைக் காக்கவரட்டும். சாந்த மளிக்கும் சுகத்தோடு அதிதியானவள் நன்மை செய்யட்டும். சத்துருக்களை ஓட்டட்டும். எ. எங்கும் செல்லும் சர்வமய [4] புகையுடனுன பற்றமுடியாத சுடருடனுன ஜாத வேத கனைத்துதி செய்யவும். அ. திவ்யமாய் நாடவும். ஹவ்ய

---

1 நல்லபொருள்களை 2 ஏழு பிராமணர்களால் 3 பலமுள்ள வன் அகண்டிதன் 4 வியாப்த முடனுன்.

மளிக்கும் அக்னியை நாடுபவனில், மாயையால்[1] எந்த மனித னும் தலைவனாவதில்லை. கூ. அக்னியே! நீ பிரசித்த சத்துரு துஷ்டனான ஹிம்சை செய்பவனை வெகுதூரம் துரத்தவும். நல்லோர்களை காப்பவனே! சுகத்தை செய்யவும். ய. வீரனே! வீடுகளை காப்பவனே! புதியதான என் தோத்திராயுதங்களை செவியுற்று மாயாவிகளான அரக்கர்களை தவத்தால் எரித்துவிடவும்.

---

## கண்டம் கஉ.

தேவதை - அக்னி. ரிஷி - பிரயோகோபார்கவன். ச - பிரயோக பார்கவன் சௌபரி காண்வன் - உ - ந - ரு - கூ - எ - சௌபரி. அ - விசுவமனர்கள்.

க. துதிப்பதற்கு அருகிலானவர்களே! அதிக மளிப்பவனாய், சத்தியனாய், பெரியவனாய் வெண்மையாய் தேஜசுள்ள அக்னிக்கு தோத்திரத்தை கானஞ் செய்யவும். உ. சிறந்த வீரமக்களுடன் ஐசுவரியம் செயல்களுடனான ரட்சணைகளால் அக்னியே! அவன் ஜயிக்கிறான். ந. நீ அவன் நட்பை அடைந்து [2]அவன் ஜயமடைகிறான். சோதியின் தலைவனுக்கு கானஞ் செய்யவும். தேவர்களுக்கு ஹவிஷைக் கொண்டு போகச் செல்லும் தேவரை துதிகளால் தேவர்கள் அடைகிறார்கள். ச. நம்முடைய அதிதியான அக்னியை கோபிக்க வேண்டாம். அவன் சிறந்த ஹோதாவாகும். சுபமான யக்ஞன். பலர் துதிகளோடு அவன் வசிக்கும் நிலயமாகிறான். ரு. ஆஹூதத்தால் ஸ்தாபனமான அக்னி எங்களுக்கு மங்களமளிக்கட்டும். சோபன குணமுள்ள அக்னியே! ஆசி

---

1 அற்புதத்தால். அதாவது அக்னியை அனுசரிப்பவனை எவனும் ஜயிக்கமுடியாது 2 உன்னை நாடுபவன்.

களும் ஐசுவரியங்களும் எங்களுக்காகட்டும். சுபமான யக்ஞமும் இன்னம் சுபமான துதிகளும் சந்தோஷத்தைக் கொண்டு வரட்டும்.

சு. யக்ஞத்தில் சிறந்தவனாய் தேவர்களின் நடுவில் திவ்யனாய் குதூகலமளிப்பவனாய் நாசமன்னியிலுள்ள நல்ல செயல்களை முடிப்பவனான உன்னை பஜிக்கிறோம். எ. பாப மிகுதியுள்ள சனத்தின் கோபத்தையும் (எங்கள் வீட்டில்) அரக்கர்களை ஜயிக்கும் சோதியையும் அக்னியே! எங்களுக்குக்கொண்டுவரவும். அ. மனிதர்களைக் காக்கும் ஹவிஷால் கூர்மையான அக்னி அன்புள்ளவனாகி மனிதருடைய வீட்டிருலிருக்கும் வரை புன்மையான பாதகர்களை அழிக்கிறான்.

---

## கண்டம் கங.

தேவதை - இந்திரன். ரிஷி க - சம்யுபார்ஹஸ்பதிகள். உ - சுபககக்ஷன், ங - ஹர்யதன் பிரகாதன். ச, ரு - சுருத ககக்ஷன் சு - இந்திர மாதா ஜாமய ரிஷிகள் - எ, அ - கோஷுத்கி அசுவஸுக்தினர்கள். கூ - மேதாதிதிராங்கிசர்கள். ய- காண்வ பிரியமேதன்.

க. உன் சோமனில்[1] வெகுமுறை அழைக்கப்படும் சக்தியுள்ள இந்திரனுக்கு பசுவிற்குப்போல் எந்தத் துதி சுகமாகின்றதோ அந்த தோத்திரத்தை அருகினின்று கானஞ் செய்யவும். உ. பல நல்ல செயல்களைச் செய்பவனே! இந்திரனே! கீர்த்தியுடனான எந்தக் களிப்போடு முன்னர் என்னால் புலனாக்கப்பட்டதோ அந்த ஆனந்தமளிப்பதால் நீ சந்தோஷமுடனாகவும். ங. இந்த மகா வீரனின் உயர்ந்த பயன்களை அளிக்கும் இரண்டு [2]சாதனங்

---

1 சிறந்த செயலில் 2 சன்மமும் சாவும்.

கள் பொன்னால் செய்யப்பட்டவைகளாகும். மேகம் யக்ஞத்தின் வடிவான வானம் பூமியை அடைந்துள்ளது. ச. பசுக்களே! [1] சொல்லவும். [2] சுருதககக்ஷனே! பசுவிற்காகவும், குதிரைக்காகவும் கானஞ் செய்யவும். இந்திரனுடைய நிலயத்திற்கு துதிசெய்யவும். ரு. மகத்தான விருத்திரனைக் கொல்ல இந்த இந்திரனை பலமுள்ளவனாகச் செய்கிறோம். ஐசுவரியமளிக்கும் அவன் எமக்கு வர்ஷிப்பவனாக ஆகட்டும்.

சா. இந்திரனே! நீ ஜயிப்பவனாய் பலத்தினின்று மனோதிடத்தினின்று பிறக்கிறாய். வர்ஷிப்பவனே! சிறந்தவனாக நீ விருப்பங்களை அளிப்பவனாகிறாய். எ. பூமியை வேறுவடிவம் செய்யும்பொழுது வானத்தில் சயனம்செய்யுங்கால் யக்ஞமானது இந்திரனைப் [3] பெரியவனாகச்செய்கிறது. அ. இந்திரனே! நீ ஒருவனே! ஐசுவரியத் தலைவனா யிருப்பதுபோல் நானும் தலைவனாயிருந்தால் என்னை நாடுபவர்கள் பசுக்களுடனிருப்பார்கள். கூ. யக்ஞபுருஷர்களே! வீரனான சூரனுக்கு எங்கும் துதிக்கப்படும் [4] சோமனை சந்தோஷத்திற்காக அழைத்துச் செல்லவும். கo. வசுவே இங்கு தோன்றிய சோமரசத்தை உன் வயிறு நிறையும்வரை பருகவும், அச்சமற்றவனே; அதை உனக்கு அளிக்கிறேன்.

---

## கண்டம் கச.

தேவதை - இந்திரன். ரிஷி - க, உ சூதககக்ஷன், சுருதககக்ஷன். ந - பாரத்வாஜன். ச சுருதககக்ஷன் ரு, சா - மதுச்சந்தர்கள் எ கூ ம - திரிசோகன். அ . வசிஷ்டன்

க. நரனுக்கு நன்மை செய்பவனாய் ஆயுதங்களை (சத்துருக்களில்) எரிபவனான சூரியனே! சிறந்தவனாய் ஐசுவரிய

---

1 உங்கள்வேலையை 2 வேதமறிந்தவனே 3 நம்முடைய மனத்தில் 4 சிறந்த செயலை.

வர்ஷிப்பவனான வீரனைக் காண நீ ஏறுகிறாய். உ. மேகத்தைக் கொல்லுபவனே! [1] சூரியனே, இன்று எதுவும் உன் எதிர் முகமாகி நீ உதயத்தை அடைகிறாய். ந. அந்த (அனைத்தும்) உன் வசத்திலாகும், [2] துர்வசம் யதுக்களை தூரதேசத்தினின்று சுபமான கண்களால் சத்திய வழியால் அழைத்து வருபவனான காளையான இந்திரன் எங்களுக்கு நண்பனாகட்டும். ச. இந்திரனே! கருமையான கருத்துக்கள் எக்காலத்திலும் எங்களைச் சுற்றிலும் வேண்டாம், ரட்சகனான உன் உதவியால் நாங்கள் ஜயிக்கட்டும். ரு. எங்கள் உதவிக்கு சந்தோஷமளிப்பவனும் ஜயத்திற்குக் காரணமாயும் சதாகாலம் ஜயிக்கும் சிறப்புடன் செம்மையாகுபவனான ஐசுவர்யத்தை இந்திரனே! கொண்டு வரவும். சு. நாங்கள் பெரிய போரில், சிறிய போரில், இந்திரனை அழைக்கிறோம், அவன் சத்துருக்களில் வச்ராயுதம் வீசுபவன். எ. இந்திரன் போர்க்களத்தில் [3] கத்துரு சம்பந்தமாய்த் தோன்றிய [4] சோமனைப் [5] பருகுகிறான். அ. தன் வீரியத்தைப் புலனாக்குகிறான், விருப்பங்களை வர்ஷிப்பவனே! இந்திரனே! யக்ஞத்தை உனக்கு அளிக்க விரும்பும் நாம் உன்னை பெருமையுடன் கானஞ்செய்கிறோம். வசுவே எங்கள் (தோத்திரத்தை) கவனிக்கவும். கூ. அக்னியை எழுச்சியாக்கி துரிதமாக [6] தர்ப்பையை சீர்படுத்துபவர்களின் காளையான நண்பனான இந்திர(னே) இங்கு எதிர் முகமாகவும். ω. சர்வமான எங்கள் [7] துவேஷிகளை துரத்தவும். துவம்சஞ் செய்யவும், சத்துருக்களை ஹிம்சிக்கவும், விருப்பமுள்ள பிரசித்தமான ஐசுவரிய நிலயங்களை எங்களுக்குக் கொண்டு வரவும்.

---

1 பரமனே 2 தீய வழியில் செல்லுபவர்களை 3 நல்ல புருஷன் 4 சிறந்த செயலை 5 தன்னுடையதாக்கிக் கொள்ளுகிறான் 6 போரைப் பிரிப்பவர்களின் 7 சத்துருக்களை.

## கண்டம் கரு.

தேவதை - இந்திரன். ரிஷி - கண்வ கௌரன். திரி சோகன். ௩ - வத்ஸன் - காண்வன். ௪ - குசூதி காண்வன் ௫ - மேதாதிதி. ௬ - சுநுதகக்ஷன். ௭ - சியாவாசுவன். ௮ - பிராகாத காண்வன். ௯ - வத்ஸன். ௰ - இரிமிடன்.

க. மருத்துக்களின் கைகளிலிருக்கும் சாட்டைகளின் சப்தஞ்செய்வதானது இங்குதான் என செவியுறுகிறேன், அவர்கள் யுத்தத்தில் விதவிதமான வீரத்தை சேகரிக்கிறார்கள். உ. இந்திரனே எமது இந்த நண்பர்கள் பசுக்களுக்கு புற்களுடன்போல் உன்னை [1]சோமபானத்தோடு விரும்புகிறார்கள். ௩. சர்வமான சனங்கள் இந்திரனுடைய கோபத்திற்கு நதிகள் சமுத்திரத்திற்குப்போல் நன்கு நமஸ்கரிக்கிறார்கள். ௪. நாங்கள் காக்கப்படுவதற்காக தேவர்களின் மகத்தான ரட்சிப்பை யடைய வர்ஷிப்பவனை உம்மை நாடுகிறோம். ௫. [2]பிரமணஸ்பதியே,! [3]ஔசிஜனின் மகனான கட்சி வந்தன் தேவர்களில் பிரசித்தமாயிருப்பதுபோல் சோமனனுசரித்த என்னை பிரகாசமுள்ளவனாகச் செய்யயும். ௬. விருத்திரனைக் கொல்லுபவன் ஹவிஷ்களுடனும் மலர்ந்த மனமுடன் எங்களுக்கு (காப்பவனாகட்டும்.) சத்துரு சம்ஹார [4] இந்திரன் எங்கள் துதியை செவிகொடுக்கட்டும். ௭. சவிதாவான சூரியனே! இன்று எங்களுக்கு பிரசைகளோடு ஐசுவரியத்தை உண்டு பண்ணவும், துக்ககரமான தரித்திரத்தை தூரத்திலாக்கவும். ௮. நித்திய யௌவனனை வன்மையான கழுத்துடன் எப்பொழுதும் வணங்காத அந்த விருஷபன் எங்கே? எந்த பிரா

---

1 செம்மையான செயல்களோடு 2 வன்மையின் தலைவனே 3 யோகத்தின் மகனான பிராணன் 4 சக்கரவன்மையுள்ளவன்.

மணன் அவனை பூஜிக்கிறான். கூ. மலைகளின் மேகங்களுடைய கீழ் எல்லையில் நதிகளின் சேர்க்கையிலே (சேர்க்கும் நிலயத்தில்) அறிவால் அறிஞன் பிறக்கிறான். ய. மனித சமூக (சத்துருவை) அடக்குபவனும் தாராளமாயுள்ளவும், மனிதர்களின் நடுவே மேன்மையான மன்னனும் நமது துதிகளால் அர்ச்சிக்கப்படும் இந்திரனை பெருமையுடன் புகழவும்.

---

## கண்டம் கசு.

தேவதை - இந்திரன். ரிஷி - க. சுருதகக்ஷன் உ. மேதாதிதி ங. கோதமன் ச. பரத்வாஜன் ரு. பிந்து பூததகக்ஷன் சு எ. சுருதகக்ஷன் சுகக்ஷன் அ. வத்சன் காண்வன் கூ. சுனச்சேபன் ய. சுனச்சேபன் வாமதேவன்.

க. செம்மையான முகமுள்ள இந்திரன் பூஜிக்கும் 1 சுதக்ஷனின் 2 வால் கோதுமையாடான 3 சோமரசத்தைப் பருகுகிறான். உ. வெகு பொருள்கள் உள்ளவனே! பசுக்கள் கன்றுகளுக்குக் கதறுவதுபோல் உன்னை உத்தேசித்து இந்தத் துதிகள் சப்திக்கின்றன. ங. இங்கு ஒளி வீசும் சந்திர மண்டலத்திலே புவி சம்பந்தமான இரவில் மறைந்துள்ள நாமத்தை (ஆதித்திய கிரணங்களை) இப்படி அநேக வழிகளால் தெரிந்துகொள்ளுகிறார்கள். ச. அதிகமாய் வர்ஷிக்கும் இந்திரன் மேக ஸ்தானமான மகத்தான மழை சலத்தை கொண்டுவருங்கால் அவனருகில் பூஷணன் (உதவி) யாயிருக்கிறான். ரு. ஐசுவரியமுள்ள 4 மருத்துக்களின் தாயான பசு பெருங் கீர்த்தியை விரும்பி பாலைப் பொழிகிறாள், போஷணை செய்கிறாள். 5 ரதங்களை இழுக்க இணைக்

1 நல்ல பலமுள்ளவனின், 2 சத்துருக்களுடனான 3 பிராணரசத்தை 4 பிராணன்களின் 5 இந்திரியங்களை.

கப்பட்டிருக்கிருள். ௬. மகிழ்ச்சியின் தலைவனே! 1 குதிரைகளால் எங்கள் யக்ஞத்திற்கு துரிதமாய் வரவும். குதிரைகளோடு எங்கள் பொழியும் நிலயத்திற்கு வரவும். எ. யக்ஞத்தில், ஆகாசத்தில், பெருகும் பிரியமுள்ள ஹோதுருக்கள் (அவர்களின் அளிப்புகள்) புனிதமாக்கும் ஸ்னானத்திற்கு பலத்தால் இந்திரனை அனுப்புகின்றன. அ. பிதாவின் சத்தியத்தினுடைய (அனுக்கிரஹஞ் செய்யும்) புத்தியை நான் கிரகிக்கிறேன். (அதனுல்) நான் சூரியனைப் போல் பிறப்பேன். கூ. இந்திரனுடன் கீர்த்தியான பசுக்களால் நான் களிப்புடனுகவேண்டும். எங்கள் ஐசுவரியங்கள் வெகு பலமுடனுகட்டும். ௰. தேவர்களில் 2 ரதார்ஹனுய் செல்லுபவனுக்கு சோமனும் சூரியனும் எல்லாநிலயங்களையுமளிக்கிருர்கள்.

---

## கண்டம் கஎ.

தேவதை - இந்திரன். ரிஷி - க ௪. சுநுதககக்ஷன் உ. வசிஷ்டன் ௩. மேதாதிதி பிரியமேதன் ௫. இரிமிடன் ௬ ௰. மதுச்சந்தன் எ. திருசோகன் அ. நுசீதன் கூ. சுனச்சேபன்

க. எல்லாம் ஜயிக்கும் 3 சதக் கிருதுவாயும் வெகு அறிவுடனுன மனிதர்களுக்கு ஐசுவரியமளிக்கும் இந்திரனை உங்கள் 4 சோமரசத்தைப் பருக கானங்களால் இந்திரனை அழைக்கவும். உ. நண்பர்களே! நீங்கள் 5 பசுநிற குதிரையுள்ளவனுன சோமபானஞ்செய்யும் இந்திரனுக்கு சந்தோஷமாக்க சிறப்புடன் கானஞ்செய்யவும். ௩, இந்திரனே! உன் ஆத்மாவை விரும்பி உன் நண்பர்களைப்போல் நாங்கள்

---

1 இந்திரியங்கள் வழியாய் 2 ரதத்திற்கு அருகனுய். 3 பல நற்செயல்கள் செய்பவன் 4 சீவரசத்தை ஞானத்தை 5 இந்திரியசாதனனுன.

இந்தத்துதியால் உன்னை நாடுகிறோம். 1 கண்வர்கள் கீதங்களால் துதிசெய்கிறார்கள். ஆனந்த சீலனான இந்திரனுக்கு சோமனைப்பற்றி எங்கள் கானங்கள் பலமுடன் சப்திக்கட்டும். ரு. இந்திரனே உன் நிமித்தம் இந்த சோமன் 2 தர்ப்பையில் புனிதமாக்கப்பட்டிருக்கிறது. இங்கு ஓடிவந்து அதைப் பருகவும். சு கறப்பவனிடஞ் செல்லும் நல்ல பசுவைப்போல் தினந்தோறும் எங்கள் ரட்சிப்பிற்கு சுபசெயல்கள் செய்பவனை அழைக்கிறோம். எ. விருஷபனே! பொழியப்பட்ட 3 சோமனை உனக்குப் பருக ஊற்றுகிறேன். திருப்தியாகவும், ஆனந்தமளிக்கும் சோமனை விசேஷமாய் அடையவும். அ. இந்திரனே! உன் நிமித்தம் விடப்பட்ட சோமன் 4 பாத்திரங்களில், பொருள்களிலே இருக்கின்றன. அதைப் பருகவும், நீ (சோமனின்) ஈசனாகிறாய், கூ. ஒவ்வொரு யாகத்திலும் அவசியத்திலும் ஒவ்வொரு யுத்தத்திலும் அதிக பலமுள்ள இந்திரனை ரட்சிப்பிற்கு நண்பனைப்போல் அழைக்கிறோம். ௰. துதிகளை வகிக்கும் நண்பர்களே! அருகில் வரவும். உட்காரவும், இந்திரனைக் குறித்து கானஞ்செய்யவும்.

---

## கண்டம் கஅ.

**தேவதை - இந்திரன். ரிஷி - க. விசுவாமித்திரன் - உ. மதுச்சந்தர்கள் - ந. சுசீத காண்வன் - ச. பிரியமேதன் - ரு. அ. வாமதேவன் - சு. கூ. சுருதககக்ஷன் - எ. மேதாதிதி க0 பிந்து.**

க. ஐசுவரியங்களுடைய பதியே, துதிகளால் விரும்பப்படுபவனே, பலத்தால் இந்த சோமன் புலனுக்கப்பட்

---

1 மேதாவிகள் 2 இருதயத்தில் 3 சாதனத்தை 4 புலன்களில்.

டுள்ளது. [1] இந்த சோமனைத் துரிதமாகப் பருகவும். உ. இந்திரன் பெரியவன். பழையவன், வச்சிராயுதனுய் வெகுபல முடனிருக்கட்டும். வானத்தைப் போல் விரிந்த பலமுள்ள வன். ங. இந்திரனே மேன்மையான கை யுள்ளவனே! எங் களுக்கு சப்தத்துடன் நாடத்தகுந்த பற்றவேண்டியவை களை, வலதுகையால் குவிக்கவும். ச. அறிபவனுன இந்தி ரனை சோமனின் பதியை சத்தியத்தின் மகனுன சத்புருஷர் களின் தலைவனை துதியால் மொழியால் தோத்திரஞ் செய்ய வும். ரு. எப்பொழுதும் அபிவிருத்தியாகும் விசித்திர பூஜ்யனுய் நண்பனுன இந்திரன் எந்த உதவியோடு எந்த அதிசய வன்மையுடனுன செயலினுல் எங்களிடத்திற்கு வருவான்? சு. எப்பொழுதும் ஜயிக்கும் எல்லா கானங் களில் இழைக்கப்படும் இந்திரனை நோக்கி நீ ரட்சிப்பு அடைய துரிதமாய்ச் செல்லுகிருய். எ. அற்புதமான இந் திரனின் பிரியமான, பெரும் விருப்பமுடன் ஐசவரியமளிப் பவனுன சபையின் தலைவனை அறிவிற்காக துதிசெய்கி றேன். அ. எதனுல் [2] வியஸ்வனை துரிதமாக்குகிருயோ சோதியுலகத்தின் கீழ் உள்ள அந்த வழிகள் எல்லாம், இன்னம் எல்லாசகமும் எங்கள் சப்தத்தை செவியுறட்டும். கூ. சதக்கிருதுவே, நூறுசெயல்கள் செய்பவனே, இந்திர னே(தேக மன ஆத்ம) உணவை பலத்தை சுபமானவற்றை எங்களுக்குக் கொண்டுவரவும். ஏனெனில் நீ எங்களின் நன் மையை நாடுபவன். ய. இதோ சோமரசம், இதன் [3] ரசத்தை சுவயமாய் தேஜசுள்ள மருத்துக்களும் அசுவினிகளும் பரு குகிருர்கள்.

---

1 ஞானத்தை 2 இந்திரியனை 3 ஞானரசத்தை

## கண்டம் கக.

தேவதை - இந்திரன். ரிஷி - க. இந்திர மாதரர்கள் - உ. கோதை - ௩. தத்யங்காதர்வணன் - ச. பிரஸ்கண்வன் - ரு. கோதமன் சு. மதுச்சந்தர்கள் - எ. வாமதேவர்கள் - அ. வத்ஸன் - கூ. சுனச்சேபன் - ம. வாதாயன உல்வன்.

க. சுபமான வீரத்தை ஜயித்துக் கொண்டு, அலைந்தவர்களாய் செயல் ஆன்மாக்கள் இந்திரனுக்குச் சமீபமாகிறார்கள். உ. தேவர்களே! உங்கள் விஷயத்தில் எப்பொழுதும் நாங்கள் ஹிம்சிப்பதில்லை. பிடிவாதமுடனும் எப்பொழுதுமாகிறதில்லை. மந்திரம் ஆக்ஞை போல் அனுசரிப்போம். ௩. தோஷத்தை துரத்தும் சவிதா வந்துள்ளாள். [1] அதர்வமகனே பெரிய தோத்திரத்தை கானஞ் செய்யவும். சோதிமயமான தோத்திரத்தை செய்யவும். சவிதாவான தேவரைத் துதிசெய்யவும். ச. எங்களால் பார்க்கப்படும் பிரியையான வெகு பூர்வமான சோதியுலகத்தினின்று உஷையானவள் பிரகாசஞ் செய்கிறாள். உயரிய [2] அசுவனிகளே! உங்கள் துதியை துதிக்கிறேன். ரு. பிரதிகூலமற்ற இந்திரன் [3] ததீசியின் என்புகளால் கூகூ, விருத்திரர்களைக் கொல்லுகிறான். சு. இந்திரனே! எங்கள் செயல்களில் வரவும். சர்வமான சோமரச ரூபமான சத்துக்களால் உன்னை திருப்தியாக்குகிறோம். பலத்தால் பெரியவனாகி சத்துருக்களினின்று நீ காப்பவன். எ. விருத்திரனைக் கொல்லுபவனே, எங்கள் அருகே துரிதமாய் வரவும். இந்திரனே! மகத்தான நீ மேன்மையான இரட்சைகளால் எங்கள் சமீபம் வரவும். அ. [4] சர்மத்தைப்போல் சகத்தையும் வானத்தையும் இந்திரன் கொண்டுவருங்கால் அந்த இந்திர

---

[1] அமுதமகனே [2] பிராண அபானங்களே [3] சூரியரசிமிகளால் [4] சுவாதீனமாய்.

னுடைய பலமானது பிரகாசிக்கின்றது. கூ. இந்த சோமன் உன்னுடையதே. புரூவானது தன் பத்னியை அடைவதுபோல் அப்படியே எங்கள் மொழிகளை அடைகிறாய். ௰. சுகமளிப்பதாய் நோய் நீக்குபவனாய் வாயுவானது எங்களுடைய இருதயத்திற்கு ஔஷதத்தை வரச்செய்யட்டும். எங்கள் வாழ்நாட்களை நீடிக்கட்டும்.

---

## கண்டம் உ௦.

**தேவதை - இந்திரன், ரிஷி - க - கண்வன் உ, ௩, கூ - வத்ஸன். ச - சுருதககக்ஷன். ரு மதுச் சந்தர்கள். சு - வாமதேவன். எ - இரிமிடன். அ - வாருணி சத்திய திருதி.**

க. பெருமையான ஞானமுள்ள வருணன் மித்ரன் அர்யமானென தேவர்கள் [1] எவனை இரட்சிக்கிறார்களோ அவன் எப்பொழுதும் இம்சிக்கப்படுவதில்லை. உ. புராதனத்துடைய எங்கள் விருப்பம்போல் குதிரைகளில் பசுக்களில் ஐசுவரியங்களில் எங்கள் ஐசுவரியப் பிரபுக்களுக்கு அளிக்கவும். ௩. இந்திரனே! சத்தியத்தை விருத்தி செய்வதான இந்த [2] பசுக்கள் [3] நெய்யையும் [4] பால் கூட்டத்தையும் மளிக்கிறார்கள். ச. வெகு சத்துருக்களைக் கொல்லுபவனே பலர்களால் துதிக்கப்படுபீவனே! பாலை நாடும் ஆத்ம விருப்பத்தின் அறிவோடு ஒவ்வொரு சோமனிலும் நீ வரவேண்டும். ரு. ஐசுவரியத்தில் வசிக்கும் சரஸ்வதி புனிதஞ் செய்யும் வெகு பலமுள்ளவளாய் ஐசுவரிய நிமித்தங்களால் எங்களின் யக்ஞத்தை விரும்பட்டும். சு. [5] நாஹுஷர்களில் எவன் இந்த இந்திரனை

---

[1] சத் புருஷர்கள் [2] பிரசைகள் [3] ஒளியையும் உரத்தையும் [4] இனியச் செயல்களை, [5] மனிதர்களில்

சோமனால் திருப்தி செய்கிறானோ அவன் எங்களுக்கு ஐசுவரியங்களைக் கொண்டுவருவான். எ. இந்திரனே! நீ வரவும், உன் நிமித்தம் 1 சோமனைப் பொழிந்துளோம். இந்த சோமனைப் பருகவும், என் இந்த 2 தர்ப்பையிலே உட்காரவும். அ. மூவர்களான மித்திரன் அர்யமான் வருணனுடைய சோதியான எதிர்க்க முடியாத மேன்மையான காப்பு எங்களுக்காகட்டும். கூ. வெகு பொருள் உள்ளவனே 3 பசுமையான 4 குதிரையின் சாரதியே! வழி விளக்குபவனான உன்னைப்போலுள்ள உன்னையே பற்றியுள்ளோம்.

---

## கண்டம் உக.

**தேவதை - இந்திரன். ரிஷி - க - பிரகாதன் உ - விசுவாமித்திரன். ங. கO - வாமதேவன். ச, சு - சுருதகக்ஷன். ரு - மதுச் சந்தர்கள். எ - கிருத்ஸமதன். அ, கூ - பரத்வாஜன்.**

க. உன்னை சோம பானங்கள் உத்தம உற்சாகத்துடனாக்கட்டும், வச்சிராயுதமுள்ளவனே! ஐசுவரியத்தை அளிக்கவும். அறிவின் பகைவனை துரத்தவும். உ. மொழியால் பற்றப்படுபவனே. எங்கள் சோமனைப் பருகவும். இந்திரனே நீ சோமதாரைகளால் நனைந்துள்ளாய். உன் அளிப்பு கீர்த்தியுள்ளதாகட்டும். ங. இந்திரன் எப்பொழுதும் உங்களுக்கு நன்மையைச் செய்ய விரும்புகிறான். உங்களைப் பிரீதியுடன் பாதுகாக்கிறான். தேவ வீரனான இந்திரன் தடுக்கப்படுவதில்லை. ச. நதிகள் சமுத்திரத்தில் செல்லுவதுபோல் சலதுளிகள் உன்னைப் பிரவேசிக்கட்டும். ஒரு

---

1 ஞானத்தை 2 நிலயத்தில் 3 பொன்னான 4 புலனின்.

வனும் உனக்கு 1 மிகுதியாவதில்லை. ரு. உத்கானஞ்செய்பவர்கள் இந்திரனை பெரிய துதியோடு துதிசெய்கிறார்கள். ஹோதாக்கள் உக்த மந்திரங்களால், யஜுரான மொழிகளால் புகழ்கிறார்கள். சா. இந்திரன் மகத்தான ஐசுவரியத்தை எங்கள் உதவிக்கு அளிக்கட்டும். பலவானான இந்திரன் பலத்தை அளிக்கட்டும். எ. இந்திரன் மகத்தான பயத்தை துரிதமாய் தூரத்தில் துரத்துகிறான். ஏனெனில் அவன் திரமாயிருந்து எதையும் பார்ப்பவனாகும். அ. பசுக்கள் கன்றுகளுக்குப் போல் துதிகளால் பற்றப்படும் இந்திரனே! சோமனைத் தோற்றுவிக்குங்கால் உன்னை இக்கானங்கள் அடைகின்றன. கூ. இந்திரனை பூஷணனை துரிதமாக நாங்கள் நட்பிற்கு பல முடனுவதற்கு அழைப்போம். ம விருத்திரனைக் கொல்லுபவனே இந்திரனே உன்னைவிடப் பெரியவர் ஒருவருமில்லை. துதிக்கத் தகுந்தவருமில்லை. உன்னைப்போலுள்ளவனுமில்லை.

---

## கண்டம் உஉ.

தேவதை - இந்திரன். ரிஷி - க - ச. திரிசோகன் உ - மதுச்சந்தர்கன் ந - வத்ஸன் ரு - சுகக்ஷன் கூ க. வாமதேவன் எ-விசுவாமித்திரன் அ. கோஷுக்த யசுவ சூக்தினர்கள் ம சுருதகக்ஷன்.

க. உங்கள் சனங்களின் தலைவனாய் பசுக் கூட்டமான பலத்தை அளிக்கும் சமானமான அவனை பெருமையுடன் கானஞ்செய்கிறேன். உ. விருஷபனான பதியான இந்திரனே துதிகள் உன் பொருட்டு ஓடிப் பாய்கின்றன. ஒரே எண்ணத்தோடு நமஸ்கரிக்கின்றன. ந. அர்யமான், இழி

---

1 உனக்குப் பெரியவன் வேறு எவனுமில்லை,

வற்ற மருதன் மித்திரன் எவனைக் காப்பாற்றுகிறானோ அவன் நல்வழி யுள்ளவனாவான். ௪. இந்திரனே! நாங்கள் விரும்பும் திடமாய் நிலையான மேகங்ளில் மறைந்துள்ள ஐசுவரியத்தை எங்களுக்குக் கொண்டுவரவும். ௫. சிறப்பான விருத்திரனைக் கொல்லுபவனான பலவானாய் மனிதர்களின் தலைவனை மகத்தான ஐசுவரியத்திற்கு நாடுகிறேன். ௬. வீரனே [1] இந்திரனே! உன் கீர்த்தியைச் செவியுற அடைவதற்கான வழியை யடையலாமோ! உன்னைப்போலுள்ள பரம ஸ்தானத்தில் அடைவதற்கான வழியை அணுகலாமோ? ௭. இந்திரனே! தான்யத்தோடு தயிருடன் பிண்டங்களுடன் தோத்திரங்களோடு எங்களின் சோமனை காலையில் அடையவும். ௮. எல்லா சத்துருக்களை நீ ஜயித்தபொழுது இந்திரனே [2] நமூசியின் தலையை சலநுரையால் சேதனஞ் செய்கிறாய். ௯ ஐசுவரியங்களின் தலைவனே! உன் பொருட்டு இதோ காணப்படும் சோமபானங்கள். இனி பொழியப்படுபவைகளும். அவைகளை அனுபவிக்கவும். ௰. நானாவித ஐசுவரிய முள்ளவனே! இந்திரனே சோமன்கள் பொழியப்படுகின்றன. [3] தர்ப்பைகளும் தீட்டப்பட்டிருக்கின்றன. தோத்திரிப்பவர்களுக்கு இன்பமளிக்கவும்.

---

## கண்டம் ௨௬.

தேவதை - இந்திரன் ௧ - சுனச்சேபன் ௨ - சுருதகக்ஷன், ௩-திரிசோகன் ௪ ௬ - மேதாதிதி, ௫ - கோதமன் ௬ - பிரமாதிதி ௭-விஸ்வாமித்திரன், ஜமதக்னி ௮-பிரஸ்கண்வன்.

௧. நாங்கள் பலத்தை நாடிக்கொண்டு பலசெயல்களுடனாய் பெருமையுடனான உங்கள் இந்திரனை கிணற்றைப்

---

1 பெருமையுடனானவனே. 2 அரக்கன் பிடிவாதமுள்ளவன் 3 ஆயுதங்களும்

போல் சோம துளிகளால் எங்கும் நிரப்புகிறோம். ௨. இந்திரனே! அந்த உலகத்தினின்றும் நான்கு ஆயிரம் வன்மைகளுடனுன ஐசுவரியங்களோடு எங்களிடம் வரவும். ௩. ஜன்மமான இந்திரன் சரக் கூடான சோதியைப் பற்றி உக்கிரர்கள் உயர்ந்த வீரர்கள்யார் (எங்கே) என தாயை வினவுகிறுன். ௪. நீண்ட கைகளுள்ளவனை காப்படைய, [1] சாதக ஐசுவரியத்தை செய்பவனுமான பெரிய கானஞ்செய்பவனை ரட்சிப்பிற்காக அழைப்போம். ௫. மித்திரன் வருணன் உத்தமநிலை அறிந்த சத்திய கண்களால் அழைத்துச் செல்லுகிறுன். தேவர்களுடன் சமானப் பிரீதியுடனுன அர்யமானும் எங்களை அழைத்துச் செல்லுகிறுன். ௬. தூரத்திலிருந்தும் இங்கு சமிபம் இருப்பது போல் சிகப்பான அருணன் பிரகாசமாகிறுன். எல்லாபக்கங்களிலும் சோதியை பரப்புகிறுன். ௭. சுப செயல்களுடனுன மித்திரவருணர்களே எங்கள் பசுநிவாச நிலயத்திலும் மூன்று உலகங்களிலும் நன்றுகப் பொழியவும். ௮. பசுக்கள் முழங்காலாழம் நடக்க எங்கள் யக்ஞத்தில் உன்பிரசித்தமான வாக்கை விளக்கும் மருத்துக்கள், மழை லட்சண சலம் மகிழ்ச்சியாவது போல், விஸ்தாரமாகின்றன. விஷ்ணுவானவர் இந்த உலகத்தை உத்தேசித்து தூரமாய் நடக்கிறுர். ௯. மூன்று அடிகளால் தன்பாதத்தை வைக்கிறுர். இவர் தூளியுடனுன பாதத்தில் அனைத்தும் ஒன்று சேர்கிறது.

---

[1] உதவியான.

## கண்டம் உச.

**தேவதை - இந்திரன். ரிஷி - க. எ. அ. மேதாதிதி - உ. வாமதேவன் - ங. ரு. மேதாதிதி பிரியமேதி - ச. விசுவா மித்திரன் சு. கௌத்ஸ் துர்மித்திரன் - கூ. விசுவாமித்திரன் காதிஞேபீபதன் உதலன் - ய. சுருதகக்ஷன்.**

க. கோபமுடன் அளிப்பவனைக் கடந்து செல்லவும். சோமன் பொழிபவனை அருகில் வரத்தூண்டவும். அவன் யக்ஞத்தில், அளிக்கப்படும் சோமனைப் பருகவும். உ. மகத்தான மேன்மையுடனுன மதியுள்ள தேவர்க்கு எந்த மொழி சொல்லப்படுகிறதோ அந்த இதுவே அவனை அபிவிருத்தி செய்கின்றது. ங. தோத்திரஞ் செய்யாதவர்களுடைய ஐசுவரியம் சிறந்த ஆயுதங்களை அறிவதில்லை. கானஞ்செய்யும் சாமனையும் அறிவதில்லை. ச. பலத்தின் நடுவே பலத்தின் புருஷனுன இந்திரன் குதிரைகளால் சுமக்கப்பட்டு ஆயுதங்களால் சோமனின் நண்பனுய் அதிக இன்பமுள்ளவனுயிருக்கிருன். ரு. இந்திரனே! எங்கள் சோமனை எண்ணிவரவும், இளம்வனிதையுடனுன விருத்தனைப்போல் கோபமுடனுக வேண்டாம். சு. எப்பொழுது வசுவே என் தோத்திரத்தைக் கிரகிப்பாய்? [1] நதியானது தாரையாய்க் கொண்டு வரட்டும். பிராணன் தூண்டும் ரசம் தயாராயிருக்கின்றது. எ. இந்திரனே! பிராமணனின் ஐசுவரியத்தினின்று ருதுக்களை அனுசரித்த பின்னர், சோமனைப் பருகவும். உன் நட்பு எவராலும் காணமுடியாதது. அ. தோத்திரங்களை விரும்பும் இந்திரனே! உன் துதியை நாங்கள் துதிசெய்கிருேம். சோமபான இந்திரனே எங்களைத் துரிதமாக்கவும். கூ. இந்திரனே! ஒவ்வொரு [2] ஐக்கியத்திலும் எங்களுடைய

---

1 தேகத்திலுள்ள 2 போரிலும்

தேகங்களில் திடத்தை அளிக்கவும். [1]உக்கிரனே எப்பொழுதும் சத்துருக்களை ஜயிக்கும் சக்தியை யளிக்கவும். ௰. ஏனெனில் நீ வீர புருஷனின் நண்பனாகும். நீ சூரனாயும் சிஜ்ஜ்போனுமிருக்கிறாய். எங்களுக்கு உன் மனம் ஜயமுடனாகட்டும்.

---

## கண்டம் உ௫.

**தேவதை - க - அ, க௦, இந்திரன் ௯ - மருத்துக்கள். ரிஷி - க, ௬, ௯ வசிஷ்டன். உ - பரத்வாஜன். ௩ - பாலகில்யர்கள். ௪ - நோதர்கள். ௫ - கலிப்பிரகாதன். எ - மேதாதிதி. அ. பர்கன். க௦ - பிரக்ாதகாண்வன்.**

சூரனே இந்திரனே சகத்தின் ஈசனான [2] திரப்பொருள்களின் தலைவனான அனைத்தையும் காண்பவனான உன்னை கறக்காத பசுக்களைப்போல் பலமுடன் அழைக்கிறோம். உ. துதி செய்யும் நாங்கள் பலம் பொருளின் பொருட்டு இந்திரனே! உன்னையே அழைக்கிறோம். சிறந்த புருஷனான உன்னை மனிதர்கள் விருத்திருனைக் கொல்லும் (சமயத்தில்) அழைக்கிறார்கள். குதிரைப் பந்தயத்திலும் அழைக்கிறார்கள். ௩. ஐசுவரியங்களின் அதிபதியான மகவானான இந்திரன் துதிப்பவர்களான எங்களுக்கு ஆயிரமான ஐசுவரியங்களால் உதவி செய்கிறான். நாங்கள் அறியும் உங்களுக்கு சுபமான செல்வமுடனான இந்திரனை உத்தேசித்து உத்தமமான கானஞ்செய்வேன். ௪. எதிர்ப்பைத் தடுப்பவனாய் புனிதமான சோமனால் பேரானந்தமாகும் உங்கள் சம்பந்தமான [3] இந்திரனை எங்களுடைய துதிகளால் கொட்டில்களில் பசுக்கள் (கன்றுகளை நோக்கிக்) கதறு

---

1 கோபனே, 2 நிலை 3 பலத்தை.

வதுபோல் அழைக்கிறோம். ரு. உங்களுக்கு ஐசுவரியத்தைக் காணும் பாக்களின் போஷகனான இந்திரனை அவசரத்துடன் ரட்சிப்பதற்கு சோமனோடும் யக்ஞத்தில் போரில் பெரிய முயற்சியுடனான பெரியகானமுடனான இந்திரனை நாங்கள் அழைக்கிறோம்.

௬. துரிதமான புருஷன் மகத்தான அறிவால் நட்புடன் பலத்தை அடைவான். பலமுறை அழைக்கப்படும் உங்கள் இந்திரனை துதியால் தாரு மரக்கட்டையை கருமான் வளைப்பதுபோல் துதியால் வளைக்கிறேன். எ. ரசமான சோமனை இந்திரனே எங்கள் பசுபால் சம்பந்தங்களால் பருகவும். மகிழ்வுடனாகவும். யக்ஞத்தில் வியாப்தமாய் பந்துவாய் எங்கள் அபிவிருத்திக்கு போத முடனாகவும். உன் அறிவுகள் எங்களைக் காப்பாற்றட்டும். அ. இந்திரனே! நீயே வரவும். எங்களை ஐசுவரிய முடனாக்க பொருளை நீ அளிப்பவனாகும். ஐசுவரியமளிக்கும் இந்திரனே! பசுக்களை விரும்பும் எமக்கு வர்ஷிக்கவும். நிரப்பவும். குதிரைகளை அடைய வர்ஷிக்கவும். கூ. மருத்துக்களே வசிஷ்டர் உங்கள் நடுவில் மிகத் தாழ்ந்தவனையும் விட்டு விடுவதில்லை. பொழியப்பட்ட சோமனருகே இன்று சோமனை விரும்புபவர்களான மருத்துக்களான அனைவரும் ஒருமையுடன் பருகட்டும். ௰. நண்பர்களே! வேறு எவரையும் துதி செய்யவேண்டாம். [1] அதனால் உபத்திரவமன்னியிலாவீர்கள். சோமனில் விருப்பத்தை வர்ஷிக்கும் இந்திரனையே துதிக்கவும். உங்கள் கானங்களை அடிக்கடிக் கூறவும்.

---

1 அப்படி உபாசனை செய்யாததினால்

## கண்டம் உசூ.

தேவதை - இந்திரன். ரிஷி - க - ஆங்கிரஸன் புருஹன்மா. உ, ங - மேதாதிதி மேத்யாதிதி. ச - விசுவாமித்திரன். ரு-கௌதமன். சூ-நிருமேதபுருமேதர்கள் எ, அ, கூ - மேத்யாதி. க0 - தேவாதிதி-காண்வன்.

எவன் செயல் செய்பவனாய் சதாகாலம் வளர்கிறானோ அவனை ஒருவனும் (இன்பச்) செயலால் அடைவதில்லை. எல்லாராலும் துதிக்கப்படுவனும் மகானும் பலத்தால் அன்னியர்களால் எதிர்க்கப்படாதவனாய் சத்துருவை சிதைப்பவனாயுள்ள இந்திரனை (இன்பமளிக்கும்) யக்ஞங்களால் ஒருவனும் அடைவதில்லை. உ. துண்டம் துண்டமானதை நன்றாய்ச் சேர்க்கும் ஐசுவரியனான இந்திரன் கழுத்தில் சேதனமாக்குவதற்கு முன்னரே வளையாமல் துண்டமானதை மறுபடியும் இணைக்கிறான். ங.உன் பொன் ரதத்திற்கு ஆயிரம் நூறான குதிரைகள் இணைக்கப்பட்டுள்ளன. பிரமத்தால் பூட்டப்பட்டு நீண்ட ரோமங்களுடனான குதிரைகள் சோமனைப் பருக உன்னை சுமந்துவரட்டும். ச. இந்திரனே மகிழ்ச்சியுடன் மயில் ரோமங்களுடனான குதிரைகளோடு இங்குவரவும, பாலைவனத்தைத் தாண்டும் யாத்திரிகைளைப்போல் துரிதமாக வேடர்கள் பட்சியை தடுப்பது போல் ஒருவரும் உன் வழியைத் தடுக்கவேண்டாம். ரு. பலமுள்ளவனே! ஒளியுடனான நீ மனிதர்களை ஆசீர்வதிக்கிறாய். ஐசுவரியவனான இந்திரனே! உன்னைத் தவிர சுகமளிப்பவன் வேறு ஒருவருமில்லை. (ஆதலால்) என்மொழிகளை உச்சரிக்கிறேன். சூ. இந்திரனே! பலத்தின் பாது[1] காப்பரே! சோமனைப்போலான நீ கீர்த்தியுடன் மனிதர்

---

1 காப்பவனே.

களின் ஜயிக்கமுடியாத சீமானுன நீயே, எதிர்க்க முடியாத சத்துருக்களை அழிக்கிறுய். எ. தேவஸ்தோத்திரத்திற்கு இந்திரனுன உன்னை தேவர்களில் அழைக்கிறோம். யக்ஞத்திலே உன்னை அழைக்கிறோம். போரிலும் அழைக்கிறோம் ஐசுவரியத்தை ஜயிக்கவும் இந்திரனை அழைக்கிறோம். அ. வெகு ஐசுவரியமுள்ளவனே, என் இந்த மொழிகள் உன்னை என் மனதில் பெருக்கட்டும். அக்னியின் நிறத்தோடு வித்வான்கள் துதிகளால் உன்னைத் தோத்திரஞ் செய்கிறுர்கள். கூ. இந்த பிரசித்தமான மது நிறைந்த சஸ்திர வடிவமான மொழிகள் உனக்கு எழுச்சியாகின்றன. சதாகாலம் ஜயித்து பலத்தைப் புலனுக்கும் ரதங்களைப் போல் குதிரைகளைப் போல அழியாத உதவியுடன் ஐசுவரியத்தை அளிக்கவும். ௰. சிங்கமானது தாகமாகுங் கால் ஜலத்தினுல் சம்பூர்ணமான ஏரியை யடைவதுபோல் காலையிலும் மாலையிலும் அல்லது புசிக்குஞ் சமயத்தில் எங்களைத் துரிதமாக அணுகவும். கண்வர்களோடு நன்றுய்ப் பருகவும்.

---

## கண்டம் ௨எ.

தேவதை - க, ௨, ௪ - ௧௦-இந்திரன். ௩ - ஆதித்தியர்கள். ரிஷி - க - பர்கர். ௨-ரேப காசியபன். ௩. ஜமதக்னி. ௪, ௫, மேதாதிதி. ௬, ௬, நிருமேதபுருமேதர்கள். எ-வசிஷ்டன். அ, ரேபன் ௧௦, பரத்வாஜன்.

செயல்களின் சீமானுன இந்திரனே, எல்லா ரட்சணைகளால் உதவி செய்யவும். சூரனே ஐசுவர்யத்தைப் போல் கீர்த்தியுடன் பொருளைக் காண்பவனுன உன்னை அனுசரிக்கிறோம். ௨. இந்திரனே! சர்வமான எந்த ஐசுவரியங்களை அசுரர்களிடமிருந்து கொண்டுவருகிறுயோ ஐசுவரியனே அந்தப் பொருள்களின் தானத்தால் தோத்திரஞ் செய்பவர்களை

தலையோங்கச் செய்யவும். செம்மையாக்கப்பட்ட [1] தர்ப்பையோடு கூடினவர்களையும் அபிவிருத்தி செய்யவும். ௩. புனித நிலயனே மித்திரனுக்கும் அர்யமானுக்கும் சேவார்ஹமாய் சந்தசுடனான துதியை கானஞ் செய்யவும். வருணனுக்கும் ராஜர்களிலும் கானஞ் செய்யவும். ௪. சோமனை முதவில் பருக இந்திரனே மனிதர்கள் துதிகளால் உன்னைத் தூண்டுகிறார்கள். ஒருமையுடனான ரிபுக்கள் ஒருமையான மொழியை கானஞ் செய்கிறார்கள். ருத்திரர்கள் பழையவனான உன்னையே கானஞ் செய்வார்கள். ௫. மருத்துக்களே, மகத்தான இந்திரனுக்கு பிரமத்தை கானஞ் செய்யவும், சத பர்வம் என்னும் ஆயுதத்தால் நூறு செயல்கள் செய்பவன் விருத்திரனைக் கொல்லுபவன், சத்துருவைக் கொல்லட்டும்.

௬. எதனால் சத்தியம் விருத்தி செய்யும் தேவர்கள் தேவர்க்கு எப்பொழுதும் எழுச்சியாயுள்ள ஒளியை செய்கிறார்களோ [2] மிதமாய்ப் பேசுபவர்களே! விருத்திரனைக் கொல்லும் அந்த ஒளியான சாமனை இந்திரனுக்கு கானஞ் செய்யவும். ௭. தந்தை மகனுக்கு ஐசுவரியத்தை, அளிப்பது போல் இந்திரனே எங்களுக்கு செயலை செய்யும் சக்தியை யளிக்கவும். நல்வழி காட்டவும், யக்ஞத்தில் அதிகமாய் அழைக்கப்படுபவனே! நாங்கள் (நீண்ட காலம்) வசித்து சோதியைக் காணவேண்டும். ௮. இந்திரனே எங்களை விட்டுவிட வேண்டாம். யக்ஞத்தில் எங்களுடனிருக்கவும். ஏனெனில், நீயே எங்களைப் பாதுகாப்பவன். நீ என்னுடைய பந்துவாகும். என்னை விட்டுவிடாதே. ௯. பொழியப்பட்ட சோமனோடு [3] தர்ப்பை நன்கமைந்தவர்களான நாங்கள் சலத்தைப்போல் உம்மைச் சூழ்கிறோம்.

---

[1] தேகத்தோடு [2] பிராணனை அறிபவர்களே [3] உணர்வு

புனிதத்தின் பெருக்கில் உன்னைத் துதிப்பவர்கள் சுற்றி லும் சூழ்கிறார்கள். ம. இந்திரனே [1] நாஹுஷர்களிலுள் பலத்தையும் ஐசுவரியத்தையும் ஐந்தாவது சனங்களிட முள்ள ஒளியுடனான எல்லா சோதியையும் மகத்தான சகல மான சக்தியையும் துரிதமாய் அளிக்கவும்.

---

## கண்டம் உஅ.

தேவதை இந்திரன் - ரிஷி - க. மேதாதிதி உ. ரேபன் - ௩. வத்ஸன் ச. பரத்வாஜன் ரு. நிருமேதன் சு. புருஹன்மா எ. நிருமேதபுருமேதர்கள் அ. வசிஷ்டன் கூ. மேதாதிதி மேத்யாதிதிகள். ம. கலி.

க. உக்கிரனே, உண்மையாய் நீ விருப்பத்தை யளிப்ப வன். மாடுபோல் முட்டிச் சென்று எங்களைக் காப்பவனே! விருஷபத்தைப் போல் பூஜிக்கப்படுகிறாய். தூரத்தில் விருப்பத்தை வர்ஷிப்பவன் போல் சமீபத்திலும் [2] மாடு போல் நீ மேன்மை யானவன். உ. சத்துருவைக் கொல் லும் சக்தியுள்ளவனே! தூரத்திலிருந்தாலும் அல்லது விருத்திரனைக் கொல்லுபவனான நீ அருகிலிருந்தாலும் இந் திரனே! சுவர்கஞ் செல்லுங் கானங்களால் சோமன் பொழி பவர் ரோமங்களுடனான குதிரைகளோடான உன்னை அழைக்கிறார். ௩. சோமனுடைய மகிழ்ச்சியிலே ஹிதத் திற்கு சூரனாய் பெயருள்ளவனாய் ஞானியா யுள்ளவனுக்குத் துதிசெய்யவும். சக்தியுள்ள இந்திரனுக்கு மகத்தானவ னுக்கு துதிகளால் கானத்தால் துதிக்கப்படும்வரை துதி செய்யவும். ச. இந்திரனே! மூன்றுவித பூமியை மூன்று ருதுக்களுடனாயுள்ளதை எங்கள் நன்மைக்கு அளிக்கவும்.

---

1 மனிதர்களிடமுள்ள. 2 மாடுபோல பலமுள்ளவனாகி

எங்களிலும் எங்கள் ஐசுவரிய தலைவர்களிலும், வசிக்கும் நிலயத்தை அளிக்கவும். சத்துருவால் பிரேரிக்கப்பட்ட ஆயுதத்தைத் தனிமையாக்கவும். ரு. கிரணங்கள் சூரியனை நாடுவதுபோல் இந்திரனிலிருந்து எல்லா பொருள்களையும் (நாடி) அனுபவிக்கவும். சனனமான சீவர்களுக்கு பிதா பாகத்தைப் போல் ஐசுவரியங்களை திடமுடன் தியானஞ் செய்கிறோம். சு. தீர்க்காயுசுள்ளவனே, தேவ சுபாவமற்ற மனிதன் இந்த உணவை, சர்வமான உணவை அடைவதில்லை. இந்திரனின் குதிரைகளை இணைக்கிறவனுக்கு 1 ஏதசனே! அவன் தன் குதிரைகளை இணைக்கிறான். எ. ஒவ்வொரு யுத்தத்திலும் இணைக்கப்பட வேண்டிய இந்திரனை அணுகவும். விருத்திரனைக் கொல்லுபவனே! பிரமங்களை யக்ஞங்களை அலங்கரிக்கவும். பரம ஜயனே துதியால் தெளிபவனே துதிகளை அலங்கரிக்கவும். அ. அதமமான பொருள் உன்னுடையது. நீயே நடுவைப் போஷணை செய்கிறாய். எல்லாப் பொருள்களையும் நீயே அரசுபுரிகிறாய். பசுக்களின் போர்களிலும் ஒருவரும் உன்னை எதிர்ப்பதில்லை. கூ. இந்திரனே! நீ எங்கே? எங்கு சென்றுள்ளாய், வெகு நிலயங்களில் உன் மனம் சஞ்சரிக்கின்றது. யுத்தகுசலனே, புரந்தரனே வரவும். காயத்திரிகள் கானஞ் செய்கின்றன. ௰. நேற்று நாங்கள் வச்சிரயுக்தனை இந்திரனை பருகச் செய்தோம். இன்று யக்ஞத்தில் பொழியப்பட்ட சோமனைக் கொண்டுவரவும். செவி கொடுக்கத் தயாராகவும்.

---

1 பலமுள்ளவனே!

## கண்டம் உக.

தேவதை - க - ரு. ௫ - அ. ம. இந்திரன், கூ; இந்திராக்னி - சு. சூரியன் ரிஷி - க, கூ. புருஹன்மா - உ. பர்கன் - ரு. இரிமிடி. ச, ஜமதக்னி. - ௫. எ, தேவாதிதி. அ, வசிஷ்டன். - கூ, பரத்வாஜன். க0 வாலகில்யர்கள்.

க. விருத்திரனைக் கொல்லுபவனும் சர்வமான சேனைகளின் தலைவனும் சிறந்தவனுமுள்ளவனை துதிக்கிறேன். அவன் மனிதர்களின் இராஜாவாய் ரதங்களால் தடையன்னியில் செல்லுகிறான். உ. இந்திரனே! ஹிம்சை செய்பவர்களிடமிருந்து பயப்படும் எங்களுக்கு அபயத்தை அளிக்கவும். மகவானே உதவிசெய்யவும் உன்ரட்சையை அடைய நாங்கள் அச்சமற்றாக, துவேஷிகளையும் ஹிம்சை செய்பவர்களையும் துரத்தவும். 1 கிரகபதியே! நீ நிலையான ஆதாரஸ்தம்பமாகும். ரு. நீ 2 சோம்யர்களின் கவசமாகும். 3 சோம துளிகள் வெகு அசுரபுரிகளை உடைக்கிறார்கள். இந்திரன் முனிகளின் நண்பனாகட்டும். ச. இந்திரனை சூரியனே! நீ மகானாயிருக்கிறாய் உண்மை தான். அதிதி மகனே! நீ பெரியவன். உன் மகிமையின் மேன்மை புகழப்படுகிறது. உன் பெருமையால் நீ மகானாயிருக்கிறாய். இந்திரனே! ௫. உன் நண்பன் சுபமானவடிவமுள்ளவனாய் ரதங்கள் குதிரைகள் பசுக்களில் ஐசுவரியமுள்ளவனாய் பலத்தை அளிக்கும் சக்தியோடு ஒருமையுடனாகிறான். (இன்னம்) சந்தோஷ துதிகளோடு சந்திரர்களோடு சபையைசேர்கிறான். கூ. இந்திரனே! நூறு சோதியுலகங்களும் நூறு சகத்தின் உலகங்களும் உன்னுடைய பிரகாசத்தை அடைவதில்லை. வச்சிராயுதனே! ஆயிரமான சூரியர்களும் வானமும் பூமியும்

1 குடும்பத்தலைவனே। 2 சோம சம்பந்தமானவர்களின் 3 அறிவு நிறைபவர்கள்

பூர்வத்தில் உன்னை வியாப்தமாவதில்லை, உனக்கு நிகராவதில்லை. எ. இந்திரனே கிழக்கு மேற்கு வடக்கு தெற்கிலுள்ள மனிதர்களால் அழைக்கப்பட்டபோதிலும் 1 அனுவினுடைய வெகு மனிதர்களால் பிரேரிக்கப் படுகிறாய். 2 துர்வசனோடு மனிதர்களால் தூண்டப்படுகிறாய். அ. வசுவே இந்திரனே உன்னை எந்த மனிதன் எதிர்ப்பான்? மகவானே உன் சிரத்தையோடு திட்டமான தினத்தில் பலமுள்ளவன் ஐசுவரியத்தை ஜயிப்பான். கூ. இந்திரனே அக்கினியே பாதமற்ற இந்த உஷை பாதங்களோடு பிரஜைகளுக்கு வருகிறாள். சிரசை அவள் நீளமுடனுக்கி நாக்கினால் சப்தித்துக் கொண்டு செல்லுபவளாய் 3 முப்பது அடி கீழே செல்லுகிறாள். ம. இந்திரனே எங்கள் சமீபம் வெகு பல அறிவோடான ரட்சைகளோடு வரவும். சுகமுள்ளவனே சுகம் நிறைந்து எங்களிடம் வரவும், நல்ல பந்துவே நல்ல பந்துக்களுடன் எங்களிடம் வரவும்.

---

## கண்டம் ௩௦.

**தேவதை, க - ச, எ - க௦, இந்திரன். ரு, வருணன். ரிஷி - க நிருமேதன். உ, ௩, வசிஷ்டன். ச - பரத்வாஜன். ரு - பருச் சேபன் சு - வாமதேவன். எ - மேத்யாதிதி. அ, பர்கன். கூ, ௰ - மேதாதிதி மேத்யாதிதி.**

நீங்கள் மூப்பற்று எதிர்ப்பவனாய் எதிர்ப்பற்றவனாய் வேகனாய் (சத்துருக்களை) அழிப்பவனாய் ரதர்களின் சிரேஷ்டனாய் இம்சையற்றவனாய் சலத்தைச் சிறப்பாக்கும் இந்திரனை ரட்சிப்பதற்கு அழைக்கவும்,மரியாதை செய்யவும். உ. இந்திரனே! எங்களுடமிருந்து வெகு தூரத்திற் கப்பால்

---

1 பிராணனை நாடுபவர்களுடைய 2 உக்கிரனோடு 3 முப்பது முகூர்த்தங்கள்.

உன்னை நாடுபவர்கள் வெகு காலம் ரமிக்க வேண்டாம். வெகு தூரத்திலிருந்தாலும் எங்கள் யக்ஞத்திற்கு வரவும். இங்கு இப்பொழுதே இருந்தால் கேட்கவும். ௩. வச்சிராயுதனாய் சோமபானஞ் செய்யும் இந்திரனுக்கு சோமனைப் பொழியவும். திருப்தியாக்க உணவுகளைத் தயாராக்கவும். நம்முடன் கருணையாக அவனைத் தூண்டவும். கொடுப்பவனையே அளிப்பவன் துதி செய்கிறான். ச. சதா காலம் சத்துருக்களைக் கொல்லும் எங்கும் காண்பவனான இந்திரனை அழைக்கிறோம். ஆயிர மாயிரமான கோபத்தோடு வீரர்களின் தலைவனே! வெகு ஐசுவரியமுள்ளவனே! யுத்தங்களில் எங்களுக்கு உதவிசெய்து ஜயமுடனாக்கவும். ௫. செயல்களின் நிலயமே உன் பெரிய செயல்களால் இரவும் பகலும் உன் வாழ்த்தை அளிக்கவும். உங்களுக்கு அளிக்கப்படும் ஐசுவரியம் அழியாமலாகட்டும். எங்களால் கொண்டுவரும் ஐசுவரியமும் க்ஷயமாகாம லாகட்டும்.

௬. துதிக்கும் மனிதர்கள் தாராளமாய் அளிப்பவனின் துதியை கானஞ் செய்யுங்கால் பற்பல செயல்களை அனுசரிக்கும் மனிதர்களைத் தாங்கும் வருணனை ரட்சிக்கப்படும் துதிகளால் நமஸ்கரிக்கட்டும். எ. மேத்யாதியே இந்திரனுக்கு எப்பொழுதும் குதிரைகளோடு சேர்ந்து வச்சிராயுதனாய் ஹிதஞ் செய்பவனாய் பொன் மயமான அவனுக்கு பிரசைகளைப் பாதுகாக்கவும் (அல்லது பாலைக் கறக்கவும்) அ. இரண்டு வரங்கள். இந்த மொழியை இங்கு இந்திரன் கேட்கட்டும். பெரும் பலமுடனான மகவான் அறிவால் எங்கள் பக்கம் சாய்ந்து சோமனைப் பருக எங்கள் அருகே வரட்டும். ௯. வச்சிராயுதனான இந்திரனே மகத்தான விலைக்கு நீயே விற்றுக்கொள்வதில்லை. கர்ச்சிப்பவனே ஆயிரத்திற்கில்லை பதினாயிரத்திற்கு மில்லை அள

வில்லாத ஐசுவரியப் பிரபுவே [1] நூற்றிற்கு மில்லை. ய. இந்திரனே! நீ என் தந்தைக்கு அதிகமாகும் அற்புத சகோதரனுக்கு மதிகமாகும். நீயும் எனது தாயும் வசுவே! ஐசுவரியத்தை அளிக்க சமமாகவே தோன்றுகிறீர்கள்.

---

## கண்டம் ௩க,

தேவதை-க-கூ, அ-கய, இந்திரன், எ, -லஹ-ஃ. ரிஷி - க, வசிஷ்டன் உ, கூ, எ, வாமதேவன். ௩, மேதாதிதி மேத்யா திதி விசுவாமித்திரன். ச, நோதர்கள். ரு, மேதாதிதி. அ, பால கில்யர்கள் கூ, மேத்யாதிதி. கய, நிருமேதன்.

க. [2] வச்சிர ஹஸ்தனே [3] தயிரோடு கலந்த இந்த சோம துளிகள் இந்திரனுக்குப் பொழியப்பட்டவை. அவைகளை சந்தோஷத்திற்காகப் பருக எங்கள் வீட்டிற்கு வரவும். உ. இந்திரனே! உன் மகிழ்ச்சிக்கு துதிகளோடான இவைகள் தயார் செய்யப்பட்டுள. இனிமையான ரசத்தைப் பருகி எங்கள் கானங்களை செவிகொடுக்கவும். கானங்களை விரும்பு பவனே! தோத்திரத்திற்கு நன்றாய் அளிக்கவும். ௩. அமிருத மளிப்பவனும் காயத்திரியின் உற்சாகனும் வெகு தாரைக ளோடு அழியாத வன்மையை யளிக்கும் பசுவடிவமான இந் திரனை இன்று அழைக்கிறேன். ச. மகத்தான திருடமான மலைகள் உன்னைத் தடுக்கத்திட மற்றவைகள். உன் விஷயத் தில் தோத்திரஞ்செய்யும் என்போலுள்ளவனுக்கு ஐசுவரிய மளிக்க விரும்பும் உன் செயலை ஒருவனும் இம்சிப்பதில்லை. ரு. சோமனில் சேர்ந்து பருகிக்கொண்டிருக்கும் இந்திரன் எத்தனை வன்மையைப் பெருக்கிறான் என எவர் அறிவ தில்லை. சோமனில் திருப்தியாக்கிக்கொண்டு பலத்தால்

---

1 நீ விற்றுக்கொள்வதில்லை: 2 வஜ்ராயுதனே 3 தியானத் தோடு.

கோட்டைகளை இடிக்கும் சுந்தரவதனமுடனன தேவர் இவர்தான். கூ. இந்திரனே! எக்காரணத்தால் அவனை கிரகத்தினின்று வீழ்த்தி விரதமற்றவனை தண்டனை செய்கிருயோ, தூரத்திலாக்குகிருயோ அக்காரணத்தால் பலர்களால் விரும்பப்படும் எங்கள் சோமனை அதிகமாய் அபிவிருத்தி செய்யவும். எ. துவஷ்டா [1] பிரமணஸ்பதி [2] பர்ஜன்யன் [3] காணமுடியாத மொழியைக் காக்கட்டும். [4] அதிதி அவள் மக்கள் சகோதரர்களோடு எங்களுக்கு இரட்சணீயமான மொழியைக் காக்கட்டும். அ. இந்திரனே! நீ எப்பொழுதும் இம்சிப்பவனுவதில்லை. பூஜிப்பவர்களுக்குக் குவிக்கிருய். ஆனல் இப்பொழுது மகவானே! உன் தேவதானமானது மிகவும் அதிகமாய் சேர்க்கப்பட்டுள்ளது. கூ. விருத்திரனைக் கொல்லுபவனே! உன் குதிரைகளை இணைக்கவும். மகவானே! உக்கிரனுன நீ சோமனைப் பருக எங்களிடம் தூரமான சோதியுலகினின்று மருத்துக்களோடு வரவும். ω. வச்சிராயுதனே! நேற்று இச்சமயத்தில் உற்சாகமான மனிதர்கள் உனக்குப் பானமளித்தார்கள். இந்திரனே துதிசெய்பவனுக்குக் காதுகொடுக்கவும், எங்கள் நிலயத்தினருகே வரவும்.

---

## கண்டம் ௩௨.

தேவதை - ச - க0, இந்திரன், க -உஷை. உ, ௩, அசுவினிகள். ரிஷி - க, உ, எ, அ - வசிஷ்டன், ௩ அசுவினி வைவஸ்தர்கள். ச - பிரஸ் கண்வன். ரு, மேதாதிதி மேத்யாதிதி. சு தேவாதிதி கூ - நிருமேதன். க0 - நோதர்கள்.

க. இருளை நீக்கி வருபவளாய் சோதியுலகின் சூரியனுடைய பெண்ணுன, உஷை தென்படுகிருள். கண்களால்

---

1 சிற்பி 2 அறிஞன் 3 தானபுருஷன் 4 பூமி,

மகத்தான இருட்டைத் திறக்கிருள். சுபமான கண்களுள்ள உஷை பிரகாசத்தைச் செய்கிருள். உ. அசுவினிகளே! இந்த ஒளி விரும்பும் பிரசைகள் காலையில் உன்னை அழைக்கிருர்கள். செயல் சீமானே என் ரட்சிப்பிற்கு உன்னை அழைக்கிறேன். நீ வீடு வீடாய் செல்லவும். ௩. தேவர்களே! நீங்கள் எங்கே? அசுவினிகளே! எந்த மனிதன் நீ யன்னியில் பிரகாசமாகிருன். அமிழ்த்தப்படும் மேகத்தால் உன்னைத் தூண்டிக்கொண்டு பொழிந்து பெருகும் சோமனல் அழிபவன் சந்தோஷமுள்ளவனுகிருன், செழிப்புளளவனுகிருன். ச. இந்த இனிமையான சோமன் காலை யக்ஞங்களில் உனக்காகும். முன்னல் தயார் செய்யபட்ட இதை அசுவினிகளே! பருகவும். அதை அளிப்பவனுக்கு ஐசுவரியமளிக்கவும். ரு. இந்திரனே உன்னை சிறந்த சோம துளிகளால் யாசிக்கிறேன். யக்ஞங்களில் சிங்கத்தைப்போல் கோபமுடனுகி முயற்சியுள்ளவனுயுள்ள ஈசானனை யார் யாசிப்பதில்லை. சு. அத்வர்யு வான நீ சோமனை ஓடச் செய்யவும். ஏனெனில் இந்திரன் பருக விரும்புகிருன். அவன் இப்பொழுது காளைகளான குதிரைகளை இணைத்துளான். விருத்திரனைக் கொல்லுபவன் அருகில் வந்திருக்கிருன். எ. இந்திரனே! நல்லார்களுக்கு நன்மைகளையெல்லாம் கொண்டுவரவும். மகவானே! பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் அவைகளைக் கொண்டுவரவும். ஒவ்வொரு யுத்தத்திலும் அழைக்கப்படவேண்டிய நீ பழைய ஐசுவரியங்களில் நிறைந்தவனுயிருக்கிருய். அ. இந்திரனே! உன்னைப்போல் ஏராளமான ஐசுவரியத்திற்கு நான் தலைவனுயிருந்தால் ஐசுவரியமளிப்பவனே! துதிப்பவனைத் தரிப்பேன். அவனை [1] க்ஷீண திசைக்குள்ளாக்க மாட்டேன். கூ.

---

1 அழியும் திசைக்கு.

இந்திரனே! நீ யுத்தங்களில் சர்வ சத்துருக்களுடைய சமூகங்களை அடக்குபவன். வெறுப்பவனை வீழ்ச்சியாக்கும் எல்லாம் ஜயிக்கும் தந்தை நீ. விருத்திரனைக் கொல்லுபவன். வேதனையளிப்பவனை ஜயிப்பவன். ம. இந்திரனே! சோதி யுலகத்தினின்றும் அப்பாலும் உன் பலத்தால் பெருகிக்கொள்ளுகிறாய். புவியான சகம் உன்னை அறிவதில்லை. அனைவர்க்கும் அதிகமாய் நீ பெருகியுளாய்.

---

## கண்டம் ஙங.

தேவதை - இந்திரன், ரிஷி க, உ, ௬, வசிஷ்டனர, ங - காதுன், ச - பிருதுவைன்யன். ரு - சப்ததனன், எ, கௌரிவீதி அ - வேனே பார்கவன். கூ, பிருஹஸ்பதி நதலன். க0 - சுஹோத்திரன்.

க. திவ்யமாய் பால் கலந்த ரசம் புலனுக்கப்பட்டுள்ளது. இங்கு இந்திரன் சுபாவத்தினாலேயே சேர்ந்திருப்பவன். பொன்மய குதிரையுள்ளவனே! யக்ஞங்களால் உன்னை எழுச்சியாக்குகிறோம். ரசத்தின் சந்தோஷத்தில் துதியை அறிந்துகொள்ளவும். உ. இந்திரனே! நீ வசிக்க வாழ்க்கை நிலயமானது செய்யப்பட்டுள்ளது. [1] புருஹூதனே! மனிதர்களோடு அங்கு செல்லவும். எங்களைக் காக்கவும். ஓங்கச் செய்ய, ஐசுவரியத்தையும் சோமனில் சந்தோஷத்தையு மளிக்கவும். ங. நீ கிணற்றைக் கிளப்புகிறாய். [2] ஊற்றை விடுதலையாக்குகிறாய். தடுக்கப்பட்டிருந்த அலைமேகங்களை எங்கும் விஸ்தாரமாக்குகிறாய். [3] தானவர்களைக் கொன்று மகத்தான மலையை, மேகத்தைத், திறந்து பெருந் தாரைகளைப் பெருகச் செய்கிறாய்.

---

1 பல முறை அழைக்கப்படுபவனே 2 சனங்களுக்கு மழையைப் பொழிகிறாய் 3 சத்துருக்களை.

ச. பலம் ஐசுவரியத்தை யடையும்பொழுது இந்திரனே! சோமனைப் பொழிந்ததும் வெகு பலமுள்ளவனே! உம்மைத் துதி செய்கிறோம். எங்களுக்கு சுபமான செல்வத்தைக் கொடுக்கவும். உனது விருப்பத்தினால் உன்னால் ரட்சிக்கப்பட்டவனாய் [1] நாங்கள் ஜயமுடனாக வேண்டும். ரு. வசுக்களின் பதியே! உன் வலது கையை, ஐசுவரியம் விரும்பும் நாங்கள் கிரகித்துள்ளோம். ஏனெனில் சூரனே! [2] கோபதியே! நாங்கள் உன்னை அறிகிறோம். அதிசயமாயும் வர்ஷிப்பதுமான ஐசுவரியத்தை அளிக்கவும். சூ. காக்கப்படும் செயல்களைச் செய்ய மனிதர்கள் இந்திரனை யுத்தத்தில் அழைக்கிறார்கள். இந்திரனே! சூரனே! மனிதர்களால் பஜிக்கப்படுபவனே! விருப்பத்தில் பசுக்களின் நிலயங்களின் பாகத்தை எங்களுக்கு அளிக்கவும்.

எ. செல்லும் சுபர்ணனைப்போல் சூரியரசிமிகளைப்போல் பிரியமேதர்கள் ரிஷிகள் அறிவை யாசித்துக் கொண்டு இந்திரன் அருகிலாகிறார்கள். இருளை நீக்கவும். எங்கள்காட்சியைப் பூர்ணமாக்கவும். வலையில் அகப்பட்டவன் போலுள்ள என்னை விடுதலையாக்கவும். அ. காந்தியே! உன்னை, இருதயத்தால் விருப்பமான தோத்திரஞ் செய்பவர்கள், சுபமான சிறகுகளுடன் எழுச்சியாகும் பறவை போல் அவர்கள் பார்க்கிறார்கள். [3] எமன் நிலயத்திற்குத் தூரிதமாகும் [4] வருணனின் தூதனான பொன் சிறகுகளோடான பட்சி (போல்) உன்னில் காட்சியுண்டு, [5] வேனன் பூர்வத்தில் உற்பத்தியை அறிந்த முதன்மையான பிரமத்தை பேராளியை வானத்தினின்று திறந்தவனாய், ரசிமிகளை ஸ்தாபித்துக்கொண்டு இங்கு காணும் காணாத தான நிலயங்களை விளக்குகிறான். ௰. அபூர்வமாய் வெகு அதிகமாய் சுகஞ்செய்வதான சொற்களை

---

1 சகங்களில் 2 புவி தலைவனே. 3 சூரியன் 4 துருவன் 5 உன்னை நாடும் அறிஞர் அன்பு நிறையும் அறிஞர்.

பழையவனுக்கு மகத்தான வீரனுக்கு பலமுடனான துரிதனுக்கு ஞானிக்கு வச்சிராயுதனுக்கு தயார் செய்துள்ளார்கள்.

---

## கண்டம் ௩ச.

தேவதை - இந்திரன். ரிஷி க, உ, ச, த்யுதானன் உ பிருஹதுக்தன் ரு - வாமதேவன் சு, அ, வசிஷ்டன் எ - விஸ்வாமித்திரன் கூ கௌரிவீதினன்.

க. கருமையான துளி தச சகஸ்ரங்களோடு துரிதமாய்ச்சென்று அம்சுமதியில் நிலையாயுள்ள [1] பெருஞ் சப்தஞ் செய்வதான அதை இந்திரன் அடைகிறான். வீரமனத்துடனான மன்னன் அவன் சத்துரு சேனைகளை அழிக்கிறான். உ. நண்பர்களான சகல தேவர்களும் விருத்திரனுடைய சீறலினின்று துரிதமாய் உன்னைவிட்டு [2] விடுகிறார்கள். ஆதலால் மருத்துக்களோடு நட்புடனாகவும். அப்பால் இந்த சேனைகளை யெல்லால் ஜயிப்பாய்! ௩. விதியைப்போல் வெகு சத்துருக்களை அழிப்பவனான சூரியன் சந்திரனை எழுச்சியாக்குகிறான். காலாத்மாவான இந்திரனது சாமர்த்தியத்தைக் காணவும். நேற்று இறந்தவன் இன்று சீவித்துள்ளான். ச. நீ உன் சன்மத்திலேயே சத்துரு வன்னியிலிருந்த [3] எழுபுருஷர்களின் சத்துருவா யிருக்கிறாய். [4] மறைவாயுள்ள வானத்தையும் பூமியையும் நீ காண்கிறாய். மகத்தான புவனங்களுக்கு இன்பத்தை அளிக்கிறாய். ரு. இந்திரனே! வச்சிராயுதனே,! தலைவனே! ஜயிப்பவனே! வெகு சத்துருக்களை வெல்லுபவனே! மொழிபோலுள்ள விருத்திரனைக் கொல்லும் வானத்திலிருக்கும் பல சத்துருக்

---

1 கணக்கில்லாமல் 2 மருத்துக்களைத் தவிர வேறு தேவர்கள் எல்லாம் உன்னை விடுகிறார்கள். 3 நீ வழியில் செல்லும் ஐம்புலன்கள் மனம் ஆன்மா 4 அவர்கள் நிலையை.

களைப் பாழாக்கும் விருஷபமான திரவடிவமான வச்சிராயுதனுய் வெகு சிரமுள்ள உன்னை நாடுகிறோம். ௬. மகத்தான அறிஞனுக்கு உங்கள் ஐசுவரியத்தை அபிவிருத்தி செய்பவனுக்கு உங்கள் அளிப்பை கொண்டுவரவும், உங்கள் செம்மையான அறிவைத் தயார் செய்யவும். [1] மனிதர்களை நிரப்புவனுக பிரசைகளினிடஞ் செல்லவும். எ. வன்மை நிறைந்தபோரில் சந்தோஷமாயுள்ள மகவானை இந்திரனை தலைவனை அழைக்கிறோம். துதியை செவியுற்றுக்கொண்டு உக்கிரமாய் சண்டையில் விருத்திரர்களைக்கொன்று ஐசுவரியங்களைச் சேர்ப்பிக்கும் உன்னையே ரட்சிப்பிற்கு அழைக்கிறோம். அ. வசிஷ்டனே! — அறிஞனே - அறிவிற்கு வேதத்தை [2] உச்சகானஞ் செய்யவும். இந்திரனை யுத்தத்தில் மேன்மையாக்கவும். எவன் தன் சிறப்பால் சமஸ்தங்களைச் செய்கிறுனே அவன் என் அறிஞன் சொற்களைக் கேட்கிறுன். கூ. சலத்தின் ஆழத்தில் சாய்ந்துள்ள சக்கிரத்தை எரிவதற்கான சந்தோஷத்தை சோமரசம் செய்யட்டும். பூமியின்மேல் சேர்க்கப்பட்டுள்ள ஸ்தனத்தினின்று பசுக்களிலும் செடி கொடிகளிலும் பாலைப் பெருக்குகிறுய்.

---

## கண்டம் ௩௫.

தேவதை - க - ௬, கூ - க0 - இந்திரன். எ, அ; பர்வதேந்திரர்கள். ரிஷி - க அரிஷ்டநேமிதார்க்ஷியன், உ - பாரத்வாஜன் ௩ வசுகவிமதன். ௪ - ௬, கூ, வாமதேவன். எ, விசுவாமித்திரன். அ-ரேணு, க0 - கோதமன்.

இந்த பிரசித்தமான [3] திருக்ஷமகனை [4] சுபர்ணனை க்ஷேமத்திற்காக அழைப்போம். அவன் வன்மையுள்ள

---

1 மனிதர்களின் மேன்மைக்காக போராடவும் 2 பலர் அறியும்படி நீ பிரசாரஞ் செய்யவும். 3 பலத்தின் 4 ஆத்மாவை.

வன், தேவர்களின் தூதன், நட்போடுள்ளவன். அன்னிய ரதங்களைத் தாண்டுபவன் அஹிம்சையான ரதமுடையவன். சத்துருக்களை ஜயிப்பவன். உ. சத்துருக்களினின்று காப்பாற்றுபவனாய் விருப்பங்களை ஒவ்வொரு அழைப்பிலும் திருப்தி செய்பவனாய் சுகமாய் அழைப்பதற் கருகனாய் சூரனாய் சக்திவாய்ந்தவனான பலர்களால் அழைக்கப்படும் இந்திரனை அழைக்கிறேன். மகவானான இந்திரன் இதை அங்கீகரிக்கட்டும்.

ந. வலது கையில் வச்சிராயுதமுள்ளவும் ரதம் முதலிய செயல்களுடனான குதிரைகளின் சாரதியான இந்திரனை பஜிக்கிறோம். தன் சேனைகளால் திகில் அளித்துக் கொண்டு, (சத்துருக்களுக்கு) ஐசுவரியங்களை அளித்துக் கொண்டு தாடியை அசைத்துக்கொண்டு திடமுடன் அவன் எழுந்துளான். ச. சதா காலம் சத்துருக்களைக் கொல்லுபவன். தீரமுடன் அவர்களைத் தூண்டுபவன். மகத்தானவன். நாச மற்றவன். விருப்பங்களை வர்ஷிப்பவன். நல்ல வச்சிராயுதன். விருத்திரனைக் கொல்லுபவன். வன்மையை யளிப்பவன், ஐசுவரியன். ரு. ஐசுவரிய மளிப்பவன். தன்னைப்பற்றி அதிகமாக எண்ணிக் கொள்ளுபவனாய் அதிக உபத்திரவ சுபாவமுள்ள எவன் காத்திருந்து எனக்கு விரோதமாய் சண்டை செய்கிறானோ போரினாலோ பலத்தினாலோ அவனை ஒழிக்கவும். இந்திரனே! காளைபோலான உன் ரட்சிப்பால் நாங்கள் ஜயமுடனாகட்டும். சூ. போரிலே துரிதமாய் செல்லுங்கால், பகைவர்களோடு சண்டை செய்யுங்கால் அழைக்கப்படுபவனாயும், கவிகளால் போற்றப்பட்டு எங்கு வீரர்கள் லாபத்தை அடைகிறார்களோ அல்லது சலங்களின் வழியிலேயுள்ள அவனே இந்திரன். எ. இந்திரமலையே! மகத்தான ரதத்தில் பஜிக்கத் தகுந்த சுலபமான வீரர்களைக் கொண்டுவரவும்.தேவர்களே!

யக்ஞங்களில் ஹவிஷுகளை அனுபவிக்கவும். உணவால் உற்சாகமாகி துதிகளால் திடமுடனுகவும். அ. ஆகாசத்தி னின்று பொழியும் சலங்களைப் போல் தங்கு தடையன்னி யிலுள்ள தாரைகளோடு இந்திரனுக்கு துதிகளைப் பிரேரிக் கிறான். அந்த இந்திரன் தன் ரதத்திற்கு இருபக்கங்களி லும் வானத்தையும் பூமியையும் அச்சை அச்சாணிகளைப் போல் சதாகாலமும் நிலையாக்குகிறான். ௯. நண்பர்கள் நட்பிற் காக உன்னை இங்கு எதிர்முகமாக்கட்டும். சலமடைந்துள்ள நீ என் அருகில் வருவாயோ? யக்ஞத்தில் உத்தம ஒளியுட னை இந்திரனை பிரமாவே! பிதாக்களின் குழந்தை குட்டி களைக் கொண்டுவரவும். ௰, எவன் பிரசாபதி யக்ஞத்தி னுடைய நிர்வாகத்தில் இன்று வேத மொழிகளைச் சேர்த்து செயல்களுடன் சொலிப்பவனுய் கொல்லுவதற்றுள்ள [1] அப் சுவாகனை சுகமளிப்பவனை எவன் சாமக்கிரியைகளால் நிறை வேற்றுகிறானோ அவன் நீடுழிகாலம் வாழ்கிறான்.

---

## கண்டம் ௩௬.

தேவதை - இந்திரன். ரிஷி, - ௧. - மதுச்சந்தர்கள், ௨.- ஜேதா மதுச்சந்தர்கள் ௩ ௬, - கௌதமர்கள் ௪ - அத்திரி ௫ அ,திரஸ்சீ. ௭ - கண்வோ நீபாதிதி, ௯-விசுவாமித்திரன், ௰ - சம்யுர்பர்ஹஸ்பத்யன்.

௧. சதக்கிரதுவான இந்திரனே! கானஞ் செய்கிறவர் கள் துதிக்கிறார்கள். மந்திரத்தால் உன்னை மனனஞ்செய் கிறார்கள். கொடிக் கம்பம்போல் [2] பிராமணர்கள் உன்னை உத்தமமாய் துதிக்கிறார்கள். ௨. சர்வமான மொழிகள் கட லைப்போல் விரிவாய் இந்திரனை [3] அபிவிருத்தியாக்கும்.

---

1 விருப்பத்தில் செல்லுபவரான. 2 அறிஞர்கள் 3 இந் திரன் அறியும் ஞானத்தை.

அவன் ரதமுள்ள வீரர்களின் நடுவே அதிசய ரதமுள்ளவன். வன்மைகளின் தலைவன். வீரர்களின் விமலன். ங. சிறந்த சந்தோஷ மளிப்பதாய் அமுதமான இந்த சோமனைப் பருகவும். சத்திய நிலயத்தில் வெண்மையான தாரைகள் உன்னை நோக்கிப் பெருகும். ச. வச்சிராயுதனே! இங்கு அதிசய முள்ள எப்பொருளை நீ கொடுப்பதில்லை? ஐசுவரியங் காண்பவனே! இரு கைகளையும் நிரப்பி எமக்களிக்கவும். ரு. உன்னை சேவிப்பவனின் அழைப்பை திரிஷியின் [1]அழைப்பை செவி கொடுக்கவும் ஐசுவரியங்களோடும் வீரமக்கட்களோடும் அவனைத் திருப்தியுடனுக்கவும். சு. நீ மகானுகும் இந்திரனே! உனக்காக இந்த சோமன் பொழியப்பட்டுளது. வீரனே! அதிக பலமுள்ளவனே! இங்குவா! சூரியன் ரசிமிகளால் [2]அந்த ரிட்சத்தை நிரப்புவதுபோல் இந்திர வன்மை உன்னை பூர்ணமாக்கட்டும். எ. [3] கண்வருடைய துதிக்கு இந்திரனே! குதிரைகளுடன் வரவும். சீவனே! மனிதனே! உன் சோதியுலக அரசனை சோதியை, நோக்கி, நீங்கள் செல்லுகிறீர்கள். அ. கானம் விரும்புபவனே! சோமன் பெருகுங்கால் ரதசாரதியைபோல் துதிகளான மொழிகள் உனக்கு வருகின்றன. பசு கன்றுகளிடம்போல் அவைகள் ஒருமையுடன் உன்னை அழைக்கும். துரிதமாக வரவும். கூ. சுத்த சாமனுல் சஸ்திரங்களால் சுத்தமான [4] இந்திரனை போற்றுவோம். சஸ்திரங்களால் பாபம் நீங்கிய இந்திரனை சுத்த செயல்களால் ஆசிரதமான பால் கலந்த சோமன் இந்திரனை இன்பமாக்கட்டும். அதிக ஐசுவரியமுடனும் உங்களை ஐசு

---

1 மனப்பூர்வனின் 2 ஆகாசத்தை 3 கல்விக்குணம் நிறைந்துள்ளவருடைய 4 ஆயுதங்களை அதிகம் பயன்செய்து வெற்றி தோல்வியில் அனுபவமானு லொழிய உன் இந்திரனுன ஆத்ம சுத்த முடனுகாது.

வீரிய முள்ளவனைச் செய்பவனும், கீர்த்திகளால் அதிசய ஒளியுள்ளவனுமான வன்மையின்பதியே! சோமன் பொழியப்பட்டவனாய் உனக்கு சந்தோஷ மளிப்பவனா யிருக்கிறான்.

---

## கண்டம் ௩எ.

தேவதை, க - ச, ௬, அ, இந்திரன், ரு மருதன், எ - ததிக்கிராவன். ரிஷி-க - பரத்வாஜன், உ - வாமதேவன் சாக பூதன், ௩ - பிரியமேதன். ச - பிரகாதன். ரு - ச்யாவாசுவ ஆத்ரேயர்கள் ௬ - சம்யுஎன். எ - வாமதேவன். அ - ஜேதாமதுச் சந்தஸன்.

க. பருக விரும்பும் எதையும் அறியும், பின் தயங்காதவனாய் சுற்றுபவனாய் அருகில் துரிதமாய் வரும் வீரனை தேவரான இந்திரனுக்கு (உன்னையே) அளிக்கவும். உ. மித்திரனான இந்திரனே! இப்படி காணும் நீ, மகத்தானவன், வன்மையில் சாய்ந்தவனாய் ஆழத்தில் அமைந்தவனாய், பூர்வத்தில் நிற்பவனான நீ மேன்மையானவன். எங்கள் கோரமான மொழியை நீக்கவும். ௩. எங்கள் ரட்சிப்பிற்கு சுகத்திற்கு சக்தியுள்ளவனே பல வீரச் செயல்களை செய்து இம்சிப்பவனை கொல்லுபவனாய் சிறந்த தலைவனான உன்னை ரதத்தைப்போல் இழுக்கிறோம். ச. இந்திரன் முதன்மையானவன். பூஜ்யர்களின் செயல்களால் சோதி புருஷன் தயார் செய்யப்பட்டுள்ளான். இந்திரன் மூலமாய் செயல்களை தேவர்களின் நடுவே பிதாவான [1]மனு அடைகிறான்.

ரு. ரதங்களில் ஒளியுள்ள குதிரைகள் (அவர்களை) சுமந்து செல்லுங்கால் அங்கு இன்பமளிக்கும் ரசத்தைப் பருகி மனிதர்கள் சிறந்த செயல்களைச் செய்கிறார்கள். ௬.

---

1 மனிதன்

ஒருவனுக்கும் உபத்திரவத்தைச் செய்யாதவனாய் பலத்தின் தலைவனாயுமுள்ள வீரனாய் விசுவத்தை ஜயிப்பவனாய் நாயகனாய் சக்தி வாய்ந்தவனாய் ஐசுவரியத்தையுமுடைய இந்திரனை உங்களுக்காக துதி செய்கிறேன். எ. ஜயசீல குதிரை போல் வேகமாயுள்ள 'ததிக் கிராவணத்தை' தேவஸ் துதியை துதி செய்கிறேன். எங்கள் அங்கங்களை சுகந்த முடனாகட்டும். எங்கள் வாழ் நாட்களை வளரச் செய்ய வேண்டும். அ. இந்திரன் சம்பத்தோடு சனிக்கிறான். அவன் கோட்டைகளைத் தகர்ப்பவன், காளை, கவியாகும், பல மலை, சகல செயல்களை செய்பவன், போஷகன், வச்சிராயுதன், அதிகமாய் துதிக்கப்படுபவன்.

---

## கண்டம் ௩அ.

தேவதை - க - எ இந்திரன், அ - உஷை கூ - விசுவே தேவர்கள். க0 - தேவர்கள். ரிஷி - க, ௩, ௫ - பிரிய மேதர்கள். உ, க0, வாமதேவர், ச - மதுச் சந்தர்கள். சு, பாத்வாஜன். எ-அத்ரி, அ-பிரஸ் கண்வன். கூ-ஆப்த்ய ஸ்திரிதன்.

க. வீரத்தை நாடும் இந்துவிற்கு மூன்றான (மனம் வாக்கு, காயம்) செயல்களை பூர்ணமாக்கவும். உங்கள் யக்ஞத்தை சாதிக்க வெகு பிரக்ஞையுடனான அவன் செயல்களால் உங்களை அழைக்கிறான். உ. சர்வ மறியும் தீரர்கள் எந்த குதிரைகளை [1]கசியபனின் வருணர்களாக, நண்பர்களாகச் சொல்லுகிறார்களோ அவர்களுடைய சர்வமான செயலை யக்ஞத்தின் நிமித்தமெனக் கூறுகிறார்கள். ௩. மனிதர்களே! [2] பூஜிக்கவும். இந்திரனை பெருமையுடன் கானஞ் செய்யவும். [3] பிரிய மேதசர்களே! கானஞ் செய்யவும். சின்னப் பிள்ளை

---

1 சாதகன் 2 நாடவும் 3 அன்பும் அறிவும் நிறைபவர்களே

களும் அவனுக்கு கானஞ் செய்யட்டும். கோட்டை போல் [1] திருடமான அவனை உபாசிக்கவும் ச. சக்திமானுன அவன் சோமன்களில் நண்பர்களில் சந்தோஷமுடனுக வெகு சத்துருக்களை நிஷேதஞ் [2] செய்பவனை இந்திரனுக்கு விஷயங்களை வளர்ச்சியாக்கும் மந்திரத்தைச் சொல்லவேண்டும். ரு. சத்துருவால் வளைக்கப்படாத [3] விசுவாநரனுடைய, பலத்தின் பதியை சைன்யங்களுடன் மனிதர்களின் ரட்சிப்பிற்கு ரதங்களின் ரட்சிப்பிற்கு அழைக்கிறேன். சு. அறிஞன் உன் அறிவால் சாந்தமனிதனில் [4] சௌம்யனுயிருக்கிறுன். இவன் உன் ரட்சையில் இருப்பவனுகி துவேஷிகளை பாபம்போல் தாண்டிச்செல்லுகிறுன். எ. [5] சதக்கிரதுவே! மகத்தான ஐசுவரியத்தின் என் தானமானது மகத்தானதாகும். அதனுல் எதையும் பார்ப்பவனே! புனித தான மளிப்பவனே! எங்களுக்கு ஐசுவரியத்தை அளிக்கவும். அ. சுபமான நிறமுள்ளவனே! உஷையே! உன் நடைகளை நோக்கி மனிதர்கள் மிருகங்கள் சிறகுள்ள பட்சிகளும் ஆகாசத்தின் எல்லேயினின்றும் சுற்றிலும் செல்லுகிறுர்கள். கூ. தேவர்களே! நீங்கள் [6] திவ்யனின் ஒளி நடுவே இருக்கிறீர்கள். உங்கள் சம்பந்தமான உண்மையான ரகசியமென்ன? உன் அமிருதம் எப்படி? உன்பழைய ஆகுதி எப்படி? ௰. எவைகளால் செயல்களைச் செய்கிறுர்களோ, அந்த ரிக்கு சாமனை [7] யாஜிக்கிறோம். அத்யயனஞ் செய்கிறோம். அவைகள் பெரியவிஷயத்தில் சபையில் அரசுபுரிகின்றன. தேவர்களில் யக்ஞத்தைச் சுமந்து செல்லுகின்றன.

---

1 நிலேயான. 2 தாழ்மை செய்பவனுன 3 எங்குமுள்ள அக்னியினுடைய 4 சுந்தரனுயிருக்கிறுன் 5 கணக்கில்லாத அறிவு செயல்கள்செய்பவனே. 6 புனிதனின் 7 நாடுகிறோம்.

## கண்டம் ௩௧.

தேவதை - ௧ - ௮, ௧௦, ௧௧ - இந்திரன், ௯ தியாவாபிருதிவீ. ரிஷி - ௧ - ரேபன். ௨ - ௬ சுவேத சைலூஷின் ௩ - வாமதேவன். ௪, ௭, ௮, சவ்ய, ஆங்கிரஸன். ௫ - விசுவாமித்திரன் ௬, 'கிருஷ்ண ஆங்கிரஸன். ௯ பாரத்வாஜன் ௧௦ - மேதாதிதி. ௧௧ - குத்ஸன்.

௧. சத்துருவைக் கொல்லுபவனும் உக்கிரனும் உத்தம பலமுள்ளவனும் திடமுடன் துரித பல முள்ளவனும் எல்லா போர்களிலும் ஜயிக்கும் இந்திரனை வன்மைக்காக, தலைமைக்காக உயர்ந்த செயலிலும் [1] திரத்திலும் நிலையான நிலயத்திலும் ஒருமையுடன் எல்லாவீரர்களும் இந்திரனைப் புலனுக்குகிறார்கள். ௨. வச்சிராயுதனே! உன் முதன்மையான கோபச்செயலில் எனக்கு நம்பிக்கையுண்டு. ஏனெனில் அதனால் நீ விருத்திரனைக்கொன்று மனிதனுக்கு ஹிதஞ் செய்பவனாகிறாய். சோதியும் வானமும் உன்னை துரிதமாய் நாடி சரணமடைந்துள்ளது. உன் பலத்தில் பூமியும் நடுங்கும். அதாவது [2] உன் கோபத்தாலேயே இவைகள் தங்கள் தங்கள் கடமைகளைச் செய்து வருகின்றன. ௩. மனிதர்களின் ஒரே [3] அதிதியான சுவர்கத்தின் பதியை உங்கள் எல்லா பலத்தோடும் ஒருமையுடன் அணுகவும். அவன் பழையவன். நம்மை நோக்கி வருவதற்கு விருப்பமுள்ள அவனையே எல்லாவழிகளும் நாடுகின்றன. அவன் ஒரே ஒருவனாகும். ௪. பெரும் பொருளுள்ள இந்திரனே! பலர்களால் துதிக்கப்படுபவனே! உன்னை ஆசிரயித்து அருகில் அணுகலாமோ? உன்னைத் தவிர வேறு எவனும் மொழி

---

1 திடப்பொருளிலும் 2 பகவத்கீதை விசுவரூப அத்தியாயத்தைப் பார்க்கவும். 3 எப்பொழுதும் உங்களிடம் இருப்பவன்.

விரும்புபவனே எங்கள் துதியை அடைவதில்லை. பூமி அனைத்தையும் நேசிப்பதுபோல் நீ எங்கள் துதியை விரும்பவும். மனிதர்களைக் காப்பவனான ஐசுவரிய மிகுந்தவனாய் துதிக்கருகனாய் [1] வளர்ப்பவனாய் பிரசைகளால் பூஜிக்கப்படும் [2] அமரனாய் தினந்தோறும் துதிக்கப்பட்ட இந்திரனை எங்கள் பெரிய மொழிகள் கானஞ் செய்கின்றன. கூ. சுவர்கஞ் செல்லும் ஒருமையுடனான விருப்பமளிக்கும் துதிகள் இந்திரனை சப்திக்கின்றன. மனைவிகள் புருஷனைப்போல் [3] மகவான் நம்மை ரட்சிப்பதற்காக குற்றமற்ற அவனை ஆலிங்கனஞ் செய்துகொள்ளுகிறார்கள். எ. நீ வீரமுடனும் பலர்களால் அழைக்கப்பட்டும் ஐசுவரிய சமுத்திரனான இந்திரனை துதிகளால் சந்தோஷஞ் செய்யவும். சூரியனுடைய ரசிமிகள் உபகாரமா யிருப்பதுபோல் மனிதர்களை விரும்புபவனின் செயல்கள் எங்கும் சஞ்சரிக்கின்றன. எல்லாவித போகத்திற்கும் அதிசய தாராளனான இந்திரனை உபாசிக்கவும். அ. அந்த பிரசித்தனான சுவராதித்தியன் சோதியைக் காண்பவனானவன் நூறு பலமுள்ளவர்களோடு செல்லும்மேஷத்தை நன்றாய் உபாசிக்கவும். என் ரட்சிப்பிற்கு உத்தம துதிகளால் துரிதமாய்ச் செல்லும் குதிரையைப்போல் யாகத்தை நோக்கிச்செல்லும் ரதமான இந்திரனை அடிக்கடி உபாசிக்கவும். கூ. சுவர்கமும் சகமும், தேஜசுகளோடு புவனங்களின் எல்லாப்பொருள்களோடும் விஸ்தாரமாயும் வெகு காரிய விரிவாயும், இனிமை அளித்துக்கொண்டு இன்பமான வடிவமுடன் நித்தியமான வெகு ரேதசுகளோடு வருணனுடைய தர்மத்தால் தன்னந் தனிமையாய் (பரஸ்பரம் பிரிந்து நிலையாய்) நிற்கின்றன. ௰. இந்திரனே! சுவர்கத்தையும் உன்

---

1 அவன் அறிவில் நாங்கள் வளர்பவனாய் 2 மரணமில்லாதவனாய் 3 ஐசுவரியவான்.

தேஜசால் உஷையைப் போல் நீ நிறைத்துள்ளாய். மகத்தான தேவர்களுக்கும் மேன்மையாயுள்ளவும் மனிதர்களுக்குத் தலைவனான இந்திரனான உன்னை [1] தாயான தேவி சனனஞ் செய்கிறாள். சுபமான உனக்கு சீவனளிக்கிறாள். கக. இந்திரனுக்கு ஹவிர்லட்சணமுடன் [2] பிதுருவுடன் மொழியை துதி செய்யவும். [3] ரிஜிஸ்வனியோடு [4] கிருஷ்ண கர்ப்பத்தை துரத்துபவனான ரட்சிப்பு விரும்பி விருப்பம் வர்ஷிக்கும் வலதில் வச்சிரமுடனான இந்திரனை [5] மருத்துக்களோடு அழைப்போம்.

---

## கண்டம் சo.

தேவதை - இந்திரன். ரிஷி- க - நாரதன் உ, ௩ - கோஷூக்த்யசுவசூக்தினர்கள். ச, பர்வதன். ரு - எ, கo. விசுவமனுவையசுவன். அ - நிருமேதன், கூ - கௌதமன்.

இந்திரனே! சோமங்களில் செயல் செய்பவனான துதி செய்பவனை புனிதஞ்செய்கிறாய். எதற்காக? வளர்ச்சியாகி பலத்தின் லாபத்திற்கு. உ. அவன் எப்படிப்பட்டவன்? இந்திரன், மகானாகும். பலர்களால் அழைக்கப்படும் பலர்களால் துதிக்கப்படுபவனுக்குக் கானஞ்செய்யும். மகத்தான இந்திரனைத் துதிகளால் அழைக்கவும். ௩. உலகத்தில் ஸ்தானமளித்து பொன் போல் பெருமையாய் யுத்தத்தில் ஜயிக்கும் விருப்பங்களை வர்ஷிக்கும் உன் குதூகலிப்பை வச்சிராயுதனே! நாம் நாடுகிறோம். ச. இந்திரனே! விஷ்ணுவோடு அல்லது திருத ஆப்தனோடு அல்லது மருத்துக்

---

1 மனம் என்னும் தாய் உன் அறிவை எனக்கு சனனஞ் செய்கிறாள். 2 பெரியாருடன் 3 சுலப ஞானத்தோடு 4 கெட்ட செயல்களின் ஆரம்ப எண்ணங்கள் 5 சுவாதீன ஆயுதமுடனான.

களோடு சோமனைப் பருகுங்கால் நீ துளிகளோடான சோமனை நன்றாய்ப் பருகவும். ரு. யக்ஞஞ் செய்பவனே! சோமரசத்தினுடைய சந்தோஷ பானங்களை செம்மையாக்கவும். எப்பொழுது ஐசுவரியமளிக்கும் வீரனான அவன் துதிக்கப்படுகிறான். சு. சோம துளிகளை இந்திரனுக்கு ஊற்றவும், சுந்தரமான இனிமை நிறைந்த ரசத்தை அவன்பருகட்டும். அவன் தன் சுவய மகத்துவத்தால் செல்வங்களை அளிக்கிறான். எ. நண்பர்களே! துரிதமாகவும், துதிக் கருகனான சர்வத்தின் தலைவனான இந்திரனைத் துதிப்போம், அவன் ஒருவனாகவே சர்வமான சத்துரு சைன்னியங்களை ஜயிக்கிறான். அ. மேதாவிக்கு மகத்தான பிரமத்தை செய்பவனுக்கு போராளிஞனுக்கு துதி விரும்பும் இந்திரனுக்கு பெரிய சாமனை கானஞ்செய்யவும். கூ. [1] ஹவிர் அளிக்கும் மனிதர்களில் ஐசுவரியத்தை அளிப்பவன் இந்திரன் ஒருவனே. ஒருவராலும் எதிர்க்காத அவன் ஈசனாகும். ம. உங்கள் தலைவனான சத்துருவைக்கொல்லும் வச்சிராயுதமுள்ள இந்திரனுக்கு துதிசெய்ய, நண்பர்களே! [2] பிரமத்தை துதியை நாம் கற்கட்டும்.

---

## கண்டம் சக.

தேவதை-க-ச, அ, இந்திரன், ரு, எ ஆதித்தியர்கள், சு-அக்னி, ரிஷி-க பிரகாதன், உ-பாத்வாஜன், ந, நிருமேதன். ச-பர்வதன், ரு, எ, இரிமிடன், சு-விசுவமனர்கள். அ-வசிஷ்டன்.

இந்திரனே! உன்பலம் [3]எதற்கும் உபமானம் போலாகும். யக்ஞத்தின் பொருட்டு உன்னைத் துதிக்கிறேன்.

---

1 தியாகஞ்செய்யும் 2 பலத்தை நாம் பயிற்சிசெய்வோம். 3 எந்த உத்தமமான பொருள்களுக்கும்.

சக்தியின் தலைவனே! நீ விருத்திரனை சக்தியால் கொல்லு கிறாய். உ. இந்திரனே! எதன் இன்பத்தில் நீ சம்பரனுன சலத்தை, [1] திவோதாசனுக்காக கொல்லுபவனுகிறாயோ, அந்த இன்ப காரணுன, சோமன் உன் ரசமாகும். அதைப் பருகவும். ந. பிரியனே, பெரிய சத்துருக்களை ஜயிப்ப வனே! விட்டுவிட முடியாதவனே! பர்வதம்போல் எங்கும் பரந்துள்ளாய், சுவர்கத்தின் தலைவனுன நீ எங்களிடம் வர வும்! ச. இந்திரனே! பலிஷ்டனே! அதிக சோமபானம் பருகும், நீ சந்தோஷமாகி [2] சேதனத்தை அடைகிறாய். அதனால் நீ அசுரர்களைக் கொல்லுகிறாய். அந்த சந்தோ ஷத்தை நாங்கள் நாடுகிறோம். ரு. தேச சுள்ளவர்களே! [3] ஆதித்தியர்களே! எங்கள் மக்கட்களுக்கு சந்ததிகளுக்கு நீடுழி காலம் சீவிக்க தீர்க்கமான வாழ்க்கையைச் செய்யவும்.

சூ. வச்சிராயுதனே! உபத்திரவஞ் செய்பவர்களை ஒழிக்க நீ நன்று யறிகிறாய். சூரியன் உதயத்தில் தன் நிலை நீங்கிப் பறக்கும் பட்சியைப்போல், தினந்தோறும் நீ அனைத்தையு மறிகிறாய். எ. ஆதித்தியர்களே! ரோகத்தை நீக்கவும். வேதனை செய்யும் சத்துருவைத் துரத்தவும். துஷ்ட புத்தியுள்ளவனையும் ஒழிக்கவும். எங்களை பாபங் களின்று பிரிக்கவும். அ. இந்திரனே! சோமனைப் பருக வும். அது உன்னை சந்தோஷ முடனுக்கட்டும். சாரதியின் கைகளால் இணைக்கப்பட்ட குதிரைபோல் அமிழ்த்தப்படு வர்களின் சாதனங்களால் நன்கு கவனிக்கப்பட்டு பொழியப் பட்டதாகும் (இந்த சோம ரசம்.)

---

1 ஒளிக் கூட்டங்களுக்கு 2அந்தசோம பானத்தை நமது ஆன்மா பருகும்படி செய்தால் அவன் சேதனத்தை நமது ஆன்மா அடைகின்றது 3 பன்னிரண்டு மாதங்கள்

## கண்டம் சுஉ.

தேவதை - க, உ, ச, ரு, எ - க0, இந்திரன் ந, சு, மருத்துக்கள். ரிஷி க - சு, கூ, க0, சௌபரி, எ, அ, நிரு மேதன்.

க. இந்திரனே! நீ சன்மத்திலிருந்தே சகோதரனில்லாதவன். போட்டி யில்லாதவன். பந்துத்வ மில்லாமல் சதாகால மிருக்கிறாய். போரினாலேயே நீ பாந்தவத்தை விரும்பிகிறாய். உ. நண்பர்களே! பூர்வத்தினின்றே இங்கு தோன்றும் எல்லா ஐசுவரியங்களைக் கொண்டுவந்து தனமளிக்கும் இந்திரனை உங்கள் ரட்சிப்பிற்கு நான் துதி செய்கிறேன். ந. முன் செல்லுங்கால் தயங்கவேண்டாம். இங்கு வரவும். சமான கோபமுள்ளவனே! நீ வெகு தூரமிருக்க வேண்டாம் அல்லது திருடமான எதையும் சுவாதீனஞ் செய்பவனே! வேறு எங்கும் நிற்காதே. ச. குதிரைகளின் தலைவனே! பசுக்களைக் காப்பவனே! தான்ய நிலத்தின் தாயகமே! சோமனுக்காக வரவும். சோமபதியே! சோமனைப் பருகவும்.

ரு. வர்ஷிப்பவனே! பசுக்களோடான சனங்களின் போரிலே கோபத்தால் பெரு மூச்சுவிடும் மனிதனை உன் நட்பினால் நாங்கள் எதிர்க்கட்டும். சு. சமான கோபமுள்ள மருத்துக்களும் பசுக்களும் ஒரே பிறப்பாகும். திசைகளையெல்லா மடைந்து பரஸ்பரம் நீங்கள் சேர்ந்திருக்கிறீர்கள். எ. வெகு வேலை செய்பவனே! வெகு பார்வையுடனான இந்திரனே! பலத்தை பொருளை கொண்டுவரவும். சண்டையில் ஜயிக்கும் வீரனாகும் நீ. அ. துதிகளால் வரிக்கப்படுபவனே! உன்னை நாடி விருப்பத்தின் நிமித்தம் யாசிக்கிறோம். வெள்ளத்தை வெள்ளம் தொடருவது போல் உம்மிடம் பாய்ந்துளோம். கூ. இந்திரனே! பால் கலந்து

மகிழ்வளித்து உன்னை பெருமையாக்கும் சோமனில் பட்சிகளைப் போல் நாங்கள் உட்கார்ந்து உமக்கு மேன்மையாய் கானஞ் செய்கிறோம். ௰. வச்சிராயுதமுள்ளவனே! உன்னை நாடும் நாங்கள் அதிசய வடிவமான உன்னையே ரட்சை நாடி நிலைப் பொருளை நாடுவதுபோல் அழைக்கிறோம்.

---

## கண்டம் சு௩.

தேவதை - க - அ, இந்திரன், கூ - விசுவேதேவர்கள், க0 - அசுவினிகள். ரிஷி - க - அ, கௌதமன், கூ - திருதன், க0 - அவஸ்யுனன்.

இப்படிப் பொழியப்பட்ட இனிமையான சோமனுடைய ரசத்தை வெண்மையான பசுக்கள் பருகுகின்றன. தங்கள் சுவராஜ்யத்தில் திடமுள்ளவர்களாய் வர்ஷிக்கும் இந்திரனுடன் சென்று சந்தோஷமுடனுகின்றன. ௨. சக்திவானுன இந்திரனே! வச்சிராயுதனே! பலத்தால் ஆகாசத்தினின்று விருத்திரனைத் துரத்தி உன் ராஜ்யத்தைப் புலனுக்கிக்கொண்டு, இப்படித்தான் சோமனுனவன் சந்தோஷமளிக்கும் உன் விருத்தியைச் செய்யும் பிரமத்தை அறிவைப் புலனுக்கினுன். ௩. விருத்திரனைக் கொல்லும் இந்திரன் சக்திக்காகவும் சந்தோஷத்திற்காகவும் மனிதர்களால் அபிவிருத்தி யாக்கப்பட்டான். அந்த இந்திரனையே சின்னச் சண்டைகளிலும் பெரிய சண்டைகளிலும் அழைக்கிறோம். அவன் போர்களில் எங்களை ரட்சிக்கட்டும்.

௪. வாகன ரூபமான மேகத்தோடு கூடியவனே! வச்சிராயுதனே! இந்திரனே! ஜயிப்பதற்கு முடியாத சாமர்த்தியம் உன்னுடையதே. உன் வீரியத்தால் மாயாவியான மிருக வடிவமெடுத்த விருத்திரனைக் கொன்ற பொழுது உன் தலைமையையே புகழ்ந்துகொண்டு உன் பலம் பிரசித்த

மாகின்றது. இந்திரனே! முன் செல்லவும். ரு. கொல்லும் சக்துருக்களை சந்திக்கவும். உன் வச்சிராயுதம் தடுக்கப் படுவதில்லை. ஆண்மையே உன்னுடைய பலமாகும்; அதனால் விருத்திரனைக் கொல்லவும்; உன் [1]சுவயமான சிறப்பை கானஞ் செய்பவனாய் சலங்களை ஜயிக்கவும். சு. சண்டைகள் உண்டாகுங் கால் செல்வங்கள் வீரமுள்ளவனுக்கு உண்டாகும்; இந்திரனே! வேகமுடனான குதிரைகளை இணைக்கவும்; எவனைக் கொல்லுவாய்; எவனை செல்வமுடனாக்குவாய்? எங்களை ஐசுவரியமுடனாக்குவாயோ?

எ. இந்திரனே! உன்னால் (அளிக்கப்பட்டதைப்) புசித்து பேரானந்த முடனாகிறார்கள். பிரியர்கள் (அதிக உணவால்) பேசாமல் எழுந்து சென்றுவிடுகிறார்கள். சுவயசோதியுடனான மேதாவிகள் அதிசய புதிய புத்தியால், துதியால் துதி செய்கிறார்கள். இந்திரனே! இரு குதிரைகளைத் துரிதமாய் இணைக்கவும். அ. மகவானே! எங்கள் துதிகளை நன்றாய்க் கேட்கவும்; அலட்சியஞ் செய்யாதே; சத்திய வடிவமுள்ளவர்களாக எங்களை எப்பொழுது செய்வாய்? இதையே உன் நோக்கமாகச் செய்யவும். இந்திரனே! உன் குதிரைகளைத் துரிதமாக இணைக்கவும். கூ. உதயமண்டல சலத்தின் நடுவிலுள்ள நல்ல ரசிமிகளுடனான சந்திரன் சோதியுலகில் ஓடுகிறான். மின்னல்களே! ரசிமிகளே! உங்கள் பொன் சக்கிரங்களாலும் மனிதர்கள் உங்கள் பாத நிலையை, நிலயத்தை காண்பதில்லை. வானமே—பூமியே! என் இந்தத் துதியை அறியவும். ௰. அசுவினிகளே! உங்கள் பிரியதமமான விருப்பத்தை அளிக்கும் ஐசுவரியஞ் சுமக்கும் ரதத்தை துதி செய்பவன் ஆத்ம துதிகளால் [2]அலங்காரஞ் செய்கிறான், தயாராயுளான். மதுவித்தையை அறிபவர்களே! செவி கொடுக்கவும்.

---

1 சொந்தமான 2 தன்னை தயார் செய்து கொள்ளுகிறான்.

## கண்டம் சச.

தேவதை - க, உ, எ, அக்னி, ஙூ - உஷை ச - சோமன், ரு, சூ, இந்திரன், அ, விசுவேதேவர்கள். ரிஷி - க, எ, வசுஸ் சுருதன், உ, ச, விமதன், ஙூ, சத்திய சிரவர்கள், ரு - சூ, கௌதமன், அ - அம்ஹோமுக் வாமதேவ்யர்கள்.

க. அக்னியே! ஒளியுள்ளவனும் அழிவற்றவனுமான உன்னை எப்பொழுதும் மூட்டுகிறோம். உனக்காக அதன் ஒளியை சோதி யுலகத்திற்கனுப்ப இந்த துதிக் கருகதை யான திவ்ய சமித்தானது (மூட்டப்படுகிறது). உன்னைத் துதி செய்பவர்களுக்கு உணவு, ஐசுவரியத்தைக் கொண்டு வரவும். உ. விதவிதமான சந்தோஷத்திற்கு ஹோதா வான, அக்னியான உன்னை யக்ஞங்களில் நன்கு அமைக்கப் பட்ட தர்ப்பைகளோடு எங்கும் சாய்ந்துள்ள புனிதமாக்கும் ஒளியுடனான உன்னை அழைக்கிறோம்; நீயே மகானாகும். ஙூ. இன்று உஷா தேவியே! ஒளியுடனான நீ முன்னர் செய்தது போல் மகத்தான ஐசுவரியமடைய எங்களை எழுச் சியாக்கவும்; சுபமான ஜன்மமுள்ள பிரிய சத்தியான்மா வுள்ள வாயு மகனான எங்கள் சத்திய சிரவையில் சந்தோஷ மளிக்கும் உன் குதிரைகளோடு அனுக்கிரகிக்கவும்.

எங்களுக்கு மங்களமான மனத்தை அனுப்பவும். சுப மான சங்கற்ப லட்சணத்தை யனுப்பவும். மங்களமான ஆன்மபலத்தை அனுப்பவும். மங்களமான அறிவையும் அனுப்பவும். அப்பால் உன் நட்பிலே ரசத்தில் புற்களில் பசுக்களைப்போல் மனிதர்கள் சந்தோஷமுடனாகட்டும். உ. நீ மகானாகிறாய், அவன் சுபாவம்போல் செயலால் சீமானான பீமனான இந்திரன் பலத்தோடு வன்மையிலே

பெரும் 1 வளர்ச்சியுடனுகிருன். மகானுய், ஹனுமானுய், குதிரைகளுடனுன இந்திரன் தன் சேர்ந்த கைகளில் வச்ராயுதத்தை சம்பத்திற்காக பற்றிக்கொண்டிருக்கிருன். ௬. இந்திரன் விருப்பமளிக்கும் பசுக்களைக்காணும் ரதத்தில் ஏறுவான். இந்திரனே, எந்த ரதம் பொன் குதிரைகளை இணைப்பதான சோமனுல் பூர்ணமான பொருளை ஞாபகமாக்குகிறதோ அந்த ரதத்தில் உன் குதிரைகளை இணைக்கவும்.

௭. எவனை உக்தலட்சணமாய் நுரையோடான குதிரைகள் நிலயமாக எண்ணிச்செல்லுகின்றதோ, நித்தியமாய் ஓங்கி வளரும் 2 துரகங்கள் வீடாக எண்ணி, எவனை அடைகின்றதோ, பசுக்கூட்டங்கள் எவனை அணுகுகின்றதோ ஐசுவரியவனுன அந்த அக்னியை துதிசெய்கிறேன். ௮. சத்துருக்களுக்கப்பால் ஒருமையுடன் நீக்கும் அர்யமான் மித்திரன் வருணன் எவனை முன் செலுத்துகிருனே, தேவர்களே! அந்த மனிதனை எந்த கஷ்டமும் அணுகுவதில்லை.

---

## கண்டம் ௨௫.

**தேவதை—௧ - ௬, ௧௦, பவமானன். ௭ - மருத்துக்கள். ௮ - அக்னி, ௯ - வாஜினன் - ரிஷி - ௧ - ௬, நுணன் - திரஸதஸ்யுனன், ௭-வசிஷ்டன். ௮. வாமதேவன் ௯ - வாஜிஹம் ஸ்துதி ௧௦ - ஐசுவர்யோதிநுஷ்ணயன்.**

௧. சோமனே! இனிமையான நீ இந்திரனுக்கு, பூஷணனுக்கு, பகனுக்கு எங்கும் பெருகவும். ௨. விருத்திரர்களை கொன்றுகொண்டு யுத்தத்திற்கு சஹனசீலமான நீ, செல்லவும். எங்கள் கடனைக் கழிக்கும் நீ சத்துருக்களை சிதைக்கத்துரிதமாய் செல்லுகிருய். ௩. சோமனே! மகத்தாய்

---

1 அவன் வன்மை அறிவிலே நாம் வளர்ச்சியுடனுகிறேம்.
2 குதிரைகள், புலன்கள்.

சமுத்திரமாய் தேவர்களின் தந்தையாய் எல்லா சரீரங்களை யும் நோக்கிப் பெருகவும்.

௪. சோமனே! குதிரையைப்போல் நனைந்தவனாய் வேகமுடனான நீ மகத்தான பலத்திற்கு, ஐசுவரியத்திற்கு ஓடவும். ரு. கல்யாண வடிவமான காந்தப்பிரக்ஞனான சோமன் சலத்தின் ஆகாசத்தில் இன்பத்திற்கு ஐசுவரியத் திற்குச் செல்லுகிறான். சு. போரிலே பெரும் பெருமையுட னாக, சோமனே! அமிழ்த்தப்பட்ட உன்னில் நாங்கள் ஆனந்தமுடனாகிறோம். புனிதமானவனே! பெருஞ்செயல் களில் நீ நுழைகிறாய். எ. காந்திகளுடன் நெருக்கமாயுள்ள மனிதர்களாலும், ருத்திரனின் சுபமான வாகனங்களுடன் ஹிதமான ருத்திரனின் வீரர்களோடுள்ள இவர்கள் யார்? குதிரையைப்போல் எடுத்துச் செல்லுபவனாய் கர்த் தாவைப்போல் உபகாரஞ்செய்பவனாய் ஒளியுடனாய் இருதய மனுகும் அக்னியே! இப்பொழுது இந்த ஊஹகானங் களால், துதி செய்கிறோம். அ. பலமுடனான மனிதர்கள் தேவரின் சவிதாவின் சிறப்பான சக்தியை பிரகாசமாய் காட்சியாக்கி அடைய வந்துளார்கள். [1] குதிரை ஜயிப்பவர் களே! சுவர்கத்தை ஜயிக்கவும், சோமனே காந்தியுள்ள வனே, சோமதாரையோடு பழையவனான பெருமையுடனான நீ முடி அல்லது [2] ரோம வடி வழியாய் பெருகவும்.

---

1 போரில் ஜயமடைபவன் சுவர்கத்தை ஜயிப்பான்.

2 உணர்வு வழியாய்.

## கண்டம் சகூ.

**தேவதை—கூடு, அ - கo - இந்திரன்: கூ. விசுவதேவர் கள், எ - உஷை. ரிஷி - ௩ திரதஸ்யுனன். எ ஸம்பாதன்.**

க. எங்கிருந்தும் அளிப்பவனே! எல்லாப் பக்கங்களிலிருந்தும் எங்களுக்குக் கொண்டுவரவும். அதிசய பலமுள்ளவனாக உன்னை யாசிக்கிறேன். ருதுக்களில் சரியான சமயங்களில் வருபவனான இந்திரன் பெயர் போனவனை இந்த பிரமன் (னை) துதிக்கிறேன். விருத்திரனைக் கொல்ல பிராமணர்கள் தோத்திரங்களால்இந்திரனை பூஜித்து அவன் பலத்தைப் பெருக்குகிறார்கள். ச. அனவர்கள்—மனிதர்கள்-உன்னுடைய குதிரைக்கு ரதத்தைச் செய்வார்கள். அதிகம் அழைக்கப்படுபவனே! துவஷ்டா விசுவகர்மன்-உன் வச்சிராயுதத்தை ஒளியுடனாக்குகிறான். ஐசுவரியத்தை விரும்பும் சனங்கள் சுகமான ஸ்தானத்தையும் செல்வத்தையும் மடைகிறார்கள். [1] விரதமற்றவர்கள் அடைவதில்லை; தாமும் விருப்பமான ஐசுவரியத்தைப் பரிசிப்பதில்லை.

கூ. பசுக்கள் தோத்திரஞ் செய்பவர்கள் சதாகாலமும் புனிதமானவர்கள்; சகலத்தையும் தரிக்கிறார்கள். தேவர்கள் சதாகாலம் பாவம் பிரிந்தவர்கள். எ. உஷையே! உன் தேஜசுகளோடுகூட வரவும். ஸ்தனங்களோடான (சக்திகளோடான) பசுக்கள் உன் மார்க்கத்தை அனுசரிக்கின்றன. அ. இந்திரனே! மாதுரியமான நிலயத்தில் உன் அருகிலுள்ள நாங்கள் ஐசுவரியத்தைப்போஷிப்போம்; உன்னை தியானஞ் செய்வோம். கூ. சுபமான துதிகளுடனை மருத்துக்கள் அர்ச்சனீயமான இந்திரனை துதிசெய்கிறார்கள். நித்திய [2] யௌவன பெயர்போன இந்திரன் திட

---

1 சங்கற்பமற்றவர்கள் 2 நிலையான.

துதி செய்கிறான். ய. மேதாவிகளே! விருத்திரனைக் கொல்லும் உங்கள் இந்திரனுக்குக் கானஞ்செய்யவும். அவன் ஆமோதிக்கும் கானத்தை கானஞ் செய்யவும்.

---

## கண்டம் சஎ

தேவதை—க. உ. அக்னி ந., ச., அ, ய - இந்திரன், ரு - உஷை - சூ, எ, கூ - விசுவேதேவர்கள். ரிஷி - க - ஸம்பாதன், உ - பந்து, ந, ச, பந்து, சுபந்து விப்ரபந்து. ரு - ஸம்பர்த்தன், சூ - பௌவனஆத்தன். எ - கவஷஐலூஷன், அ - பரத்வாஜன். கூ - ஆத்ரேயன். ய - வசிஷ்டன்.

க. ஹவிஷுக்களை எடுத்துச்செல்லும் சிறந்த அறிஞுன ரதமுடனுன அக்னி சேதனமாகிறான், விழித்துளான். உ. அக்னியே! பஜிக்கத் தகுந்தவனுன நீ விடுதலையாக்குபவனுகவும்; இன்னம் ரட்சகன், மங்கள மளிப்பவனுகவும். ந. மகத்துக்களின் நடுவே பூஜனீய [1] பகனைப்போல், ரத்தினத்தை அளிக்கிறான். ச. தூரத்திலோ அல்லது இப்பொழுதோ என் முன்னராகி, சத்துரு ஒழிவதற்கான, சர்வத்தில் உன் கர்ச்சனையை கோஷிக்கவும். ரு. உஷை (தன்) சகோதரியின் இருளான மூட்டத்தை துரத்துகிறாள்; தன் சொந்த சோதியால் அவள் வழியை அடையச் செய்கிறாள்.

சூ. இந்திரன் விசுவேதேவன் உதவியோடு இந்த உலகங்களை துரிதமாக வசீகரஞ் செய்வோம். எ. இந்திரனே! உன்னிடமிருந்து ராஜபாதையிலே தானங்கள் பெருகட்டும். அ. இந்தத்துதியால் தேவஹிதமான பலத்தை, திடத்தை நாங்கள் அடையலாமோ? நூறுகுளிர்

---

1 ஐசுவரிய நிலையனை.

காலங்கள் வீரமக்கட்களுடன் மகிழ்ச்சியுடனிருக்கலாமோ?
௯. இந்திரனே! மித்திரன் வருணன் பலத்தோடு உணவு முதலிய ஐசுவரியங்களை எங்களுக்கு அளிக்கட்டும்; கொழுத்த குணத்தை செல்வத்தை எங்களுக்குச் செய்வாயோ!

௰. இந்திரன் எல்லா உலகத்தின் இராஜா வாகிறுன்.

## கண்டம் ௪அ

தேவதை க,ங,௪, க௦. இந்திரன். உ சூரியன். ரு-விசேுவ தேவர்கள். ௬ - மருத்துக்கள். எ-பவமானன். அ - ஸவிதா ௯ - அக்னி. ரிஷி - க, க௦, கிருத்ஸமதன். உ - கௌராங்கிரஸன். ங, ரு, ௬ - பருச்சேபன். ௪ - ரேபர்கள். ௬ - ஏயாமருத்து. எ - அனுனத பாருச்சேபினன். அ - நதுலன்.

மகானும் பலமுள்ளவனும் திரிகதுரகங்களில் யவ அரிசி ரசத்தை அனுபவிக்கிறுன். அவன் வழக்கம் போல் சோமனைப் பருகுகிறுன். மகத்தான செயல் செய்ய அந்த சோமன் மகா விஸ்தாரமான இந்திரனை இன்பமுடனுக்குகிறுன். தேவர் திவ்யனை அடைகிறுர். சத்திய இந்துவானவன் சத்தியமான இந்திரனை அடைகிறுன். உ. ஆயிரமான மனிதர்களுக்குக் காண்பவன்; கவிகளின் அறிவாகும்; சட்டமாகும், சோதியாகும், இந்த மகானுன சூரியன் சுத்த நிர்மலமான இருள் நீங்கிய சமான சித்தமான உஷைகளை பிரேரணை செய்கிறுன். தினத்தில் சூரிய தேஜசால் கோபமூடனுனது போலுள்ள ஒளிகளுடனுன (சந்திரன்) ஒன்றுகிறுன், தேசசன்னியிலாகிறுன்.

ங. இந்திரனே! தூரமான இடத்தினின்று எங்களிடம் வரவும். யக்ஞத்கின் ராஜாவைப்போல் வீரர்களின்

1 மூன்று உலகங்களில்.

பதியான நீ வில்லுடனான அரசனுக்குச் சமானமாய் எங்களிடம் வரவும். பிள்ளைகள் பிதாவை பொருளை அடைய நாடுவது போல ஹவிஷுகளுடன் ஐசுவரிய மடைய நல்ல செயல்களில் மேன்மையான உன்னை நாடி அழைக்கிறோம். ச. ஐசுவரியனையும், உக்கிரமாயும், சத்தியனையும் அதிக மளிப்பவனையும் ஜயிக்கப்படாதவனையு முள்ள இந்திரனை அழைக்கிறேன். பூஜிக்கருகனையும், மந்திரங்களால் யக்ஞத்திற்கு அருகதையான இந்திரன் ஸ்மரிக்கப்படுபவன்; வரப்படுபவன்: வச்சிராயுதனான இந்திரன் ஐசுவரியத்திற்கு நல்ல வழியை செய்யட்டும்.

ரு. புத்தியால் முதன்மையாய் அக்னியை தரிக்கிறேன். அவன் பலமான திவ்யத்தை துரிதமாய் அழைக்கிறோம். இந்திரனை வாயுவை அழைக்கிறோம். [1] விவஸ்வனின் நடுவில் இணையுங்கால் ஐசுவரியஞ் செய்வீர்கள். துதி கேட்பதாகட்டும். அப்பால் எங்கள் துதிகள் தேவர்களுக்குப் போல் முன் செல்லுகின்றன. சு. மகத்தாய் மருத்துக்களுடன் தொடரும் விஷ்ணுவிற்கு கானத்தில் பிறந்த எங்கள் அறிவுகள் துதிகள் [2] ஏவயாமருதனே! செல்லட்டும்; பலமுடனான மருத்திற்கு வன்மையுடன் சோபன ஆபரணங்களுடனான, மங்கள நிலயனுக்கு எதையும் செய்யும் பலவானுக்கு துதிகள் செல்லட்டும்.

எ. புனிதன் பொன்மய ஒளியுடனான தாரையால் எல்லா துவேஷிகளையும் சூரியன் இருளை ஒழிப்பது போல் அடக்குகிற ரச தாரையோடு தன்னைப் புனிதஞ் செய்து கொண்டு, துதி செய்பவர்களோடு எல்லா ரூபங்களையும் அவன் சூழுங்கால், ஏழு ருசி காணும் சாதனர்களான துதி செய்பவர்களோடு அவன் பொன்னையும் சிகப்பாயும் ஒளிவீசு

1 மேன்மையான மனிதரின்.

2 முதன்மையானப் பிராணனே.

கிறான். அ. இராஜ்ய அறிஞனை சத்திய சக்தி யுள்ளவனை ஐசுவரிய மளிப்பவனை அனைவருக்கும் பிரியமுடனவன் வானம் பூமியை புலனக்குபவனுய், மேன்மையான ஒளியுள்ளவனுய், சிருட்டியிலே அதி சோதி வீசுபவனுய் அறிவுடன் பொன்கையுடன் தன் சுந்தரத்தால் கிருபையால் சுவர்கத்தைச் செய்யும் வானம் பூமியின் பிரேரிப்பவனை தேவரை அர்ச்சனை செய்கிறேன்.

கூ. அதி ஐசுவரிய மளிப்பவனுய் பலத்தின் மகனுய் மேதாவியைப் போல் ஜாதவேதஸனுய் ஆனந்தமளிக்கும் அக்னியை சுவீகாரஞ் செய்கிறேன். சுவாலையால் சுபமான யக்ஞத் தலைவனுய் தேவரை நோக்கும் சாமர்த்தியத்துடன் அதி ஒளியுடனை சர்வ வியாபியான ஆகுதி செய்த நெய் போல் விளங்கும் பெருஞ் சோதியை சுவீகாரஞ்செய்கிறேன். ய. நடிப்பவனை தலைவனை இந்திரன் ஹிதஞ் செய்பவன், முதல்வன். பூர்வகாலத்திலான உன் செயல்கள் தேவர்களால் சந்தோஷமுடன் சொல்லத்தகுந்தது. தேவர்களுடைய பலத்தோடு அசுரர்களின் பிராணனை இம்சித்து சலத்தைப் பிரேரிக்கவும். அவன் [1] வியாப்தன். [2] தமோ வடிவமான அசுரனைக் கொல்லட்டும். இந்திரன் பலத்தை யும் பொருளையும் (உணவை) கொடுக்கட்டும்.

---

## கண்டம் சுகூ

**தேவதை - பவமானன். ரிஷி. க - ச அமஹீயு. உ - மதுச்சந்தர்கள். ங - பிருதுவாருணி. ரு - திரிதன். சு - கசியபன். எ - ஜமதக்னி, அ - திருடச்யுத ஆகஸ்த்யன். கூ, ய - கூ, கய - காசியபோசிதன்.**

சோமனே! உன் ரசத்தினுடைய ஜன்மம் உயர்ந்ததாகும். சோதியுலகில் சிறந்தாலும் உக்கிரமான சுகத்தை

---

1 எங்கும் நிறைந்தவன். 2 இருள் ரூபமான.

யும், மகத்தான [1] சிரேயஸ்ஸையும் பூமியில் அடைந்துள்ளது. உ. சோமனே! இந்திரன் பருகுவதற்கு அமிழ்த்தப்படுபவனே! இனிமையான உருசியுடன் அதிசய ஆனந்த தாரையால் பெருகவும். ந. சோமனே! நீ உன் சகல பலத்தால் ஐசுவரியங்களை யெல்லாம் ஜயித்துக் கொண்டு மருத்தின் தலைவனான இந்திரனுக்கு மகிழ்ச்சியளித்து வர்ஷிக்கும் தாரையோடு நீ பெருகவும். ச. அரக்கர்களை ஒழித்து தேவர்களுக்குப் பிரியமாய் சந்தோஷமளிக்கும் சிறப்புடனான உன்னுடைய ரசத்தோடு சோமனே! நீ பெருகவும். ரு. மூன்று [2] மொழிகள் மொழியப்பட்டன; பசுக்களும் கன்றுகளும் கதறுகின்றன. பசுமை நிறமுள்ளவனும் சப்தஞ் செய்கிறான். சு. சோமனே! மது நிறைந்து யக்ஞத்தின் ஸ்தானத்தை சுற்றப்பட்ட மருத்துக்களுடனான இந்திரனுக்காகப் பெருகவும். எ. மலையில் மலர்ந்த சோமன் சந்தோஷத்திற்காக நீர்த்தாரைகளில் அமிழ்த்தப்பட்டுள்ளான். கருடனைப் போல் அவன் தன் நிலயத்தில் நிலையாகிறான். அ. பொன்மய சோமனே! துரித சாதனமுடன் இன்பமளிக்கும் நீ தேவர்கள் பருக, மருத்துக்கள் குடிக்க, வாயுவும் பானஞ் செய்ய பெருகவும். கூ. அமிழ்த்தப்படுபவனான சோமன் மலையிலே வசிக்கும் அவன் புனிதத்தில் பெருகுகிறான். [3] சந்தோஷங்களில் நீ அளிப்பவனாகிறாய். ώ. ஞானமளிக்கும் சோமன் வானம் பூமியின் நடுவே வைக்கப்பட்டால் சோதியுலகத்தின் பிரியமான பலத்தை சப்தங்களால், ஆப்த மொழிகளால் அளிக்கிறான்.

---

1 சிறப்பையும். 2 மூன்று வேதங்கள். 3 சந்தோஷ சனங்களில்.

# கண்டம் ௫௦

**தேவதை - பவமானன். ரிஷி - க - கவிர் மேதாவி. உ - சியாவாசுவன். ௩ - திரிதன். ௪, ௮ - அமஹீயு. ௫ - பிருகு. ௬ - காசியபன். எ. நித்ருவி காசியபன். ௯, ௰ - காசியபோஸிதன்.**

க. ஐசுவரியத்திற்கு அமிழ்த்தப்படுபவர்களாய் சந்தோஷமளிக்கும் சோமர்கள் எங்கள் சம்பந்தமான யக்ஞத்தில் கீர்த்திக்காகப் பெருகுகிறார்கள். உ. மேதாவிகளான சோமர்கள் வனங்களின் எருமைகளைப் போல் சலங்களை எடுத்துச் செல்லும் அலைகளை முன் எடுத்துச் செல்லுகிறார்கள். ௩. இந்துவே! நீ பலமுடனான ரசமாகும், நீ பெருகவும்; சனங்களின் நடுவே எங்களைக் கீர்த்தியுள்ளவர்களாய்ச் செய்யவும். சகலமான துவேஷிகளைத் தொலைக்கவும்; ௪. சோமனே! நீ விருப்பங்களை வர்ஷிப்பவனாயிருக்கிறாய், பவமானனே; அனைத்தையும் பார்ப்பவனாய் தேசசினால் அதிக ஒளியுள்ள உன்னை அழைக்கிறோம். ௫. சேதனமாய் தேவர்களுக்குப் பிரியமளிப்பவனான கவிகளின் கருத்தான சோமன் குதிரைகளைக் கிளப்பும் சாரதியைப் போல் பெருகுகிறான்.

௬. பலம் வேகமுடனான வெண்மையுடனான சோமர்கள் பசு குதிரை வீரர்களின் விருப்பத்தால் புலனாக்கப்படுகிறார்கள். எ. மனிதனை பிரேரித்துக்கொண்டு தேவரே! பெருகவும்; உன் இன்பமளிக்கும் ரசம் இந்திரனை நோக்கிச் செல்லட்டும். ௮. வாயுவிற்கு தர்மத்தினால் எழுச்சியாகவும், சுவர்கத்தினின்று விசித்திரமான இடி முழக்கத்தைப்போல் வைசுவாநரத்தின் பெரிய ஒளியை உண்டாக்குகிறான். ௯. அமிழ்த்தப்பட்ட சோமர்கள் பெரிய கானங்களால் மதுவான

தாரையோடு தேவர்களின் சந்தோஷத்திற்கு பெருகுகிறார்கள். ய. மேதாவியானவன் நதியின் அலைகளில் சாய்ந்து பலர்களால் விரும்பும் துதிசெய்பவர்களைத் தரித்தவனாய் எங்கும் சுற்றிப் பெருகுகிறான்.

---

## கண்டம் ரு௧

**தேவதை - பவமானன். க, அ, கூ, அமஹீயு - உ - பிருஹன்மதி அங்கிரசன். ௩ - காசியபோஸிதன். ச - பிரபூவசு. ரு - மேத்யாதிதி. சு, எ - நித்ருவிகாசீயபன். ய - உவத்தியன்.**

க. நன்றாய்ப் பிறந்து துரிதமாய் சத்துருக்களுக்குப் பங்கஞ் செய்யும் பால்களால் அலங்காரமான இந்துவிற்கு தேவர்கள் வந்துள்ளார்கள். உ. எதையுங் காணும் சோமன் சகலமான சத்துருக்களை ஆக்ரமித்துள்ளான்; மேதாவியை செயல்களால் அலங்கரிக்கிறார்கள். ௩. சோமன் சகலமான சம்பத்துக்களையும் பெருக்கிக்கொண்டு கலசத்திலே நுழைகிறான். இந்து இந்திரனுக்கு அளிக்கப்படுகிறது. ச. இரு சைன்யங்களின் பலகைகளினின்று அல்லது வானம் பூமியினின்று ரதத்தின் குதிரையைப் போல புனிதத்திற்கு ரசமானது, (சோமனான மன்னன்) செல்லுகிறான். துரிதமான குதிரை யுத்தத்தில் முன் செல்லுகின்றது. ரு. வேகமாய் சோதியாய் களைப்பில்லாதவர்களாய் பசுக்களைப் போல் கருமையான காயத்தைத் துரத்திக்கொண்டு அவர்கள் கைப்பற்றுகிறார்கள். சு. சோமனே! சந்தோஷமளிப்பவனே! சத்துருக்களைச் சிதைத்துக்கொண்டு எங்களுக்கு அறிவையுமளித்து நீ பெருகுகிறாய். எ. அரக்கர்களைத் துரத்தவும். மனிதர்களுக்கு ஹிதமான சலத்தைத் துரிதமாக்கி சூரியனுக்கு சோதியளிக்கும் தாரையோடு நீ பெருகவும். அ.

மகத்தான வெள்ளத்தைத் தடுத்த விருத்திரனைக் கொல்ல பலத்தை அளித்த நீ பெருகவும். கூ. உன் சந்தோஷத்தில் அகவி மேகங்களைக் கொன்ற இந்திரன் இந்த ரசத்தோடு புசிக்க நீ பெருகவும். ய. ரசத்தால் பலத்தைக் கொண்டு வரும் ஐசுவரியமளிக்கும் சோதியான சேனைகளை அழைத்து வருபவனாய் அமிழ்த்தப்படும் நீ புனிதப் பொருளில் பெருகவும்.

---

## கண்டம் ருஉ

**தேவதை - பவமானன், ரிஷி. மேத்யாதிதி உ, எ - பிருது ந - உவத்தியன் - ச அவத்ஸாரன். - ரு, சு - நித்ருவிகா சியபன் அ, கூ - காசியபன் மாரீசன். ய - அசிதன், கக - கவி. கஉ - ஜமதக்னி. கந - அயாஸ்ய ஆங்கிரஸன். - கச - அமஹீயு.**

க. விருப்பங்களை வர்ஷித்து பொன் நிறமாய் பெரியவனாய் [1] மித்திரனைப்போல் அழகாயுள்ளவன் சத்தஞ் செய்வான். உ. அவன் சூரியனோடு பிரகாசிக்கிறான். சுகத்தையளிப்பவனாய் ஐசுவரிய மளிப்பவனாய் ரட்சகனாய் அனைவராலும் விரும்பப்படும் உன் பலத்தை இன்று அழைக்கிறோம். ந. அத்வர்யுவே! கனப் பொருள்களால், மேகங்களால் அமிழ்த்தப்பட்ட ரசத்தை புனிதத்திலே அழைத்துச் செல்லவும். இந்திரன் பருக புனித மாக்கவும். ச. சந்தோஷமளிக்கும் சோமன் துரிதமாய்ப் பாய்கிறான். தாரையான இந்த சோமரசம், இன்பமளிப்பவன்; துரிதமாய்ப் பாய்ந்தோடுகிறான். ரு. சோமனே! ஆயிரமாயிரமான சிறந்த வீரத்தையும் செல்வத்தையும் இங்கு பெருக்கவும்; சிறப்பை

---

1 நண்பனை

நிலையாக்கவும். சு. பழைய ரிஷிகள் சீவர்கள் புதிய நிலயத்திற்கு வந்துளார்கள். (அவர்கள்) சூரியனை சோதி வீசசனனஞ் செய்துளார்கள். எ. சோமனே! சிறந்த சோதியோடு கலசத்திற்கு சத்தஞ் செய்துகொண்டு வனங்களில் சலங்களில் நிலையாயிருந்துகொண்டு பெருகி ஓடவும். அ. சோமனே விருப்பங்களை யளிக்கும் நீ ஒளியுள்ளவனு யிருக்கிறாய். தேவரே! எதையுமளிப்பவனே! அளிக்கும் வன்மையுள்ளவனே! நீ தர்ம செயல்களை நிர்மாணஞ் செய்கிறாய். கூ. சோமனே! மனிதர்களால் சுத்தஞ் செய்யப்பட்ட நீ எங்களின் ஐசுவரியத்திற்குத் தாரையால் பெருகவும்; புனித சோதியால் பசுக்களை அணுகவும். ௰. சோமனே! விருப்பங்களை வர்ஷிப்பவனே! தேவர்களை விரும்புபவனே! எங்கள் நண்பனே! 1 ரோம வடி கட்டியிலே உற்சாகமளிக்கும் தாரையோடு பெருகவும். ௰க. சோமனே! இந்த சுபமான செயல்களால் நீ பெரியவனுயிருந்தும் அபிவிருத்தியை அடையப்பட்டுள்ளாய். ஆனந்தத்தில் நீ காளையைப் போல் கர்ச்சனை செய்கிறாய். ௰உ துரிதமானவனாய் பவமானனான சோமன் ஹிதஞ் செய்பவனாய் பெரிய சலத்திலுள்ளதை ஞான முதலியவற்றை தூண்டிக்கொண்டு எதையும் உணர்த்துகிறான். ௰ந. இந்துவே! எங்களின் மகத்தான ஐசுவரியத்திற்கு உன் அலைகளை தேவர்களுக்குத் தரித்துக்கொண்டு ஆயாசமன்னியில் நீ பெருகிக்கொண்டிருக்கிறாய். ௰ச. சத்துருக்களை சிரழித்துக்கொண்டு சத்தியம் பிரிந்தவர்களையும் தூரத்தினவராய் இந்திரன் நிலயத்திற்குச் செல்லுபவனாய் சோமன் பெருகுகிறான்.

---

1 வானத்தில்

## கண்டம் ருக

**தேவதை - பவமானன். ரிஷி க, கஉ - பரத்வாஜன் காசியபன் கோதமதோத்ரி விசுவமித்திரன் ஜமதக்னி, வசிஷ்டன்.**

க. சோமனே! சுத்தஞ் செய்பவனுய் சல உடையில் தாரையால் பாய்கிருய். ஐசுவரிய மளிக்கும் நீ சத்தியத்தின் நிலயத்திலே உட்கார்கிருய். தேவரே! நீ பொன்ஞல் செய்யப்பட்ட ஊற்றுகும். உ. பொழியப்பட்ட சோமனே என்மேல் தெளிக்கவும்; தேவர்களுக்கு நீ உத்தம 1 ஹவிஷாகும். அவன் மனிதர்களின் நண்பனுய் சல தாரையின் நடுவே ஓடுகிருன். கனத்தப் பொருள்களால் மேகங்களால் அவனே அமிழ்த்துகிருர்கள். ௩. சோமனே! 2 கற்களால் அமிழ்த்தப்பட்ட நீ 3 ஆட்டு ரோமங்கள் மூலமாய் தூண்டப்பட்டு, மனிதர்கள் கோட்டையைப் போல் பலகைகளே நுழைந்துக்கொண்டு பொன்நிறமுள்ளவன் கலசங்களில் நிலே யாகிருன். ச. சோமனே! மது துளி நிறையும் கலசத்தில், விழித்துள்ளவன் போல் 4 தண்டின் இனிய ரசத்தோடு நதியைப்போல் பல அலேகளோடு தேவர்கள் பருக செல்லுகிருய்.

ரு. 5 சாதனஞ் செய்பவர்களால் இந்திரியங்கள் வழியாய் சாதிக்கப்பட்டு செல்லுகின்ருன். குதிரையுடன் போல் பொன்நிறமுள்ளவன் இன்பமளிக்கும் தாரையோடு செல்லுகிருன். சூ. சோமனே! உன் நட்புடைய நான் தினந்தோறும் இரம்மியமுடனுகிறேன்: பொன் நிறமுள்ளவனே!

---

1 அளிப்பாகும். 2 வச்சிராயுதங்களால். 3 புனிதங்கள் மூலமாய். 4 சுஷும்ன நாடியின். 5 சூரியனின் ரசிமிகளால்.

வெகு பல சத்துருக்கள் என்னைத் தொடர்கிறார்கள். அந்த சத்துருக்களை அகற்றவும். எ. [1] சுந்தரமானகையுள்ளவனே! புனிதமானவுடன் சமுத்திரத்தில் உன் சப்தத்தை எழுச்சியாக்குகிறாய். மஞ்சளாயும் ஏராளமாயும் வெகுவிரும்பப்படும் ஐசுவர்யத்தைப் பெருகச்செய்கிறாய். அ. செல்லும் சுபாவமான சோமதுளிகள் ஆகாசத்தின் அதி உத்தம நிலயத்தில் ஓடுங்கால் இனிமை நிறைந்து மனோமயமானவன் இன்பமளித்து சந்தோஷமளிப்பவன் பெருகுகிறான்.

கூ. சோமனே! நீ புனிதமாக்கப்படுங்கால் சூரிய ரசிமிகளால் விழிப்புள்ளவனாய் பிரியமாய் மேதாவியாகி அங்கிரசனுக்குச் சமானமா யாகிறாய். எங்கள் யக்ஞத்தை மதுவான யக்ஞத்தால் தெளிக்கவும். ௰. இன்பமளிக்கும் பொழியப்பட்ட சோமன் மருத்துக்களோடு இந்திரனுக்குப் பாய்கிறான். ஆயிரம் தாரைகளோடு சூரியகிரணத்தை வழிந்து பாய்கிறான். அவனை மனிதர்கள் சுத்தஞ் செய்கிறார்கள். ௰க, சோமனே சர்வமான அளிப்பிற்கு அதிசய வன்மையை ஜயிப்பவனான நீ பெருகவும். தேவர்களுக்கு சந்தோஷ மளிப்பவன். நீ விசேஷ போஷகன். சிறந்த யக்ஞத்தில் சமுத்திரமாகும். ௰உ. மேதைக்கு மகிழ்ச்சிக்கு பவமானர்கள் தாரைகளோடு மருத்துக்களோடு சந்தோஷ மளிக்கும் குதிரைகளான இந்திரவன்மையுடன் புனிதத்தில் வழிந் தோடுகிறார்கள்.

---

1 சுந்தர ஆயுத முள்ளவனே.

## கண்டம் ருச

தேவதை - பவமானன். க, கூ - உசனகாவ்யன். உ - விருஷகண வாசிஷ்டன் ரு, எ பாசார - சாக்த்யன். ச, சு - வசிஷ்ட மைத்ரா வருணன் - ரு, கO - பிரதர்தன தைவோ தாசினன் அ, பிரஸ் கண்வன் காண்வன்.

க. சோமனே! [1] கலசத்திற்குத் துரிதமாய் ஓடவும். நீ வியாப்தமாகவும்; மனிதர்களால் புனித மாக்கப்பட்டு போர்க்குத் துரிதமாகவும். பலமுள்ள குதிரையைப்போல் உன்னைப் புனிதஞ் செய்து யக்ஞத்திற்கு [2] கைகளால் கடிவாளங்களுடன் அழைத்துச் செல்லுகிறார்கள். உ. [3] உசனர் காவ்யத்தை விளக்குவது போல் தேவர் திவ்யமானவர்களின் சன்ம சரிதைகளைச் சொல்லுகிறார். மகத்தான செயல்களைச் செய்பவன் சுபமான பந்துவோடு புனிதஞ் செய்துகொண்டு வராகன் (பன்றி-சோமன்) சப்தித்துக் கொண்டு பொருள்களைப் பாதத்தால் முழங்கிக்கொண்டு முன் செல்லுகிறான். ரு. யக்ஞ கர்த்தா, ஆதித்தியன் [4] மூன்று மொழிகளைச் சொல்லுகிறார். சத்தியத்தின் சோதியையும் பிரமத்தின் மனத்தையும் அவர் சொல்லுகிறார். கோபதியை பசுக்கள் வினவிக்கொண்டு செல்லுகின்றன; விருப்பத்துடன் துதி செய்பவர்கள் சோமனுக்குச் செல்லுகிறார்கள். ச. மனிதன் தூண்டுதலினால், பிரேரணையால் புனிதமாக்கப்பட்டு தேவரசம் தேவர்களோடு நன்றாய் தோய்கிறார்கள்; பொழியப்பட்டு கானஞ் செய்துகொண்டு புனிதப் பொருளில் பசுக்களுள்ள நிலயத்திற்கு ஹோதா செல்லுவதுபோல் போகிறான். ரு. புத்தி

---

1 தேகத்திற்கு 2 உன்னை நாடுபவர்கள் 3 அறிஞன்.
4 மூன்று வேதங்களை

யின் தந்தை, சோதி, சகத்தின் பிதா, அக்னியின் அப்பன், சூரியனை சனிக்கச் செய்பவனாய், இந்திரன் விஷ்ணுவைத் தோற்றுவிக்கும் சோமன் பெருகுகிறான். சு. [1] மூன்று சிகர விருஷபன், வன்மையளிப்பவன், துதிக்கப்படுபவனை துதிவடிவ மொழிகள் சப்திக்கின்றன. வனத்தில் வசிக்கும் வருணனைப்போல் ஐசுவரியமளிக்கும் நதியைப்போல் நன்மைகளை எல்லாம் சோமன் அளிக்கிறான். எ. சமுத்திரமானவன் சகத்தின் காப்பவன் பிரசைகளை சன்மஞ் செய்து கொண்டு உத்தமமான ஆகாசத்தில் எதையும் [2] ஆக்ரமிக்கிறான்; விருப்பங்களை வர்ஷிப்பவன் புனிதத்தில் நாசமற்ற உற்சாக உச்சியில் பொழியப்படும் கனத்த பெரிய சோமன் வன்மையுடனாகிறான். அ. வனத்தினுடைய, சனத்தினுடைய வயிற்றிலே, பாத்திரத்திலே, புனிதஞ்செய்யுங்கால், நிலையாகும்பொழுது ஹரியானவன் கர்ச்சனை செய்கிறான். மனிதர்களால் சேர்க்கப்பட்டு பாலை-மொழியை தரித்து சுத்தமான ஆன்ம சொரூபத்தை செய்கிறான். மனனீய துதியை அளிப்புக்களோடு உண்டாக்குகிறான். கூ. இந்திரனே! [3] வர்ஷிக்கும் உன்னுடைய இந்த சோமன் மது நிறைந்தவன். வன்மையுள்ளவனின் புனிதத்தில்பெருகுகிறான். ஆயிரமாய் நூற்றுக்கணக்காய் ஐசுவரியமளிப்பவன் தாராளனுமான பலமுள்ள சோமன் [4] சாசுவதமாய் சிறந்ததான யக்ஞத்தை அடைகிறான். ய. சோமனே! மது நிறைந்தவனே! சலத்தில் மூடப்பட்டவனாய் உச்சியான சூரிய ரசிமியிலே பெருகவும்; இன்பமளிப்பவன் சோதிமயமான [5] கலசங்களில் இந்திரனுக்கு மகிழ்ச்சியளிக்கும் பானமாய் நிலையாகவும்.

---

1 மூன்று குணஙகளின் தலைவன் 2 கவர்கிறான் வியாபகமாகிறான். 3 பொழியும் 4 நித்தியமான 5 சரீரங்களில்

## கண்டம் ருரு.

தேவதை, பவமானன், ரிஷி க - பிரதர்தனன், உ. கO. பராசர சாக்தியன். ௩ இந்திர பிரமதிர்வாசிஷ்டன். ௪ - வசிஷ்ட மைத்ரவருணன். ரு - மிருடீகோ வாசிஷ்டன். ௬ - நோதா கௌதமன். ௭ - கண்வ கௌரன் அ - மன்யுவா சிஷ்டன். ௯ - குத்ஸ ஆங்கிரசன். ௰க - கசியபன் மாரீசன். ௰உ - பிரஸ்கண்வ காண்வன்.

க. சேனாதிபதி சூரனான சோமன் ஜயம் தேடிக் கொண்டு ரதத்தின் முன்பக்கம் சந்தோஷமுடன் (சண்டைக்குச்) செல்லுகிறான்; அவன் சேனை சந்தோஷமுடனிருக்கின்றது. நண்பர்களுக்காக இந்திரனின் அழைப்பை சுபமாய் செய்துகொண்டு பலமுடனான உடையைகொடுக்கிறான். உ. எல்லா இனிமைகளோடும் உன் தாரைகள் ஊற்றப்படுகின்றன. புனிதமாகுங்கால் [1] ரோமவடிகட்டி வழியாய் செல்லுகிறாய்; ௩. பவமானனே! பசுக்களின் நிலயத்தில் பால் உடை தரித்து நீ பெருகுகிறாய்; சனனஞ்செய்து பூஜிக்கத்தகுந்த உன் தேசசால் சூரியனை பூர்ணமாக்குகிறாய்.

௩. சோமனை கானஞ் செய்யவும்; தேவர்களை [2] பூஜிப்போம்; மகத்தான ஐசுவரியத்தின் பொருட்டு அழைப்போம்; மதுரமான சோமன் [3] கம்பள வழிகட்டி வழியாய் அதிகமாய் பெருகட்டும். தேவனான சோமன் கலசத்தில் நிலைக்கட்டும். ௪. பிரேரிக்கப்பட்டு, வானம் பூமியின் தந்தையானவன் ஐசுவரியம் சேர்க்க ரதத்தைப்போல் இந்திரனை நாடி, தன் ஆயுதங்களைக் கூர்மையாக்கிக்கொண்டு, எல்லாப் பொருளும் கைகளில் உள்ளவனாய் முன் செல்லுகிறான். ரு. மூத்தவனின் தர்மத்தின் யக்ஞத்தில் வானம் பூமியின்

---

1 வானத்தின் வழியாய். 2 நாடுவோம். 3 புனிதத்தின் வழியாய்.

முன்னிலையில் சுந்தர செயலுடனான விருப்பமுள்ள மனத்தின் மொழியானது அவனை உண்டாக்குங்கால் நன்றாய் அழைக்கப்பட்டு விரும்பப்படும் கலசத்தின் தலைவனான இந்துவிற்கு பசுக்கள் சப்திக்கொண்டு (விரும்பிக்கொண்டு) வருகின்றன.

சு. தீரனின் எண்ணங்கள், பத்து சகோதரிகள் (போல்) ஞானத்தைப் பொழிந்துகொண்டு அவனைத் துதி செய்கின்றன. சூரியனின் பொன் வடிவமான குழந்தை இங்கு ஓடி வருகிறான்: வீரமுள்ள குதிரை போல் பொன் கலசத்தை வியாப்தமாகிறான். எ. குதிரையைப் போல் சுபமுள்ளவர்கள் அவனில் முயலுங்கால் சனங்கள் சூரிய ஒளிக்கு துதிகள் புத்திகள் போட்டிபோடுகின்றன. பசுக்கள் அபிவிருத்தியாகும் நிலயம் போல் கவியானவன் சலத்தில் சாய்ந்துகொண்டு பெருகுகிறான். அ. பலமுள்ள சோமன் பாலில் நன்றாய் நனைந்துகொண்டு இந்திரனுக்காகவும் இன்பத்திற்காகவும் பலத்தைத் தூண்டிக்கொண்டு பெருகுகிறான்; சத்துருக்களை அழித்து பகைவர்களைப் பாழாக்குகிறான். விரும்பும் ஐசுவரியத்தை அளிக்கும் பலத்தின் ராஜாவான சோமன் சத்துருக்களை நாசஞ் செய்கிறான்.

கூ. இந்தப் புனித தாரையால் இந்த ஐசுவரியங்களை அளிக்கவும்; இந்துவே [1] மஞ்சள் ஏரியிலே ஓடவும்; சோதியாய் வாயுவைப் போல் வேகமுள்ளவனாய் அறிவு நிறைந்தவன், துரிதமாய் வருபவனுக்கு நாயகனை அல்லது மகனை அளிப்பான். ய. சலத்தின் மகன் (சோமன்) தேவர்களை நிலையாக்குங்கால் மகா பூஜ்யனான சோமன் மகத்தான செயலை செய்கிறான். பவமானனான அவன் இந்திரனுக்கு பலத்தை அளிக்கிறான்; இந்து சூரியனில் சோதியை செய்கிறான்.

1 மானசரோவரத்தில்.

ரு. வாசா மகோசரமாயுள்ள சோமன் விஜயத்திற்குச் செல்லும் ரதத்தைப் போல் முதன்மையாய் பேசி தூண்டுபவன். கானத்தால் புலனுக்கப்படுகிறான்! பத்து சகோதரிகள் யக்ஞ கிருகஹங்களில் கம்பளமான உச்சியிலே குதிரையை ஆன்மாவை அலங்கரிக்கிறார்கள். ௰உ. அலைகளின் சலத்தைப் போல துரிதமாகி மனதான துதிகள் சோமனுக்குச் செல்லுகிறார்கள்; அவர்கள் நமஸ்காரத்துடன் அருகில் ஒருமையுடன் செல்லுகிறார்கள். விரும்பிக்கொண்டு விரும்பும் சோமனை [1] நுழைகிறார்கள்.

---

## கண்டம் ௫ரு

**தேவதை - பவமானன்; ரிஷி - ஆந்திகு ச்யாவாச்வீ உ, ௩ - யயாதி நாஹுஷன். ச - மனு ஸாம்வரணன். ரு - அ - அம்பரீஷ ருஜிஸ்சுவானர்கள். கூ, எ - ருபசூனு காசியபர்கள். க - பிரஜாபதி காசியபன்.**

க. நண்பர்களே: உங்கள் முதன்மையான சோமனைப் பற்றவும், சந்தோஷமளிக்கும் பானத்திற்கு [2] நாயை நீண்ட நாக்கை துரத்தவும். உ. அவன் புனிதமாகும் பொழுது பூஷணாய் பகனாய் ஐசுவரியனாய் இந்த சோமன் வருகிறான்; சகத்தின் எல்லாப் பொருள்களின் தலைவனான சோமன் வானம் வையகத்தில் பிரகாசிக்கிறான். ௩. மது நிறைந்து இன்பமளிக்கும் அமிழ்த்தப்பட்ட சோமன் [3] வடிகட்டியிலிருக்கும் இந்திரனுக்கு ஓடட்டும்; இன்பமளிக்கும் ரசம் தேவர்களை அடையட்டும். ச. நண்பர்களைப் போல் அமிழ்த்தப்பட்டும் பாபம் பிரிந்து சுபமான தியானமான சர்வக்ஞனை அதிசய மார்கத்தை நீடிப்பவர்களான

---

1 அணுகுகிறார்கள். 2 நாக்கை உள்ளே செலுத்தி சோம பானம் பருகவும். [ஹ - யோகம்] 3 புனிதத்தில்.

சோமரசங்கள் எங்களுக்காக பெருகட்டும். ரு. சோதி யுள்ள சோமனே! அனைத்தையும் ஜயிப்பதில் சிறந்தோனே பலர்களால் விரும்பப்படும் ஐசுவரியங்களை அபிஷேகஞ் செய்யவும், ஆயிரம் பூஷணத்தோடு அதிசய கீர்த்தியுடன் மிகவும் தேஜசுள்ளவனே! சு. பசுக்கள் பூர்வத்தில் கன்றுகளை பிறந்தவுடன் நக்குவது போல் துரோக மன்னியிலுள்ளவர்கள் இந்திரனின் பிரியமான நண்பனுக்கு கானஞ்செய்கிறார்கள். எ. அனைவராலும் விரும்பப்படும் சோமனுக்கு ஆண்மைத் தனத்தை வளைக்கிறார்கள்; மேதாவிகளின் முன்னே பெரியோர்கள் வெண்மையான பாலை சுத்தஞ்செய்வதற்காக விசேஷமாய்ச் செல்லுகிறார்கள். அ. அனைவராலும் விரும்பப்படும் பொன்னிறத்துடன் மாநிறமாயுள்ளவனை [1] ரோமத்தால் புனிதஞ் செய்கிறார்கள்; எவன் ரசமுடனிருக்கிறானோ அவன் எல்லா தேவர்களிடத்திலும் செல்லுகிறான். கூ. சோமனுடைய ரசத்தை அமிழ்த்துபவனுக்கு பிரசித்தமான இந்த மொழியை மனிதனைப் போல் நாடட்டும்; [2] மக்களை [3] பிருகு புத்திரர்கள் துரத்தியதுபோல [4] சாதகமற்ற நாயைக் கொல்லவும்.

---

## கண்டம் ருஎ

தேவதை - பவமானன். ரிஷி, க, ங, ரு - கவிர்பார்கவன். ச - ரிஷிகணன். சு - ஸ்விகணன். எ - வேணு விசுவாமித்திரன். அ - வேனுபார்கவன். கூ - பாரத்வாஜவன். ய - வத்ஸன். கக - அத்ரிபௌமன். கஉ - பவித்ரா ஆங்கிரஸன்.

க. எவற்றில் இளைஞர்கள் அபிவிருத்தியடைகிறார்களோ, அந்தப் பிரிய நாமர்களுக்கு ஹிதமுள்ள எண்ண

---

1 வரனத்தால் 2 அசுரனை 3 சுரர்கள் 4 சுவாதீனமில்லாத நாய்போல் அடிமையா யுள்ளவனை

முள்ளவன் பெருகிக் கொண்டிருக்கிறான். எங்கும் செல்லும் மகத்தான சூரியனின் ரதத்திலே பெரியவனாய் எல்லாம் அறிபவன் ஏறுகிறான். உ. தன்னந் தானாகவே அமிழ்த்தப்பட்ட பொன்மயமான நம்முடைய சோம துளிகள் தேவர்களில் வெகு திடமுடன் பெருகட்டும். திவ்ய குணமற்ற எங்கள் சத்துருக்கள் உணவுடனிருந்த போதிலும் இல்லாமலாகட்டும். ஒழியட்டும்; எங்கள் தோத்திரங்கள் உத்தம பொருள்களை அளிக்கட்டும். ௩. இந்த அழகான சத்து நிறைந்தவன் இனிமையான ரசமுள்ளவன் இந்திரனின் வச்சிராயுதன் கலசத்தில் சப்தஞ் செய்கிறான். தாராளன். நெய் சொட்டிக்கொண்டு பால்களோடு கதறும் பசுக்களைப்போல் சத்தியத்தின் தாரைகள் அவனுக்குப் பாய்கின்றன. ச. சோமனானவன் இந்திரனுடைய நிலையான இடத்திற்கு புறப்பட்டு விட்டான்; நண்பன் வாக்குறுதியை, நிலயத்தை, நண்பனைப்போல் அலட்சியஞ் செய்வதில்லை. வனிதைகளோடு இளைஞனைப்போல் வருகிறான். நூறு வழிகளான மார்க்கங்களால் [1] கலசத்தை அடைகிறான். ரு. புனிதஞ் செய்பவனாய், ரசாத்மாவாய் தேவர்களின் திடனாய் மனிதர்களால் மகிழ்ச்சியோடு ஆமோதிக்கப்பட வேண்டிய எதையும் தரிக்கும் சோதி யுலகத்தினின்று ஓடுகிறான். பொன் நிறமுள்ளவனே! மனிதர்களோடு குதிரையைப் போல் புறப்படுகிறாய். நதிகளில் ஓட்டங்களில் உன் சோதியை சிரமமின்றி காண்பிக்கின்றாய். சு. மனிதர்களின் விருப்பங்களை வர்ஷிக்கும், எங்கும் பார்க்கும் நாட்களை அபிவிருத்தியாக்குபவன் காலைகளையும் வானத்தையும் வளர்ச்சியாக்குபவன் பெருகுகிறான்; நதிகளின் பிராணனான சோமன் கலசங்களில் (செல்ல) சப்தஞ் செய்கிறான்; மனிதர்களின் உதவியாய் இந்திரன் இருதயத்தை நுழைகிறான்.

[1] தேகத்தை

௭. சோமனுக்கு உயர்ந்த வானத்தில் [1] மூன்று [2] ஏழான பசுக்கள் ஆசிரய சாதன பாலை கறக்கிறார்கள். சத்தியத்தால் பலத்தில் அவன் பெருகிய பொழுது. மங்களத்திற்காக நான்கு வேறு அழகிய புவனங்களை பிராணிகளை [3] செய்கிறார். ௮. நன்றாய் அமிழ்த்தப்பட்டு சோமனே! இந்திரனுக்காகப் பெருகவும்; நோயானது சத்துருக்களோடு தூரதிலாகட்டும்; உன் ரசத்தைப் பருகி இருபக்கம் பேசுகிறவர்கள் சந்தோஷமாகாமலிருக்கட்டும்; உன் ரசதுளிகள் இங்கு எங்களுக்கு ஐசுவரியமுள்ளவையாகட்டும். ௯. அரசனைப்போல், பொன் நிறனாய் சிகப்பாயுள்ள வர்ஷிகன் அமிழ்த்தப் படுகிறான். அதிசயமானவன் பசுவை நோக்கி சப்தஞ்செய்கிறான்; புனிதமாகுங்கால் ரோமவடிகட்டி வழியாய் நீ செல்லுகிறாய்; கருடனைப்போல் அதி சோதியுடனை உன் நிலயத்தை அடைகிறாய். ௰. பாலை அளிக்கும் பசுக்களைப் போல், இனிமை நிறைந்த சோமர்கள் தேவரை நோக்கி பெருகுகிறார்கள்; புல்லில் சாய்ந்து மொழிகளை அனுசரித்தவர்களாய் உயர்ந்த ஸ்தானங்களால் தெளிக்கப்பட்ட சுத்தமான ரசத்தை பிரகாசஞ்செய்துகொண்டு தரிக்கிறார்கள் பருகுகிறார்கள். ௰௧. அவனை ஸ்னானஞ்செய்கிறார்கள், நன்றாய் விளக்குகிறார்கள், நலமுடன் அவனை ஸ்னானஞ்செய்விக்கிறார்கள். மதுவினால் அவனை நனைத்து பலமுடனை அவனை சீராட்டுகிறார்கள். நதியின் உச்சுவாசத்தில், சுவாசம் நிற்கும் நிலயத்தில், பறக்குங் குதிரையை பற்றுகிறார்கள்; பொன்னால் சுத்தஞ்செய்து பசுவை சலத்தில் கிரகிக்கிறார்கள். ௰௨. பிரமணஸ்பதியே! உன்னுடைய புனித மாக்கும் வடிகட்டி எங்கும் விரிந்துள்ளது, [4] பிரபுவைப் போலான நீ எல்லா

---

1 மனம் வாக்கு காயம் 2 ஐம்புலன்கள் மனம் புத்தி 3 செய்து கொள்ளுகிறார் 4 ஆகாசம் எங்கும் விரிந்துள்ளது.

பாகங்களிலிருந்தும் அதன் அங்கங்களை நீ நுழைகிறாய்: விருத முதலியவற்றால் உஷ்ணிக்கப்படாதவர்கள் இதை அடைவ தில்லை, பரிபக்குவர்களே விருதமுடனவர்களே (சத்தியத்தைத்) தாங்கினவர்களாய் அதை அடைகிறார்கள்.

---

## கண்டம் ருஅ

**தேவதை - இந்திரன். ரிஷி - க, எ, கக, அக்னி ஸ்சாக்ஷுஷன். உ சக்ஷுர் மானவன். ந, ச, க, பர்வத நாரதர்கள். ரு - திரித ஆப்த்யன். சு, மனு ராப்ஸவன். அ, கஉ துவித ஆப்த்யன்.**

துரிதமாய் சனித்த சோமர்கள் சர்வ மறிந்தவர்கள் பொன் மயமானவர்கள் அமிழ்த்தப்பட்டவர்கள் பலமுடனை இந்திரனை நோக்கிச் செல்லட்டும். உ. சோமனே எழுச்சியுடன் பெருகவும்; சோமனே! இந்திரனுக்காகப் பெருகவும்; ஒளியை அடையச் செய்யும் பலத்தைக் கொண்டுவரவும். ந. நண்பர்களே! உட்காரவும். தன்னையே புனிதஞ் செய்து கொள்ளும் சோமனுக்கு கானஞ் செய்யவும். குழந்தையைப்போல், யக்ஞங்களால் சிறப்பிற்காக அவனை அலங்காரஞ் செய்யவும். ச. நண்பர்களே: உங்கள் மகிழ்ச்சிக்கு புனிதஞ் செய்யும் அவனை கானஞ் செய்யவும். குழந்தையைப்போல் அளிப்புக்களால் துதிகளால் அவனை இன்பமுடனாக்கவும். ரு. பெரிய நதிகளின் பிராணன். குழந்தையான சோமன் யக்ஞத்தின் ஒளியைத் துரிதமாக்குபவனாய் சர்வமான பிரியபொருள்களை வானத்திலும் வையகத்திலும் வியாபிக்கிறான். சு. சோமனே! தேவர்கள் புசிக்க பலத்தோடு தாரைகளால் பெருகவும். சோமனே! மதுநிறைந்த நீ எங்களுடைய கலசத்தில் உட்காரவும். எ. புனிதமாக்கப் படுங்கால் சோமன் அலையோடு கம்பளவழிகட்டி வழியாய்

பாய்கிறான்; புனிதமாகும் கால் மொழியின்முன் அடிக்கடி சப்தஞ் செய்கிறான். அ. புனிதஞ்செய்ய ரிஷிக்கு மொழி சொல்லப்படுகிறது; புத்திகளால் வேலைசெய்யும் ஒருவனுக்குப்போல் போஷண சக்தியைக் கொண்டுவரவும். கூ. நல்லபலமுள்ளவனே! சோமனே! பொழியப்பட்ட நீ பசு குதிரை ஐசுவரியத்தோடு எங்களுக்குப் பெருகவும்; உன் ஒளி நிறமுடனான பாலின்மேல் நீ சாய்வாயோ? ௰. ஐசுவரியமளிக்கும் உன்னை என் மொழிகள் நாடினவன் நிறத்தை பால்களான உடைபோல், தரிக்கிறோம். ௰க. அவன் வேகத்தில் பொன் நிறமுடன் அழகுடன் ரோமத்தின் சிக்கல் வழியாய் அவன் பெருகுகிறான்; தோத்தரிப்பவர்களுக்கு வீரமுடனான கீர்த்தியை வர்ஷிக்கவும். ௰உ. புனிதனான சோமன் இனிமை நிறைந்த கலசத்திலே பாய்கிறான். ரிஷிகளின் ஏழு மொழிகள் அவனுக்குக் கானஞ் செய்கின்றன.

---

## கண்டம் ருகூ

தேவதை - பவமானன். ரிஷி - க. கௌரி வீதி சாத்தியர்கள். உ - ஊர்த்தவ சத்மா ஆங்கிரஸன். அ - ரிஜிஸ்வா பாரத்வாஜன். ச - கிருதயசாஆங்கிரசன். ரு - ரிணவ ஆங்கிரசன். சா - சக்திர்வாசிஷ்டன். எ - உருராங்கிரஸன்.

க. சோமனே! அதிசய மது நிறைந்தவனாய் இன்பமளிப்பவனாய் 1 இந்திரனுக்காக பெருகவும்; சோமன் பெரும் ஞானமுள்ளவன், மகத்தான மேன்மையுள்ளவன் ஒளியோங்கிய உத்தமன், உற்சாகன். உ. சோதியின் தலைவனான சோமனே! 2 தேவர்களின் விருப்பமான உயர்ந்த கீர்த்தியை காட்சியாக்கவும்; அளிக்கவும். 3 ஆகாச நடுவின்

---

1 ஆத்மாவிற்கு, வன்மைக்கு 2 புலன்களின் 3 சிதாகாசத்தின் நடுவேயுள்ள பெட்டியைத் திறக்கவும்.

கோசத்தைத் திறக்கவும். குதிரையைப்போல் வேகமாயும் துதிக்கத் தகுந்தவனும் ஆகாச சலத்தைத் தூண்டுபவனும் ஒளியை ஓங்கச் செய்பவனை வனப்பொருளில் வசித்து சலத்தில் நீந்தும் சோமனை அமிழ்த்தவும், ஊற்றவும். ச. ஆனந்தம் எழுப்பி ஆயிரம் தாரைகளுடனும் விருப்பத்தை வர்ஷிப்பவனும் எல்லா ஐசுவரியங்களை தரித்துள்ள வானத்தைக் கறக்கும் சொமனை நாடவும். ரு. சாந்தமான நிலயங்களை மனிதர்களுக்கு அளிப்பவனும் ஐசுவரியங்களை அளிக்கிறவும் பசு முதலியவற்றை அளிக்கும் சோமனே அமிழ்த்தப்பட்டுள்ளவன். சூ. அதிக ஒளியுடன் சீவர்களை அமுதத்திற்குத் துரிதமாய் அழைக்கும் பவமான சோமனே! நீயே திவ்யமாகும். எ. அமிழ்த்தப்பட்டு மகிழ்ச்சி அளிக்கும் அவன் சலத்தின் அலைபோல் விளையாடிக்கொண்டு [1] ஆட்டு ரோமங்களினுலானத்தின் வழியாய் தாரைகளால் பெருகுகிறுன். அ. எந்த சோமன் கிரணம் நிறைந்த ஆகாசத்தின் மேகத்தின் உள்ளேயுள்ள [2] பசுக்களை பலத்தால் பற்றுருனே, இழுக்கிருனே அந்த நீ [3] பசுக்களுடைய சமூகத்தை வியாபகஞ் செய்துகொள்ளுகிறுய். சத்துருவைக் கொல்லும் சோமனே! அசுரனைக் கொல்லவும்,

---

1 வானங்களின் வழியாய் 2 மேகங்களை 3 பிராணிகளில் வியாபகமாகி உன் சுவாதீனமாக்கினுய் அதாவது அனைவரும் உன்கீழேயாகும். இது ஆகாசத்தில் நிறையும் சோமனைப் பற்றியது.

# ஆ ர ண் ய க ம்.

## கண்டம் ௬௦

தேவதை - க, ௩ - இந்திரன். ௪ - வருணன். ரு, எ, அ - பவமானன். ௬ - விசுவே தேவர்கள். ௯ - அன்னம். ரிஷி க - பரத்வாஜன். உ - வசிஷ்டன் ௩, ௬ - வாக்தேவன். ௪ - சுனச்சேபன். ரு - கிருத்ஸமதன். எ, அ - அமஹீயுனன். ௯ - ஆத்மா.

க. இந்திரனே! சிறந்த சக்தியுடன் திருப்திசெய்யும் சிரேயசை எங்களுக்குக் கொண்டுவரவும். [1] வச்சிர ஹஸ்தனே! சுபமான தேஜசுள்ளவனே! நாங்கள் தரிக்க விரும்பும் உணவை ஐசுவரியத்தை நீ பூர்ணஞ் செய்கிறாய். சகத்தின் ராஜாவாயும் நன்றாய் துதிக்கப்பட்டும் ஐசுவரிவரியத்தை தூண்டிக்கொண்டும் விசுவ ரூபமான எப்பொருளினும் சுவாமியானவன் மனிதர்களுக்கு எல்லா ஐசுவரியங்களையு மளிக்கிறான். ௩. அதிக தேஜசுள்ள இந்திரனின் சுபமளிக்கும் எதுவும் சனங்களின் விஷயத்தில் நாடத் தகுந்தது; அவன் அளிப்பு மிகவும் பெரியதாகும். ௪. வருணனே! தலையில் கட்டப்பட்டுள்ள பாசத்தை எங்களுக்கு தளர்த்தவும்; காலில் கட்டப்பட்டுள்ளதை நழுவச்செய்யவும். நடுவில் நாபி யிலிருப்பதை இளக்கமாக்கவும்; அப்பால் வருணனே, ஆதித்தியனே! உன் செவியில் கண்டன மன்னிபிலும் அபராத மன்னியிலு மாகவேண்டும். ரு. பவமானனுன உன்னால் போரில் நிரந்தரமான நல்ல பொருள்களை நாங்கள் சேர்க்கட்டும்; எங்களுக்கு மித்ரன் வருணன் அதிதி சமுத்திரம் பூமி வானமும் எல்லா உத்தம ஐசுவரியங்களையு மளிக்கட்டும். ௬. நீங்கள் ஏகமான சோமனை விருப்பம் வர்ஷிப்பவனுகச் செய்யவும். இச்செயல்களை சிறப்புடனுகச் செய்ய

---

1 வச்சிராயுதமுள்ள வீரனே.

வும். எ. அவன் சோமனுன நீ எங்களுடைய இந்திர னுக்கு யக்ஞம் செய்யும் வருணனுக்கு மருத்துக்களுக்கும் ஐசுவரியப் பொருள்கள் அளிப்பவனுய்ப் பெருகவும். அ. அனைத்தின் தலைவன் நீயே. மனிதர்களின் சமஸ்த பொருள் களை எமக்கு அளிக்கவும்; அவற்றை நன்கு பயன் செய்ய உம்மை நாடுகிறோம். கூ. தேவர்களுக்கு முன் நானுன உணவு அமுதமான சத்திய சம்பந்தமான முதலில் உண் டான நாம மாகிறேன். சொரூபமாகிறேன். எவன் என்னை இப்படி அளிக்கிருனோ அவனே என்னை ரட்சிக்கிறுன்; நான் உணவு; (நானே) உணவாகும். எல்லா உணவையும் நானே புசிக்கிறேன்.

---

## கண்டம் கூக

தேவதை - க, ௩, ௪, எ இந்திரன். ௨ - பவமானன். ௫- விசுவதேவர்கள். ௬ - வாயு. ரிஷி. க - சுருதகக்ஷன். ௨ - பவித்ரன். ௩, ௪ - மதுச்சந்தா வைசுவாமித்ரன். ௫. பிர தன். ௬ - கிருத்ஸமதன். எ - நிருமேத புருமேதர்கள்.

க. இந்திரனே! ஆத்மாவே! நீ கருப்புக்களிலே சிகப்புகளிலே, பல நிறங்களில் ஒளியுடனுன ரசத்தை தரிக் கிருய். ௨. உஷசுடனுடைய ஆதித்தியன் சோமன் காலை களை ஒளிவீசச் செய்கிருன். புவனங்களில் வன்மை விரும்பி பொருள்களையும் தாங்குகிருன். தேவர்கள் சோமனின் பிரக்ஞையால் நிர்மாணஞ் செய்கிருர்கள். மனிதர்களைப் பார்க்கும் பிதுருக்கள் கர்ப்பத்தை தரிக்கிருர்கள். ௩. இந் திரனே குதிரைகளினுடைய சேர்க்கையை ஒன்று சேர்ப் பவன்; சுசிட்சிதமான இந்திரன் வச்சிராயுதத்துடன் பொன்மயமானவன். ௪. இந்திரனே! உக்கிரனே! உன் உக்கிரமான உதவிகளால் போர்களிலும் ரத கஜ துரக பதாதி

சண்டைகளிலும் எங்களை ரட்சிக்கவும். ரு. பிரதன் அபி ரதனும் ஹவிஷின் ஹவிஷான அனுஷ்டபினுடைய வசிஷ்டன் எனப்படும் அவன், சோதியுடனான, தாது - பிரம - சவிது, விஷ்ணு - விஷ்ணுவினிடமிருந்து - ரதன்தரத்தை அடைகிறான். சு. வாயுவே! நியமமான வாகனங்களுடன் நீ வரவும். இந்த வெண்மையான சுக்கிரன் உனக்கு அளிக்கப்படுகிறது. அமிழ்த்தப்படும் வீட்டிற்கு நீ செல்லுகிறாய். எ. திரிகாலங்களிலுள்ளவனே! மகவானே! விருத்திரனைக் கொல்ல நீ உதயமாகுங்கால் வையகத்தை திருடஞ்செய்து விண்ணை சோதியுலகை ஆகாசத்தில் ஆகர்ஷணஞ் செய்கிறாய், நிலையாக்குகிறாய்.

---

## கண்டம் கூஉ

தேவதை க - பிரஜாபதி. உ. ந. பவமானன். ச. கூ, கந - அக்னி. எ - ராத்திரி. அ - வைசுவாநரன். கூ - விசுவே தேவர்கள். ய - லிங்கோக்தன். கக - இந்திரன். கஉ - சர்வாத்மா. ரிஷி - க, ரு, எ, க0 - வாமதேவன். உ, ந - கௌச - மதுச்சந்நன். சு - கிருத்ஸமதன். அ, கூ - பாரத்வாஜ பார்ஹஸ்பத்யன். கக - ஹிரண்யஸ்தூபன். கஉ, நக - விசுவாமித்ரன்.

க. பரமேஷ்டியான பிரஜாபதி சுவர்கத்தின் காந்தியைப் போல் என் சரீரத்தில் தேஜஸை விருத்தியாக்கட்டும். கீர்த்தியின் ஒளியையும் யக்ஞத்தின் வன்மையை ஓங்கச் செய்யட்டும். உ. சோமனே: சத்துருக்களை தண்டிக்கும் உன் ரசங்கள் சமஸ்த ஐசுவரியங்களையும் சகலமான வன்மைகளையும் அடையட்டும். அமிருதத்திற்கு வளர்ந்துகொண்டு சோதியுலகில் உத்தமமான சிரேயசுகளை தரிக்கவும். ந. சோமனே! இங்கு உள்ள சர்வமான ஔஷதிகளை உற்பத்தி செய்தாய். நீ சலங்களையும் பசுக்களையும் விசாலமான ஆகா

சத்தையும் நீ விரிவுடனாக்கினாய்; இருளையும் சோதியால் நீக்கினாய். ச. யக்ஞத்தின் தேவனாய் புரோஹிதனாய் ஹோதாவாய் ரத்னமளிப்பவனாய் ருதுக்களால் பூஜனீயமான அக்னியைத் துதிசெய்கிறேன். ரு. பசுவின் பூர்வமான பெயரை அறிகிறார்கள்; மூன்று எழான பரம நாமங்களை தோத்திரங்களை அறிகிறார்கள். இதை அவை ஆரவாரஞ் செய்கின்றன; பசுக்களின் கீர்த்தியால் சிகப்பு நிறம் புலனாகின்றது. சு. வர்ஷித்த சலங்கள் ஒன்று சேர்கின்றன; வேறு சலங்களும் அவற்றோடு ஒன்றாகின்றன; சலமுடனான நதிகள் எல்லாம் சமான வடிவமான ஒரு சமுத்திரத்தில் நிறைகின்றன. எல்லா பக்கங்களிலும் சோதியுடனான சலம் சலங்களின் ஒளியுடனான மகனை சூழ்ந்து கொள்ளுகிறது. எ. யுவதியான இரவு புலனாகிறாள். அவள் சுகமளிப்பவள், சுகமான இரவு சர்வமான சகத்திலும் நுழைபவளாகிறாள். அ. வியாப்தமானவும் வர்ஷிப்பவனுமான ஒளியுள்ள ஜாதவேதசனுக்கு சிறப்புடனுள்ளவனுக்கு யக்ஞத்தில் எங்கள் மொழி மேன்மையாய் செல்லுகின்றது: துதிப்பதற்கருகைதையான அக்னிக்கு சுத்தமான மனனமானது சோமனைப்போல் சுந்தரமாய் பாய்கின்றது. கூ. எங்கள் யக்ஞத்தை நாடும் எல்லா தேவர்களும் என்மனோ துதிகளை கேட்கட்டும்; சலத்தின் மகனும் வானமும் பூமியும் கேட்கட்டும்; நீங்கள் அலட்சியஞ் செய்யும் மொழிகளை நான் மொழிய போவதில்லை; உங்களுடன் நெருங்கி நாங்கள் சந்தோஷமுடனாகலாமோ! ய. வானம் பூமியின் கீர்த்தியானது என்னை அடையட்டும், இந்திரன் பிருஹஸ்பதியின் கீர்த்தியும் மடையட்டும். பகனின் ஐசுவரியமும் அடையட்டும், கீர்த்தி என்னை விடாமலாகட்டும். நான் கீர்த்தியுடனாகி நன்றாய்ப் பேசுபவனாகட்டும். என் சமூகத்தின் கீர்த்தியும் விடாமலாகட்டும்.

௰௧. இந்திரன் வச்சிராயுதனுகும். முதன்மையான இந்திரனின் வீரியமான செயல்களை நான் துரிதமாய் சொல்லுகிறேன். அவன் மேகத்தைக் கொல்லுகிருன்; அப்பால் சலத்தை விழச் செய்கிருன். அவன் மலைப் பிரவாஹங்களுடைய நதிகளையும் பிளக்கிருன். ௰௨. அக்னியான நான் சன்மத்தால் சாதவேதசனுகிறேன், எல்லாப் பிராணிகளையுமறிகிறேன். என் கண் நெய்யாகும். என் வாயிலே அமிருதமாகும். மூன்று தாதுக்களும் நானே; ஆகாசத்தினுடைய விமானன் (எதையும்) நிர்மாணிப்பவன் நான், சோதியின் நிலைக்காரணம் நானே. அமிருதமாய் சோதியாய் எல்லாமளிப்பவனுயிருக்கிறேன். ௰௩. மேதாவி அக்னி எங்கும் வியாப்தமாகும் (அனைத்தின் பூமியின்) முதன்மையான நிலயத்தைப் பாதுகாக்கிருன். மகானுன அக்னி சூரியன் வழியையும் காக்கிருன்; நடுவிலே ஏழு தலைகளையும் (மருத்து கணங்களையும்) காக்கிருன். இவ்வழகன் தேவர்களின் இன்பத்தையும் காக்கிருன்.

---

## கண்டம் கூ௩

**தேவதை க - அக்னி. உ - ருது, ௩ - ௬ புருஷன், எ-சீருஷ்டை. அ - தியாவாபிரதிவீ. ௯, ௧௧ - இந்திரன். ௧0, ஆத்மா. ௧௨ - கௌ. ரிஷி - க, உ, அ - ௧௨, வாமதேவன். ௩ - எ, நாராயணன்.**

அக்னியே! ருக்குக்களால் எழுச்சியாகும் சோதியாயுள்ளவனே! நடுவிலே பிரகாசமாய் [1] நாக்கு சஞ்சரிக்கிறது. ஐசுவரியங்களைக் காணும் நீ எங்களுக்கு புஷ்டியோடான ஐசுவர்யத்தை பலத்தை அளிக்கவும். ௨. வசந்தமே ரமணீயமாகும், சந்தோஷத்திற்கு அருகதையாகும்;

---

1 வாணியான வேதம் விளங்குகிருன்

கிரீஷ்மமே களிப்பிற்கு நிலயமாகும்; வருஷா காலமும், சரத்ருதுவும், ஹேமந்தமும், சசிருதுவும் ரமணீய மாகின்றன, ஆனந்த மாவதற்கு அருகதையாகும். ௨. ஆயிரம் தலைகளுள்ளவன்-அதாவது எங்குமுள்ளவன்-புருஷன், ஆயிரம் கண்கள் ஆயிரம் பாதங்களுள்ளவன்; பூமியில் எங்கும் வியாபகமாகி பத்து திசைகளில் இந்திரியங்களில் நிலைத்துள்ளான். சத்து சித்து ஆனந்தத்தால் புருஷன் உயரமாகிறான்; இவன் பாதமானது ஞானமானது இங்கு உண்டு; அவனை அடையும் ஞானமென்னும் சாதனமானது எங்கும் வியாபகமாய் இருக்கிறது. அவனே புசிக்கும் புசிக்காததுமான அனைத்திலும் வியாபகமாகிறான். ச. இருந்த எதுவும் இருக்கப்போவதும் இப் புருஷனே; சர்வமான பிராணிகள் இவன் பாதங்கள், இவனால் வியாபிக்கப்பட்டுள்ளது. இவன் மூன்று பாதங்கள் சோதியிலே அமிருதமாய் இருக்கின்றன. ௫. இச் சகத்தின் மகிமை எத்தனையுண்டோ அத்தனையும் விட அதிகமானவன் புருஷன். அன்னத்தால் அதிக்கிரமிக்கும் அதிகமாய் செல்லும் அமிருதத்வத்தினுடைய ஈசனுமாகும், இவன். ௬. அவனிலிருந்து விராஜன் பிறக்கிறான். விராஜனின்று பிரமாண்டத்திற்குமேல் அதிகமாகி புருஷன் தோன்றுகிறான். அந்த விராடன் அதிகத்திற்கு அதிகமாகிறான். தேவாதி மனிதரூபங்கள் தோன்றுகின்றது. பிறகு பூமியையும் புவனங்களையும் செய்கிறான். ௮. வானமே பூமியே! உங்கள் இருவர்களை பாது காப்பளிப்பவர்களாய் அறிகிறேன். அபரிமிதமாய் இச் சகத்தையும் விஸ்திரித்திருக்கிறீர்கள். வானமே! வையகமே! எங்களுக்கு நீங்கள் சுகமளிப்பவர்களாகவும்; எங்களைப்பாவங்களின்று முக்த மாக்கவும். ௯. இந்திரனே! உன் கிரணங்கள் சர்வ வியாபகங்களாகும்; மேலும் உன் பிராணன் அபானனு குதிரைகள் பொன்மயமானவை. அப்படியான உன்னை சுந்

தரமொழியுள்ள மேதாவி புருஷர்கள் துதிசெய்கிறார்கள். ௰. பொன்னினுடைய (சூரியனுடைய மனத்தினுடைய) எந்த தேசசுண்டோ பசுக்களுடைய (இந்திரியங்களுடைய) எந்த ஒளியுண்டோ சத்தியத்தின் பிரமத்தின் (அறிவின்) எந்த தேசசுண்டோ அவற்றால் (அந்த அந்தப் பொருளை) சம்பாதிப்போம். ௰௧. இந்திரனே! ரமணீயமாய் விளங்கப் பேசுபவனே! சத்துரு ஸம்ஹார பலத்தை எங்களுக்கு அளிக்கவும்! இந்த மகத்தான பலத்தின் ஈசன் நீயாகும். இந்திரனே! எங்களுக்கு யக்ஞத்தைப்போல் நல்ல செயலைப்போல ஐசுவரியத்தை, திரமான பலத்தையும் செய்யவும். எங்களை இம்சைசெய்யும் சத்துருக்களை வெகு கஷ்டங்களிலாக்கவும். ௧௨. விருஷபங்களோடு கன்றுகளோடு இரண்டக்னியாய், ஸ்தன மண்டலங்களுடன் எல்லா வடிவங்களையும் தரிக்கும் நீங்கள் உன்னத ஸ்தானத்தை அடையுங்கள்; வெகு விஸ்தீரணமான இந்த உலகம் உங்களுக்காகட்டும்; இந்த சலங்கள் இங்கு சுகமுடனான சுவாசமுள்ளவையாகட்டும்.

---

## கண்டம் ௬௪

**தேவதை. ௧ - அக்னி பவமானன். ௨, ௧ - ௪ - சூரியன். ரிஷி. ௧ - வைகாநஸன். ௨ - விப்ராட் சூரிய புத்திரன். ௩- ருத்ஸர்கள். ௪, ௬ - சார்பராக்ஞீ. ௭, ௧௪ - பிரஸ்கண்வன் காண்வன்**

௧. அக்னியே! எங்களுக்கு வாழ்நாட்களை பெருக்கவும். எங்களுக்கு உணவையும் பலத்தையும் பிரேரிக்கவும். சத்துருக்களை வெகுதூரத்திலேயே வேதனை செய்யவும். ௨. வெகு ஒளியுள்ள சூரியன் யக்ஞபதியின் குடிலமற்ற ஆயுட் நாட்களை செய்துகொண்டு பெரியதாய் சோம மயமான மதுவைப் பருகட்டும். அவன் (சூரியன்) வாயுவினால் தூண்

டப்பட்டு சுவயமாகவே பிரசைகளைக் காப்பாற்றுகிறான்; போஷணஞ் செய்கிறான்; வெகு விதமாய் பிரகாசஞ் செய்கிறான். ௩. தேவர்களின் அதிசய ஒளி சமூகமான மித்திரன் வருணன் அக்னியின் கண் உதயமாகிறான்; அசையும் அசையாமலுள்ள அனைத்தின் ஆன்மாவான சூரியன், வாயு வானம் வையகத்தை (சுவய தேசசால்) நிரப்புகிறான். ச. இந்த வியாப்த ஒளியுடனான பசு உதயமாகி பூர்வத்தில் தாய் முன் பிதாவான சுவர்கத்திற்கு சென்று கொண்டு உட்கார்கிறார். ரு. சூரியனின் ஒளி நடுவிலும் பிராணபான நடுவிலும் ஆகாச பூமி நடுவிலும் சூரியனுடைய பிராணாத்மா செல்லுகிறான். பிராணனின்று பிராணனை எழுச்சியாக்கிய பின் அபானனாகிறான் (அஸ்தமாகிறான்). மகானான சூரியன் (பகலில்) வானத்தில் நன்றாய் பிரகாசிக்கிறான். சு. இரவின் சப்த எழுச்சியில், முப்பது ஸ்தானங்களையும் எல்லா நாட்களிலும் அவன் பிரகாசிக்கிறான்; வாக்கான பட்சியானது அவனுக்கு அளிக்கப்படுகிறது. எ. எல்லாம் காணும் சூரியன் முன் திருடர்களைப்போல் எல்லா கதிர்களோடும் நட்சத்திரங்கள் சென்று விடுகிறார்கள். அ. ஒளி வீசும் அக்னியைப்போல் சூரியனின் கதிர்களான ரசிமிகள் சனங்களைப் பிரகாசஞ் செய்கின்றன. கூ. சூரியனே! நீ நோய்களை நீக்குபவன் எல்லா சோதி யுலகத்தையும் சோதியாக்கிக் கொண்டு சமஸ்த சுந்தரப் பொருள்களையும் பிரகாசஞ் செய்கிறாய். ௰. தேவர்கள் ஞானிகள் மனிதர்கள் முன் சமஸ்தமான சோதியைக்காண நீ உதயமாகிறாய். ௰க. புனிதஞ் செய்பவனே! எந்த கண்ணால் சந்துக்களை தரிக்கும் எவ்வுலகத்தைப் பார்க்கிறாயோ அந்தக் கண்ணால் நீ வருணனே! பார்க்கிறாய் (பிரகாசிக்கிறாய்). ௰உ. சூரியனே! நீ உன் சக்திகளால் எங்கள் நாட்களை இன்பமாக்கிக்கொண்டு பிராணிகளை பிரகாசித்துக்கொண்டு வானத்தையும் விஸ்தாரமான

உலகத்தையு மடைகிறாய். ௰௩. ரதத்தின் ஏழு, பெண்களான எவற்றையும் பிரேரிக்கும் புனிதஞ் செய்யும் ஏழுபிராணங்களை கிரணங்களை, இணைத்து விடுகிறான். இந்த தன் சுவய குதிரைகளோடு ஜோடிகளோடு அவன் செல்லுகிறான்; ௰௪. சூரியனே! தேவரே! எங்கும் காண்பவனே! ரதத்தில் உன்னை சோதி சுடருடனான ஏழு குதிரைகள் சுமக்கிறார்கள்.

---

# மகா நாம்னியார்சிகம்

## கண்டம் கூ௫

தேவதை - இந்திர திரைலோக்ய ஆத்மா. ரிஷி - பிரஜாபதி.

க. மகவானே! எல்லா மறிபவன் நீ! பூமியை அளிக்கவும்! சுவர்கஞ் செல்லும் வழிகளை அறிவிக்கவும்; பூர்வமான சக்தியின் பதியே! புருவசுவே! சிக்ஷை கல்வியை அளிக்கவும்: உ. சேதன மளிக்கும் இந்திரனே! சுவர்கத்தைப்போல், சூரியனைப்போல, வியாபகமான இத்துதிகளால் உணவு கீர்த்தி முதலியவற்றை அடைய ஞானமான சோதியை அடையவும், எங்களுக்கு சேதனமளிக்கவும். ௩. மகானே! வச்சிராயுதனே! சக்தி யுள்ளவனாயிருக்கிறாய் அதிக பல முள்ளவனே! ஐசுவரியம் பலத்தின்பொருட்டு சமர்த்தமுடனாக்கவும், அருள்புரியவும் வச்சிராயுதம் தரித்தவனே! நீ வரவும், பருகவும், பேரானந்த முடனாகவும்.

௪. ஐசுவரியத்திற்கு சுபமான வீரத்தை அளிக்கவும். அடையச் செய்யவும், சூரர்களிலும் அதிக சக்தி வாய்ந்தவனான மகா புருஷனே, வச்சிராயுதனே! நீ எல்லா ஐசுவரியங்களின் பதியாகும்; சனங்களை (அவர்களின்) ஹிதத்திற்காக சாமர்த்தியமுடனாக்கவும். ௫. எவன் ஐசுவரியங்களில் சூரி

யனைப்போல் சோதி யுள்ளவனு யிருக்கிருனே (அவனை நாடு கிரும்.) சர்வக்ஞனே ! இந்திரனை நீ ஞானத்தின் பொருட்டு முன் அழைத்துச் செல்லவும். அவனையே நீங் கள் துதிக்கவேண்டும். சு. அரசுபுரிய சர்வசக்திமானுய் ஜயிப்பவனுய் ஜயிக்கப்படாதவனுயுள்ள அவனையே ரட்சிப் பிற்காக அழைக்கிரும். அவன் எங்கள்சத்துருக்களை அழிக் கட்டும். அவன் எல்லாம் செய்பவன், சந்தஸன், சத்திய வடிவன், சிறந்து பெரியவனு யுள்ளவன்.

எ. ஜயிப்பவனுய் ஜயிக்கப்படாதவனுயுள்ள இந்திரனை பரம ஐசுவரியத்தை அடைய அழைக்கிரும். அவன் எங்கள் சத்துருக்களை நாசஞ் செய்யட்டும்: அவன் எங்கள் சத்துருக் களை நாசஞ் செய்யட்டும். அ. அகண்டனே ! மலைபோலுள்ள வனே ;சர்வமான சந்தோஷத்தின் பொருட்டு (எது வேண் டுமோ அந்த) ஐசுவரியத்தை அளிக்கவும். சர்வ சக்திமானே! பூர்ணத்தி(ற்காக) துதிக்கப்படுகிருய்; நீசக்தியுள்ளவன், வசி யஞ் செய்பவனுகும்; இதனுல் துதிக்கருகனுன உன்னை பொருள்களில் எங்கள் மனங்களில் ஒருமையுடன் மொழிகி ரும் ஸ்தாபனஞ் செய்கிரும். க. பிரபுவே! விருத்திர னைக் கொல்லுபனே! சனத்தின் பெரிய பொருள்களில் துதி செய்கிரும். வேதமொழிகளில் செல்லும் நீ நண்பன். சுகஞ் செய்பவன் இரண்டற்றவனுகும்.

## பஞ்ச புரிஷ பதங்கள்

### கண்டம் சுசு

க. இந்திரன் ! நீ முக்த குணமுள்ளவன். உ. அக்னியே ! நீ இப்படி அக்னி குணமுள்ளவன். ந. இந்திரனே ! நீயே இந்திரன். ச பூஷணனே ! நீ போஷண மளிப்பவனுகும். ரு தேவர்களே ! எல்லாம் இப்படித்தான்.

# உத்தரார்சிகம்

## கண்டம் கூஎ

தேவதை - க - கூ - சோமன். ரிஷி க - ௩ - அசித காசியப தேவலன். ச - சு காசியப மாரீசன். எ - கூ வைகாநஸ ஆங்கிரசன்.

மனிதர்களே! தேவர்களுக்கு பூஜிக்கும் விருப்பத்தோடு புனிதமான இந்துவிற்கு கானஞ்செய்யவும். உ. உன் திவ்யமான தேவ விருப்பமான ரசத்தை தேவர்க்கு அதர்வாணர்கள் கலந்துள்ளார்கள். ௩. ராஜனே! அந்த நீ எங்களுக்கு பசுக்களில் சுகத்தை அளிக்கவும். சனங்களுக்கு சுகத்தை யளிக்கவும், ஔஷதங்களுக்கும் சுகத்தை யளிக்கவும்.

ச. அதிசய ஒளியோடு பிரகாசமுடன், எங்கும் சப்தமிடும் தாரையோடு பாலோடு கலந்த இந்த சோமர்கள் வெண்மையுடனுனவர்கள். ரு, வீரர்கள் சென்று ஆக்கிரமிப்பதுபோல் வன்மையுடனுனவன் தூண்டப்பட்டு, ஸ்மரிக்கப்பட்டு போரை ஹிதஞ் செய்பவனுய் ஆக்ரமித்துளான். சு. சோமனே! ஒளியுடனுன கவியே, சூரியனுன நீ தன்னந் தனியாய் எங்கள் மங்களத்திற்கு ஒன்ருய் வந்து கொண்டு அனைவரும் பார்க்க எங்கும் பெருகவும்.

எ. கவியே! கல்வியுள்ளவனே! உன் பவமானனின் தாரைகள் சிறப்பை நாடும் குதிரைகளைப்போல் ஐசுவரியங்களை ஊற்றியுள்ளன. அ. மது வடிகட்டு கலசத்தை நோக்கி புனித ரோமங்களில் ஊற்றப்பட்டுள்ளது; தோத்திரங்களும் திடமாய் சொல்லப்படுகின்றன. கூ. பசுக்

கள் வீட்டை அடைவதுபோல் சோமதுளிகள் சமுத்திரத்தை அடைந்துள்ளன; சத்தியத்தின் நிலயத்தையும் சேர்ந்துள்ளன.

---

## கண்டம் சுஅ

**தேவதை - க, உ, ங, - சோமன் ச, ரு, சு - மித்திராவருணன். எ, அ, கூ - இந்திரன் ம, கக, கஉ-இந்திராக்னி. ரிஷி - க, உ, ங-பரத்வாஜன். ச, ரு, சு. விசுவாமித்திரன் ஜமதக்னி. எ-கூ-இரிமிடன். ம, கக,உ க - விசுவாமித்திர காதினன்.**

க. அக்னியே! ஹவிஷை அளிக்க துதிக்கப்பட்டு புசிக்க வரவும்; புற்களிலே ஹோதாவாக உட்காரவும், உ. 1 அங்கிரசர்களே! பூர்வோக்த குணமான உங்களை சமித்துகளால், நெய்யால் வளர்ச்சி யாக்குகிறோம்! அதிசய பலமுள்ளவனே! பிரகாசமாகவும், எரியவும். ங. தேவரே! அக்னியே! விசாலமாயும் மகத்தாயும் மேன்மையுடனான சிறந்தோங்கும் வீரத்தை செம்மையாய் அளிக்கிறாய், விஸ்தாரஞ் செய்கிறாய்.

ச. சுபசெயல்களைச்செய்யும் மித்ர வருணர்களே! 2 கோ நிவாச நிலயத்தை 3 நெய்களால் பெருக்கவும். ரு. சுத்தமான விருதமுடனான மித்திர வருணர்களே! வெகு துதிக்கத் தகுந்த நமஸ்காரத்தால் வளர்ந்து தீர்க்க திருஷ்டிகளுடன் பலத்தின் பெருமையால் அரசுபுரிகிறீர்கள். சு. ஜமதக்னியால் துதிக்கப்பட்டு சத்தியத்தின் நிலயத்திலே உட்காருங்கள்; சத்தியத்தை வன்மையுடனாக்கும் நீங்கள் சோமனைப் பருகவும்.

---

1 மனம் அக்னிகளை அறிபவர்களே. 2 ஐசுவரிய நிலயத்தை. 3 ஒளிகளால்.

எ. இந்திரனே! நீ வரவும்; உனக்காக அமிழ்த்தியுள்ளோம்; இந்த சோமனைப் பருகவும்; என் புற்களிலே உட்காரவும். அ. பிரமத்தால் பூட்டப்பட்ட ரோமங்களுடனுன குதிரைகள் உன்னை இங்கு கொண்டு வரட்டும்: எங்கள் பிரமங்களைக் கேட்கவும். கூ. இந்திரனே! சோமனை தரித்துக் கொண்டு சோமனை வகிக்கும் நாங்கள் உன் நண்பனேடு சொமபானஞ் செய்யும் உன்னை அழைக்கிறோம்.

ய. துதிகளால் வரிக்கப்பட்டு மேகத்தினின்று சுவர்கத்தினின்று சோமனிடம் வரவும்; செயல்களால் தூண்டப்பட்டு அதைப் பருகவும். யக. இந்திராக்னியே! தோத்திரஞ் செய்பவனேடு விளங்கும் யக்ஞன் சோமன் வருகிறுன். நீங்கள் இருவரும் இந்த சோமனைப் பருகவும். யஉ. யக்ஞத்தின் சக்தியால் மேதாவிகளை விரும்பும் இந்திராக்னியை நாடுகிறேன்; எங்கள் செயலில் சோமனின் சிறப்பால் அவர்கள் திருப்தியாகட்டும்.

---

## கண்டம் சுக

தேவதை - க-அ, சோமன். க - அ, அமஹீயுராங்கிரசன்.

க. உன் சன்மம் மிகவும் சிறந்ததாகும்; அது சோதி உலகில் நிலைக்கப்பட் டிருந்தும் சகத்திலே மகத்தான மேன்மையையும் உக்கிரமான சுகத்தையும் அடைந்துள்ளது. உ. நாங்கள் பூஜிக்கப்படும் இந்திரனுக்கு மித்திரன் வருணனுக்கு ஐசுவரியம் அளிப்பவனுய் பெருகவும். ங. மனிதர்களின் இங்குள்ள சர்வமான ஐசுவரியங்களையும் சத்துருக்களின் எல்லா பொருள்களையும் சாதிப்பதற்கு அழைக்கிறோம்.

ச. புனிதமாக்கிக் கொண்டு நீ சல உடையில் தாரையோடு செல்லுகிறாய்; ஐசுவரிய மளிப்பவன் நீ சத்தியத்தின் நிலயத்திலே உட்கார்கிறாய்: நீ பொன் மயமான ஊற்றாகும். ரு. மதுவுடன் பிரியமான திவ்யமான ஸ்தனத்தைக் கறந்துகொண்டு பழைய சபையில் உட்கார்ந்துளான்: மனிதர்களால் சுத்தஞ் செய்யப்பட்டு சர்வ திருஷ்டியுடன் சக்தி வாய்ந்த நீ [1] பிரக்யாதமான ஊற்றை தரிப்பவனை நோக்கி நீ பெருகுகிறாய்.

சு. [2] கலசத்திற்குத் துரிதமாகவும்; அங்கு உட்காரவும். மனிதர்களால் புனிதமாக்கப்பட்டு யுத்தத்திற்கு முன் செல்லவும்; பலமான குதிரையைப்போல் உன்னைச் சுத்தமுடனாக்கி லகான்களால் [3] புல்லிற்கு அழைத்துச் செல்லுகிறார்கள். எ. நல்ல ஆயுதமுடனான தேவரான இந்து உபத்திரவங்கழித்து வீடு ரட்சிப்பவனாய், தந்தையாய் தேவர்களின் பாலகனாய் சிறந்த சக்தியுள்ளவனாய் சோதி யுலகத்தின் [4] ஸ்தம்பனாய் பூமியின் தாரகனாய் பெருகிக் கொண்டிருக்கிறான். அ. ரிஷியாய் மேதாவியாய் முன் செல்லும் சனங்களின் தலைவனாய் [5] ரிபுவாய் தீரனாய் [6] உசனன் காவ்யத்தால் இந்த கோ சம்பந்தமான மனோகரமாய் மறைந்து வைக்கப்பட்டுள்ள சாரத்தை அறிகிறான் அறியச் செய்கிறான்.

---

1 பெருமையுடனான 2 இருதயத்திற்கு. 3 தயாரிக்கப்பட்ட தேசத்திற்கு. 4 தூண் போலாய். 5 விருப்பம் நாடுபவனாய் 6 அறிஞனாய்.

## கண்டம் எ௰.

தேவதை—க-உ. சு-எ, அ, கூ—இந்திரன் ங, ச, ரு, சர்வ தேவர்கள். ரிஷி—க-உ வாசிஷ்டன். ங-ரு—வாமதேவன். சு-எ. நோதா காக்ஷிவதன். அ-கூ. கலிப்பிரகாதன்.

க. சூரனே! 1 இந்திரனே! கறக்காத பசுவைப்போல் துதி செய்கிறோம் உன்னை அழைக்கிறோம். அவன் இந்த சகத்தின், தாவர உலகத்தின் ஈசனுகும்: சூரியனுக்கு சமானமாய் ஈசனுயுள்ள வனுகும், உ. மகவானுன இந்திரனே வானத்தினுடைய எதுவும் வையகத்தினுடைய எதுவும் பிறந்ததில்லை உன்னைப்போல் பிறக்கப் போவதில்லை; குதிரை விரும்பி பசு விரும்பி பலம் உணவு விரும்பி உன்னை அழைக்கிறோம்.

ங. அற்புதமாய் சதா வளர்பவனுன நண்பன் எந்த ரட்சையோடு எங்கள் அருகில் வருவான்? எந்த சக்தியுடனுன சிறந்த கூட்டத்தோடு எங்களிடம் வருவான்? ச. பூஜ்யமாய் பெரியதான மகிழ்ச்சிகளின் நடுவே எந்த இன்பமளிக்கும் சோமனுடை ரசம் திடமாய் காக்கப்பட்டுள்ள தனத்தை திறக்க உற்சாக மளிக்கும்? ரு. உன்னைப்புகழும் நண்பர்களைக் காக்கும் நீ நூறு ரட்சைகளோடு எங்களை அணுகுவாயே?

சு. உங்கள் சத்துருக்களை அழிப்பவனும் உபத்திரவங்களை ஒழிப்பவனும் எங்குமுள்ள சோம ரசத்தில் சந்தோஷமாகும் இந்திரனை எங்கள் தேகங்களில் பசுக்கள் கன்றுகளுக்குக் கதறுவதுபோல் அதிசயமாயுள்ளவனை பாக்களால் கோஷஞ் செய்கிறோம். எ. சோதியால் வசிப்பவனும் நன்றாய்

---

1 இங்கு இந்திரன் என்பது ஈசனுக்குப் பெயர்.

யளிப்பவனும் பலத்தால் சூழப்பட்டு, இன்பமான பொருள்களிலும் ஐசுவரியத்திலும் மலைபோலுள்ளவனை, நூறு ஆயிரம் ஐசுவரியங்களுடனுன கோக்களுடனுன பலத்திற்கு [1] யாசிக்கிறோம்.

அ. உங்கள் வேகத்தால் ஐசுவரியங்காணும் இந்திரனை துக்கத்திலே உங்களைக் காக்க பெரிய கவிகளுடனுன சோமன் பெருகும் யக்ஞத்தில் குடும்ப போஷகனைப்போல் உன்ஹிதகாரணனை அழைக்கிறோம். கூ. சுபமான நாசியுள்ள இந்திரனை ரசத்தின் சந்தோஷத்தில் அசுரர்கள் தடுப்பதில்லை; தேவர்களும் மனிதர்களும் தடுப்பதில்லை; அவனைத் துதி செய்பவனுக்கும் உழைத்து உபதேசஞ் செய்து அவனுக்கு மரியாதை செய்பவனுக்கும் பெருமையான ஐசுவரியத்தை அளிப்பான்.

---

## கண்டம் ஏக

தேவதை—க-கச-சோமன். ரிஷி—க-ந-புஷ்கலோக்னி ச-ரு-ஸ்ம்ஹிதன். சு-அ-சபன். கூ - கக - சியாவாசுவன். கஉ-கச—ஆன்தீகவன்.

க. சோமனே! இந்திரனுக்குப் பெருக அமிழ்த்தப்பட்ட, ராஜனுன நீ இனிமையான இன்பமான தாரையோடு பெருகவும். உ. ராட்சதர்களைக் கொல்லுபவன். சகலமும் காண்பவன். தன் நிலயமான ஸ்தானத்தை பொன்னுலடிக்கப்பட்ட துரோணத்திலே சேர்ந்து விடுவான். ந. விருத்திரனைக் கொல்பவனுயிருக்கவும்; பூமியின் அனைத்தையும் தருபவன்; தாராளமாய் இருப்பவன், சத்துருக்களின் ஐசுவரியத்தை அளிக்கவும்.

---

1 நாடுகிறோம்.

ச. அதி பிரக்ஞையோடு மகானுய் சந்தோஷமோடு ஒளியுள்ளவனுய் இன்பமளிக்கும் நீ சோமனே! இனிமையோடு இன்ப மளிப்பவனுய் இந்திரனுக்குப் பெருகவும். ரு. உன்னைப் பருகி விருஷபம் விருஷபத்தைப்போல் சஞ்சரிக்கிறது; எல்லாமறியும் உன்னைப் பருகி அதிக அறிவுடனுன அவன், [1] ஏதலன் சண்டைக்குப் போவதுபோல், சத்துருக்களின் உணவு முதலியவற்றை ஜயிக்கிறுன்.

சூ. துரிதமாய் செல்லும் சோமதாரைகள் சர்வக்ஞனுய் பொன் நிறமாய் அமிழ்த்தப்பட்ட சோமன்கள் விருப்பங்களை வர்ஷிக்கும் இந்திரனுக்குச் செல்லட்டும். எ. போரிர்குச் சாதனமான அமிழ்த்தப்பட்ட இந்த சோமன் இந்திரனுக்குப் பெருகுகிறது. ஜய சீலமுடைய இந்திரனை சோமன் சேதனஞ் செய்கிறுன். அவன் சாக்ஷாத் காரமாவதுபோல் அறி கிறுன். அ. இந்திரன் இந்த மகிழ்ச்சியிலே சாதிக்கப்படும் அனைத்தின் கிரகிப்பை அடைகிறுன்; மேலும் சலங்களை ஜயித்து வச்சிராயுதத்தை வசியமாக்குகிறுன்.

கூ. நண்பர்களே! உங்கள் ரசத்தின் முதன்மையான கைவசத்திற்கு மகிழ்ச்சியளிக்கும் பானத்திற்கும் நாயைத் துரத்தவும். நீண்ட நாக்குள்ள நாயை துரத்தவும். ம. புனிதமாக்கும் தாரையோடு அமிழ்த்தப்பட்டு சோமன் எங்கும் பெருகிக் கொண்டு வருகிறுன்: இந்து குதிரையைப்போலிருக்கிறுன். மக. மனிதர்கள், எதிர்க்க முடியாத சோமனை எங்கும் செல்லும் துதியால் அறிவால் அணுகி யக்ஞத்திற்காக திரமுள்ளவர்க ளாகட்டும்.

மஉ. எவற்றில் இளைஞன் வளர்கிறுனே அந்தப் பிரியமான நாமங்களை ஜயிக்க உணவிற்கு ஹிதமான

1 வலிமை யுள்ளவன்

சோமன் பெருகுகிறுன். எப்பக்கமும் செல்லும் மகத்தான சூரியனின் ரதத்தில் பெரியவனும் எங்கும் பார்ப்பவனும் இப்பொழுது ஏறியுள்ளான். ௫. பேசுபவபவனும், இந்தத் துதியின் எதிர்க்கமுடியாத பதியாயும் சத்திய நாவுடனுள்ளவன் இனிமையான ரசத்தை பெருக்குகிறுன் : மகனைப்போல் பூமியினுடைய பெயரையும் தந்தையின் பெயரையும் வெகு தூரத்தில் சோதியின் ஒளியான மூன்றுவதில் தரிக்கிறுன். ௬. ஒளி வீசி துதிக்கப்பட்டு மனிதர்களால் பொன்மயமான ஊற்றிலே கலசத்தில் சப்தஞ்செய்து சென்றுள்ளான்; சத்தியத்தின் ரசத்தைக் கறப்பவர்கள் அவனுக்கு கானஞ் செய்கிறுர்கள்; மூன்று நிலயங்களின் பதியே! உஷைக்குமேல் நீ பிரகாசஞ் செய்கிறுய். அப்பால் உங்கள் தேகத்திலுள்ள சந்திரனின் பானத்தை பெருகவும்.

---

## கண்டம் எஉ

**தேவதை - க-௫-அக்னி.** ௬-௰ இந்திரன். ரிஷி - க-உ-அக்னி **வைசுவாநரன்.** ௩-௫-ஸாகாமசுவன். ௬-எ-சௌபரி. அ - ௰ **நிருமேதன்.**

க. பலத்திற்காக ஒவ்வொரு யக்ஞத்திலும் ஒவ்வொரு கானத்தோடு அக்னிக்கு கானஞ் செய்யவும். பிரியமான நண்பனைப்போல் அறிஞனும் அமிருதமாயுமுள்ள அக்னியை நாம் துதிசெய்வோம். உ. பலத்தினுடைய மகன் நம்முடைய மேன்மையான தலைவனில்லையா? நமது ஹவிஷை யளிப்பவனுக்குத் தொண்டு செய்வோம். யுத்தங்களில் பலமளிப்பவனுகவும் எங்கள் ரட்சகனுகவும் அவனுகட்டும்; எங்கள் சரீரங்களின் ரட்சிப்பவனுகவும் நீயாகவேண்டும்.

ந. அக்னியே நீ வரவும். துதியில் வேறு கானங்களை உனக்கு கானஞ் செய்வேன். இந்த சோம துளிகளால் நீ வளர்ச்சியாகவும். உன் மனம் எந்த இடத்திலோ அங்கு சக்தியுடனான திடத்தை தரிக்கிறாய்; அங்கு நிலயத்தையும் இடத்தையு மடைகிறாய். ரு. உன் திருப்தி யளிக்கும் தேசசு, அக்னியே! இந்திரியங்களின் பதியே! நாசஞ்செய் பவையாக வேண்டாம்; அதற்காக எங்கள் உபசாரத்தை நீ யடைவாய்.

சூ. அபூர்வனே! வச்சிராயுதனே! உதவி நாடி திரத்தை அழைப்பவன்போல் நாங்கள் உம்மைக் கூப்பிடு கிறோம்: அதிசயமானவனே! உம்மை அழைக்கிறோம். எ. இந்திரனே! எல்லாச் செயல்களில் ரட்சையின் நிமித் தம் உம்மை உபாசனை செய்கிறோம். இந்த இந்திரன் இளை ஞன். தேசசுள்ளவன், சத்துருக்களைக் கொல்லுபவன். இந் திரனே! உம்மையே நாங்கள் நண்பர்களுடன் ஆசிரயத் திற்கு அருகனாயும் ரட்சிகனான உம்மையே அழைக்கிறோம்.

அ. இந்திரனே! துதிகளின் நண்பனே! சலங்களைத் தொடரும் சலங்களைப்போல் வந்துகொண்டு உன்னிடம் அணுகியுள்ளோம். விருப்பத்திற்காக உன் அருகில் வருகி றோம். கூ. கடல் நதிகளால் வளர்வதுபோல், வீரனே! வச்சிராயுதனே! நீயாகவே தினந்தோறும் பலமுடனான போதிலும், தோத்திரங்கள் உன்மகிமையை வளர்ச்சியாக்கு கின்றன. ௧௦. இந்திரனுடைய மகத்தாய் விரிந்துள்ள நுகத் துடியுடனான ரதத்திற்கு இந்திரவாகன பூதமான மொழி களால் இணைக்கப்பட்டு அவன் ஸ்தானத்தை அறியும் குதிரைகளை தோத்திரங்களால் இணைக்கிறார்கள்.

## கண்டம் எ௩

தேவதை—க - க௨, இந்திரன். ரிஷி. க - ௩, க0-க௨ —சுருதகக்ஷன். ௪-௬—வசிஷ்டன். எ-௯—மேத்யாதிதி புருமேதர்கள்.

க. எல்லாம் ஜயிக்கும் சதச்செயல் செய்யும், சனங்களுக்கு ஐசுவரியமளிக்கும் இந்திரனை உங்கள் சோமரசத்தைப் பருக கானஞ் செய்யவும். ௨. பலர்களால் அழைக்கப் பட்டு பலர்களால் துதிக்கப்பட்டு சதா காலம் பிரசித்தமானவன் இந்திரன் எனச் சொல்லுங்கள். ௩. இந்திரனே! எங்களுக்கு மகத்தான ஐசுவரியம் வன்மைகளை அளிப்பவனாகவும்; நடனஞ் செய்பவனே! மகானே! அவற்றை எங்கள் அருகே கொண்டுவரவும்.

௪. நண்பர்களே! நீங்கள் சோம பானம் பருகும் பொன் குதிரையுள்ளவனை இந்திரன் சந்தோஷமுடனுக கானஞ் செய்யவும். ௫. சத்தியதான மளிப்பவனை மனிதர்கள் கருதுவதுபோல் சத்திய ஐசுவரியனுக்கு கானஞ் செய்யவும்; நாங்களும் புகழட்டும். ௬. இந்திரனே! நீ எங்களுக்கு ஞானம் உணவு முதலியவை யளிப்பவன்; நூறு செயல்கள் செய்பவனே! வசுவே! எங்களுக்கு பொன் முதலியவற்றை அளிக்கிறாய்.

எ. உன் நண்பர்களான நாங்கள் இதை, அப்படியே அறியும் உன்னை துதிக்கிறோம். கண்வர்களும் துதிகளால் உம்மைத் துதி செய்கிறார்கள். அ. வச்சிராயுதனே! வேறு எவனையும் சுபமான கான துதிகளால் துதிக்கவில்லை. உன்னையே துதிகளால் நினைக்கிறோம். ௯. சோமன் அமிழ்த்துபவனை தேவர்கள் விரும்புகிறார்கள்: தூக்கத்தை அவர்கள் விரும்புவதில்லை. ஆயாச மன்னியில் அவர்கள் சோம்பலை தண்டிக்கிறார்கள்.

௭. மதன சீலமான இந்திரனுக்கு சோமனைப் பற்றிய எங்கள் துதிகள் துதிக்கட்டும்; கண்வர்கள் கானத்தை துதி செய்யட்டும். ௮. எவனில் ஐம்புலன்கள் மனம் புத்தி எல்லா காந்திகளுமுண்டோ எவனில் ஏழான சனங்கள் சந்தோஷமாகிறார்களோ அந்த இந்திரனை சோமனுக்கு அழைக்கிறோம். ௯. தேவர்கள் மூன்று உலகங்களில் திரிகதுர்க்கங்களில் எழுச்சியாக்கும் யக்ஞத்தை மனத்தை அளக்கிறார்கள்; எங்கள் மொழிகள் அதை அபிவிருத்தி செய்யட்டும்.

---

## கண்டம் ௭௪

**தேவதை — இந்திரன். ரிஷி—க - ௩ — இரிமிடன். ௪-௯—தூஸிதகாண்வன். ௭ — ௯ திரிசோகன். க0 - க௨ காண்வப் பிரியமேதன்.**

க. இந்திரனே! உனக்கு இந்த சோமனானது தேகத்தில் புல்லில் புனிதமாக்கப்பட்டுள்ளது; இதை அணுகவும் துரிதமாகவும், பருகவும். ௨. சக்தியுடனான ரசிமிகள் உள்ளவனே! பிரசித்த பூஜையோனே! உன் சந்தோஷத்திற்காக இந்த சோமரசம் அமிழ்த்தப்பட்டுள்ளது. சத்துருக்களின் நாசகாரியே! நீ அழைக்கப்படுகிறாய். ௩. பிராணன்களுக்கு குண்டபய்யனுக்கு சிரத்தையுடன் ரட்சிப்பவனாய் அறியாமையை அழிக்கும் வன்மையின் மகன் போலான பல புருஷனுக்கு சிருங்கவிருஷனின் மகனுக்கு என்மனத்தை அளிக்கிறேன்.

௪. பெரிய கைகளுடனான இந்திரனே! உன் வலது கையால் நானாவிதமாய் போஷகமான ஐசுவரியங்களை எமக்காக சேகரிக்கவும். ௫. செயல்களில் சிறந்தவனாய், வெகு அளிப்பவனாய் வெகு தானமான, வெகு துரித ரட்சணை யளிப்பவனான உம்மை அறிகிறோம். ௬. சூரனே! அளிப்

பதற்கு விரும்பும் உன்னை, பயங்கரக் காளையைப் போலான உன்னை தேவர்களும் மனிதர்களும் தடுப்பதில்லை.

எ. வீரனே! சோமன் அமிழ்த்தப்பட்டுள்ளபடியால் நீ பருக சோமனை ஊற்றுகிறேன்: திருப்தியாகவும்; மதுகரசோமனை முடிக்கவும். அ. உன்னை மூர்க்கர்கள் பரிகாசஞ்செய்பவர்களும் உதவி நாடுங்கால் நீ ஏமாற்றப்படவேண்டாம். நீ பலத்தின் துவேஷிகளை பிரமத்துவேஷிகளை நேசிக்கவேண்டாம். கூ. உன்னை இங்கு பால் கலந்தசோமனோடு மகத்தான ஐசுவரியத்திற்கு சனங்கள் சந்தோஷ முடனுக்கட்டும்; மிருகமான ஏரியைப் பருகுவது போல் பருகவும்.

ய. வசுவான இந்திரனே! இங்கு அமிழ்த்தப்பட்ட சோமனை வயிறு நிறையும் வரை பருகவும்; பயமற்றவனே உனக்குத் தருகிறோம். யக. மனிதர்களால் சுத்தமாக்கப்பட்டு, சாதனங்களால் அமிழ்த்தப்பட்டு புனிதங்களால் ஆட்டு ரோமங்களால் வடிகட்டப்பட்டுள்ள சோமன் நதிகளில் ஸ்னானஞ்செய்த குதிரைபோலாகும். யஉ. இந்திரனே! உனக்கு யவ அரிசியைப் போல் பால்களால் கலந்து இனிமையாய் செய்திருக்கிறோம்; உன்னை எங்கள் விருந்திற்கு அழைக்கிறோம்.

---

## கண்டம் எரு

**தேவதை—இந்திரன்.** ரிஷி—க-ங, விசுவாமித்திரன், ச-கூ, **மதுச்சந்தன்**, எ-கூ, சுனச்சேபன். க0-கஉ, நாரதன்.

க. ஐசுவரியபதியே! துதிகளால் பற்றப்படுபவனே! பலத்தோடு உனக்காக இந்த சோமன் அமிழ்த்தப்பட்டுள்ளது: அதன் ரசத்தை துரிதமாய் பருகவும். உ. உன் சுபாவத்தை நன்கு அனுசரிக்கும் சோமனில் உன் சரீரத்தை சாய்க்கவும்; சோமார்ஹனே! உன்னை அது இன்பமுடனுக்

கட்டும். ந. இந்திரனே! சோமன் உன் இரு வயிறு பாகங்களில் வியாப்தமாகட்டும். தோத்திரத்தால் தலையையும் தேகத்தையுமடையட்டும். ஐசுவரிய நிமித்தத்தால் உன் கைகளை வியாப்தமாகட்டும்.

ச. நண்பர்களே! துரிதமாய் உட்காரவும்; துதிகளை வகிப்பவர்களாய் இந்திரனுக்குத் துதி செய்யவும். ரு. சத்துருக்களை நசிப்பவனும் வெகு ஐசுவரியங்களின் தலைவனுன இந்திரனை பாயும் சோமனோடு துதி செய்யவும். சு. எங்கள் ஐசுவரியத்திற்கும் எல்லா நிறைந்த அளிப்புக்களோடு எங்கள் அவசியத்தில் எங்கள் அருகிலாகட்டும்; தேவ உணவோடு எங்கள் அருகில் அவன் வரவேண்டும்.

எ. ஒவ்வொரு அவசியத்திலும் ஒவ்வொரு யுத்தத்திலும் பெரும் வன்மையுடையவனுன இந்திரனை நண்பர்களான நாங்கள் ரட்சிப்பிற்கு அழைக்கிறோம். அ. எதிர்ப்பதற்கு அதிக வன்மையுடனும் புராதனத்தின் வீரனும் பூர்வத்தில் என் பிதா அழைப்பவனுமான அவனை அழைக்கிறேன். கூ. அவன் எங்கள் அழைப்பிற்கு கேட்பானேயானுல் ஆயிரம் விதமான ரட்சைகளோடு வன்மையும் ஐசுவரியங்களோடு கட்டாயமாய் வருவான்.

ய. எப்பொழுதும் வளரும் வன்மையின் லாபத்தின் பொருட்டு துதிப்பதற்கருகதையான செயல் செய்பவனை இந்திரனே! சோமன் பெருகுங்கால் நீ புனிதமாக்குகிறாய்: யக. ஏனெனில் அவன் மகானுகும். அந்தரிட்ச அசுரர்களை ஜயிப்பவனும் ரட்சிக்கத் துரிதனும் அதிசய சிறப்புள்ளவனும் முதன்மையான ஆகாசத்திலே தேவர்களின் நிலயத்திலிருக்கும் இந்திரனே ஜயத்தைக்கொண்டு வருபவனுகும். யஉ. பலமுடனுன இந்திரனை போரிர்கும் போரின் ஐசுவரியத்திற்கும் அழைக்கிறேன்; உதவிக்கு நண்பனுகவும் ஐசுவரியத்திற்காகவும் எங்கள் அருகிலாகவும்.

## கண்டம் ௭௬

தேவதை—க-உ—அக்னி, ௩-௪ உஷைகள். அசுவினி கள். ரிஷி—க-உ.—வாமதேவன். ௩-௪, வசிஷ்டன் ௫-௬ —வசிஷ்டன்.

க. பலத்தின் மகனாய், பிரியனாய் அறிவுடனான தூதனாய், சுபமான யக்ஞத்தில் சிறந்தவனாய், அமிருதனாய் விசுவத்தின் தூதனான அக்னியை இந்த நமஸ்காரத்தால் உங்களுக்காக அழைக்கிறேன். உ. அவன் சிவந்த ஒளியுடனான விசுவம் காக்கும் குதிரைகளை ரதத்தில் இணைக்கட்டும். நன்றாய் பூஜிக்கப்படுபவன் அவற்றைத் துரிதமாக்கட்டும்: யக்ஞமானது அனைத்தின் பிரமம்போலாகும். சாந்தகுண சம்பன்னமாகும். அந்த அக்னியான ஐசுவரியமளிப்பவனை சனங்களின் ஐசுவரிய தேவரை நீங்கள் நாடவும்.

௩. இருளை நீக்கி முன் சென்றவளாய் சோதியுலகின் பெண்ணானவள் தென்படுகிறாள்; மகத்தான அப்பெண் தன் கண்ணால் இருளை நீக்குகிறாள். அனுகூலமான அவள் பிரகாசத்தைச் செய்கிறாள். ௪. சூரியன் உதயமாகுங்கால் தேஜோமயமான திரமுள்ளவன் உஷையோடு தன் ஒளிகளை வீசுகிறான்; உஷையே! உன் உதயத்திலும் சூரியன் உதயத்திலும் எங்களுக்குரியவையுடன் நாங்கள் அடையலாமோ?

௫. காலையிலே உதய யக்ஞங்கள் அசுவினிகளே உங்களை அழைக்கிறார்கள். செயல் சீமானே! ரட்சிப்பிற்காக உன்னை அழைக்கிறேன். நீ வீடு வீடாகச் செல்லவும். ௬. தலைவர்களான அசுவினிகளே! அதிசய போஷணத்தை நீங்கள் அளித்திருக்கிறீர்கள்; இனிமையாய் துதி செய்பவர்களுக்கு அதைப் பிரேரிக்கவும். நீங்கள் இருவரும் ஒரே மனத்துடன் உங்கள் ரதத்தை எங்களுக்கு ஓட்டவும்; சோம சேர்க்கையான மதுவைப் பருகவும்.

## கண்டம் எஎ

**தேவதை—க-ங-அக்னி. ச-கூ சோமன். ரிஷி—க. உ. ங-அவத்சரன். ச-கூ அஸிதன் காசியபன் அமஹீர்யுவன்.**

க. ஆயிரமான பலன்களை அளிக்கும் ரிஷியினிடமிருந்து அவன் புராதன சோதியுடலே அனுசரித்து வீரமான புருஷர்கள் வெண்மையான பாலே கறப்பார்கள். உ. அவன் சூரியனைப் போலிருக்கிறான்; அவன் ஒளிகளுக்கு ஓடுகிறான்; வானத்தின் எழு ஒட்டங்களையும் தூண்டுகிறான். ங. அவனைப் புனிதஞ் செய்யுங்கால் இங்குள்ள எல்லாப் பொருள்களுக்கும் அதிகமாய் நிற்கிறான்: அவன் சூரியனைப்போல் தேவராகும்.

ச. பொன் நிறமாய் ஒளியுடனான சோமன் தேவர்களுக்காக தோன்றிய இவன் புனிதத்திற்கு ஓடுகிறான். பழைய சாதனத்தால் தேவர்களுக்குத் தேவனாக அறிஞனால் இந்தக் கவியானவன் வன்மையாக்கப் பட்டுள்ளான். கூ. பழைய ரசத்தைக் கறந்து கொண்டு புனிதத்தில் நீ பொழியப் பட்டுள்ளாய். சப்தஞ்செய்துகொண்டு நீ தேவர்களை தோற்றுவித்துள்ளாய்.

எ. தனிமையா யிருப்பவர்களை எங்கள் அருகில் கொண்டு வரவும். எங்கள் சத்துருக்களில் பயத்தைச் செய்யவும். பவமானனே! எங்களுக்கு ஐசுவரியத்தை அளிக்கவும். அ. நன்றாய் பிறந்து துரிதமாய் சத்துருக்களுக்கு பங்கஞ் செய்யும் பால்களால் அலங்காரமான இந்துவிற்கு தேவர்கள் வந்துள்ளார்கள். கூ. மனிதர்களே! தேவர்களுக்கு பூஜிக்கும் விருப்பத்தோடு புனிதமான இந்துவிற்கு கானஞ்செய்யவும்.

# கண்டம் எஅ

தேவதை க - கக அக்னி. ரிஷி க-ங, ரு - அ - சீயா வாசுவன். ச, டு பரத்வாஜ முதலியவர்கள். கூ சீயா வாசுவன், க0 பிரஜாபதி கக அம்பரீஷன்.

க. அலைகளைப்போல் எருமை முதலிய மிருகங்களைப் போல் மேதாவிகளான சோமர்கள் சலங்களை சனங்களை சிறந்த செயல்களுக்கு அழைத்துச் செல்லுகிறார்கள், உ. சத்தியத்தின் தாரையோடு பொன் நிறமாய் தேசசுடனை தாரைகள் சனங்களுக்கு ஐசுவரியங்களுடனை ஞானத்தை அளிக்கின்றன. ந. இந்திரன், வாயு, விஷ்ணு மருத்துக்களுக்கு பொழிந்த சோமர்கள் செல்லட்டும்.

ச. தேவர்கள் பருக அலைகளால் நதியைப்போல் அவன் பெருகி யுள்ளான்; தண்டின் இனிமை ரசத்தோடு விழித்தவன்போல் மதுநிறைந்த [1] கலசத்திற்குச் செல்லுகிறான். டு, விரும்பும் அர்ச்சுனன் பிரியமானவன் மகனுக்குச் சமானமாய் சுந்தரமாக்கப்பட வேண்டியவன். அவன் உடையில், ஈசனில், லயமாகிறான்; அவனை நதிகளில், கைகளினின்று சூரர்கள் ரதத்தை செலுத்துவதுபோல் பிரேரிக்கிறார்கள்.

சு. ஆனந்தம் பெருக்கும் சோமர்கள் யக்ஞத்தில் பொழியப்பட்டு ஐசுவரியமுடனை எங்கள் கீர்த்திக்கு பெருகுகிறார்கள். எ. மேலும் சோமன் ஹம்ஸத்தைப்போல் விசுவத்தின் கூட்டத்தை வசமாக்குகிறான். அ. அவன் பசுக்களால் அல்லது நல்ல செயல்களால் புலனாகின்றான். இந்திரனுக்கு இந்துவை அவன் பருக திரிதனின் பெண்கள் கனத்த பொருள்களால் பொன் நிறமுள்ளவனைத் தூண்டுகிறார்கள்.

---

1 இருதயத்திற்கு

கூ, தேவர்களின் நண்பனுன நீ இங்கு பெருகவும்: துதி செய்து கொண்டு புனிதத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் நீ பாய்கிருய். மது தாரைகள் உண்டாகட்டும். ω. அவன் வேகத்தில் பொன் நிறமுடன் அழகுடன் ரோமத்தின் சிக்கல் வழியாய் அவன்பெருகுகிருன்; தோத்திரிப்பவர்களுக்கு வீரமுடனுன கீர்த்தியை வர்ஷிக்கவும். ωக. சோமனுடைய ரசத்தை அமிழ்த்துபவனுக்கு பிரசித்தமான இந்த மொழியை மனிதனைப்போல இறக்கட்டும்; மக்களை பிருகு மக்கட்கள் துரத்தியதுபோல் சாதகமற்ற நாயைக் கொல்லவும்.

---

## கண்டம் எக

தேவதை - க-கரு, பவமான சோமன். ரிஷி - க - ங- ஜமதக்னி. ச-சு., கூங-கரு அமஹீயு. எ-கூ, கசியபன். ω - கஉ பிருகு வாருணி ஜமதக்னி.

க. சோமனே! பூஜனிய பாதுகாப்புக்களுடன் வேத நாயகனுய் பெருகவும்; சர்வ காவ்யங்களுக்கும் பெருகவும். உ. மொழியான நீ, முதன்மையான நீ கடலின் சலங்களை எழுச்சியாக்கி பெருகுவாயோ? ங. விசுவம் காண்பவனே! கவியே! சோமனே! உன் மகிமைக்கு இவ் வுலகங்கள் நிற்கின்றன. உனக்காக பசுக்கள் (வேதம் முதலியவைகள்) ஓடுகின்றன.

ச. இந்துவே! இணையில்லாதவனே! வர்ஷிப்பவனே! பெருகவும், பொழியவும்; சன சமூகங்களில் எங்களைக் கீர்த்தியுடனுக்கவும்: எங்கள் எல்லா சத்துருக்களையும் தூரத்திலாக்கவும். சோமனே! இந்த சந்தர்ப்பத்தின் உன் நட்பிலே உன் உயரிய கீர்த்தியிலே, யுத்தஞ் செய்யும் சத்துருக்களை அடக்கலாமோ? ரு. உன் கூர்மையான கோர

ஆயுதங்கள் சத்துருக்களைக் கொல்லுவதற்காகும்; ஒவ்வொரு சத்துருவினின்றும் எங்களைக் காக்கவும்.

௭. சோமனே! வர்ஷிக்கும் நீ ஒளியுடனிருக்கிறாய். நீ பலமுள்ளவன். வன்மையான விருதமுள்ளவன் எல்லாமளிப்பவனாய் நீ தர்மங்களை தரிக்கிறாய். ௮. வர்ஷிக்கும் சோமனே! வர்ஷிக்கும் சுபாவமான உன் வன்மை வர்ஷணசிலமாகின்றது. உன் வனமும் சேவையும் வர்ஷிப்பதாகும். உன் ரசமும் சுகமளிப்பதாகும்: நீயும் வர்ஷிக்கும் குணமுள்ளவன். ௯. இந்துவே! குதிரையைப்போல், துரிதப் பொருளைப்போல், பசுக்களையும் அசுவங்களையும் நாதஞ் செய்கிறாய்: எங்கள் ஐசுவரியத்திற்கு கதவுகளைத் திறக்கவும்.

௰. நீயே ஒளியோடு வர்ஷிப்பவன்; சுவர்கத்தைக் காணும் பவமானனே! ஒளியுடனான உன்னை அழைக்கிறோம். மனிதர்களால் புனிதமாக்கப் பட்டு தாரைகளால் தெளிக்கப்பட்டபொழுது உன் நிலயமான துரோண கலசத்தில் வியாப்தமாகிறாய். ௧௧. நல்லாயுதம் தரித்தவனே! மகிழ்ச்சியுடனாகி சுவீர்யத்தை எங்களுக்குப் பொழியவும்; இந்துவே! இங்கு வரவும்.

௧௩. புனிதத்தில் எங்கும் வழியும பவமானின் உன் நட்பை நாங்கள் நாடுகிறோம். ௧௪. புனிதத்தில் பெருகும் உன் அலைகளோடு சோமனே! எங்களுக்கு சுகமளிக்கவும். ௧௫. அவனான சர்வ சகத்தின் ஈசனான சோமனே! புனிதமாகுங்கால் எங்களுக்கு ஐசுவரியத்தையும் வீரமக்கட்களையும் கொண்டு வரவும்.

## கண்டம் அ௦

தேவதை—க - ௩, அக்னி. ச - சு மித்திராவருணர்கள். எ - ௯ இந்திரன். கக - கங இந்திராக்னி. சு ரிஷி க - ௩ மேதிதிகண்வன் ச - சு மேதாதிகண்வன். எ - கூ மதுச்சந்த விசுவாமித்திரன். கக - கங பிரஸ்கண்வண், காண்வன்.

ஹோதாவாய் விசுவவேதசனும் இந்த யக்ஞத்தின் நன்கு செய்பவனுன அக்னியான தூதனை பஜிக்கிறோம். உ ஹவிஷு வகிக்கும் பலர்களின் பிரியமான, வீடுகளின் பதியான அக்னியை சதாகாலம் அந்த ஈசனை அழைக்கிறார்கள். ௩ புல்லை இருதயத்தை புனிதமாக்குபவனுக்கு புலனுகும் அக்னியே தேவர்களை இங்கு கொண்டுவரவும்; நீ எங்கள் ஹோதாவாகும். நீ துதிக்கருனுகும்.

ச பிறந்த புனித பலத் தோடான சோமனைப் பருக நாங்கள் மித்திரன் வருணனை அழைக்கிறோம். ரு சத்தியத்தால் சத்தியத்தை வளர்ச்சியாக்கும் சத்தியத்தின் சோதிகளின் தலைவர்களான மித்திரன் வருணர்களை அழைக்கிறோம். சு வருணன் முதன்மையான ரட்சகனுகட்டும். எல்லா ரட்சைகளோடு மித்திரன் எங்களைக்காக்கட்டும்; இருவர்களும் எங்களை ஐசுவரிய முள்ளவர்களாக்கட்டும்.

எ. கானஞ்செய்பவர்கள் இந்திரனையே பெரிய கானஞ் செய்கிறார்கள். மந்திரஞ் செய்பவர்கள் மந்திரங்களால் இந்திரனையே, துதிகளால் அத்வர்யுக்கள் இந்திரனையே துதி செய்கிறார்கள். அ பொன்மயமாய் வச்சிராயுதனுன இந்திரன் அவன் வாணியினுல் இணைக்கப்பட்ட குதிரைகளுக்கு அருகிலுள்ளவன்; அவற்றை ஒன்று சேர்ப்பவனுகும். கூ இந்திரனே! உக்கிரமான நீ உக்கிரனே ரட்சைகளால் போர்களில் எங்களை ரட்சிக்கவும்; ஆயிர ஐசுவரியமளிக்கும் போர்களிலும் எங்களை காக்கவும். ௰ இந்திரன் தீர்கமான

தர்சனத்திற்கு சோதி யுலகில் சூரியனை எழுச்சியாக்குகிறான். மேகத்தை ரசிமிகளால் தூண்டுகிறான்.

௰க.' ரட்சணத்தை விரும்பும் நாம் இந்திரன், அக்னிக்கு மகத்தான நமஸ்காரத்தையும் துதியையும் அறிவோடு வேதமொழிகளையும் கொண்டுவருகிறோம். ௰உ. மேதாவிகள் அநாதிகாலத்தினின்று ரட்சிப்பதற்காக இப்படி துதிக்கிறார்கள்; பரஸ்பரம் இணைந்த பெரியார்களும் பலத்திற்காக துதிக்கிறார்கள். ௰௩. தோத்திரத்தை விரும்புபவர்களும் ஞானிகளும் புனிதமான ஞானத்தை அடைய ஐசுவரிய விருப்பத்தோடு யக்ஞங்களில் துதிகளால் அழைக்கிறோம்.

---

## கண்டம் அக.

**தேவதை—க-௩ பவமான சோமன். ௪, ௫, ௬, இந்திரன். ரிஷி—க-௩ பிருதுவாருணி ஜமதக்னி. ௪, ௫, ௬, உபமன்யுவாசிஷ்டன்.**

க. மருத்துக்களின் தலைவனுக்கு உற்சாகமளித்துக் கொண்டு சர்வமான (ஐசுவரியங்களை) பலத்தால் ஜயித்துக் கொண்டு தாரையோடு திடமுள்ளவனாய் பெருகவும். உ. பவமானனே! வானம் பூமியை தரித்து சர்வமும் காணும் பலமுடனான உன்னை போர்களில் ஸ்மரணை செய்கிறோம், அனுப்புகிறோம். ௩. என் கானங்களால் வரவேற்கப்பட்டு, பொழியப்பட்ட நீ பொன்நிறமான தாரையோடு பெருகவும், உன் நண்பனை போர்களில் பிரேரிக்கவும்.

௪. வானத்தையும் பூமியையும் இடிமுழக்கஞ் செய்து கொண்டு வெகு நிற விருஷபம் பசுக்களைக் குறித்து சப்தஞ் செய்வதுபோல் நீ செல்லுகிறாய்: போரில் இந்திரனைப் போல் சப்தம் கேட்கிறது. அனைவரையும் சேதனமாக்கி இந்த மொழியைப் பொழிகிறாய். ௫. பாலோடு பெருகி

இனிமையான ரசத்தில் அதிகமாய் மது நிறைந்த செடியை தூண்டிக்கொண்டு நீ பாய்கிறாய்; நீ தெளித்தவனாய் புனித மாக்கிக்கொண்டு சந்தத தாரையை செய்துகொண்டு இந்திர னுக்காக முன் செல்லுகிறாய். சு. சோமனே! சந்தோஷத் திற்காக இன்பமளித்துக்கொண்டு சலம் கிரகிப்பவனை அடி பட்ட மேகம்போல் தாழ்த்தி பெருகவும்; சோதி நிறைந்து எங்கும் தரித்து மொழிந்து எங்களுக்கு உணவை விரும்பி பெருகவும்.

---

## கண்டம் அஉ.

தேவதை—க-சு இந்திரன். ரிஷி—க-உ சம்யுர் பார் ஹஸ்பத்யன். ங-ச—பிரஸ்கண்வன் காண்வன். ரு, சு. நிருமேதன்.

க. துதி செய்யும் நாங்கள் வன்மையினுடைய எதையு மடைய இந்திரனே! உம்மையே அழைக்கிறோம். வீரர் களின் தலைவனான இந்திரனை போரில் மனிதர்கள் அழைக் கிறார்கள் குதிரை சம்பந்த நிலயங்களிலும் உம்மை அழைக் கிறார்கள். உ. அற்புதனே! வச்சிரஹஸ்தனே! வச்சிரம் போலுள்ளவனே! புத்தியால் பகைவனை பாழாக்குபவனே! பெரியவனே! போற்றப்படுபவனே! ஜயிப்பவனின் மகத் தான சக்தியையும், பசு, ரதம் குதிரையையும் நன்றாயளிக் கவும்.

ங. ஐசுவரியங்களை அளிக்கும் மகவானான இந்திரன் ஆயிரம் ஐசுவரியங்களை தோத்திரமளிப்பவர்களுக்கு அளிக் கிறான்: எப்படி நான் அவனை அறிவேனோ அப்படியே நீங்கள் சுப ஐசுவரியமுள்ள இந்திரனை கானஞ்செய்யவும். ச. நூற்றுக்கணக்கான சைன்னியத்தோடு முன் செல்லு கிறான்; அவனை நாடுபவர்களுக்கு சத்துருக்களைக் கொல்லு

கிருன்; மலையினின்று சலம் விழுவதுபோல் வெகுதன முள்ள ஆன்மாவின் ஐசுவரியங்களைப் பெருக்குகிருன்.

ரு. வச்சிராயுதனே! உன்னை உற்சாகமுள்ள மனிதர்கள் இச்சமயம் நேற்று பருக அளித்தார்கள்; இந்திரனே; தோத்திரமளிப்பவன் துதியை இங்கு கேட்கவும். எங்கள் நிலயத்தை அடையவும். சூ. பொன்நிற குதிரையுள்ளவனே! சுபமான முகமுள்ளவனே! துதிகளால் தோன்றுபவனே! உன்னைத் துதிசெய்கிறோம். அறிஞர்கள் உன்னால் (தம்மையே) அலங்காரம் செய்துகொள்ளுகிருர்கள். நீ ஆனந்தமுடனுகவும். துதிப்பதற்கருகனுக கேட்பதற்கும் அருகதையானவை சோமன் பெருக்கில் உன்னுடையதே. அவை ஞானமளிப்பவை யாகும்: உபமானமில்லாதவை யாகும்.

---

## கண்டம் அங.

தேவதை—க-சூ—பவமான சோமன். ரிஷி—க-ங அமஹீயுன். ச-சூ-நஹு ஷோமானவன்.

க. அரக்கர்களை ஒழித்து தேவர்களுக்குப் பிரியமாய் சந்தோஷமளிக்கும் சிறப்புடனுன உன்னுடைய ரசத்தோடு சோமனே! நீ பெருகவும். உ. சோமனே! சத்துருவையும் நட்பற்றவனையும் கொன்றுகொண்டு தினந்தோறும் போர் வன்மையை அளித்துக்கொண்டு பசு, குதிரை முதலியவைகளை அளிப்பவனுயிருக்கிறுய். ங. சுப நிற பசுக்களால், கருடனைப்போல் தன் நிலயத்தில் சாய்ந்துகொண்டு நன்ருய் கலப்புடனுகவும்; பொன்நிறமாகவும்.

ச. பூஷணுய், பகனுய் ஐசுவரியனுய் இந்த சோமன் புனிதமாக்கப்படுங்கால் வருகிருன்; சகத்தின் பொருள்களின் தலைவனுன சோமன் வானம் பூமியை பிரகாசஞ்செய்

கிருன். ரு. பிரியமுடனுன ஒளியுடனுன பசுக்கள் மகிழ்ச்சிக்காக ஒன்ருய் கானஞ் செய்கின்றன; துளிகள் புனிதமாகுங்கால் சோமரசம் வழிகளைச் செய்கின்றன. சு. ஐந்து சனங்களின் மேலே நாம் ஐசுவரியத்தை ஜயிக்க இருப்பவனுயிருக்கும் பவமானனே! துதிப்பதற் கருகதையாய் ஓஜசுடன் கலந்த ரசத்தைக் கொண்டுவரவும்.

---

## கண்டம் அச.

**தேவதை—க-ரு பவமான சோமன். ச-சு இந்திரன். எ-க—இந்திரன். ரிஷி—க-ரு—பிருஷ்ணயாயி. ச, ரு, சு—சுருதகக்ஷன், சுகக்ஷன். எ-க ஜேதா மதுச்சந்தஸன்.**

க. எங்கும் பார்ப்பவன் விருப்பங்களை வர்ஷிப்பவன், மனிதர்களின் தலைவன், சோதி, காலைகள் தினங்களை வளர்ச்சியாக்குபவனுன சோமன் பெருகுகிருன்: அவன் சலங்களின் பிராணனுய் கலசங்களில் அவன் சப்தஞ் செய்கிருன்; மனிதர்களின் துதியால் இந்திரனின் இருதயத்தில் நுழைகிருன். உ. அவன் மேதாவிகளால் பெருகுகிருன்; மனிதர்களால் தூண்டப்பட்டு புராதன கவியானவன் கோசங்களில் பெருகியுள்ளான்: இந்திரனின் நண்பனுக வாயுவின் பலத்தை அபிவிருத்தி யாக்கிக்கொண்டு திரிதனின் நாமத்தை சனனஞ்செய்து மதுரமான ரசத்தைப் பெருகச் செய்கிருன். ரு. அவன் புனிதமாகி உஷஸை ஒளியுடனுக்குகிருன், நதிகள் பெருக நிலயமளிக்கிறவனும் அவனே! அவன் மூன்று ஏழு பசுக்களின் பால் தாரையை பெருகச் செய்து மகிழ்ச்சியளிக்கும் சோமன் இருதயத்திற்காக ரமணீயமாகப் பெருகுகிருன்.

ச. நீ வீரபுருஷனின் நண்பனுகும். நீ சூரனுகும், வன்மை யுள்ளவனுகும் அதாவது நிலையாயிருப்பவனுகும்.

உன் மனத்தை நாங்கள் ஆராதிக்கட்டும். ௫. வெகு ஐசுவரியமுள்ள இந்திரனே! சகலமான பூஜிப்பவர்களால் பொருள் முதலியவை கொடுக்கப்பட்டன. ஆதலால் இந்திரனே! நீ எங்களிடம் வசிக்கவும். ௬. வன்மையான பதியே! சோம்பலான பிராமணன் போலிருக்கவேண்டாம். பாலுடன் கலந்த அமிழ்த்தப்பட்ட சோமனில் சந்தோஷமுடனாகவும்.

எ. எல்லாத் துதிகளும் கடல்போல் வியாப்தமான இந்திரனை வளர்ச்சியாக்கிற்று. அவன் ரதர்களின் நடுவே அதிசய ரதமுள்ளவன்; வன்மையின் தலைவனாய் வீரர்களின் பதியாகும். அ. பலத்தின் பதியே! இந்திரனே! உன் நட்பிலே வன்மையுடனாகி பயமன்னியிலாக வேண்டும்: எப்பொழுதும் ஜயிக்கப்படாத, ஜயிப்பவனை துதிகளால் புகழ்கிறோம். ௯. இந்திரனுடைய ஐசுவரியங்கள் பூர்வத்தினின்று தோத்திரஞ் செய்பவர்களுக்கு பசுக்களுடன் கூடிய போரின் பொருளை அளிக்குங்கால் ஒரு பொழுதும் தவறுவதில்லை.

---

## கண்டம் அ௫.

**தேவதை க - கச, பவமான சோமன். ரிஷி க-௩ ஜமதக்னி. ச, ௫, ௬, பிருதவாருணி ஜமதக்னி. எ-கக-கவீர் பார்கவன். கஉ - கச - கசியபன்.**

க. நமக்கு எல்லா சௌபாக்கியங்களையும் கொண்டுவர புனிதமான வடிகட்டி வழியாய் இந்தத் துரிதமான சோம துளிகள் பொழியப்பட்டன. உ. பலமுடனான சோமன்[கள்] வெகு தீமைகளைத் தொலைத்து நமது புத்திரபௌத்திரர்களுக்கு ஐசுவரியங்களை குதிரைகளை தானாகவே அளித்துக் கொண்டு பாய்கிறான். ௩. பசுக்களுக்கு உயர்ந்த துதி செய்பவர்களாய் எங்களுக்கு பொருளையும் கீர்த்தியையும் உத்தம நிலைகளையும் வர்ஷிக்கிறார்கள்.

ச. ஆகாச வழியாய் செல்ல மனிதர்கள் சார்பில் ராஜாவான பவமானன் துதிகளால் துதிக்கப்படுகிறான். ரு. சோமனே! தேவர்கள் பருக பொழியப்பட்டவனான நீ ஒளியுடனாக அழகைப்போல் நீ பலத்தையும் துரித சுபாவத்தையும் கொண்டு வரவும். இந்துவே! அளவில்லாத பசுக்களுடன் குதிரைகளுடன் போஷணத்தை ஐசுவரியத்தை எங்கள் ரட்சிப்பிற்கு கொண்டு வரவும்.

எ. பெரிய சோதியுலகின் பெரிய நிலயங்களிலுள்ள ஐசுவரியங்களை தரிக்கும் நீ, சுபமான உன்னை சிறந்த செயல்களோடு யாசிக்கிறோம். அ. சோமன் வீரனை வீழ்த்துபவன், துதிக்கத் தகுந்தவன், மேன்மையான விருதமுள்ளவன், மகிழ்ச்சியளிப்பவன். வெகு சத்துருக்களின் கோட்டைகளைத் தகர்ப்பவன். கூ. சுப செயலுள்ளவனே! உன்னிடம் ஐசுவரியம் வந்தன, வருகின்றன. ராஜனான உன்னை வானத்தினின்று களைப்பண்ணியில் சுபர்ணன் கொண்டுவந்தான் வருகிறான். கூ. பிறகு நன்றாய் பார்ப்பவனாய் அபீஷ்டத்தைச் செய்பவனாய் இந்திரனின் சொந்த பலத்தை பிரேரித்துக்கொண்டு புகழ்வதற்கான மகத்துவத்தை வியாப்த மாகிறான், அடைகிறான். கக. சலத்தின் பிரேரகனாய் சத்தியத்தின் காவலனாய் எங்குமுள்ள தேவருக்குச் சமானமான சோமனை பட்சி கொண்டுவந்தது.

கஉ. சோமனே! மனிதர்களால் சுத்தமான நீ எங்கள் உணவிற்கு தாரையோடு பெருகவும்; ஒளியால் பசுக்களை அணுகவும். கங. கானம் விரும்புபவனே! பால் தயிரை இத்தேகத்தை தெளிக்கப் படுங்கால் புனிதமாகி சனங்களுக்கு ஞானம் உணவு முதலியவற்றை செய்யவும். கச. வன்மைகளோடு ஒளியுடனாய் தேவர்கள் பருக புனிதமாக்கப்பட்டவனாய் ஹித கரமான நீ இந்திரனின் நிலயத்திற்குச் செல்லவும்.

## கண்டம் அகூ.

தேவதை - க-ங அக்னி. ச . ரு மித்ரா வருணர்கள். எ - கூ - மருத்துக்களும் இந்திரனும். ய - கஉ இந்திராக்னி. ரிஷி - க - ங மேதாதிதி கண்வன். ச-கூ-மதுச்சந்த விசுவா மித்திரன். ய-கஉ - பரத்வாஜ பார்ஹஸ்யபத்யன்.

க. அக்னி அக்னியால் எழுச்சியாகிறான், அவன் கவி, கிருகபதியாகும் பலமுள்ளவன். ஹவ்யம் எடுத்துச் செல்லுபவன். அகப்பை-சுவாலே-அவன் முகமாகும். உ. தேவரே! அக்னியே! ஹவிஷ்களின் பதியான எவன் தூதனுன உன்னே உபாசிக்கிருனே அவனுக்கு அவசியமாய் ரட்சகனுகவும். ங. தேவர்கள் புசிக்க ஹவிஷுடனுனவன் அக்னியை அழைக்குங்கால் அவனுக்கு ஒளியுள்ளவனே! சுகமளிக்கவும்.

ச. புனித பலமுடைய மித்திரனே சத்துருக்களே சிதைக்கும், அளிக்கப்பட்ட நட்பால் அறிவை சாதிப்பவனுன வருணனே அழைக்கிறேன். ரு. மித்திர வருணர்களே! சத்தியத்தினுல் சத்தியத்தை செழித்தோங்கச் செய்பவர்களே! சத்தியத்தை நாடி பெரிதான பெருஞ் செயல்களே அடைந்தீர்களோ? கவிகள், உபகாரமாவதற்கான வெகு நிவாசிகளான மித்திர வருணர்கள் எங்களுக்கு பலமான ஐசுவரியத்தை அளிக்கவும்,

எ. பயமன்னியிலுள்ள இந்திரனேடு சந்தோஷமளித்துக்கொண்டு சமான ஒளியுடன் மருத்துக்களான நீங்கள் காணல்வேண்டும். அ. அவர்கள் யக்ஞத்தின் நாமத்தைத் தரித்துக் கொண்டு (வருஷா காலத்திற்க)ப்பால் அவர்கள் வழக்கம்போல் சீவாத்மாவுடன்—மறுபடியும் கர்ப்பாகாரத்தைத் தொடர்வார்கள். கூ. திருடமா யிருப்பதையும்

அசைக்கும் துரித தேவர்களோடு இந்திரனே! குகையில் கோக்களையுங் கண்டாய்.

ய. எந்தச் செயல்கள் இங்கு பூர்வகாலத்திலும் எல்லாம் புகழப்பட்டுள்ளதோ அந்த இருவர்களை நான் அழைக்கிறேன்; இந்திர அக்னியே எங்களை இம்சிக்க வேண்டாம். கக. உக்கிரனாய் சத்துருக்களைக் கொல்லுபவனை இந்திராக்னியை அழைக்கிறோம். இந்தப் போரில் அவர்கள் எங்களை சுகமாக்கவேண்டும். கஉ. ஆரியர்களின் சத்துருக்களை அழிக்கவும்; வீரர்களின் தலைவனே; தாசர்களைக் கொல்லவும். எல்லா துவேஷிகளையும் துரத்தவும்.

---

## கண்டம் அஎ.

தேவதை-க-ங. பவமானசோமன். ச, ரு. சு, பவமான சோமன். ரிஷி - க - ங சப்தரிஷிகள். ச, ரு, சு பராசரன்.

செல்லும் சுபாவமான சோம துளிகள் ஆகாசத்தின் அதி உத்தம நிலயத்தில் ஒடுங்கால் இனிமை நிறைந்து மனோமயமானவன் இன்பமளித்து சந்தோஷ மளிப்பவன் பெருகுகிறான். உ. பவமானன், தேவர், பெரியவர் சத்தியவடிவமான மன்னன் சமுத்திரத்தைத் தாண்டவேண்டும்; மித்திரன் வருணனுடைய தர்மத்தால் சத்தியத்தை பெருக்குக் கொண்டு நீ பாயவேண்டும். ங. மனிதர்களால் காக்கப்பட்டு எங்கும் பார்த்து விரும்பப்படும் கடலை நிலயமாக உள்ள தேவர் பொழிந்தோடுகிறார்.

ச. யக்ஞ கர்த்தா ஆதித்தியன் மூன்று மொழிகளைச் சொல்லுகிறார். சத்தியத்தின் சோதியையும் பிரமத்தின் மனத்தையுத் அவர் சொல்லுகிறார்; கோபதியை பசுக்கள் வினவிக்கொண்டு செல்லுகின்றன. விரும்பும் துதி செய்பவர்கள் சோமனுக்குச் செல்லுகிறார்கள். ரு. பசுக்கள்,

பிரீதியுடனுன சோமனை நோக்கிச் செல்லுகின்றன, மேதாவிகள் சோமனை, துதிகளால் கேட்டுக்கொண்டு நாடுகிறார்கள். சோமராஜன் புனிதமாயுள்ளான், போற்றப்படுகிறான், எங்கள் திரிஷ்டுபுக்கள் மந்திரங்கள் சோமனில் இணைகின்றன. ௬ பாத்திரங்களில் உன்னை சோமனே இப்படி ஊற்றுங்கால், நீ புனிதமாகுங்கால் எங்கள் ஐசுவரியத்திற்கு நீ பெருகவும்: மகத்தான மதத்தால் இந்திரனை பிரவேசிக்கவும், வாக்கை வளர்ச்சியாக்கி வெகுவித அறிவை சனனஞ் செய்யவும்.

---

## கண்டம் அஅ.

தேவதை - க - எ இந்திரன். ரிஷி க - உ புருஹன்மா, ௩, ௪, ௫, மேத்யாதிதி காண்வன். ௬, எ, வசிஷ்டன்.

இந்திரனே! நூறு சோதி யுலகங்களும் நூறு சகத்தின் உலகங்களும் உன் பிரகாசத்தை அடைவதில்லை. வச்சிராயுதனே! ஆயிரமான சூரியர்களும் வானமும் பூமியும் உனக்கு நிகராவதில்லை. உ. வர்ஷிக்கும் இந்திரனே; எல்லாவன்மைகளுடனுன செயல்களையும் உன் மகத்தான பலத்தால் செய்கிறாய் ;-பலமுள்ளவனே! பசுக்கள் நிறைந்த நிலயத்திற்கு எங்களை ரட்சிக்கவும்; வச்சிராயுதனே! அதிசய உதவிகளோடு ரட்சிக்கவும்.

௩ ஒழுக்கமான புல்லுடன் அமிழ்த்தப்பட்ட சோமனுடனுன நாங்கள், உன்னை இந்திரனை, சலங்கள்போல் சூழ்கிறோம் புனிதத்தின் பெருக்கிலே, விருத்திரனைக் கொல்லுபவனே! உன்னைச் சுற்றிலும் துதி செய்பவர்கள் உபசரிக்கிறார்கள். ௪ வசுவே! மனிதர்கள் உன்னை உச்ச ஸ்தானத்தில் துதிகளோடான சோமத்தினால் அழைக்கிறார்கள்: வீடுபோல் ரசத்திற்கு அவன் தாகமுடன் வருங்கால் சப்தஞ்

செய்யும் காளையைப்போல் (கர்ச்சனை செய்கிறுன்) ரு வீர னே! வீரமான கண்வர்களோடு ஆயிரமான வன்மைகளை ஜயிக்கவும்: அளிக்கவும் மகவானே! எல்லாம் பார்ப்பவனே! சத்துருக்களை ஜயிப்பவனே! சுவர்ணவடிவமான பசு முத லிய ஐசுவரியங்களை துரிதமாய் யாசிக்கிறேன்.

சு. முயற்சி யுள்ளவன் மகத்தான புத்தியோடு இணைந்து வன்மையை கிரகிக்கிறுன்; அதிகமாய் அழைக்கப் படும் உங்கள் இந்திரனை தச்சன் கனமான கட்டையை வளைப்பதுபோல், வணங்குகிறேன். எ. பெரிய ஐசுவரியங் களை அளிக்கும் புருஷர்கள் துச்சஸ்துதியை விரும்புவ தில்லை; தன முதலியவற்றில் தரித்திரனுக்கு ஐசுவரியமும் வியாப்தமாவதில்லை; மகவானே! பாலனஞ் செய்யும்தினத் தில் என்னைப்போ லுள்ளவனுக்கு அளிக்க மிகவும் சுலபமா கும், சிறந்ததாகும்.

---

## கண்டம் அகூ.

தேவதை - க - கூ பவமான சோமன். ரிஷி - க - ங திரி தன், ச -சு - யயாதி நாஹுஷன், எ - கூ, பவித்ரன்

க. மூன்று மொழிகள் வேதங்கள் சொல்லப்படுகின் றன; பால் அளிக்கும் பசுக்களை கன்றுகள் கதறுகின்றன. பொன் நிறமுள்ளவன் சப்தஞ் செய்துகொண்டு செல்லுகி றுன். உ. பிரம பிரேரிதமாய் சத்தியத்தின் தாய்கள் சோதி யுலகினின்று சிசுவை நனைத்துக்கொண்டு துதிசெய் கிறுர்கள். ங. ஐசுவரிய சம்பந்தமான நான்கு கடல்களை எங்களுக்கு சோமனே! எங்கும் பெருக்கவும். அபரிமித மான ஐசுவரியங்களையும் பெருக்கவும்.

ச. மதுநிறைந்த இன்பமளிக்கும் புலனுன புனித முடனுன சோமர்கள் இந்திரனுக்கு பாய்கிறுர்கள்; உங்கள்

ஆனந்தரசம் தேவர்களை அணுகட்டும். ரு. இந்து இந்திரனுக்குப் பெருகுகிறான் என இப்படி தேவர்கள் சொல்லுகிறார்கள்; பலவந்தனாய் சர்வத்தின் பிரபுவாய் வாசஸ்பதியானவன் பூஜைகளை விரும்புகிறான். சு. ஆயிரம் தாரைகளுடன் சமுத்திரனைப் போலுள்ளவன் வேதமொழிகளை விளக்குபவன் ஐசுவரியங்களின் பதி இந்திரனின் நண்பனான சோமன் தினந்தோறும் பெருகுகிறான்.

எ. பிராமணஸ்பதியே! உன்னுடைய சோதகமான புனித அங்கம் விஸ்தாரமாயுள்ளது; பிரபுவான நீ, சரீரத்தை எங்கும் நுழைகிறாய். சூடற்றவன் சாரமில்லாதவன் (இதை) அடைவதில்லை. பரிபக்குவர்களே யாகத்தைத் தாங்குபவர்களே இதைஅடைகிறார்கள். அ. சத்துருக்களைத் தாபஞ் செய்யும் புனிதப்பொருள் சோதியுலகத்தில் விஸ்தரிக்கப் பட்டுள்ளது; அதன் இழைகள் ஒளி வீசிக்கொண்டு வெகு விதமாய் நிற்கின்றன. இதன் வன்மைகள் புனிதஞ் செய்பவனைக் காப்பாற்றுகின்றன; சுவதேசசால் சோதியுலகத்தின் உன்னத நிலைக்கு ஏறுகிறார்கள். கூ. முதன்மையான ஆதித்தியன் உஷஸை ஒளிவீசச் செய்கிறான்; சிருட்டிப் பொருள்களில் போர்விரும்பி அவன் சப்தஞ் செய்கிறான்; இவன் பிரக்ஞையால் அறிஞர்கள் பெருஞ் செயல்களைச் செய்கிறார்கள்; மனிதர்களைக் காணும் பிதுருக்களும் கர்ப்பத்தை தரிக்கிறார்கள்.

---

## கண்டம் கூய.

தேவதை - க, உ அக்னி. ங - ரு, இந்திரன் சு-அ. இந்திரன். ரிஷி - க, உ, சோபரி காண்வன் ங-ரு கோசூக்தினர் அசுவ சூக்தினர்கள். சு, எ, அ - திரஸ்சிகள்.

க. உப ஸ்தோத்திரஞ் செய்பவர்களே! தாராளமாய் அளிப்பவனும் மகத்தான ஒளியோடு சத்தியமுடனான

அக்னிக்கு கானஞ் செய்யவும். உ. ஐசுவரியமுள்ளவன் ஒளியுள்ளவன் பிரகாசமானவன் அழைக்கப்பட்டவன் வீரம் முதலியவுடனான கீர்த்தியை அளிக்கிறான். அதிக சக்தியுடனான நல்ல புத்தி எங்களை அணுகி வன்மைகளோடான உதார குணத்தோடு வரட்டும்.

௩. வர்ஷிப்பவனாய் சத்துருக்களை கொல்லுபவனாய் உலக கர்த்தாவுமாய் பொன்போல் ஒளிவீசும் வச்சிராயுதனே! உன் சந்தோஷத்தை துதிசெய்கிறோம், நாடுகிறோம். ச. இந்திரனே! எந்த சாமர்த்தியத்தால் சாதகனான மனனுக்கு ஞான ஒளிகளை அடையச் செய்கிறாயோ அந்த சாமர்த்தியத்தினால் ஆனந்தமாகி இந்தப் புல்லில் நீ ஒளி வீசுகிறாய். ரு. அறிஞர்கள் இன்னும் பழைய காலம்போலவே உன்னை ஸ்துதி செய்கிறார்கள். வர்ஷிப்பவையின் பத்னிகளான சலங்களை தினந்தோறும் நீ ஜயிக்கவும்.

சா. உன்னை சேவை புரிபவனின் அழைப்பை திரிசியின் அழைப்பை இந்திரனே! செவி கொடுக்கவும். பசுக்களின் ஐசுவரியங்களோடும் வீரமக்கட்களாலும் அவனை திருப்திசெய்யவும்: நீ மகானாகும். எ. இந்திரனே! புராதனமாயும் சத்தியத்தின் நிறைவுடனும் ஞானமனத்தினின்று தோன்றும் புத்தியுடனான புதியதான இன்பமளிக்கும் கானத்தை கனிந்த மொழியை உனக்காக உண்டாக்குகிறான். அ. அந்தத் துதிகளும் கானங்களும் எவனை நன்றாய் விளக்குகின்றதோ அந்த இந்திரனை நாங்கள் துதி செய்வோம்; ஜயிப்பதற்கு முயன்றுகொண்டு பலமுடனான வீரனின் வீரச் செயல்களை நாடுகிறோம் பஜிக்கிறோம்.

## கண்டம் கூக.

தேவதை - க - கஉ பவமான சோமன். ரிஷி க - ௩ ஆகிருஷ்டா பாஷர்கள். ச - சு அமஹீயுன். எ - கஉ மேத்யாதிதி.

க. பவமானனே! உன் திவ்யமான வியாப்தமாயுள்ள பசுக்கள் பாலோடு கலசத்தில் பொழியப்பட்டுள்ளன; உன்னை விளக்கமாக்கும் ரிஷிகள், அறிஞர்கள் விரும்பப்படுபவனே! ஆகாசத்தினின்று திரமான அவ் விளக்க தாரைகளை வர்ஷிக்கிறார்கள். உ. பவமானனின் கொடிகளான ரசிமிகள் நிலையான சத்தின் இரண்டையும் நோக்கி சுற்றிலும் வியாப்த மாகின்றன: பொன் நிறமானவன் புனிதத்தில் சுத்தமாக்கப்படுங்கால் சத்தியமானவன் தன் நிலயமான கலசங்களில் நிலையாகிறான். ௩. எதையும் பார்ப்பவனே! சோமனே! சத்தியனே! பிரபுவே! உன் கொடிகள் சமஸ்த சகங்களிலும் வியாப்தமா யிருக்கின்றன. நீ சர்வ வியாபகமான எல்லா உலகங்களின் சுவாமியாகும். தர்மத்தால் நீ எங்கும் பிரகாசிக்கிறாய்.

ச. பவமானன் சோதியுலகின் அதிசயமான வைசுவாநரமான பெரிய சோதியை மின்னல்போல் பிரகாசஞ் செய்கிறான். ரு. பவமானனே! ராஜனே! இன்பமளிக்கும், துஷ்ட (இந்திரியத்தினின்று) தளர்ந்த உன் ரசம் ரசிமியின் சமூகத்தை ஆன்ம சொரூபத்தை (கவர்ந்து) வழிகின்றன. சு. பவமானுன உன் ரசமானது வன்மையுடன் ஒளியுள்ளதாய் பிரகாசிக்கின்றது; அந்த சோதி சமஸ்த சுகங்களையும் பிரகாசிக்கச் செய்கின்றன.

எ. கருமையான சர்மத்தைச் சிதைத்துக் கொண்டு துரிதமாய் ஆயாசமன்னியில் ஒளியுடனுள்ளவன் வந்துள்ளான் சஞ்சரிக்கிறான். அ. பரமனின் ரட்ச விஷய சே

துவை துக்கத்தை தாண்டிக்கொண்டு நாடுகிறோம்: விரத மற்ற அடிமையை (அடிமை நாடுபவனை) நாங்கள் கொல்ல வேண்டும்.

கூ. பலமுடனான பவமானனின் கர்ச்சனையானது மழையின் ஒளிபோல் கேட்கிறது. ஒளி மின்னல்கள் வானத்தில் சஞ்சரிக்கின்றன. ய. இந்துவே! சோமனே! பசுக்களுடனும் பொன்னுடனும் குதிரை வீரமக்கட்களுட னுமான மகத்தான உணவை நீ பொழியவும். கக. எங்கும் பார்க்கும் சோமனே! உஷையைப்போல், ஒளிகளுடனான சூரியனைப்போல் நீ பெருகி மகத்தான வானம்பூமியை பூர்ண முடனாக்கவும். க௨. உலகத்தைச் சுற்றிப்பாயும் ரசத் தைப்போல் உன் ரட்சிப்பான தாரையோடு, சோமனே; எங்கும் எங்களைச் சுற்றியும் பெருகவும்.

---

## கண்டம் கூ௨.

தேவதை—க-கூ, பவமான சோமன். ரிஷி—க-சு, பிருஹன்மதி எ-கூ, பிருதுவாருணி ஜமதக்னி.

க. மகத்தான புத்தியுள்ளவனே! பிரியவடிவமுடனான தாரையால் துரிதமாய்ப் பெருகவும்; தேவர்கள் எங்கு இருக்கிறார்களோ அங்கு என சொல்லிக்கொண்டு பாயவும். ௨. நன்கு செய்யப்படாததை நலமுடன் செய்துகொண்டு மனிதர்களுக்குக் கொண்டுவருபவனாய் மழையை வானத்தி னின்று விழச்செய்யவும். ௩. எவன் சூரியனில் துரிதமாய் சஞ்சரிக்கிறானோ அவன் புனிதமான நதியின் அலைகளில் வெகு விதமாய் விழுகிறான்.

ச. எங்கும் பார்ப்பவனாய் ஒளி வீசிக்கொண்டு, பிரகாசமளித்து பலத்துடன் துரிதமாய் புனிதத்தில் நுழைகிறான். ரு. அவனை தூரத்திலிருந்தும் அருகினின்றும்

அழைத்துக்கொண்டு சோமனுனவன் இந்திரனுக்காக இனிமையுடன் பொழியப்பட்டுளான். சு. ஒருமையுடன் அறிஞர்கள், ஹரியை கற்களால் திருட சாதனங்களால் தூண்டுகிறார்கள்; இந்துவை இந்திரனுக்குப் பருக துதிசெய்கிறார்கள்.

எ. ஒளியுடனுன பெண்கள் சூரியனைத் தூண்டுகிறார்கள். மகிமையுடனும் நன்றாய் இணைந்துள்ள சகோதரிகள் பெரிய பதியான இந்துவைத் தூண்டுகிறார்கள், சேவை புரிகிறார்கள். அ. பவமானனே! தேவர்களுக்கு பொழியப்பட்ட நீ சமஸ்த ஐசுவரியங்களை வியாபகமாகவும். கூ. பவமானனே! தேவர்களுக்கு சேவையை பூர்ணமாக்கவும். துதிக்கும் உணவின் பொருட்டும் மழையை நியமபூர்வகமாய் பொழியவும்.

---

## கண்டம் கூரு.

**தேவதை—க, உ, ங, அக்னி, ச, ரு, சு, மித்திர வருணர்கள். எ - கூ இந்திரன் க0 - கஉ இந்திராக்னி. ரிஷி - க - ங சுதம்பரன். ச-சு-கிருத்ஸமதன் எ-கூ கௌதமன் க0 - கஉ வசிஷ்டன்.**

க. வெகு பலமுடன் புதிய சௌபாக்கியத்திற்கு சனத்தின் ரட்சிப்பவனுன எப்பொழுது விழிப்புடனுன அக்னி சனனஞ் செய்யப்பட்டுள்ளான்; தேஜசான அங்கமுடன், சிறந்த சோதிசேர் சுவாலையோடு சுத்தமான அக்னி பரதர்களுக்கு ஒளியுடன் பிரகாசஞ் செய்கிறான். உ. அங்கிரசர்கள் குகையில் மறைந்து ஒவ்வொரு வனத்திலும், பொருளிலும், சாய்ந்த, அக்னியே! உன்னை கண்டார்கள் காண்கிறார்கள். மகத்தான பலத்தால், தேய்ப்பால் நீ தோன்றுகிறாய். சாட

ராக்னியே! பலத்தின், மகன் என உன்னை மனிதர்கள் அழைக்கிறார்கள். ங. யக்ஞத்தின் கொடியான முதல் புரோகிதனான அக்னியை அவன் திரிஸ்தான நிலயத்தில் மனிதர்கள் நன்றாய் எழுச்சியாக்குகிறார்கள்: இந்திரனோடும் தேவர்களோடும் நல்ல செயலுடன் ஹோதாவான அக்னி புல்லில் யக்ஞத்திற்காக உட்காரட்டும்.

ச. சத்தியத்தை விருத்திசெய்பவர்களே! மித்திரன் வருணனே! உங்களுக்கு இந்த சோமன் தயாராயிக்கிறது. இங்கு என் அழைப்பைக் கேட்கவும். ரு. திருடமான ஆயிரம் தூண்களுடனான உத்தம நிலயத்திற்கு பரஸ்பரம் உபத்திரவஞ்செய்து கொள்ளாத இரண்டு அரசர்கள் வந்திருக்கிறார்கள். சு. நட்பால் பூஜிக்கப்பட்டு ஆதித்தியர்களாய் ஐசுவரியனின் பதிகளாய் பெரிய அரசர்களாய் கபடமில்லாதவனை சேவை புரிகிறார்கள்.

எ. எதிர்ப்பு சூன்யமான இந்திரன் ததீசியின் எலும்புகளால் அக௦ விருத்திரர்களைக் கொன்றான். அ. பர்வதங்களில் மறைந்துள்ள குதிரையின் தலையைத்தேடி சயர்ணவதி ஏரியிலே அதைக் கண்டான், காண்கிறான். கூ. அப்பால் சந்திரனின் வீட்டிலே பசுவின் துவஷ்டாவினுடைய மறை மூகமான நாமத்தை தமது என அறிந்து கொள்ளுகிறார்கள்.

ய. இந்திராக்னியே! இந்த முதன்மையான துதியானது மேகத்தினின்று மழையைப்போல் உங்களுக்காக என் மனத்தினின்று உண்டாக்கப் பட்டுள்ளது. யக. இந்திராக்னியே! தோத்திரஞ் செய்பவனின் அளிப்பைச் செவி கொடுக்கவும். அவன் துதிகளை அங்கீகரிக்கவும்; ஈசுவரனான நீங்கள் அந்தத் துதிச்செயல்களை பூர்ணமாக்கவும். யஉ. வீரர்களே! எங்களை ஹீன சுபாவத்திற்குள் ளாக்கவேண்டாம். இந்திரா அக்னியே சத்துருக்களின் வெறுப்பிற்கும் நிந்தனைக்கும் (இரையாக்க) வேண்டாம்.

## கண்டம் கூச

தேவதை க - அ பவமான சோமன், ரிஷி. க - ங. திரு டசுயுத ஆகஸ்தியன் ச-ரு சப்தரிஷிகள், சு-அ, பிருஹன்மதி.

க. ஹரியே! பலசாதனனாய் மகிழ்வளிக்கும் நீ, தேவர்களுக்குப் பருகவும், மருத்துக்களிற்கும் வாயுவிற்கும் பெருகவும். உ எவனாலும் ஹிம்சிக்கப்படாதவனாய் பிரியனாய் பவமானனாய் விருஷபமாய் கவியான சோமன் தன் நிலயத்திலே தேவர்களோடு நன்கு பிரகாசிக்கிறான். ங. சோமனே! புத்தியால் தரிக்கப்பட்டு உன் நிலயத்தைச் சுற்றி சப்தஞ்செய்து கொண்டு தர்மத்தினால் வாயுவிற்கு ஏறிச்செல்லவும்.

ச. சோமனே! இந்துவே! தினந்தோறும் உன் நட்பு எனக்கு ஆனந்தத்தை அளிப்பதாகும்; வெகு சத்துருக்கள் என்னை அனுசரிக்கிறார்கள். இந்த இடையூறுகளுக்கு அப்பால் என்னைக்கடத்தவும். ரு. பொன் நிறமுள்ளவனே! சோமனே! இரவிலும் பகலிலும் ரசமய கோசத்தில் உன் அருகில் நான் ரசத்தை கறந்துகொண்டு உஷா காலத்தின் ரசிமிகளைப் போல ஒளியால் சூரியாத்மவான உன்னைக் கண்டு (சிறிய விஷயங்களை யெல்லாம்) கடக்கவேண்டும்.

சு. புனிதமாகுங்கால் எங்கும் காணும் சோமன் எல்லா சத்துருக்களையும் ஜயிக்கிறான்; [1] மேதாவியை துதிகளால் அவர்கள் அலங்கரிக்கிறார்கள். எ. சிகப்பன் தன் நிலயத்திற்கு ஏறுகிறான்; வர்ஷிக்கும் இந்திரன் சோமனை அடைகிறான்; அவன் தன் [2] திருடமான ஸ்தானத்தில் வசிக்கட்டும். அ. சோமனே! இந்துவே! எங்களுக்குத் துரிதமாக மகத்தான அளவில்லாத ஐசுவரியத்தை எங்கும் பெருக்கவும்.

---

1 சோமனை. 2 நிலையான.

## கண்டம் கூரு.

தேவதை—க - அ, இந்திரன். ரிஷி க - ங, வசிஷ்டன், ச - கூ, ரேபகாசியபன், எ - அ, புருஹன்மா.

க. குதிரைகளின் தலைவனே! இந்திரனே! சோமனைப் பருகவும். அது உன்னை மகிழ்ச்சியுடனுக்கட்டும். பிரேணை செய்யும் சாரதியின் கைகளால் குதிரையைப் போல் நன்கு இணைக்கப்பட்டு அது மேகத்தைப்போல அமிழ்த்துப்படுகிறது. உ. குதிரைகளின் தலைவனே! பெரிய ஐசுவரியங்களின் பதியே! இந்திரனே! எதனுல் விருத்திரர்களைக் கொல்லுகிருயோ அந்த வனமையுடன் அருமை நண்பனுய் ஆனந்த மளிப்பவனுன ரசம், இன்ப முடனுகட்டும். ங. [1] மகவானே! [2] வசிஷ்டரால் சொல்லப்பட்ட நான் சொல்லும் இந்த மொழியை நன்கு கவனிக்கவும்; யக்ஞத்தில் நான் அளிக்கும் [3] பிரமங்களை அங்கீகரிக்கவும். பரஸ்பரம் பிரிய எண்ணமுள்ள வீரர்கள் மனிதர்கள் பலத்திற்காக அதி உத்தமமான நிலத்தில் சத்துருக்களைக் கொல்லுபவனுயும், உக்கிரனுயும் பலமுடனும் பெரு சக்தியுள்ளவனும் வேகமுடனுமான இந்திரனை, சர்வமான சத்துரு சைன்னியங்களை ஜயிக்கும் அவனை ராஜ பதவிக்கு கொண்டு வருகிருர்கள். புலனுக்குகிருர்கள். ரு. மேதாவிகள், [4] மெய்யறிவினுல் லயமாகி [5] சுரத்தில் சக்கிரமான மேஷத்தை நமஸ்கரிக்கிருர்கள். உங்கள் பரஸ்பரம்-துரோக மன்னியிலுள்ள உத்தமமாய் அளிப்பவர்கள்-ருக்கு யஜுர்கானஞ் செய்பவர்களுடன், செவிசாய்க்க - செம்மையாயுளார்கள் கூ. திருடவிருதன் சுவர்கபதியான இந்திரன் ரட்சைகளால்

---

1 ஐசுவரியவானே. 2 நன்ருய் வசிப்பவனுல் 3 துதிகளை வன்மைகளை, 4 மூல மொழி—கண்ணினுல். 5 சுவரத்தோடு,

பலத்தோடு உதவி புரிவதற்கு, அவன் சோமபானத்தைப் பருக, அவனுக்கு துதி செய்பவர்கள் கானத்தில் ஒருமை யுடனாகிறார்கள்.

எ. மனிதர்களில் ராஜாவாகி தன் ரதங்களோடு எந்த இடையூறுமன்னியில் செல்லுகிறான்; எல்லா சத்துரு சைன்யங்களையும் ஜயிப்பவனாய் விருத்திரனைக் கொல்லும் சிறந்தவனை துதிக்கிறேன். அ. புருஹன்மன்னே! தேவரைப் போல் திடமாய் சூரியனைப்போலவும் எந்தத் தலைவன் கையில் பழையதாய் பேரழகுடன் பெரியதாயுள்ள வச்சிரயுதம் ரட்சிப்பிற்கு வைக்கப்பட்டுள்ளதோ, அந்த இந்திரனை பலமுடன் உபாசிக்கவும்.

---

## கண்டம் கூகூ

தேவதை—க - கக, பவமான சோமன். ரிஷி—க - ந, அசிதன். ச, ரு, சக்தி. கூ - அ அக்னி. கூ, கய, கக, பிரதர் தனதைவோ தாசி.

க. சோதி யுலகின் எதையும் அறியும் கவியானவன் [1] கைகளின் நடுவே வைக்கப்படுங்கால் அதிகப் பிரியமான [2] சப்தத்தோடு நீண்ட வாழ்க்கையை அளிக்கிறான். உ சோதியான மகன் சனித்தவுடன் விசுவத்தைப் புலனாக் கும் தாய் தந்தையை (பூமி வானத்தை) ஒளியுடனாக்கு கிறான்; அவன் சிறந்தவன், சத்தியத்தை வளர்ப்பவன். ந. அதி உத்தமமான நிவாச ஸ்தலத்திற்கு, துரோகமற்ற வனே! மனிதர்களுக்குப் பிரியமான நீ துதிப்பவர்க்கு ஐசுவரியத்திற்காகப் பெருகவும்.

ச. சர்வ வியாபகனே! வெகு ஒளியுடனான நீ துரித முடன் அமிருதத்திற்காக சிலரை அழைக்கிறாய். ரு. எவ

---

1 சாதனங்களின். 2 உபதேசங்களை அளித்துக்கொண்டு.

னால் [1] தத்தியங் நவக்வன் கதவை திறக்கிறானோ, எவனால் ரிஷிகள் தங்கள் விருப்பங்களை அடைகிறார்களோ, எவனால் தேவர்களுடைய சந்தோஷத்தில் கல்யாணமான அமுருதத்தின் [2] சிரேயஸ்ஸை எவர் அடைகிறார்களோ (அவனே உங்களை அழைக்கிறான்.)

௬. புனிதமாகுங்கால் சோமன் தன் தாரையால் [3] ரோமக் கூட்டத்தைத் தாண்டிச் செல்லுகிறான்; சுத்தமாகுங்கால் கர்ச்சனை செய்துகொண்டு மொழிகளின் முன்னர் செல்லுகிறான். எ. வனத்தில் விளையாடும் வன்மையுடனை குதிரையை சூரியனுக்கதிகமானவனை அவர்கள் [4] சுத்தஞ் செய்கிறார்கள்; மனிதர்கள் மூன்று நிலைகளுள்ளவனை சாக்ஷாத் காரமாகிறார்கள். அ. பலமுடனாய் போரில் செல்லும் குதிரைக்குச் சமானமானவன் [5] கலசங்களிலே துரிதமாக்கப்பட்டுளான்; அவன் புனிதமாகுங்கால் [6] சப்தமுடன் செல்லுகிறான். [7]

௯. புத்தியின் தந்தை சோதியின் தகப்பன், பூமியின் தாய், அக்கினியின் அப்பனாய், சூரியனின் பிதாவனவன், இந்திரன், விஷ்ணுவின், மூலகாரணனாய் சோமன் பெருகுகிறான். ௰. தேவர்களின் பிராமணன், கவிகளின் தலைவன், பிராமணர்களின் ரிஷி, மிருகங்களின் தலைவன், [8] பட்சிகளின் கருடன், வனங்களின் கோடரியான சோமன் [9] சப்தஞ்

---

1 தியான புருஷர்: 2 சிறப்பை. 3 ரசிமி சமுகத்தை. 4 சோமனக்கருகதையாக தங்களையே சுத்தஞ்செய்து கொள்ள வேண்டு மென்பது இதன் கருத்து 5 தேகங்களில். 6 உங்களுக்கு அறிவித்துக்கொண்டு. 7 தேகத்தில் நீங்கள் சோமனை சுத்தஞ் செய்யுங்கால் உங்களுக்கு உண்மைகளை சங்கநாதஞ் செய்து கொண்டு மறைந்து விடுகிறான். 8 ஸ்ரீ பகவத் கீதை கிருஷ்ணனின் அமுத மொழிகளுக்கு இது ஆதாரவாயிருக்கலாம். (அத்தியாயம் பத்து ௪ - ௰.) 9 அறிவித்துக்கொண்டு.

செய்து கொண்டு செல்லுகிறான். ௯. சோமன் மனிதரின் மொழியின் அலையை நதியைப்போல் தூண்டுகிறான்; மொழிகளையும் துதிகளையும் பிரேரணை செய்கிறான். இந்த விருஷபன் இருதயத்தில் இந்த அசக்தமானப் பிராணிகளைப பார்த்துக்கொண்டு நன்றாயறிந்தவனாய் [1] பசுக்களில் நிலையாகிறான்.

---

## கண்டம் கூஎ

**தேவதை—௧-௩ அக்னி. ௪-௬ இந்திரன். ௭-௯ இந்திரன். ரிஷி ௧-௩ பிரயோகன் பார்கவன். ௪-௬ கோதமன். ௭-௯ ரிஷி சொல்லப்படவில்லை.**

இங்கு யக்ஞங்களின் பந்துத்துவத்திற்கு பலத்திற்கு உங்களை அபிவிருத்தி செய்யும் பெருமையுடைனை அக்கினியை நோக்கவும், ௨. உருவாக்கப் படவேண்டிய வடிவங்களில் [2] துவஷ்டா வருவதுபோல் நாங்கள் பிரக்ஞானமுடன் கீர்த்தியுடனுவதற்கு அக்னி எங்களுக்கு அனைத்தையும் செய்கிறான். ௩. தேவர்களில் சர்வ [3] சம்பன்னான இந்த அக்னி பலத்தோடு எங்கள் அருகே வரட்டும்.

௪. இந்திரனே! அமுதமாயும் ஆனந்த மளிப்பதாயும் சிறந்ததாயுமுள்ள இந்த சோமனை பருகவும். சத்தியத்தின் ஸ்தானத்தில் சோதியானது தாரைகள் உன்னை நோக்கி பாய்ந்த வண்ணமா யிருக்கின்றன. ௫. நீ குதிரைகளை ஓட்டுங்கால் உன்னைவிட சிறந்த சாரதி வேறு எவனுமில்லை. உன் வன்மையில் உனக்கு அதிகமானவனில்லை; சுபமான குதிரைகளோடு உன்னை முன்னடைபவனில்லை. ௬. இந்திரனை நிச்சயமாய் அர்ச்சிக்கவும், துதிகளை உரைக்கவும்,

---

1 பிராணிகளில். 2 சிற்பி. 3 ஐசுவரியனான.

பொழியும் சோம துளிகள் அவனை சந்தோஷமாக்குகின்றன. சக்திமானான சிரேஷ்டனை நமஸ்கரிக்கவும்.

எ. இந்திரனே! பிரீதியுடனாகவும், வரவும், சூரனே! குதிரைகளை அடிப்பவனே! ரிஷியைப்போல் சுந்தரமானவனே! மதுவில் இன்பமாகி சோம ரசத்தை சந்தோஷத்திற்காகப் பருகவும். அ. சுவர்கத்தினின்று வருவது போலுள்ள மது ரசத்தால் இந்திரனே! உன் வயிற்றை புதியதாய் நிரப்பவும்; இந்த ரசத்தினது சுவர்கத்திற்குச் சமானமான சந்தோஷமளிக்கும் மொழிகள் உன்னை அடையட்டும். கூ. ஜயிப்பவனான இந்திரன் 1 மித்திரனைப்போல் கொல்லட்டும், 2 யதியைப்போல் விருத்திரனை அழிக்கட்டும், 3 பிருகு, சத்துருக்களைக் கொல்லுவதுபோல் சோமனது சந்தோஷத்தில் சத்துரு சைன்னியங்களை சேதிக்கிறான்.

---

## கண்டம் கூஅ

தேவதை - க - கங, பவமான சோமன். ரிஷி - க - ங திரயரிஷி. ச - கூ காசியபன். எ - கங அஸிதன்.

பசு பொன்களில் வியாப்தமான நீ ஐசுவரியங்களுடனாய் தேஜஸை தரிப்பவனே! இந்துவே! புவனங்களில் நிலையானவனே! நீ பெருகவும்; நீ சிறந்த வீரனா யிருக்கிறாய். அனைத்தையும் ஜயிக்கும் சோமனே! உன்னை 4 நரர்கள் துதியால் உபாசிக்கிறார்கள். உ. சோமனே! எல்லா திசைகளின்றும் மனிதர்களைக் காண்கிறாய். 5 பவமானனே! விருஷபனே! பல பொருள்களில் நீ வியாபகமாகிறாய், பொன் பொருள்களின் ஐசுவரியத்தை எங்களில் பொழியவும்

---

1 நண்பனைப்போல. 2 வீரனைப்போல். 3 அக்னிவன்மையுள்ளவர். 4 மனிதர்கள். 5 புனிதமானவனே.

1 புவனங்களில் பூர்ண ஆயுசுடனுக நாங்கள் பலமுடனுகவேண்டும். ந. 2 இந்துவே! ஈசனுன நீ பொன்மயமான குதிரைகளை இணைத்துக்கொண்டு இப்புவனங்களை யெல்லாம் அரசுபுரிகிருய். அவர்கள் - புவனங்களிலுள்ள பிரஜைகள் — உங்களுக்கு மது நிறைந்து நெய்யுடனுன ரசத்தைப் பொழியட்டும்; சோமனே! மனிதர்கள் உன் ஆக்ஞையில் நிற்கட்டும்.

ச. 3 விசுவம் பார்க்கும் சோமனே! சூரியனைப்போல் பவமானனது தாரைகள் பொழியப்பட்டு பாய்ந்தவண்ணமாயுள. ரு. சமுத்திரனுன நீ ஆகாசத்தில் அறிவான சூரியனை செய்துகொண்டு சகல வடிவங்களையும் விளக்குகிருய், சகல ஐசுவரியங்களையும் பொழிகிருய். சு. பவமானனே! தேவரான சூரியனைப்போல் 4 தர்மாக்னைபோல் சப்தித்து உபதேசித்துக் கொண்டு - மொழியை பிரேரிக்கிருய்.

எ. புனிதமாகுங்கால் துளிகளான - துரிய சுடர்களான சோமர்கள் சேருங்கால் சலங்களில் ஆத்மாக்கள் சுத்தமாகிருர்கள். அ. மலை கீழ்விழும் சலத்தைப் போல் பசுக்கள், அவற்றைக் காண முன் செல்லுகிருர்கள். புனிதமாகி அவர்கள் இந்திரனை அணுகுகிருர்கள். கூ. சோம பாவமானனே! இந்திரனுக்கு இன்பமளிப்பவனுக நீ பெருகுகிருய்; மனிதர்கள் உன்னைப் பற்றிக்கொண்டு முன் அழைத்துச் செல்லுகிருர்கள். கO. இந்துவே, கற்களால் - கல்போலான கல்வியால் - அமிழ்த்தப்பட்டு புனிதத்திற்குச் செல்லுகிருய், இந்திரனது ஸ்தானத்திற்கு அருகனுகிருய். ௧௧. சோமனே! சந்தோஷத்தால் போற்றப்படுபவனே நரர்களின் ஆதாரவாய் மானிடர்களை சந்தோஷஞ் செய்துகொண்டு பெருகவும். ௧௨. 5 விருத்திரனைக் கொல்லுபவனே! துதி

1 புவிகளில் 2 சோமனே. 3 சகங்கள் எல்லாம் காணும். 4 இயல்புடன் இசைவதுபோல். 5 துஷ்டரை.

களால் துதிக்கப்பட்டு சுத்தனாய் சோதகனாய் அற்புதனாய் பாவகனாய் பெருகவும். ௩. மது நிறைந்தவன், சுத்தன், பாலகன் என சொல்லப்படுகிறான் அவன் தேவர்களுக்குப் பிரியமாய் பாபிகளை பாழாக்குபவனா யிருக்கிறான்.

---

## கண்டம் கக

**தேவதை—க - கச பவமான சோமன். ரிஷி - க-எ காசியபன். அ - கக அவத்சாரன். கஉ - கச ஜமதக்னி.**

க. நமது எல்லா சத்துருக்களையும் அடக்கிக்கொண்டு தேவர்கள் புசிக்க அவனை 1 ஆட்டு ரோமங்களால் கவியானவன் தரித்துளான். உ. அவன் பவமானனாய் தோத்திரஞ் செய்பவர்களுக்கு ஆயிரம் பசுக்களுடனான ஐசுவரியத்தை அளிக்கிறான். ௩. சோமனே! மனத்தால் எல்லாப் பொருள்களையும் பற்றி புத்தியால் நீ புனிதஞ் செய்கிறாய். சோமனே! எங்களுக்கு கீர்த்தியை யளிக்கவும். சோமனே! மகத்தான கீர்த்தியைப் பொழியவும். ச. திடமான பொருள்களை சித்த சம்பன்னர்களுக் கனுப்பவும். உன்னைத் துதிப்பவர்களுக்கு உணவை - உயரிய பொருளையும் அனுப்பவும். ரு. 2 குதிரையே! அற்புத சோமனே! நல்ல விரதனே; புனிதமாகுங்கால் நீ ராஜாவைப்போல் எங்களது கானங்களில் பிரவேசிக்கவும். சு. சோமனானவன் சலத்தில் குதிரையைப்போல் காணக் கூடாதவனாய் கைகளால் சுத்தஞ் செய்யப்பட்டு புனிதப் பொருள்களில் சாய்ந்துளான் எ. விளையாடும் சுபாவமுள்ள நீ அளிக்கும் விருப்பமுள்ள நீ சோமனே! புனிதத்தில் துதி செய்பவரில் திடமான வீரத்தை அளித்துக்கொண்டு செல்லுகிறாய்.

---

1 சூரிய ரசமிகளால். 2 நல்லவன்மையுள்ளவனே.

அ. சோமனே! எங்களில் 1 அத்தியந்த புஷ்டியுடனை, எல்லா தான்யங்களையும் எல்லா சௌபாக்கியங்களையும் உன் ரசத்தால் பொழியவும். கூ. இந்துவே! தோத்திரம் உன்னுடையதே, ரசத்தினின்று புலனுவதும் உனதாகும், பிரியமான 2 புல்லில் உட்காரவும். ய. பசுக்களையும் குதிரைகளையும் எங்களுக்கு அளித்துக்கொண்டு சோமனே! துரிதமான நாட்களோடு உன் தாரையால் பெருகவும். யக. அளவற்ற சத்துருக்களை ஜயிப்பவனே! ஜயித்து ஜயிக்கப்படாதவனுய் எதிர்த்து சத்துருக்களை அழிப்பவனுய் பெருகவும்.

யஉ. ரட்சிப்பிற்குப் பொழியப்பட்ட மது சிந்தும் தாரைகளோடு இந்துவான நீயே! புனிதத்தில் சாய்ந்திருக்கிறுய். யங. கிரணக் கூட்டங்களைக் கடந்துகொண்டு சத்தியமென்னும் நிலயத்தை அணுகி இந்திரனுக்குப் பருகப் பெருகவும். யச. சோமனே! 3 அங்கிரசர்களுக்கு இனிமையாய் ஐசுவரிய முதலியவற்றை அளிக்கும் நீ 4 நெய்யையும் பாலையும் பொழியவும்.

---

## கண்டம் க00

தேவதை - க - ங அக்னி. ச - சு மித்திர வருணன். எ - கூ இந்திரன். க0 - கஉ இந்திராக்னி.

க. உஷைகள் உதயமாவது போல் மழை மேகத்தினின்றும் தோன்றும் மின்னல்களைப்போல் உன் சம்பத்துக்கள் புலனுகின்றன. நீ செடி கொடி மரங்களில் தானுகவே வியாபதமாகி உன் திருவாயின் உணவைப்போல் அனைத்தையும் பரிபூர்ணமாயுண்ணுகிறுய். உ. அக்னியே வாயுவினுல் துரிதமாய் தூண்டப்பட்டு உன் இஷ்டம்போல் உண

1 மிகமிக. 2 இருதயத்தில். 3 அறிஞர்களுக்கு. 4 அன்பையும் அமிருதத்தையும்.

வின் வழியாய் வியாப்தமாகி நீ எங்கும் விரிந்து விளக்கமாகிருய். அழிவில்லாத சைன்னியங்கள் போல் ஆசையுடன் ரதங்களில் எல்லாப் பக்கங்களிலும் முயலும் மனிதர்களைப் போல் எரிப்பதற்கு ஆவலுடனிருக்கிருய். ந. பிரக்ஞையைச் செய்பவனும் யக்ஞத்தின் பிரதம சாதகனும் ஹோதாவாய் சத்துருக்களை ஜயிப்பவனும் அறிஞனுமுள்ள உன்னை அழைக்கிருேம்; வேறு எவனையுமில்லாமல் உன்னையே மனன புருஷர்கள் பெரியவர்களும் சிறியவர்களும் [1] ஹவிஷ்களை அடைய சமான வடிவத்தால் உன்னையே அழைக்கிருர்கள்.

ச. வருணனே! மித்திரனே! உங்களது அதிக விஸ்தாரமான ரட்சணை நிச்சயமாயுண்டு. உங்கள் நல்ல அறிவை அடையலாமோ? ரு ஒருவருக்கும் துரோகஞ் செய்யாதவர்களே! உங்களிடமிருந்து உணவையும் — உற்சாகமாய் வசிக்க — நிலத்தையும் அடையலாமோ? மித்திரர்களே! நாங்கள் உங்களுடையவர்களாகலாமோ? சு. மித்திரர்களே! உங்கள் ரட்சிப்புகளால் எங்களைக் காக்கவும். உயர்ந்த உமது பாதுகாப்பால் எங்களைக் காக்கவும். எங்கள் கைகளாலேயே [2] தஸ்யுக்களை நாங்கள் ஜயிக்க வேண்டும்?.

எ. நீ பொழிந்த சோமனைப் பருகிய பிறகு பலத்தால் எழுந்து உன் முகத்தை அசைக்கிருய். அ. நீ தஸ்யுகளைக் கொல்லுங்கால், நீ சண்டை செய்யும்பொழுது இந்திரனே! உனக்கு இரு உலகங்களும் நிலயமளிக்கின்றன. கூ. [3] எட்டு அடிகள் உள்ளதாய் ஒன்பது பிரிவுகளுடனும் சத்திய விருத்தியான வளர்ந்தோங்கும் வாக்கை நான் அளக்கிறேன்.

---

1 பெரிய பொருள்களை. 2 நீச மனிதர்களை. 3 அவை நான்கு வேதம் நான்கு உப வேதங்கள் ஒன்பது பிரிவுகளாவன - சிட்சை கல்பம் வியாகரணம் நிகண்டு நிருத்தம் சந்தசு சோதிஷம் தர்மசாஸ்திரம் மீமாம்ஸம்.

கO. [1] இந்திராக்னியே! உங்களை இந்தத் துதிகள் நாடு கின்றன. சுகமளிக்கும் இந்திரனே! ரசத்தைப் பருகவும். கக. வீரர்களே! நாடுபவர்களுக்கு பலர்களால் விரும்பப் படும் உமது குதிரைகளோடு இந்திராக்னியே? வரவும். கஉ. வீரர்களே! உங்கள் சக்திகளோடு இங்கு புலனுகும் [2] யக்ஞத்தில் [3] சோமனைப் பருக வரவும்.

---

## கண்டம் கOக

தேவதை - க - அ பவமான சோமன். ரிஷி க - ங பிருகு வாருணி ஜமதக்னி. ச - ரு சப்த ரிஷிகள். சு - அ. தேவன்.

க. சோமனே! அதிக ஒளியுடன் வனங்களின் நடுவே உனது நிலயங்களில் சாய்ந்துகொண்டு [4] துரோண கலசத் திற்கு [6] சப்தஞ் செய்துகொண்டு செல்லவும். உ. [6] இந்தி ரன், வாயு, வருணன், விஷ்ணு, மருத்துக்களுக்கு ஜலஞ் ஜயிக்கும் சோமர்கள் பாயட்டும். ங. சோமனே! எங்கள் புத்திர பௌத்திரர்களுக்கு உணவை அளித்து அளவிடப் படாத ஐசுவரியங்களை எல்லாப் பக்கங்களினின்றும் பொழி யவும்.

ச. பொழியப்படுபவர்களால் [7] அமிழ்த்தப்படும் சோ மன் சூரிய ரசிமிகளது ரோமங்களோடு பாய்கிறுன்; குதிரை யைப்போல் பொன் தாரையோடு போகிறுன், ஆனந்த மளித்துக்கொண்டு செல்லுகிறுன். ரு. கறந்த கோக்களோடு, [8] பசுவுடனுன சோமன் உச்சப்பிரதேசத்தில் [9] பால்களு

---

1 பலமே—அறிவே. 2 பெருமையான செயலிலே 3 சோம னை சிறப்பை. 4 மனத்திற்கு 5 அறிவித்துக்கொண்டு. 6 ஆத் மா, பிராணன், அபானன், உணர்வு வியானன் முதலியவற் றிற்கு 7 அறியப்படும். 8 ஞானத்துடனுன. 9 சுக்கிலங்களுடன்.

டன் கூட பாய்கிருன். சமுத்திரத்தைப்போல் [1] துரோண கலசத்தை அவர்கள் சேர்ந்துள்ளார்கள்; இன்பமளிப்பவன் இன்பத்திற்கு வியாபக மாகிருன்.

௬. சோமனே! அதிசயமாய் துதிக்கத் தகுந்த திவ்ய யமான தரணி சம்பந்தமாய் எந்த ஐசுவரியமுண்டோ அதை எங்களுக்கு புனிதஞ் செய்துகொண்டு எடுத்துவரவும். எ. வாழ்நாட்களை சுத்தஞ் செய்துகொண்டு விருஷபன் நீ சப் தஞ் செய்பவனுய் புற்களின் மேல் பொன் நிறமுடன் உன் நிலயத்தில் அமர்ந்துளாய். அ. [2] சோமன் இந்திரனுன நீங்கள் சர்வத்தின் சுவாமிகளாகும்; பசுக்களது தலைவர்கள். ஈசனுய் எங்கள் புத்திகளை - புத்தியுடனுன செயல்களை— பெருக்கவும்.

---

## கண்டம் கoஉ

தேவதை - க - ௬ இந்திரன். ரிஷி க - ௬ கோதமோ ராஹூகணம்.

சந்தோஷத்திற்கும் சக்திக்கும் [3] விருத்திரனைக் கொல் லுபவனுன இந்திரன் மனிதர்களால் அபிவிருத்தி யாக்கப் பட்டுளான்; சிறியதும் பெரியதுமான போர்களில் ரட்சிப் பிற்கு அவனையே நாங்கள் அழைக்கிரேும்; சண்டைகளில் அவனே ரட்சிப்பவனுகட்டும். வீரனே! நீயே சைன்னி யம் போலுள்ளாய், அற்பனையும் அதிக பலமுள்ளவனுக்கி வெகு சத்துருக்களை ஜயிப்பவனுகும். யக்ஞஞ் செய்பவனை உதவி செய்து பொழிபவனுக்கு நீ ஐசுவரிய மளிக்கிருய். ௨. சண்டைகளும் போர்களும் தோன்றுங்கால் வீரனுக்கு ஐசுவ ரிய மளிக்கப்படுகின்றன. சத்துரு மதமடக்கும் உன் குதி

---

1 தேகத்தை. 2 சுக்கிலவன்மைபும் சரீர பலமுமான பொருள்களின் ஆரோபங்கள். 3 சத்துருவை.

ரைகளை பூட்டவும், எவனை நீ அழிப்பாய்? எவனை ஐசுவரிய முடனாக்குவாய்? இந்திரனே! எங்களை ஐசுவரியமுடனாக்கு வாயோ!

ச. இனிய ருசியுடனான, இப்படி வியாப்தமாக்கப்பட்ட மதுரசமான, ரசத்தை சுபமுடனான பசுக்கள் பருகுகின்றன. பால் முதன்மையான சுயராஜ்ய நிலயத்தில் பலமுடனான இந்திர ஒளியோடு சென்று இம் மதுக்கள் மகிழ்ச்சியுடனாகின்றன. ரு. [1]பரிசத்தை விரும்பி [2]பூர்வோக்தமான இந்திரனது நானா நிறமான பசுக்கள், பால்களோடு சோமனைகலக்கின்றன, இந்திரனது பிரியமான பசுக்கள், சக்திகளுடனான தங்கள் சுயராஜ்யத்தை அனுசரித்து துவம்சஞ்செய்யும் வச்சிராயுதத்தை பிரேரணை செய்கின்றன. சூ. பெருமையுடனான ஞானமுள்ள பசுக்கள் அவரது பலத்தை நமஸ்கரிக்கப் பால் சேவை புரிகின்றன, சக்திகளுடனான தங்கள் சுயராஜ்யத்தை அனுசரித்துக்கொண்டு பூர்ணமான ஞானத்தை அடைய இந்திரனது வீரச்செயல்களை அறிவுள்ளவர்கள் அனுசரிக்கிறார்கள்.

---

## கண்டம் கoரு

தேவதை - க - கச பவமான சோமன். ரிஷி - க - ரு ஜமதக்னி. சு-கு ஊர்த்தசத்மன் கிருதயசர்கள். சூ - அதிரிதன் கூ - கக ரேபசூனு காசியபன். கஉ - கச மன்யூவாசிஷ்டன்.

மலையில் மலர்ந்த சோமன் சந்தோஷத்திற்காக நீர்த் தாரைகளில் அமிழ்த்தப்பட்டுள்ளான், கருடனைப் போல் அவன் தன் நிலயத்தில் நிலையாகிறான். உ. மனிதர்களால் பொழியப்பட்டு சலங்களால் சுத்தஞ் செய்யபட்டு தேவர்க

1 தொடவிரும்பி. 2 முன்சொன்ன,

ளால் விரும்பப்படுவதான ரசமானது வெகு ரம்மியமுடனுள்ளது. பசுக்கள் பால்களால் அதை இனிமையுடனுக்குகின்றன. ௩. அப்பால், பிரேரிப்பவனான இந்த மதுரசத்தை [1] யக்ஞத்தில் அமிருதத்திற்காக [2] குதிரையைப் போல் அலங்காரஞ் செய்கிறார்கள்.

௪. சோதியினது தலைவனான சோமனே! தேவர்களின் விருப்பமான உயர்ந்த கீர்த்தியை காட்சியாக்கவும், ஆகாச நடுவின் கோசத்தைத் திறக்கவும். ௫. சுபமான பலமுள்ளவனே! அரசனைப்போல் சனங்களை தரித்து விளங்குபவனே! [3] ஆலையினின்று நீ பெருகியோடவும்; ஆகாசத்தினின்று எங்களில் மழையை பொழியவும்; சலங்களின் பெருக்கை அளிக்கவும். பிராணிகளது நன்மைக்கு நினைவுகளைத் தூண்டிக்கொண்டு பொழியவும்.

௬. மகத்தான பெண்களின் சுவாசமாய் சத்தியமென்னும் தரிப்பை மூட்டிக்கொண்டு எல்லாப் பொருள்களையும் [4] இரண்டுவிதமாய் செய்துகொண்டு சோமன் வியாபிதமாகிறான். ௭. யக்ஞத்தினது [5] ஏழு சாதனங்களால், பிரியமான திரிதனது போஷிப்பதான ரசன் குகையிலே நிலையை [6] அடைகிறான். ௮. திரிதனது ஐசுவரியமாக தாரையால் மூன்றை (௩ அளிப்புகளை) உயர்ந்த ஸ்தானத்தில் (சாமன்களில்) அவன் அனுப்பியுளான். நல்ல சாதகன் இந்த ஆன்மாவை மேற் சொன்ன மூன்றால் அறிகிறான்.

௯. சோம ராஜனான நீ! இந்திரனுக்கு விஷ்ணுவிற்கு தேவர்களுக்கு அதிசயமான இனிமையுடன் தாரையோடு எங்களுக்கு பலத்தை அளிக்கப் புனிதத்தில் பெருகவும்.

---

1 மனோ முயற்சியில். 2 புலனைப்போல் அடக்கி கைவசஞ் செய்கிறார்கள். 3 ஆன்ம ஆலயினின்று. 4 நன்மையும் புன்மையுமாய். 5 சந்தசுகளால். 6 சாதகன்.

கம. தாய்கள் கன்றுகளை நக்குவதுபோல் துரோகமில்லாத தியானங்கள் பவமானனே விசேஷமாய் தரிக்கும் புனிதத்தில் பவமானனே ஹரியான உன்னை ருசிக்கின்றன. கக. மகாவிருதனே! வானத்திற்கும் வையகத்திற்கு மதிகமாய் உயரமாய் உன்னை நீ போஷித்துக் கொள்ளுகிறாய் - எழுச்சியாக்கிக் கொள்ளுகிறாய். பவமானனே! மகத்துவத்துடன் நீ கவசத்தை அணிந்துளாய்.

கஉ. பலமுடனுன [1] இந்து பாலோடு நனைந்து அவன் இன்பத்திற்கு பலத்தைப் பிரேரித்துக்கொண்டு சோமன் இந்திரனுக்காக பாய்கிறான். அவன் ராட்சதர்களைக் கொல்லுகிறான், சத்துருக்களை சம்காரஞ் செய்கிறான்: ஐசுவரியத்தை செய்துகொண்டு பலத்தின் ராஜாவாய் அவன் பெருகுகிறான் கங. அப்பால் அவன் தாரையோடு [2] கற்களால் கறக்கப்பட்டு இனிமையோடு கலந்து [3] ரோமங்களை நீங்கிக்கொண்டு பெருகுகிறான். தேவ்ரது இன்பத்திற்கு இன்பமாக்கும் தேவரான இந்து இந்திரனின் நட்பிலே சேவித்தவனாய் பெருகுகிறான். கச. புனிதமாகுங்கால் இந்துவானவன் ருது காலத்தில் கவர்ந்துகொண்டு தர்மமான விருதங்களை தன் ரசங்களால் தேவர்களை அலங்கரித்துக் கொண்டு, இணைந்தவனாய்— பெருகுகிறான்: இந்துவானவன் உயர்ந்த [4] ரோமங்களில் பத்து சாதனங்களை அடைகிறான்.

---

1 சோமன். 2 மேகமென்னும் தியானங்களால். 3 அறியாமைகளை. 4 இருதயங்களில்.

## கண்டம் ௧௦௪

தேவதை ௧ - ௩ அக்னி ௪ - ௬ இந்திரன். ரிஷி - ௧ - ௩ வசு சுருத ஆத்ரேயன். ௪ - ௬ ஆத்ரேயன். ௭ - ௯ கோதமோ ராஹூகணம்.

௧. அக்னியே! ஒளியுள்ள மூப்பற்ற உன்னை [1] மூட்டுகிறோம். வானத்தில் விளங்கும் சமித்தான சோதியும் உன்னுடையதாகும். உன்னை நாடுபவர்களுக்கு உத்தம உணவை அளிக்கவும், ௨. சோதி யுலகங்களின் பதியே! சுத்த வடிவனை உனக்கு ருக்கினால் ருக்கோடு [2] [3] ஹவிஷானது அளிக்கப்படுகிறது; சந்தோஷ மளிப்பவனே! சத்துருக்களைக் கொல்லுபவனே! சமஸ்த சகங்களை வகிப்பவனே! பிரசைகளின் தலைவனே துதி செய்பவர்களுக்கு அறிவைக் கொண்டுவரவும். ௩. சோபன சந்திரனே! பிரசைகளின் பதியே! சர்வ சக்திமானே! இரண்டு கவளங்களை - வானம் பூமியை - நீ உன் திருவாயில் பக்குவ மாக்குகிறாய்; எங்கள் துதிகளில் பயன்களால் பூர்ணமாக்கவும்: தோத்திரஞ் செய்பவர்களுக்குத் திடத்தைக் கொண்டுவரவும்.

௪. இந்திரனுக்கு சாமனை கானஞ்செய்யவும்; மேதாவியான ரிஷிக்கு பெரிய சாமனை கானஞ் செய்யவும். [4] பிரமகிருதனை பண்டிதனை துதி விரும்புபவனுக்கு - கானஞ் செய்யவும். ௫. இந்திரனே! நீ ஜயிப்பவன், சூரியனை தேச சுடனுக்குபவன், [5] விசுவகர்மாவாய் விசுவதேவனாய் மகானாயிருக்கிறாய். ௬. சோதியால் பிரகாசித்துக்கொண்டு சோதியான சுவர்கத்தைப் பிரகாசித்துக்கொண்டு வானத்தில் நீ [6] வியாப்தமாயுளாய்; இந்திரனே! தேவர்கள் உன் நட்பிற்கு முயலுகிறார்கள்.

---

1 அறிய எங்களை எழுச்சியாக்கிக் கொள்ளுகிறோம் 2 ருக்வேத சாதனத்தால், 3 என் ஆத்மா. 4 அறிவும் ஆண்மையும் செய்யும். 5 எல்லாஞ் செய்பவனாய் 6 எங்கும்பெருகியுள்ளாய்.

எ. இந்திரனே! உனக்காக இந்த சோமன் பொழியப் பட்டது. வீரனே! அதிக பலமுள்ளவனே! இங்குவா! சூரி யன் ரசுமிகளால் அந்தரிட்சத்தை நிரப்புவது போல் இந்திர வன்மை உன்னை பூர்ணமாக்கட்டும். அ. விருத்திரனைக் கொல்லுபவனே! உன் ரதத்தில் ஏறவும், உனது குதிரை கள் பிரமத்தால் இணைக்கப்பட்டுள்ளன; [1] அமிழ்த்தும் கல் அதன் சப்தத்தால் உன் மனத்தை இங்கு நன்றாய் இழுக் கட்டும். கூ. மனிதர்களால் செய்யப்படும் ரிஷிகளின் துதிக் கும் யக்ஞத்திற்கும் எதிர்க்க முடியாத பலமுள்ள இந்திர னையே அவன் பொன் நிற [2] குதிரைகள் கொண்டு வரட்டும்.

---

## கண்டம் க0ரு.

**தேவதை - க - கசு, பாவமான சோமன். ரிஷி க - ங ஆகிருஷ்டமரஷா சிகதா நிவாவரி. ச - சு கசியபன். எ - கசு மேதாதிதி.**

க. யக்ஞத்தின் சோதியாய் பிரியனாய் மதுவாய் தேவர், களின் பிதாவாய் மாதாவாய் சமஸ்த ஐசுவரிய முள்ளவன் வானம் பூமியில் சூட்சமாய் சந்தோஷமயமாய் சந்தோஷ மளிப்பவனாய் இந்திரியங்களை வளர்ப்பவனை அவன் ரசமான ரத்னத்தை பொழிகிறான் அளிக்கிறான். உ. சோதியின் தலை வன் விசேஷ திருஷ்டியுடன் வேகமாய் நூறு தாரைகளோடு கலசங்களில் சப்தஞ் செய்துகொண்டு பாய்கிறான். நதிகளா லும் ரசிமிகளாலும் விருஷபன் அலங்கரிக்கப்பட்டு பொன் மய சோமன் மித்திரனது யக்ஞங்களில் வியாபகமாகிறான் ங. பவமானனாய் நதிகளின் முன் நீ பாய்கிறாய்; மொழியின் முன் பசுக்களின் முன்பாகங்களிலும் நீ செல்லுகிறாய்; சத் துருவின் தனத்தைக் கருதி பெருமையான பொருளான

---

1 அமிழ்த்தும் உன் மனனம். 2 புலன்கள்.

போரை நீ நாடுகிறாய், நல்ல ஆயுதங்களுடனான சோமனே நீ தோத்திரம் செய்பவர்களால் பொழியப்படுகிறாய்.

ச. பலமுடன் பெரும் ஒளியுடனானதாய் வேகமுடனான சோமர்கள் பசு குதிரை வீரமக்கள் விருப்பத்தால் பொழியப்பட்டுள. ரு. சத்தியம் விரும்புவர்களால் அலங்கரிக்கப்பட்டு கைகளில் சுத்தமாகப் பட்டு ரோமமான உடையில்- ரசசோதி நிலயத்தில்—சோம துளிகள் பாய்கின்றன. சு. சோதியினின்றும் சகத்தினின்றும் வானத்தினின்றும் துதிப்பவர்களுக்கு இந்த சோமரசங்கள் சர்வமான ஐசுவரியங்களை பொழியட்டும்.

எ. தேவர் விரும்பும் நீ, இந்துவே! சோமனே! வேகத்தோடு புனிதத்தில் அதிகமாய் பெருகவும்; வர்ஷிக்கும் நீ இந்திரனைப் பிரவேசிக்கவும். அ. சோமனே! நீ வர்ஷிப்பவனாய் கீர்த்தியுள்ளவனாய் இங்கு துரிதமாகவும். மகத்தான உணவுடன் உன் நிலயத்தில் உட்காரவும். கூ. பரம ரசத்தினது தாரையான பிரியமான மது ரசம் பெருகச் செய்யப்பட்டது. ரிஷி சலங்களை தனக்கே இழுத்துக்கொள்ளுகிறார், தன் சுவாதீனஞ் செய்து கொள்ளுகிறார். ய. பால்களால் உன்னை நீ மூடிக்கொள்ளுங்கால் மகத்தான உன்னை வியாபகமாகும் பிரவாக சலங்கள் அனுசரிக்கின்றன. யக. சோதி யுலகத்தை தரிக்கும் தூண்போலாய் புனித சலத்தில் சமுத்திரனான எமது ஆசிரியமான சோமன் விழுந்து பிரகாசிக்கின்றான். புனிதமாகின்றான். கஉ. வர்ஷிப்பவனாய் ஹரியான மகான் மித்திரனைப்போல் சௌந்தரியமான சோமன் சப்தஞ் செய்துளான்; அவன் சூரியனுடன் மின்னுகிறான். இந்திரனே! உன் பலத்தால் செயல் விரும்பும் சொற்கள் சுத்தமாக்கப் படுகின்றன, அவற்றால் உன் ஆனந்தத்திற்காக அலங்காரஞ்செய்து கொள்ளுகிறாய். யச. உலக கர்த்தாவான

உன்னை வச்சிராயுத இன்பத்திற்கு நீ மேன்மையான துதியை அடைய நாங்கள் நாடுகிறோம். கரு. இந்துவே! யக்ஞத்தினது பூர்வமான நீ பசு வீரர்களை யளிப்பவனாகும். குதிரைகளை கட்டு பலத்தையும் யளிப்பவனாகும். ௬. சோமனே! இந்திரவன்மையோடான இனிய தாரையால் 1 பர்ஜன்யனைப்போல் பொழியவும்.

---

## கண்டம் க௦௬

**தேவதை—க-௧௭, பாவமான சோமன். க௮-௨௰ அக்னி ரிஷி க-க௰ ஹிரண்யஸ்தூபன். கக-க௪- அவத்ஸாரன். கரு-௧௭ ஜமதக்னி. க௮-௨௰ த்த்ஸ ஆங்கிரஸன்.**

க. சோம பாவமானனே! நீ ஜயமுடனாகவும், மகத்தான சிறப்பை எமக்கு அளிக்கவும்; அப்பால் எங்களை 2 சிரேயசுடன் செய்யவும். ௨. சோமனே! நீ சோதியை யளிக்கவும், சுவர்க சோதியைத்தரவும்; எல்லா சௌபாக்கியங்களையும் 3 எங்களுக்குக் கொடுக்கவும். அப்பால் எங்களை சிரேயசுடன் செய்யவும். ௩. சோமனே! பலத்தையும் மனோவன்மையையும் செயல் செய்யும் சிறப்பை—அளிக்கவும், அப்பால் எங்களை சிரேயசுடன் செய்யவும். ௪. புனிதஞ் செய்பவர்களே! இந்திரனுக்கு, அவன் பானத்திற்கு சோமனைச் சுத்தமாக்கவும். அப்பால் எங்களைச் சிறப்புடனாக்கவும். ரு. சோமனே! உன் செயல் சாமர்த்தியத்தால், ரட்சைகளால் சூரியனில் நீ எங்களை சேர்ப்பிக்கவும். அப்பால் எங்களை சிரேயசுடனாக்கவும்.

௬. சோமனே! உன் சித்தத்தாலும் ரட்சைகளாலும் நாங்கள் வெகுகாலம் சூரியனைக் காணவேண்டும்.

---

1 மழையை 2 சிறப்புடனாக. 3 சிறந்த பொருள்களையும்.

1 இப்பொழுது இருப்பதைவிட மேன்மையாய்ச் செய்யவும். எ. சுபமான ஆயுதமுள்ள சோமனே! இரண்டு சகங்களிலும் திருடமான ஐசுவரியத்தைப் பொழியவும். அப்பால் எங்களை சிரேய சுடனுக்கவும். அ. போரில் ஜயிப்பவனாய் சத்துருக்களால் வெல்ல முடியாத நீ எங்களில் ஐசுவரியத்தை பொழியவும். அப்பால் எங்களை சிரேய சுடனுக்கவும். கூ. பவமானனே! பலதர்மங்களில் மனிதர்கள் யக்ஞ சாதனங்களால் உன்னை வளர்ச்சியாக்குகிறார்கள். அப்பால் எங்களை சிரேயசுடன் செய்யவும். ௰. இந்துவே! அதிசயமான 3 வாழ் நாட்களை அளிப்பதான ஐசுவரியத்தை அளிக்கவும் அப்பால் எங்களை சிரேயசுடனுக்கவும்.

௰௧, சந்தோஷமளிக்கும் அவன் சோமன்-துரிதமாய் ஓடுகிறான்; சோமரச தாரை—சந்தோஷமளிக்கும் தாரை—தாண்டிக்கொண்டு துரிதமாகிறான். ௰௨, காலை (என்னும்) தேவி எல்லா ஐசுவரியங்களையு மறிகிறாள், மனிதனை ரட்சிக்கவும் தெரிந்துளாள், சந்தோஷமளிக்கும் இவள் துரிதமாய் ஓடுகிறாள். ௰௩. துவஸ்ரவர்களிடமிருந்து புருஷந்தியினிடமிருந்து ஆயிரங்களை தரித்துள்ளோம், சந்தோஷமளிக்கும் இவன் துரிதமாய்ச் செல்லுகிறான். ௰௪. அவனிடமிருந்து மூன்று ஆயிரங்களை அங்கீகரித்துள்ளோம், சந்தோஷமளிக்கும் இவன் துரிதமாய் ஓடுகிறான்.

௰௫. சந்தோஷமளிக்கும் தாரையால் சோமர்கள் மகத்தான மேன்மைக்கு-பலத்திற்கு-துதிக்கப்பட்டவர்களாய்ப் புலனுக்கப்பட் டுள்ளார்கள். ௰௬. பிரியமான பால்களைப் பருக நீ பெருகுகிறாய் புனிதமாகிக் கொண்டு வீரத்தை பொழிகிறாய், வன்மையை அளித்துக் கொண்டு இங்கு பெ

---

1 எங்களை சிரேயசுடனுக்கவும் என சாயனர் சொல்லுகிறார். 3 எங்கும் செல்லுவதான. 4 சமான சுபாவர்களிடமிருந்து

ருகவும். ௭. இன்னம் [1] ஜமதக்னியால் துதிக்கப்பட்ட நீ எங்கள் பசு சம்பந்தமான எல்லா போஷிக்கும் பொருள்களேயும் அளிக்கவும்.

௮. பூஜ்யனான ஜாத வேதசனுக்கு எங்கள் மனத்தால் இந்தத் தோத்திரத்தை ரதத்தைப்போல் இணைப்போம். எங்களது பெருமையான புத்தி மங்களமுடனாகட்டும்; அக்னியே! உன் நட்பால் நாங்கள் ஹிம்சையன்னியிலாகவேண்டும். கக. அக்னியே! சமித்தை சேகரிப்போம். உனக்கு ஹவிஷுகளைச் செய்வோம். நாங்கள் வெகுகாலம் வாழ எங்கள் நினைவுகளை பூர்ணமாக்கவும். உங்கள் நட்பால் நாங்கள் ஹிம்சையன்னியிலாகவேண்டும். உ0. உன்னை எழுச்சியாக்கும் வன்மையை நாங்கள் அடையவேண்டும். எங்கள் புலன்களை பூர்ணமாக்கவும், உன்னில் தேவர்கள் அளிக்கப்படுவதை அநுபவிக்கிறார்கள்; நாங்கள் நாடும் ஆதித்தியர்களை இங்கு கொண்டு வரவும். உன்நட்பில் நாங்கள் ஹிம்சையன்னியலாக வேண்டும்.

---

## கண்டம் க0௭

தேவதை - க - ௩ ஆதித்யன் ௪ - ௬, இந்திரன். ௭ - ௯ இந்திராக்னி. ரிஷி க-௩ வசிஷ்டன், ௪-௬ திரிசோககாண்வன் ௭ - ௯ சியாவாசுவன்.

க. சத்துருக்களைக் கொல்லும் அர்யமானையும் மித்திரன் வருணனையும், உன்னையும் சூரியன் உதயமானதும் துதி செய்கிறேன். உ. ஹிதமாயும் ரமணீயமாயுமுள்ள ஐசுவரியத்தால் இந்து அறிவு அஹிம்சையுடனான அதிபலத்தை எங்களுக்குக் கொண்டுவரட்டும், [2]பிராமணர்களே; இது யக்ஞ சாதனத்திற் காகட்டும். ௩. மித்திர வருணர்களே!

---

1 ஆத்மாவை சாக்ஷாத்காரஞ் செய்பவன். 2 அறிஞர்களே.

நாங்கள் அறிஞர்களோடாக வேண்டும். நாங்கள் உணவு உத்தம சுகத்தை தரிக்கவேண்டும்.

ச. இந்திரனே! நீ சகல துவேஷிகளையும் ஒழிக்கவும், ஹிம்சிப்பவர்களை சண்டையில் சிதைக்கவும், நாங்கள் நாடும் ஐசுவரியத்தைக் கொண்டு வரவும். ரு. எல்லா மனிதர்களும் உன்னால் தாராளமுடன் கொடுக்கப்படும் ஐசுவரியம் என அறியப்போகும் நாங்கள் நாடும் பொருளை நீ கொண்டு வரவும். சு. செங்குத்தாய் திருடமாய் திடமான இடத்தில் மறைக்கப்பட்டுள்ள எந்த ஐசுவரிய முண்டோ நாங்கள் விரும்பும் அதை எங்களுக்குக் கொண்டு வரவும்.

எ. இந்திராக்னியே! யக்ஞத்தின் [1] ரித்விக்களே! போர்களிலும் புனித செயல்களிலும் நீங்கள் ஜயிப்பவர்களாகும். இந்த விஷயங்களில் எமக்கு அறிவுடனுக்கவும். அ. இந்திராக்னியே! சம்பத்தான ரதங்களில் செல்லுபவர்களே! ஜயிக்க முடியாதவர்களே! விருத்திரனைக் கொல்லுபவர்களே! இந்தத் துதியை நன்றாயறியவும். கூ. இந்திராக்னியே! உங்களை உத்தேசித்து மனிதர்கள் [2] கற்களால் மதகரமான மதுவை அமிழ்த்தியுளார்கள். இதை நன்றாயறியவும்.

---

## கண்டம் சO அ

தேவதை - க—அ, பாவமான சோமன். க - ங கசிய பன் ச - ரு சப்தரிஷிகள். சு, எ, அ, அமஹீயுனன்,

க. இந்துவே! மது நிறைந்த நீ யக்ஞத்தின் நிலயத்தில் விளங்க [3] மருத்துடனை [4] இந்திரனுக்குப் பெருகவும். உ. தோத்திரஞ் செய்யும் (மொழி அறியும்) பிராமணர்கள்

---

1 செயல் செய்பவர்களே. 2 தியானங்களால். 3 காற்றுடனை. 4 ஆத்மாவிற்கு.

1 தரிக்கும் உன்னை அலங்கரிக்கிறார்கள். உன்னை மனிதர்கள் சுத்தமாக்குகிறார்கள். ந. 2 மித்திரன் வருணன் அர்யமான் பவமானனது ரசத்தைப் பருகட்டும். உன் ரசத்தை மருத்துக்களும் பருகட்டும்.

ச. சுபமான கையுள்ளவனே; நீ சுத்தமாகுங் கால் 3 சமுத்திரத்தில் சப்தத்தை பிரேரணை செய்கிறாய். பலர்களால் விரும்பப்படும் வெகு பல பொன்நிறப் பொருளைப் பெருக்குகிறாய். ரு. ரோம மயமான புனிதத்தில் சோமன் புனிதமாக்கப் பட்டுளான், 4 கலசத்தில் விருஷபம் சப்தஞ் செய்துளான், தேவர்களது நிலயத்தில் பாலுடன் தோய்ந்து சோம பாவமானனே! நீ பெருகுகிறாய்.

சு. 5 சமுத்திரத்தின் மகனான உன்னை, இந்த சோமனை, பத்து 6விரல்கள் சுத்தமாக்குகின்றன. அவன் ஆதித்தியர்களோடு 7 காண்கிறான். எ. சோமன் சூரியனின் ஒளிகளோடு புனிதத்தில் இந்திரனோடும் வாயுவோடும் செல்லுகிறான். அ. மதுவுடனும் 8 சௌந்தர்யமுடனுமுள்ள நீ எங்கள் பகனுக்கு வாயுவிற்கு பூஷணனுக்கு மித்திரனுக்கு வருணனுக்குப் பெருகவும்.

---

## கண்டம் க0க.

தேவதை - க - ந, எ - கூ இந்திரன். ச - சு சோமன். ரிஷி. க - ந சுனச்சேபன் ஆஜிகர்தி. ச-சு மதுச்சந்தன் விசுவாமித்திரன். எ. கூ மாந்தாதா யௌவனசுவன்.

எவற்றால் உணவில் ஐசுவரியமுடனாகி உற்சாகமாகிறோமா அவற்றால் இந்திரனில் சந்தோஷமுடனாக

---

1 எல்லாம் தரித்துள்ள அல்லது அடைந்துள்ள 2 பிராணன் அபானன் வியானன். 3 மனோகடல். 4 ஆத்மாவில். 5 சித்தமென்னும் கடலின். 6 சாதனங்கள். 7 தென்படுகிறான். 8 அழகுடன்.

வேண்டும். ஐசுவரியமுடன் பலமுள்ளவர்களாகவு மாக வேண்டும். உ. வீரனே: அனுக்கிரக புத்தியுக்தமான நீ யாசிக்கப்படும் தோத்திரிப்பவர்களுக்கு இணைக்கப்பட்ட வனாய் ரதச்சக்கிர அச்சுப்போல் அவசியமாய் [1] உன்னைப் போல் நீ செல்லுகிறாய். ௩. [2] நூறு செயல்கள் செய்பவனே! தோத்திரஞ் செய்பவர்களை [3] சேவைபுரிய பிரீதியுடனுக்குவ தற்குப் போல் ரதசக்கிர ஆணிபோல்- வருகிறாய்.

கறப்பவனிடம் பசுக்களைப்போல் தினந்தோறும் எங்கள் ரட்சிப்பிற்கு சுபமான செயல்களைச் செய்யும் இந்திரனை அழைக்கிறோம். ரு. சோமன் பருகுபவனே! சோமனது யக்ஞத்திற்கு எங்கள் சமீபம் வரவும், வந்து பருகவும், ஐசுவரியமான உன் ஆனந்தம் [4] பசுக்களை அளிப்பதாகின்றது. சூ. உனது அகத்திலுள்ள சிறந்த அறிவுகளின் நடுவே உங்களை அறியலாமென நாங்களி லிருக்கலாமோ? இங்கு வரவும், எங்களைப் புறக்கணிக்க வேண்டாம்.

எ. உஷையைப்போல் வானத்தையும் பூமியையும் உன் தேசசால் நிரப்புகிறாய்: மகத்தான [5] தேவர்களுக்கு அதிகமான மனிதர்களின் ஈசனான [6] உன்னை தேவமாதா சனனஞ் செய்கிறாள்; கல்யாணமாயுள்ள அன்னை உன்னை சனனஞ் செய்கிறாள். அ- ஞானமளிப்பவனே: சக்தியைப்போல் நீளமான அங்குசத்தை நீ தரிக்கிறாய். முன் பாதத்தால் ஆடு—இலைகளுடனான — கிளையை இழுப்பதுபோல் மாதாவான தேவி உன்னை சனனஞ் செய்கிறாள். மங்களமுடனான அன்னை உன்னை சனனஞ் செய்தாள். கூ. துஷ்ட வேலைசெய்யும் மனிதரின் திருட பலத்தை தளர்ச்சி யாக்கவும், எவன்

---

1 உனக்கு நீதான் நிகர். 2 கணக்கற்ற செயல்கள் செய்பவனே. 3 உதவி புரியவும். 4 புவி முதலியவைகளை. 5 திவ்யமானவர்களின். 6 திவ்ய ஆத்மாவை.

நம்மை அடிமையாக்க விரும்புகிருனே அவனை உன் பாதங்களில் சாய்த்துத் தேய்க்கவும். தேவியான தாய் உன்னை சனனஞ் செய்தாள்; மங்களமான [1] உன்னை சனனஞ் செய்கிருள்.

---

## கண்டம் ககo

**தேவதை க - கச பாவமான சோமன். ரிஷி க - ௩ அஸிதன் காச்யபன் தேவலன். ச, ரு, நுணசய சக்தி. கூ-அ பர்வத நாரதர்கள். கூ - ௰க மனுசாம்வரணன். கஉ - கச துத்ஸன்.**

க. சோமன், மலையில் வசிப்பவன், புனிதப் பொருளில் சப்தஞ் செய்துகொண்டு பாய்கிருன், சந்தோஷமுள்ளவர்களில் எப்பொழுது மளிப்பவனுகிருன். உ. நீ [1] விப்ரன் [2] கவியாகும்; ரசத்தின் மகனை மதுவாகும்; சந்தோஷமுள்ளவர்களில் சர்வமான பொருள்களையும் தரிப்பவனுகிருய். ௩. உன்னில் பருக எல்லா தேவர்களும் ஒரே பிரீதியுடன் வந்துளார்கள். சந்தோஷ முள்ளவர்களில் நீ தாராளமாய் அளிப்பவனு யிருக்கிருய்.

ச. ஐசுவரியப் பொருளைக்கொண்டு வருபவனும் சுகந்த உணவையும் சுகமான வீடுகளை அளிப்பவனுமான சோமன் பொழியப்பட்டுளான். ரு. எவனை இந்திரனும் மருத்துக்களும் பருகுவார்களோ அர்யமானேடு பகனும் பருகுவார்களோ, அவனுல், மித்திரன், வருணன் இந்திரனை எங்கள் ரட்சிப்பிற்குக் கொண்டு வருகிறேம்.

கூ. நண்பர்களே! நீங்கள் சந்தோஷத்திற்கு சோமனை கானஞ் செய்பவும்; [3] ஹவிஷுகளாலும் துதிகளாலும் சோ

---

1 அறிஞன். 2 முன் விஷயங்களை அறிபவன். 3 மேன்மையான அளிப்புக்களால்,

மனைப் சிசுவைப்போல் [1] சுவாதுடனுக்கவும். எ. தாய் பசுக்களுடனுன கன்றைப்போல் தேவர்களின் ரட்சகனுய் சந்தோஷமளிப்பவனுய் துதிகளால் அலங்கரிக்கப்பட்டு துதிகளால் துதிக்கப்பட்டு தேவ இன்பமளிக்கும் ரசம் அனுப்பப் படுகிறுன். அ. சோமன் பலமுடனுன செயல்களுக்கு சாதனமாவான்; அவன் பலத்திற்கு, பெரிய ஒளியுடனுவதற்கு, [2] தேவர்களின் நன்மைக்கு, பொழியப்பட்டுள்ள அவன் பெரும் சுவையுள்ளவனுகும்.

கூ. [3] அதிக மார்கத்தை நீடிப்பவர்களாய் பாபம் பிரிந்து நண்பர்களாய் பொழியப்பட்டவர்களாய் சோபனத் தியானர்களாய் சர்வக்ஞர்களாய் எங்களுக்கு சோமர்கள் வருகிறுர்கள். ்ய. புனிதமாகி, பண்டிதர்களாகி [4] தயிர்கலந்து துரிதமாகி நெய்யில் நிலையாகி, இந்த சோமர்கள் சுந்தரமான சூரியர்களைப்போல் தென்படுகிறுர்கள். ்யக. [5] பசுவின் சர்மத்தினுல் புலனுவதாய் கற்களால் பொழியப்படும் ஐசுவரியம் அபிவிருத்தியாக்கும் சோமர்கள் எமக்கு உணவை அறிவை உபதேசிக்கிறுர்கள்.

்யஉ. இந்தப் புனித தாரையால் இந்த ஐசுவரியத்தைப் பொழியவும்; இந்துவே! [6] மான சரோவரத்தில் பாயவும். தோன்றும் சாதக பட்சிக்கு ஏரியிலே செல்லவும், துரிதமாய் வருபவனுக்கு சோமனது ஞாபகஞ் செய்யும் சூரியன் வாயுவைப்போல் வேகமடைந்து அறிவு நிறைந்தவன் (வீர) மகனை அளிக்கட்டும். கங. செவியுறப்படும் சிறந்த ஸ்தானமான என், [7] யக்ஞத்தில் எங்களுக்குப் புனித தாரையோடு

---

1 உங்களுக்கு இனிமை கொடுப்பவனுக செய்துகொள்ளவும். 2 மேன்மையான புருஷர்களின், புலன்களின். 3 நீண்ட சுபமானவாழ்க்கையை. 4 தியாகந்தோய்ந்து. 5 புவியின் நிலயத்தில். 6 மனே சமுத்திரத்தில். 7 நல்ல செயலில், சண்டையில்.

பெருகவும். கச. ஆயிரங்களான ஐசுவரியங்களை மரங்களின் பழுத்த பழங்கள்போல் சத்துருக்களை ஜயிக்க பகைவர்களை பாழாக்கும் சோமன், பொழியட்டும். கச. கைப்போர், குதிரைப்போரில் சத்துருக்களைக் கொல்லும் உன்னிலுள்ள அந்த [1] இரண்டு செயல்களை நாங்கள் நாடுகிறோம். அவன் எங்கள் சத்துருக்களை உறங்கச்செய்து ஒழிக்கிறான்; மதியற்றவர், மித்திரனில்லாதவர்களை அவன் திருப்புகின்றான்.

---

## கண்டம் ககக.

தேவதை - க - ௩, அக்னி. ச - சு விசுவேதேவர்கள். ரிஷி. க - ௩, வது சு வது - கோபாயன லோபாயனர், ச-சு பௌவனர்கள்.

க. அக்னியே! எங்கள் நெருங்கிய நண்பனாகவும், மேலும் எங்கள் ரட்சகனாகவும் [2] ரம்மிய மளிப்பவனாகவுமாகவும். உ. [3] வசுவாய் அக்னியாய் ஐசுவரியஞ் சிறந்தவனாய் வரவும், ஒளி நிறைந்தவனே! [4] வியாப்தமான ஐசுவரியத்தை எமக்கு அளிக்கவும். ௩. மிக ஒளி பொருந்தியவனே! சோதியுள்ளவனே! எங்கள் சுகத்திற்கும் நண்பர்களுக்கும் இப்பொழுது உன்னை நாங்கள் நாடுகிறோம்.

ச. [5] இந்திரன் [6] விசுவேதேவர்களின் பிரியத்தோடு இந்த உலகங்களை யெல்லாம் நாங்கள் துரிதமாய் [7] வசிகரஞ் செய்யவேண்டும். ரு. எங்கள் யக்ஞத்தை சரீரத்தை, [8] பிர

---

1 கைச்சண்டை குதிரைச் சண்டை அல்லது புற சாதன சண்டை. 2 ரமணீயமான செல்வமளிப்பவன். 3 நிலய மளிப்பவனாய். 4 எங்கும் நிறையும் பொருள்களை. 5 வன்மை. 6 எல்லா சாதனங்களின் செல்வத்தோடு. 7 அரசுபுரியவேண்டும். 8 நாங்கள் அரசுபுரியும் சனங்களை.

சைகளை இந்திரன் ஆதித்தியர்களோடு ரட்சிக்கட்டும். 1 சூ ஆதித்தியர்களோடு மருத்து கணங்களோடு எங்களுக்கு ஔஷதங்களை செய்யட்டும்.

எ. நீங்கள் அருகிலே 2 இந்திரனை பூஜிக்கவும்—நாடவும்.

---

## கண்டம் ககஉ.

தேவதை - சோமபாவமானன். ரிஷி - விருஷகண வசிஷ்டன்.

க. காவ்யத்தை கோஷிக்கும் 3 உசனனைப் போல் தேவர்களின் சன்மங்களை 4 சந்தானங்களை தேவர் சொல்லுகிறார்; 5 மகாவிரதனாய் மெய்யொளி பந்துவாய் பாவம் பிரிப்பவனான வராகன் 6 சப்தஞ் செய்து கொண்டு 7 பாதத்தோடு முன் செல்லுகிறான். உ. 8 விருஷ கணங்கள் சமீபத்திலிருந்தே மூன்றான 9 பலங்களை எண்ணி ஹம்சங்கள் போல் யக்ஞகிருஹத்தை அடைகிறார்கள்; நண்பர்கள் துதிக்கருகதையான எதிர்க்கமுடியாத சோமனை உத்தேசித்து வேணுவை ஒரே காலத்தில் கானஞ் செய்கிறார்கள். ந. அவன் வெகு வித கானத்தின் எதிரொலியை இணைக்கிறான், ஆயாசமன்னியில் விளையாடும் சோமனை செல்லும் 10 அந்நியர்கள் 11 அளப்பதற்குச் சக்தியற்றவர்கள், அவன்

---

1 ரட்சிப்பதற்கான செயல்களை நாங்கள் செய்வோம். 2 வன்மையை, வன்மையடைவதற்கான சாதனங்கள் தேகபலம் ஆத்மபலம், சமூகபலம். 3 கவியைப்போல், கல்வி நிறைந்தவனைப்போல், 4 சந்தானர்களும், அவர்மக்கட்களும், செய்ய வேண்டியதை, 5 பெரிய சங்கற்ப முள்ளவனாய், 6 உயரிய மொழி உரைப்பவனாய், 7 சாதனத்தோடு, 8 வன்மை புருஷர்கள், மேதாவிகள் 9 சத்வ, ரஜசு, தமோகுணங்களை. 10 விருஷமற்றவர் பலமற்றவர், 11 அறிவதற்கு.

கூர்மையான கதிர்களோடு வெகு வித தேசசுகளை கொண்டு வருகிறுன். இரவில் ஹரியாகவும் பகலில் ஒளியாகவும் புலனு கிறுன்.

ச. கர்ச்சனை செய்யும். 1 சோம துளிகள் ரதத்தைப் போல் குதிரைகளைப்போல் சத்துருக்களின் சிறப்பை நாடி செல்வத்திற்காகச் செல்லுகிறுர்கள். ரு. கைகளினின்று பிரேரிக்கப்பட்டு துரிதமாக்கப்படும் ரதங்களைப்போல் போர் செய்பவர்களின் புனித கானங்கள் போல் அவர்கள் முன் சென்றுளார்கள். சு. 2 ஏழு ஹோத்துருக்களான யக்ஞத் தைப் போல் துதிகளுடனுன ராஜர்களைப்போல் சோமர்கள் அலங்காரஞ் செய்து கொள்ளுகிறுர்கள். எ. சந்தோஷத் திற்கு பொழியப்பட்ட மதுசோமர் பெரிய மொழியோடு தாரையோடு பெரும்வாரியாய் பொழிகிறுர். அ. 3 விவஸ் வதனின் புகழ்ச்சியைப் பெற்றுக்கொண்டு உஷஸின் ஒளியை துரிதமாக்கி சூரியனைப்போல் ஒளி வீசுபவர்களாய் சூட்சமத்தை சோமர்கள் 4 விஸ்தாரமாக்குகிறுர்கள். கூ. புலன்களின் கர்த்தாவாய் புராதனமான சோமனுடைய சோதியைக் கொண்டுவரும் மனிதர்கள் யக்ஞவழியை விளக்குகிறுர்கள். ω. நெருங்கி ஒரே சாதியான 5 ஏழு ஹோதாக்களான புருஷர்கள் ஸோமனது நிலயத்தை வியா பிக்கிறுர்கள். ωக. யக்ஞத்தின் நடுவான சோமன் எங்கள் நடுவில் தான் அனைத்தையும் தரிக்கிறுன் செய்கிறுன்; கண்க ளால் சூரியனைக் காணட்டும். கவியின் மகனைக் கறக்கிறேன். ωஉ. பிரிய பதமான இருதயத்தில் அத்வர்யுக்களால் வைக்

---

1 வீரர்கள், 2 ஏழு சாதனங்களுடனுன, 3 மனிதகோடி யின், 4 தங்கள் அரசை எங்குஞ் செய்கிறுர்கள். 5 ஏழு யக்ஞ புருஷர்கள் அறிஞர்கள் ஏழுநாள்களான வாரம் அல்லது சதாகாலம்.

கப்பட்ட ஒளியின் பதத்தை—திசையை—தன் கண்ணால் சூரியன் பார்க்கிறான்.

---

## கண்டம் கக௩.

தேவதை - சோம பாவமானன். ரிஷி - க -கஉ-அஸித காசியப தேவலன்.

க. சத்திய தர்மத்திற்காக இந்துக்கள்— (சோமர்கள்) செய்பவர்களின் யோக்கியதா சம்பந்தங்களை அறிந்து கொண்டு சுபமுடனான திவலைகள் நல்லவழியிலே பெருகி யுளார்கள். உ. [1]ஹவிஷுகளில் உத்தமமான ஹவிஷே துதிப் பதற் கருகதையாகும், மிகவும் மேன்மையான மதுவின் தாரையானது மகத்தான சலங்களில் அமிழ்கின்றது. ௩. சலத்தில் தொடர்ச்சியான மொழிகளை யக்ஞத்தைச் சுற்றி லும் முதன்மையாய், மெய்வடிவமாய், இம்சையற்றவனாய் சிறந்தவனாய் வர்ஷிப்பவனாயுள்ளவன் சப்தஞ் செய்துளான். ச. கவியானவன் பலத்தை சோதனை செய்துகொண்டு கவிச் செயல்கள் எங்கும் பெருகுங்கால் பலமுடனாகி சுவர்கத்தை- சுதந்தரத்தை [2]சேவிக்கிறான். ரு. அரசன் சத்துருக்களை அழிக்கச் செய்வதுபோல் சோமனை அறிஞர்கள் பிரேரிக் குங்கால் புனிதமாகுங்கால் அவன் சத்துருக்களை நாசஞ் செய்யச் செல்லுகிறான்.

சு. ஹரியானவன் பிரியமானவன் ஆட்டு [3]ரோமங் களிலான சலங்களில் சாய்கிறான், கானஞ் செய்பவன் கானங் களால் சேவிக்கப் படுகிறான். எ. சோமனது செயல்களால் ரமிப்பவனுக்கு அவன் (சோமன்) வாயுவை இந்திரனை அசு வினிகளை இன்பத்தோடு ஒருமையுடன் வசமாக்குகிறான்.

---

1 அளிப்பவற்றில், 2 நாடுகிறான். 3 புனிதப் பொருள் களில்.

அ. அவன் மகத்தானவன்மைகளோடு மேன்மையுடன் சனங்கள் அனைத்தையும் அறிபவனாய் சோமனான அந்த மதுவின் அலைகள் மித்திரவருணனுக்கு பகனுக்கு எழுச்சியாகின்றன. கூ. வானம் பூமியே! தேவர்களுக்கு இன்பமளிக்கும் சோம இலாபத்திற்கு ஐசுவரியம் கீர்த்தி எல்லா [1] வாசங்களையு மளிக்கவும். ல. இன்று, சுகமளித்து செல்வமளிப்பதாய், காப்பதாய், பலர்களால் சாயப்படுவதான உன் சக்தியை நாடுகிறோம். லக. சிறந்தவனாய் செம்மையாய் அறிந்தவனாய் சீல சித்தமுடனாய் ரட்சகனாய் சகலர்களால் விரும்பப்படுபவனான உன்னை நாடுகிறோம். லஉ. சுபமான [2] பிரக்ஞையுள்ள சோமனே! உன் ஐசுவரியத்தை நாங்கள் நாடுகிறோம். நல்ல அறிவை எங்கள் மக்கட்களில் எங்களில் அளிக்கவும், ரட்சகனாய் பலர்களால் விரும்பப்படும் உன்னை நாடுகிறோம்.

---

## கண்டம் ககச

தேவதை - க - கூ பவமான சோமன். எ - கூ வைசுவா நரன். க0 - கஉ - மித்ராவருணர்கள் - ரிஷி க - ங அஸிதகாசியப தேவலன். ச - கூ - பிருது வாருணி ஜமதக்னி, எ - கூ பரத்வாஜ பார்ஹஸ்பத்தியன். க0 - கஉ ய்ஜத ஆத்ரேயர்கள்.

க. சுவர்கத்தின் தலைவனாயும் சகத்தின் தூதனாயும் சத்தியத்தின் நிமித்தம் [3] சனிப்பவனாயும், கவியாயும் பெரிய ராஜனாயும் சனங்களின் அதிதியாயும் எங்கள் பாத்திரனாயுமான [4] வைசுவாநர அக்னியை தேவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். உ. அமிருதனே. விசுவேதவர்கள் நீ உன் சாமார்த்

---

1 நிலயங்களையும். 2 அறிவுள்ள. 3 புலனாகுபவன். 4 எங்குமுள்ள.

தியத்தால் சிறப்பாகும் சமயத்தில் மகனைப் போல் துதி செய்கிறார்கள். வானம் பூமியின் நடுவே நீ ஒளி வீசுங் கால் வைசுவாநரனே: (மகா சனங்கள்) அமிருதத்தை அடைவார்கள். ந. நடுவை ஐசுவரிய நிலயத்தை மகத்தான ஆகுதி நிலயத்தை நன்றாய் துதி செய்துளார்கள்; வைசுவா நரனை, சாரதியை யக்ஞத்தின் கொடியை தேவர்கள் சனனஞ் செய்துளார்கள்.

ச. உங்கள் மித்திரன் வருணனிற்கு வியாப்த மொழியால் கானஞ் செய்யவும்: பெரிய பல முள்ளவர்களான நீங்கள் பெரும் சத்தியர்கள். ரு. மித்திரன் வருணனை இருவர்கள் சகலங்களின் அரசர்கள், [1] நெய் நிலயங்கள், தேவர்களில் தேவர்கள் திவ்யமாகிறார்கள். சு. அந்த தேவர்கள் எங்களுக்கு தரணி சம்மந்தமான திவ்ய ஒளியின் மகத்தான ஐசுவரிய சக்தியை அளிக்கட்டும், தேவர்களில் உங்கள் மேன்மையான பலம் பிரசித்தமாகும்.

எ. [2] சித்திர பானுவே! இந்திரனே! வரவும், இந்த சோமர்கள் உன்னை நாடுகின்றன, இவை சூட்சம—சாதனங்களால்—சாசுவதமாய் புனிதமானதாகும். இந்திரனே! புத்தியால் தூண்டப்பட்டு வித்வான்களால் எழுப்பப்பட்டு சோமயுக்தமான ருத்விக்களின் பிரமங்களின் அருகே வரவும் அ. [3] குதிரை இணைந்த இந்திரனே! பிரமங்களை—அறிபவர்களிடம்—வரவும்; துரிதமாய்க்கொண்டு சோம செயலில் எங்களது ஹவிலட்சண உணவை தரிக்கவும்.

கூ. எவன் சுவாலையுடனான தேசசால் எல்லா வனங்களையும் சூழ்ந்துகொண்டு தன் நாக்கினால் கருமையாக்கி விடுகிறானோ அவனைத் துதிசெய்யவும்; ய. எவன் ஒளியான

---

1 ஒளி நிலயங்கள். 2 அதிசய ஒளி யுள்ளவனே. 3 பலமறிந்தவர்களில்.

அக்னியில் சுக கரமான [1] ஹவிஷை இந்திரனுக்கு அளிக்கிறனே அவன் சோதியை அடைய சனங்களைத் தாண்டுபவனுகிறுன். ௰உ. இருவர்களே! இந்திரனையும் அக்னியையும் கொண்டுவர துரிதமான குதிரைகளை எங்களுக்கு அளிக்கவும், மேலும் எங்களில் வன்மையுடனான கீர்த்தியையும் கொடுக்கவும்.

---

## கண்டம் ககரு

தேவதை - க-ௌ இந்திரன். ச, ரு, இந்திராக்னி. ரிஷி க - ௌ, மதுச்சந்த வைசுவாமித்திரன். ச - ரு, பரத்வாஜ பார்ஹஸ்பத்தியன்.

இந்துவானவன் இந்திரனின் நன்றுய் செய்யப்பட்ட நிலயத்திற்கு புறப்பட்டுள்ளான்; நண்பனுடனான இந்திரனின் வாக்கின் ஆதரவை இம்சிப்பதில்லை; இளைஞன் யௌவனப்பெண்களுடன் போல் சோமன் முன் வருகிறுன்; அப்பால்—நூறு உபாயங்களான வழிகளால் [2] கலசத்தில் செல்லுகிறுன். உ. சோமர்களே! யக்ஞத்திற்கு நான்கு பக்கங்களும் மறைக்கப்பட்டுள்ள கிருகத்தில் துதிகளில் பிரியமாகி துதிப்பதற் கருகதையாய் இனிமையான சப்தத்துடனு உங்கள் துதிகள் வந்துள்ளன; கானஞ் செய்பவர்கள் விளையாடும் சுபாவமான ஹரியை துதி செய்துளார்கள்; தங்கள் பாலுடன் அவனைக் காண பசுக்களும் வந்துள்ளன.

ௌ. இந்துவே! சோமனே! உன்னை புனிதமாக்குங்கால் நீ எங்களில் சேர்க்கப்பட்ட ஏராளமான உணவை ரச அலைகளால் பொழியவும், தினத்தில் மூன்று முறை தடையன்னியில் எல்லா போஷிப்புக்களுடனான பலத்தையும் மதுநிறைந்த மேன்மையான வீரத்தையும் எமக்கு அளிக்கவும்.

---

1 மேன்மையான தியாகத்தை. 2 தேகத்தில், ஆகாயத்தில்.

௪. சதா காலம் வளர்ந்து எல்லாச் செயல்களையும் செய்யும் அவனைத் தீச்செயல்களால் ஒருவரும் அடைவதில்லை; தீரமாயும் பலத்தால் எதிர்க்க முடியாமலுள்ள எல்லாராலும் துதிக்கப்படும் இந்திரனை கெட்ட வழியிலுள்ளவர்கள் யக்ஞத்தினாலும் அடைவதில்லை. ரு. எவன் சன்மத்தில் வானங்களும் பூமிகளும் துதி செய்கிறதோ, மிகப் பெரியதும், வேகமுடனான பசுக்களும் நாடுகிறதோ, அந்த எதிர்க்க முடியாத [1] உக்கிரனை, சத்துரு சேனைகளில் ஜயிப்பவனை நாம் நாடுகிறோம்.

---

## கண்டம் ககசு

தேவதை க - ங பவமான சோமன். ௪ - சு இந்திரன். எ - ௪ பவமான சோமன். ரிஷி - க - ங, ஸிகதா நிவாரி. ௪ - சு, புருஷன்மன். எ - சு, பர்வத நாத சிகண்டினர்கள்.

நண்பர்களே! உட்காரவும், புனிதமாக்கும் சோமனுக்கு கானஞ் செய்யவும், சிசுவைப்போல் அவனை யக்ஞங்களால் சிரேயசுடனாவதற்கு அலங்கரிக்கவும். உ. தாய் பசுக்களால் கன்றை புஷ்டி செய்வது போல், பிராண சாதனமுடனான, தேவர்களின் ரட்சகனாய் சந்தோஷகரனாய் இரு உலகங்களிலிருப்பவனான சோமனை நன்றாயுண்டு பண்ணவும், புஷ்டியுடனாக்கிக் கொள்ளவும். ங. பலத்தின் சாதனத்தைத் புனிதமாக்கவும், மித்திரன் வருணன் சாந்தமாகும் வண்ணம் பலத்திற்காக [2] புசிப்பதற்கு பயிற்சியுடனாக வேண்டும்.

௪. பலவான் ஆயிரம் தாரைகளுடன் ரோமமுடனான புனிதத்திலும் கடந்து பாய்ந்துளான். ரு. பசுக்களுடன் கலந்து சலங்களால் சுத்தமாகப்பட்டு ஆயிரம் ரேதஸா-

---

1 கோபமுள்ள பலிஷ்டனை 2 அனுபவிக்க.

களோடு பலவான் பாய்ந்துளான். சு. சோமனே! மனிதர் களால் நியமிக்கப்பட்டு கற்களால் பொழிந்தவனும் சோம னே! இந்திரனது வயிற்றிலே செல்லவும்.

எ. தூரத்திலோ, சமீபத்திலோ சர்யணுவதியின் கரையிலோ சோமரசங்கள் பொழியப்பட்டன. அ. அர்சிகர் களில் அமிழ்த்தப்பட்டதும், மனிதர்கள் வீட்டில் முயற்சி யுள்ளவர்களால் மலரப்பட்டதும், அல்லது ஐந்து சனங்களில் செம்மையான, கூ. சோமரசங்கள் பெருகுங்கால் வழிந்து எங்க ளில் பொழியட்டும், வானத்தினின்று மழையையும் மேன் மையான வீரத்தையும் பொழியட்டும்.

---

## கண்டம். ககஎ

தேவதை க – சு, பவமான சோமன். எ – கூ அக்னி ரிஷி – க – ங அக்னி திஷிணயரான். ச – சு பிருதுவாருணி ஐம தக்னி. எ – கூ வத்ஸகாண்வன்.

க. உத்தமமான சோதியுலகினின்று அக்னியே! உன் மனதை வத்சன் இழுக்கட்டும், துதியால் உன்னை விரும்புகி றேன். உ. வெகு இடங்களில் நீ சமானமா யிருக்கிறாய் எல்லா திசைகளையும் மனுசரித்து நீ ஈசனாயிருக்கிறாய். போரில் ரட்சிப்பிற்கு உன்னை அழைக்கிறோம். ங. பலப் பொருள்களை நாடும்பொழுது, போரில் அதிசயப் பொருள் களை அளிக்கும் அக்னியை ரணகளத்தில் ரட்சிப்பாக அழைக்கிறோம்.

ச. சதக்கிரதுவே! எதையும் பார்ப்பவனே: எங் களுக்கு பலத்தை பொருளைக் கொண்டு வரவும். சண்டை யில் ஜயிக்கும் வீரத்தையும் கொண்டுவரவும். ரு. வசுவே சதக்கிரதுவே! எப்பொழுதும் எங்கள் தாயும் தந்தை

யுமாய் நீயுளாய். சுகத்திற்காக உன்னை இப்பொழுது [1] துதிக்கிறோம். கூ. பலமுள்ளவனே, பலமுறை அழைக்கப் படுபவனே! பலப் பொருள்களை உண்டு பண்ணுபவனே! பலத்தை யளிக்கும் உன்னை பிரார்த்தனை செய்கிறோம். எங்களுக்கு சிறந்த வீரப் புதல்வர்களை அளிக்கவும்.

எ. வச்சிராயுதனே! அதிசயனே! நீ எனக்கு அளிக் காத பொருள் ஒன்றுமில்லை. ஐசுவரியங் காண்பவனே: உன் இரு கைகளையும் நிரப்பி ஐசுவரியங்களை எமக்குக் கொண்டுவரவும். அ. சுவர்கத்திலிருப்பதை இந்திரனே! நீ விரும்பும் அருகதை யானவற்றைக் கொண்டுவரவும். உன் சம்பந்தமான நாங்கள் நீ தானத்தில் எல்லையில்லாத வன் என அறியலாமோ? கூ. வச்சிராயுதனான இந்திரனே! உன் திசைகளில் நாடுவதற் கருகதையாய் பெரியதயாய் போற்றப்படுவதாய் மனனஞ் செய்வதற்காய் எது உண்டோ அதனால் திருட சித்தமான, திடமான பலத்தை அனைவர்க் கும் அளிப்பதற்கு [2] துண்டம் துண்டமாக்குகிறாய்.

---

## கண்டம் ககஅ

**தேவதை க - கஉ, பவமான சோமன். ரிஷி - க - ங பிரதர்தன தைவோ தாஸின் ச - கஉ அஸித காசியப தேவ லன்.**

மேதாவியாய் வசீகரிக்கும் சிசுவை அவன் சன்மத் திலேயே மருத்துக்கள் தங்கள் கணங்களோடு சுத்தமாக்கி சுபமுடனுக்குகிறார்கள்; கவி-காவ்யங்களால் ரிஷி - அறிவால் சோமன் கானஞ்செய்து கொண்டு புனிதத்தில் செல்லுகி றான். உ. ரிஷி சித்தன் ரிஷி செய்பவன், சகல சோதி யுள்ள வன் ஆயிரம் சோதிகளால் துதிக்கப்படுபவன், கவிக

---

1 நாடுகிறோம். 2 அனைவருக்கும் பங்களிக்க.

ளின் நடுவே தலைமை வகிப்பவன் மகான் [1] மூன்றாவது உல கத்தை அடையும் விருப்பத்துடனான சோமன் கானஞ்செய் பவனாய் இந்திரனை(ப்போல்) ஒளி வீசுகிறான். ௩. போரில் கருடப் [2] பட்சி சாய்ந்துகொண்டு எங்கும் விரிந்து [3] கோவிந் தன் ஆயுதங்களை தரித்துக்கொண்டு சலங்களின் அலைகளை சமுத்திரத்துடன் சேர்த்து [4] மகிஷனானவன் தன் [5] நான் காவது நிலயத்தைச் செல்லுகிறான்.

௪. இந்த சோமன்கள் இந்திரன் சக்தியை வளர்ச்சி செய்துகொண்டு அவன் பிரியமான விருப்பத்தை பொழிந் துள. ௫. [6] சர்மத்தில் அமிழ்த்தப்பட்டு வாயுவிற்கும் அசு வினிகளுக்குப் பாயும் சோமர்கள் எங்களுக்கு சிறந்த வீரத் தை அளிக்கட்டும். ௬. சோமனே! நீ புனிதமாகுங்கால் இந்திரனின் இருதயத்தை தாராளமாய் அளிக்க தேவர்க ளின் நிலயத்தில் உட்காரச்செய்ய பிரேரிக்கவும். எ. சோம னே! உன்னை [7] பத்து விரல்கள் புனிதமாக்குகின்றன; [8] ஏழு அறிஞர்கள் தூண்டுகிறார்கள், விப்ரர்கள் உன்னில் சந்தோஷ மாயுளார்கள். அ. தேவர்களின் திருப்திக்கு [9] வடிகட்டி வழியாய் நீ பொழியப்படும் பொழுது [10] பால்க ளால் உன்னை தரிக்கிறோம்.

௯. [11] கலசங்களில் புனிதமாகுங்கால் சிகப்புடனான ஹரி வேதவாணி வஸ்திரங்களை தரிக்கிறான். ௰. ஐசுவரிய முள்ளவர்களான எங்களுக்கு நீ பெருகவும்; எங்கள் எல்லா சத்துருக்களையும் துரத்தவும், இந்துவே! நண்பர்களில்

---

1 சத்துவரஜ சுதமோகனத்திற்கப்பால். 2 ஆத்மா 3 சம ஸ்தஞான ரசிமிகளை அடைந்துள்ளவன். 4 பெரியவன். 5 மூன்று குணங்களுக் கப்பாலான பெரிய நிலை. 6 ஆகாசத்தில். 7 பத்து பிராணங்கள் 8 தேகம் மனம் ஆத்மா. கண் - உ காது - உ மூக்கு - உ வாய் - க. 9 வானத்தின் வழியாய். 10 அறிவுகளால், 11 சரீரங்களில்.

நுழையவும். ௬. சோமனே! சுவர்கத்தை அறியும் இந்திரனைப் பருகும் அனைத்தையும் பார்க்கும் உன்னை 1 சேவிக்கிறோம்; பிரசைகளையும் பலத்தையும் நாங்கள் அடையவேண்டும். ௭. சோமனே! வானத்தினின்று மழையைப் பொழியவும், பூமியில் பெரிய ஒளியை யளிக்கவும், சோமனே! போரில் எங்களுக்கு ஜயத்தை அளிக்கவும்.

---

## கண்டம் ககக

தேவதை - க - ௯ பவமான சோமன், ரிஷி - க - ௯ அஸிது காசிய்ப தேவலன்.

புனிதமான சோமன் ஆயிரம் தாரைகளால் 2 ரோமத்தில் பொழியப்பட்டு இந்திரன் வாயு சந்திக்கும் நிலயத்திற்கு பாய்கிறான். ரட்சையை நாடும் அறிஞர்களே! 3 பவமான விப்ரனுக்கு தேவரை அடைய உத்தமமாய் உதயமாகும் அவனைக் குறித்து கானஞ் செய்யவும். ௩. ஆயிர வன்மைகளுடனான சோம துளிகள் நமக்கு பலத்தை அளிக்க புனிதமாக்கப்படுகின்றன. தேவர் திருப்தியாக துதிக்கப்படுகிறார். ௪. நீ எங்களுக்கு ஐசுவரியத்தை அளிக்க பெருகுங்கால் ஏராளமான உணவைக்கொண்டு வரவும். இந்துவே! திவ்யமான 4 சுவீர்யத்தையு மளிக்கவும். ௫. பலத்தின் பொருட்டு பிரயத்தினஞ் செய்யுங்கால் அறிஞர்கள் சாதனங்களால் இருள் கூட்டத்தைத் தாண்டுகிறார்கள். ௬. இந்துக்கள் தேவர்கள் சாதனஞ் செய்யுங்கால் எங்களுக்கு உத்தம வீரங்களை ஆயிரம் ஐசுவரியங்களையும் பொழியட்டும்.

௭. கன்றுகளுக்குப் பசுக்கள் கதறுவதுபோல் சப்திக்கும் சோமதுளிகள் பாய்கின்றன. அவை பிராணன்

---

1 நாடுகிறோம். 2 வானத்தில். 3 புனிதனை. 4 சிறந்த வீரத்தையும்.

அபானனின் பலத்தால் தன்னை தரித்துக்கொள்ளுகின்றன. அ. பவமானனே ! இந்திரனுக்கு பிரேமை யளிப்பவனுயும் சந்தோஷனுய் சப்தஞ் செய்துகொண்டு எல்லா துவேஷிகளை யும் நாசஞ் செய்யவும். கூ. பவமானனே! சோதியைப் பார்த்துக்கொண்டு தானமற்றவர்களை துரத்தி விட்டு சத்தி யத்தின் நிலயத்தில் உட்காரவும்.

---

## கண்டம் கஉம

தேவதை—க - கூ, பவமான சோமன். ரிஷி - க-கூ- அஸித காசியப தேவலன்.

க. இந்திரனுக்கு மது நிறைந்த சத்தியஞான தாரை யால் பிரேரிதமான இந்துக்களாகும் சோமர்கள் உற்பத்தி யாகிறார்கள். உ. கன்றுகளுக்குத் தாய்மார்களான பசுக் கள் கதறுவதுபோல் சோமனைப்பருக இந்திரனை ரிஷிகள் அழைக்கிறார்கள். ந. அறிவளிக்கும் ஆனந்தம் புலனுக்கும் சோமர்கள் வேதமயவாணியில் ஆசிரயமாகி இன்பமடைந்து நிலயமளிக்கும் சமுத்திரத்தில் வசிக்கிறார்கள். ச. விசேஷ மாய் பார்ப்பவனுயும் கவியாயும் சிறந்த அறிஞனுயும் ஒளியுல கின் நடுவில் ரசிமி சமுகத்தில் அவன் பூஜிக்கப்படுகிறான். ரு. புனிதத்திலும் கலசங்களிலும் பொழியுங்கால் [1] இந்து சோமனை நன்றாய் ஆசிரயிக்கிறான்.

சூ. சமுத்திரத்தின் [2] உச்சஸ்தானத்தில் மதமளிக் கும் [3] கோசத்தை தூண்டிக்கொண்டு [4] துதியை இந்து செய் கிறான். எ. நித்திய ஸ்தோத்திரமான வனஸ்பதியானது நண்பனுன மனிதனுல் தூண்டப்பட்டு பால்தாரையினுள்ளே

---

1 இன்பமுள்ளவன். 2 உயரிய ஸ்தானத்தில், 3 பொக்கி ஷப் பெட்டியை 4 அறிவை அறிவிக்கிறான்.

வசிக்கிறது. ௮. பவமானனே, இந்துவே, ஆயிரம் வர்ச சுடனும் ஒளியுடனுன ஐசுவரியத்தை எங்களுக்கு அளிக்கவும். ௯. கவி சோமன் பரம ஸ்தானத்தி லுள்ளவனும் மேதாவியாய் தாரையால் ஒளியின் சோதியான பிரியமான உலகத்தில் விளையாடுகிறான்.

---

## கண்டம் ௧௨௧.

தேவதை - ௧ - ௫ பவமானசோமன். ரிஷி - ௧ - ௫ உ சத்யன்.

௧. சப்திக்கும் நதி அலைபோல் கோஷித்துக்கொண்டு உனது சக்திகள் எழுச்சியாகின்றன. அம்பின் கூரிய முனையைப் பிரேரிக்கவும். ௨. சூரிய சம்பந்த உன்னத ஸ்தானத்தில் நீ பெருகுங்கால் உன் பொழிவில் நாடுபவர்களின் [1] மூன்று மொழிகள் உயரக்கிளம்புகின்றன. ௩. பிரியமான ஹரியான மதுநிறைந்துள்ள பவமானனை [2] கற்களால் தூண்டுகிறார்கள். ௪. நல்ல சந்தோஷமளிப்பவனே! கவியே; ஈசனின் ஸ்தானத்தை அடைய தாரையால் புனிதத்திலே பாயவும். ௫. ஆனந்தமளிப்பவனே! அறிவுடனுன [3] பால்களால் கலந்து புலனாகி பெருகவும்; [4] இந்திரனது வயிற்றிலே நுழையவும்.

---

## கண்டம் ௧௨௨.

தேவதை - ௧ - ௩ பவமானசோமன். ௪—௯ பவமான சோமன். ரிஷி - ௧ - ௩ அமஹீயுன். ௪ - ௬ அமஹீயுன். ௭ - ௯—வித்ருபிகாசியபன்.

௧. உன் சந்தோஷத்தில் அகடு [5] மேகங்களைக் கொன்ற இந்திரன் இந்த ரசத்தோடு புசிக்க நீ பெருகவும். ௨. சத்

1 மூன்று வேதமொழிகள். 2 வச்சிராயுதங்களால். 3 ரசிமிகளால். 4 வன்மையுள்ளவன். 5 கோட்டைளை.

திய செயலுடனுன [1] திவோதாசருக்கு துரிதமாய் கோட்டைகளை துவம்சஞ் செய்கிறுன். [2] சம்பரன், அப்பால் [3] யது அந்த [4] துர்வசனேயும் கொல்லுகிறுன். ங. சோமனே, குதிரை காண்பவனே எங்களில் குதிரைகளையும் பசுக்களுடனுன ஐசுவரியஙகளையும் பொழியவும், இந்துவே! அளவில்லாத உணவையும் அளிக்கவும்.

ச. சோமனே! இம்சிப்பவர்களை கொன்று கொண்டு அளிக்காதவர்களை துரத்திக்கொண்டு இந்திரனது ஸ்தானத்தை அடைந்தவனுய் நீ பெருகுகிறுய். ரு. பவமானனே, சோமனே, மகத்தான ஐசுவரியங்களைக் கொண்டுவரவும், இம்சிப்பவர்களைக் கொல்லவும், வீரமுடனுன கீர்த்தியை அளிக்கவும். சு. சோமனே! தயையளிக்க விரும்பும் உன்னை ஆயிரம் சத்துருக்களும் தடுப்பதில்லை. புனிதமாகுங்கால் நீ ஐசுவரியமளிக்க விரும்புகிறுய்.

எ. மனிதர்களுக்கு ஹிதமான சலங்களைப் பிரேரித்துக்கொண்டு எந்த தாரையால் சூரியனைப் பிரகாசஞ் செய்கிறுயோ அந்த தாரையோடு பெருகவும். அ. மனிதர்களின் மேன்மையாயுள்ள பவமானன் ஆகாசவழியாய் செல்ல சூரியனின்—குதிரையான—[5] ஏதசை இணைக்கிறுன். கூ. இந்துவை இந்திரன் எனச் சொல்லிக்கொண்டு சூரியன் வருவதற்கு ரதத்திலே அந்த பொன்நிற குதிரைகளை இணைத்துளான்.

---

1 ஒளி சுபாவமுள்ளவனுக்கு. 2 சுகங்கெடுப்பவன். 3 நியமவிரோதி. 4 கெட்ட கோபமுள்ளவன். 5 ரசிமியை.

## கண்டம் கஉரு

தேவதை—க - ௩, அக்னி. ச - சு, இந்திரன். ரிஷி க - ௩, வசிஷ்டன் ச - சு. சுகக்ஷன்.

மனிதர்களில் நிலையாயிருப்பவனும் சத்தியவானாக வும் தேஜஸின் தலைவனாகவும் நட்புடன் பூஜிக்கப்பட்டு புனி தஞ் செய்பவனையும் நாடுவதற்கருகனையும் தூதனையுமுள்ள தேவரான சமானப் பிரியமுடனாகும் அக்னியை யக்ஞத்தில் செய்யவும், சித்தத்தில் தெளிந்து கொள்ளவும். உ. புல் தின்ன கனைக்கும் குதிரையைப்போல் அகண்ட அடக்கத்தி னின்று அவன் வெளி யேறியவுடன் அவனை அனுசரிக்கும் காற்று அவன் ஒளியினால் வீசுகிறான்; அப்பால் நீ செல்லும் வழி கருமையுடனாகின்றது. ௩. அக்னியே! புதிய சன்ம முடனானாலும் காளையான எழுச்சியான கழியாத சுவாலை யானது உன்னிடமிருந்து கிளம்புகிறது; ஒளியுடனில்லாத புகையாய் நீ சோதி யுலகம் ஏறுகிறாய், அக்னியே; நீ [1] தூதனாய் தேவர்களுக்குத் துரிதமாகிறாய்.

ச. மகத்தான [2] விருத்திரனைக் கொல்ல இந்த இந்திரனை வெகு பலமுடனாக்குகிறோம், அவன் வீரக்காளை யாகட்டும். ரு. ஐசுவரியமளிக்க செய்யப்பட்ட இந்த இந்தி ரன், பலமுள்ளவன் பலத்தில் பொருந்தியவன். பாக்களால் போற்றப்படுபவன் சோமனுக்கருகன். சு. துதிகளால் [3] தீட்சண்யமாக்கப்பட்ட வச்சிராயுதத்தைப்போல பலமுட னான ஒருவராலும் தடுக்க முடியாத [4] உக்கிரன் இம்சையற்ற வன் [5] வளர்கிறான்.

---

1 எங்கும் செல்லுபவனாய் 2 சத்துருவைக் கொல்ல. 3 கூர்மை யாக்கப்பட்ட. 4 கோபமுடன் பலமுள்ளவன். 5 எவன் பயிற்சி செய்து கொள்ளுகிறானோ அவனில் வன்மையாய் வளர்கிறான்.

## கண்டம் கஉச

**தேவதை—க - ங பவமான சோமன். ச - கூ பவமான சோமன். எ - அ இந்திரன் கூ, ய, இந்திரன். ரிஷி - க - ங சத்யன். ச - கூ கவி. எ - அ, தேவாதிதிகாண்வன். கூ ய பர்க கராககாதன்.**

க. [1] கற்களால் பொழியப்பட்ட சோமனை [2] அத்வர்யுவே! அழைத்துச் செல்லவும். இந்திரன் பருகுவதற்கு அதைப் புனிதமாக்கவும். உ. இந்துவே! உன் இன்பமளிக்கும் பவமானனின் ரசத்தை இந்த தேவர்களும் மருத்துக்களும் அனுபவிக்கட்டும். ங. இனிமை நிறைந்து சோதியுலகின் அமிருதமான சிறந்த சோமனை வச்சிராயுதனுன இந்திரனுக்குப் பொழியவும்.

ச. மனிதர்களால் மகிழ்ச்சியுடன் துதிக்கப்பட வேண்டியவன், தேவர்களின் பலமானவன், எதையும் தரிக்கும் சோமன் சோதியுலகினின்று பாய்கிருன். ஹரியானவன் வீரர்களால் குதிரையுடன் ஓட ஆரம்பிக்கப்பட்டு [3] நதிகளில் தன் பலத்தை பிரயத்தனமன்னியில் புலனுக்குகிருன், செய்கிருன்.

ரு. பசுக்களை நாடுவதில் ரதமுடனுய் சுக சாதனங்களை ஜயிக்க விரும்பி வீரனைப்போல கைகளில் ஆயுதம் தரிக்கிருன். இந்த இந்திரனுடைய பலத்தை தூண்டுங்கால் சனங்களால் பிரேரிக்கப்பட்டவனுய் [4] துதிகளால் அழைக்கப்படுகிருன். சு. சோமனே! நீ புனிதமாகுங்கால் அலையினுல் உன் பலத்தைப் புலனுக்கிக்கொண்டு இந்திரன் வயிற்றிலே

---

1 வச்சிராயுதங்களால் உங்களுக்கு விளங்கும். 2 யக்ஞ புருஷனே பெரிய செயல் செய்ய விரும்புவனே. 3 மனோ வேகங்களில். 4 நாடும் வழிகளால்.

நுழையவும்; மின்னல் மழையை பொழியச் செய்வதுபோல் வானம் பூமியை எங்களுக்கு பொழியச்செய்யவும்: செயல்களால் எங்களுக்கு சாசுவதமான சக்திகளையெல்லாம் [1] நிர்மாணஞ் செய்யவும்.

எ. [2] இந்திரனே! கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் மனிதர்களால் அழைக்கப்பட்ட போதிலும், வீரனே! வெகு துதிப்பவர்களால் பிரேரிக்கப்பட்டவனாய் [3] அனவர்களோடும் [4] துருவசர்களோடும் நீ முதன்மையா யிருக்கிறாய். அ. அல்லது [5] ருமன், [6] ருசமன் சியாவகனில் பலமுள்ளவனில் பராக்கிரமனில் சமானமாய் ஒளிவிக்கும் [7] கண்வர்கள் ஸ்தோத்திரங்களால் உன்னை [8] இழுக்கிறார்கள்: நீ வரவும்.

கூ. இந்திரன் எங்கள் மனோ, வாக்கான இரண்டு மொழிகளை கேட்கட்டும், அதிக பலமுள்ள [9] மகவான் புத்தியால் எங்களுடன் இணைந்து சோமனைப் பருகவரட்டும். ω. அந்த சுவராஜ்யனான விருஷபனை வானமும் பூமியும் பலத்தால் நன்றாய் தரிக்கின்றன. தேவர்களின் நடுவே நீ முதன்மையாய் உட்கார்ந்திருக்கிறாய், ஏனெனில் உன் மனம் சோமனை விரும்புகிறது.

---

1 உண்டாக்கவும். 2 ஈசனே! 3 உக்கிர கோபமுள்ளவர்களோடும். 4 பலமுள்ளவர்களுடன். 5 ரமணியமாயுள்ளவன். 6 சத்துருக்களை ஹிம்சிப்பவன். 7 கல்வி நிறைந்தவர்கள். 8 உன்னை சுவாதீனஞ் செய்துகொள்ளுகிறார்கள். 9 ஐசுவரியமுள்ளவன்.

## கண்டம் கஉரு

தேவதை-க-கூ, பவமான சோமன். ரிஷி-க-ந வித்ருவி காச்யபன். ச-கூ அம்பரீஷ ரிஜிஸ்வன் எ-கூ, அக்னேயதிஷ்ணய ஐசுவரர்கள்.

க. தேவரே! நீ மனிதரோடு வயதை [1] விளக்கும் சாதனத்தோடு பெருகவும். உன் சந்தோஷமளிக்கும் ரசம் இந்திரனுக்குச் செல்லட்டும். தர்மத்தால் வாயுவை வசீகரிக்கவும். உ. பவமானனே! இந்துவே! கீர்த்திக்குத் தகுந்த ஐசுவரியத்தை நீ அளிக்கிறாய். நீ சமுத்திரத்தைப் பிரவேசிக்கவும். ந. அறிவும் ஆனந்தமும் காணும் நீ சத்துருக்களைக் கொன்று கொண்டு நீ பெருகுகிறாய், அதேவ புருஷர்களை தூரத்தில் துரத்தவும்.

ச. இந்துவே, பலர்களால் விரும்பப்படும் பலத்தையளிக்க சாதனமாயுள்ள ஒளியை பிரகாசிக்கச் செய்யும் மிகவும் சிறந்த ஆயிரர்களை போஷிக்கும் ஐசுவரியங்களான பொருள்களை எங்களில் பொழியவும். ரு. எதிர்ப்பற்றவனே! வசுவே! எங்கும் வசிக்கும் உனது பலர்களால் விரும்பப்படும் இந்த ஐசுவரியப் பொருளின் அருகே உன் சுகமயவடிவத்தில் இருக்கவேண்டும். சூ. முதன்மையாய் உயரமாகிய யக்ஞத்தில் தாரையோடு ஒளியுடன்போல் சோமன் செல்லுகிறான். பொழியப்பட்டு பேரானந்தத்திற்குத் தூண்டப்பட்டு பிராணத்தில் பாய்கிறான்.

எ. சோமனே! மகத்தான சமுத்திரனும் தேவர்களின் பிதாவாயும் எல்லா சரீரங்களையும் நோக்கி நீ பெருகவும். அ. தேவர்களுக்கு ஒளியுடனாகி வானம் பூமிக்கும் சனங்களுக்கும் மங்கள மளித்துக்கொண்டு சோமனே நீ

---

[1] அபிவிருத்தியாக்கும்.

பெருகவும் கூ. ஒளியுடனுன அமுதன், சோதி யுலகின் அனைத்தையும் தரிப்பவன், பலவானுன நீ சத்தியமான [1] வித வித தர்மத்தில் பெருகவும்.

---

## கண்டம் கஉசு.

**தேவதை க-ங அக்னி ச-சு இந்திரன் எ-கூ இந்திரன் ரிஷி-க-ங உசனகாவ்யன் ச-சு நிருமேதன் எ-கூ ஜேதாமது ச்சந்தஸன்.**

க. உங்கள் பிரிய அதிதியான பிரிய நண்பனைப் போலுள்ள அக்னியை ரதத்தைப்போல் ஐசுவரிய மளிக்கும் அவனை நான் துதி செய்கிறேன். உ. தேவர்கள் துதிக்கத் தகுந்தவனை மனிதர்களில் இப்படி பூமியில் வானத்தில் நிலையாக்குகிறார்கள். ங. மிகவும் இளைஞனே! அளிக்கும் மனிதர்களை நீ காக்கவும். அவர்கள் மொழிகளைக்கேட்கவும்; உன் பலத்தால் என்னையும் என் மக்கட்களையும் ரட்சிக்கவும்.

ச. [2] பிரியனே! சதாகாலம் ஜயிப்பவனே! மறைக்க முடியாதவனே! இந்திரனே! மலையைப்போல் எங்கும் விரிந்துள்ளவனே! எங்களிடம் சுவர்கத்தின் தலைவனுன நீ வரவும். ரு. சத்தியனே! சோமன் பருகும் இந்திரனே! நீ இரு உலகங்களைக்காட்டிலும் பல முள்ளவன், சுவர்கத்தின் தலைவனுன [3] நீ சோமன் பொழிபவனை சக்தி யுடனுக்குகிறாய். சு. இந்திரனே! நீ சதாகாலம் எல்லாக்கோட்டைகளையும் தரிக்கிறாய் நீ [4] தஸ்யுக்களை கொல்லுபவன், மனிதர்களின் செயல்களை ஆதரிப்பவன், சுவர்கத்தின் தலைவனுகும்.

---

1 தர்மத்தின் பலவடிவங்களில். 2 இந்திரனே! 3 மனத்தில் சோமன் பொழிந்து கொள்ளுபவனை. 4 அடிமை விரும்புபவனை.

எ. கோட்டைகளைத் தகர்ப்பவன், இளைஞன், கவி எல்லையில்லாத பல முள்ளவன், எல்லா செயல்களையும் தரிப்பவன், வச்சிராயுதன் இந்திரன் அதிகமாய் துதிக்கப்படுபவன் சனித்துளான். அ. வச்சிராயுதம் சுழற்றுபவனே! பசுக்களுடனை [1] வலத்தின் குகையை நீ உடைத்தெரிந்துளாய்; பலத்தால் ஹிம்சிக்கப்பட்ட தேவர்கள் பயமன்னியில் உன்னை அடைந்துளார்கள். க. எவனுடைய ஐசுவரியங்கள் ஆயிரங்களாய் இன்னம் அதிகமாய் வருகின்றதோ எவன் பலத்தால் [2] அரசுபுரிகின்றனே அவனை இந்திரனை தோத்திரங்களால் புகழ்கிறார்கள்.

---

## கண்டம் கஉஎ

**தேவதை-க-கங, பவமான சோமன், ரிஷி க-ங, பராசரன், உ-கங, சுனச்சேபன்.**

க. சமுத்திரன் சகத்தின் காப்பனாய் பிரசைகளை சன்மஞ்செய்துகொண்டு உத்தமமான ஆகாசத்தில் ஆக்ரமித்துளான். விருப்பங்களை வர்ஷிப்பவன் புனிதத்தில் நாசமற்ற உற்சாக உச்சியில் பொழியப்படும் பெரிய சோமன் பலமுடனாகிறான். உ. ஐசுவரியத்திற்கும் விருப்பத்திற்கும் வாயுவை சந்தோஷமுடனாக்கவும்; உன்னைப் புனிதமாக்குங்கால் வருணனையும் மித்திரனையும் இன்பமுடனாக்கவும்; தேவர்களை திருப்தியுடனாக்கவும். மருத்து கணங்களை மகிழ்ச்சியுடனாக்கவும். தேவரே! சோமரே! வானம் பூமியை களிப்புடனாக்கவும். ங. சலத்தின் காப்பனாய் சிறந்தவனை சோமன் [4] தேவர்களை நாடி பெரிய செயல்களை செய்கி

---

1 சத்துருவின். 2 மகாசனங்கள். 3 உங்கள் பிராண பலத்தை அபிவிருத்திசெய்து கொள்ளவும். 4 திடமுள்ளவர்களை.

றான்; பவமானன் இந்திரனுக்கு பலத்தை அளித்துளான். அவன் சூரியனிலும் சக்தியை உண்டுபண்ணியுளான்.

ச. [1] துரோணங்களில் அமருவதற்கு சிறகுகள் விரிந்த பட்சியைப்போல் இந்த மரணமில்லாத தேவன் பறக்கிறான். ரு. மேதாவிகளால் துதிக்கப்பட்டு [2] தாசர்களில் ரத்னங்களை அளித்து சலங்களில் இந்த தேவர் நுழைகிறார். சு. அவன் பெருகுங்கால் தீரர்களோடு செல்லும் வீரனைப்போல் எல்லா ஆனந்தங்களையும் அளிக்க விரும்புகிறான். எ. இந்த தேவர் பெருகுங்கால் ரதத்தைப் போல் துரிதமாகி ரட்சிப்பை அளிக்கிறார். அவன் மொழியை அனைவரும் கேட்கும்படி செய்கிறான். அ. சத்திய அர்த்தம் விளக்கும் அறிஞர்களால் பலத்திற்காக இந்த ஹரியான் தேவன் பெருகுங்கால் [3] அலங்கரிக்கப்பட்டுள்ளான்.

கூ. துதியையால் (அறிவால்) தயாராக்கப்பட்ட ஹிம்சையற்ற தேவரான இந்த சோமன் சத்துருக்களை கொல்ல ஓடுகிறான். ய. பவமானனான இவன் சப்தித்துக்கொண்டு தாரையால் சகங்களை கடந்துகொண்டு சுவர்கத்திற்குச் செல்லுகிறான். யக. ஹிம்சையன்னியில் உலகங்களைத் தாண்டிக்கொண்டு பவமானனான இவன் சுவர்கத்திற்குச் செல்லுகிறான். யஉ. [4] தேவர்களுக்காக [5] சனனமாக்கப்பட்ட இந்த தேவர் பழைய சனனத்தால் புனிதத்தில் ஹரியான இவன் பொழிகிறான். யரு. வெகு [6] விருதங்களுடனான இவன் தன் சன்மத்திலேயே பலத்தைப் புலனாக்கிக்கொண்டு பொழிந்து தாரையால் பெருகுகிறான்.

---

1 சரீரங்களில். 2 அவனை நாடுபவர்களில். 3 நலமுடன் போற்றப்பட்டு நாடப்படுகிறான். 4 திவ்ய புருஷர்களுக்காக. 5 புலனாக்கப்பட்ட. 6 சங்கற்பங்களுடனான.

## கண்டம் கஉஅ

**தேவதை - பவமான சோமன். ரிஷி - க - அ அஸித காசியப தேவலன்.**

இந்திரனின் நிலையான ஸ்தானத்திற்குச் சென்று கொண்டு துரிதமான ரதங்களோடு அறிவுடன் சூட்சம செயல்களால் இந்த வீரன் வருகிறான். உ. அமிருதர்கள் வியாபகமாயுள்ள இடத்தில் [1]தேவர்களின் சேவைக்கு பல செயல்களுடன் அவன் [2]தியானஞ் செய்கிறான். ௩. உத்தம உணவுகளை கொண்டு வரும் அவனை அலங்கரிப்பதற்கு அருகதையுடனான அவனை துரோண கலசங்களில் மனிதர்கள் அலங்கரிக்கிறார்கள். ச. முயற்சியுள்ளவர்கள் அவனைத் தூண்டுங்கால் ஹிதஞ் செய்பவனான சோமன் சுத்தமான வழியால் அழைத்துச் செல்லப்படுகிறான்.

ரு. சமுத்திரங்களின் தலைவனான அவன் பொன் ஒளிகளின் சுந்தர கிரணங்களால் அழகுடனாகி, வேக குதிரையான அவன் செல்லுகிறான். சு. பலத்தால் ஐசுவரியத்தை தரித்துக்கொண்டு கூட்டத்தின் தலைவனான விருஷபன் கொம்புகளைக் கூர்மையாக்கிக் கொண்டு உயரத்தில் [3] ஆட்டுகிறான். எ. ராட்சசர்களைப் பருகிக்கொண்டு சோமன் குரூரத்தால் கடின பிரதேசத்தைத் தாண்டிச் சென்று சத்துருக்களில் செல்லுகிறான். அ. நல்ல ஆயுதனான சந்தோஷமளிப்பவனான அவனை [4] பத்து விரல்கள் அவனைப் பருக பிரேரிக்கின்றன.

---

1 திடமுள்ளவர்களுக்கு உதவிபுரிய. 2 அவர்களில். தோய்கிறான். 3 தன் சக்தியின் சிறப்பைப் புலனாக்குகிறான். 4 பத்துப் பிராணங்கள்.

## கண்டம் கஉகூ

தேவதை - க - கூ பவமான சோமன். ரிஷி க - கூ ராஹூ கணம்.

சோமன் வர்ஷிக்கும் ரதனுய் ஆயிரம் வன்மைகளை அடைந்து பிராணக் கூட்டங்களோடு புனித மார்கத்தில் செல்லுகிறுன். உ. இந்திரனின் பானத்திற்கு இந்துவை, ஹரியை [1] கற்களால் [2] திரிதனின் பெண்கள் தூண்டுகிறுர்கள். ௩. காதலியை காதலன் துரிதமாய் நாடுவதுபோல் மனிதர்களின் குடும்பங்களில் கருடனைப்போல் [3] அமருகிறுன். ச. எந்த இந்து சலசங்கத்தை சேர்கிறதோ அந்த இன்பமளிக்கும் சோதிமகன் அனைத்தையும் பார்க்கிறுன். ரு. இந்த சோமன் பருகுவதற்கு தயாராகி சப்தஞ்செய்து கொண்டு தரிப்பவனுய் பிரியமான நிலயத்தை நோக்குகிறுன். கூ. பொன் பூஷணமாய் முயற்சியுடனுன [4] பத்து விரல்கள் அவனை சுத்தமாக்குகின்றன; அவற்றுல் அவர்கள் இந்திரனின் இன்பத்திற்கு சுபமுடனுகிறுர்கள்.

---

## கண்டம் க௩௦

தேவதை - க - கூ பவமான சோமன். ரிஷி - க - கூ நிருமேத பிரியமேதர்கள்.

இந்த ஹிதஞ் செய்யும் வன்மையுள்ளவன் சர்வக்ஞன். சித்தத் தலைவன். சூரியனின் உசித நிலைக்கு தாண்டிச் செல்லுகிறுன். உ. தேவர்களுக்கு இந்த சோமன் பொ

---

1 வச்சிராயுதங்களுடனுன கஷ்டமான மனோ பயிற்சிகளால். 2 மனோவாக்கு காயங்கள். 3 அவனை நாடுபவர்களிடம். 4 பத்து இந்திரியங்கள்.

ழிந்து எல்லா சரீரங்களேயும் சாய்ந்து புனிதத்தில் அவன் பெருகியுளான். ௩. அவன் சுப நிலயத்தில் இந்த தேவ ரான அமிருதன் தேவர்களுக்குப் பிரியமானவனும் விருத்தி ரனைக் கொல்லுபவனுயுளான். ச. அவன் சுந்தரமுடன் ஒளி வீசுகிறுன். [1] பத்து சகோதரிகளால் வழி காட்டப் பட்டு சப்தஞ் செய்துகொண்டு இந்த விருஷபன் [2] துரோண கலசத்தில் செல்லுகிறுன். ரு. புனிதத்தில் இன்பமளிக் கும் பவமானனுன சோமன் சோதியுலகில் சூரியனைப் பிர காசிக்கச் செய்கிறுன். சூ. ஜயிப்பதற்கு அந்நியரால் முடி யாதவன். வாக்கின் தலைவன் [3] விவஸ்வன் அருகில் வசித் துக்கொண்டு சூரியனேடு விளங்குகிறுன்.

---

## கண்டம் கங்க

**தேவதை - பவமான சோமன். ரிஷி - நிருமேத பிரிய மேதர்கள்.**

புனிதமாகுங்கால் சத்துருக்களை இங்குமங்கு மாக்கிக் கொண்டு துதிக்கப்படும் இந்தக் கவியான சோம பாவமா னன் புனிதப் பொருளில் ஓடுகிறுன். உ. எதையும் ஜயிப் பவன், பல சாதனன் இந்திரனிற்கு வாயுவிற்கு புனிதப் பாண்டத்தில் பொழியப்படுகிறுன். ௩. சோதி யுலகின் தலைவனுய் வர்ஷிப்பவனுய் வனங்களில் பொழிபவனுய் அனைத்து மறிந்தவனுய் மனிதர்களால் சோமன் அழைத்து செல்லப்படுகிறுன். ச. சகஜமா யிருப்பவன், ஹிம்சை யற்றவன் இந்து. பசு பொன் எங்களுக்கு பவமான சோமன் விரும்பி [4] சப்தஞ் செய்துளான். ரு. இந்த இந்து புனித மாகி இந்திரனுக்கு ஆகாசத்தில் வர்ஷிக்கும் ஹரியான

---

[1] பத்து சூட்சும இந்திரியங்களால். [2] சிதாகாசத்தில். [3] மனிதனருகில். [4] அறிவித்துளான்.

இவன் பெருகியுளான். சு. இந்த சோமன் புனிதமாகி பெரியவனாகவும் ஹிம்சையற்றவனாகவும் பாய்கிறான்; இவன் துஷ்டர்களைக் கொல்பவன், தேவர்களுக்குப் பிரியமானவன்.

---

## கண்டம் கநஉ

தேவதை - பவமான சோமன். ரிஷி - க - சு ராஹூகணம்.

சத்துருக்களைக் கொன்று கொண்டு தேவர்களை விரும்பினவனாய் சோமனை சக்திவாய்ந்த மன்னன் புனிதப் பொருளில் பெருகுகிறான். உ. எதையும் பார்த்து தரிப்பவனை ஹரி தன் நிலயத்திற்கு சப்தஞ் செய்துகொண்டு புனிதத்தில் பாய்கிறான். ந. காற்று கூட்டத்தின் வழியாய் ராட்சசர்களைக் கொல்பவனாய் வன்மையுடனாய் ஒளியுடனாய் பிரகாசிக்கும் சோமன் பெருகுகிறான். ச. [1]திருதனின் அதி உயரத்தில் இந்த பவமானன் சகோதரிகளோடு கூட சூரியனை பிரகாசஞ் செய்தான்.

ரு. விருத்திரனைக் கொல்பவனை அரசனை சோமனை விருஷபன் ஐசுவரியங்களை அபிவிருத்தி யாக்குபவன், இம்சை யன்னியிலிருப்பவன். அவன் குதிரையைப்போல் செல்லுகிறான். சு. இந்து இந்திரனுக்கு இன்பமளித்துக் கொண்டு [2]கவியால் பிரேரிக்கப்பட்டு [3]துரோண கலசங்களுக்குத் துரிதமாகிறான்.

---

[1] முக்குணங்களையு மறிந்தவனின். [2] சாதனங்களோடு. [3] மரே பாண்டங்களுக்கு.

## கண்டம் கந௩

தேவதை - சோமபவமானன். ரிஷி - பவித்திர வசிஷ்டர்கள்.

எவன் பவமான தேவதைகளான ரிஷிகளால் சம்பாதிக்கப்பட்ட வேதசார பூதத்தை [1] அத்யயனஞ் செய்கிறுனே அவன் மாதரிச்வ (வாயுவால்) பரிசமாகி இனிமையான புனிதமான உணவை ருசிக்கிறுன். உ. எவன் பவமான ரிஷிகளால் சேகரிக்கப்பட்ட ரசத்தை அத்யயனஞ் செய்கிறுனே அவனுக்கு சரஸ்வதி நெய், [2] பால் மதுவை கறக்கிறுள். ௩. க்ஷேமத்தைக் கொண்டுவரவும், பரமானந்த ரசத்தை அளிக்கவும், பவமானர்களுக்கு ஐசுவரியங்களோடு பெருகவும், பிராமணர்களில் சேகரிக்கப்பட்டுள்ள அமிருத்தையும் ரிஷிகளால் சேகரிக்கப்பட்டுள்ள ரசத்தையும் கொண்டு வரவும்.

ச. தேவர்களால் சேகரிக்கப்பட்ட பவமான மொழிகள் திவ்ய குணமுடனுகி எங்களில் இந்த [3] உலகத்தை இன்னம் அதையும்—சுவர்கத்தையும்—அளிக்கட்டும்; எங்கள் விருப்பங்களையும் நிறைவேற்றட்டும். ரு. இந்திரன் முதலியவர்கள் எதனுல் எப்பொழுதும் தங்கள் ஆத்மாவை சுத்தஞ்செய்து கொள்ளுகிறுர்களோ ஆயிரம் தாரையான அதனுல் பவமானர்கள் எங்களைப் புனிதமாக்கட்டும். சு. பவமானர்கள் நன்மையைக் கொண்டுவருபவர்களாகும். இவர்களால் மனிதர்கள் பரமானந்தத்தை அடைகிறுர்கள்; எவன் புண்ணிய மானதையும் புசிக்கத் தகுந்ததையும்—நாடுகிறுனே—அவன் அமிருதத்தை அடைகிறுன்.

---

1 நன்ருய் அனுபமாக்குகிறுனே—வீரம். 2 அறிவு.
3 நாங்கள் உலகத்தின் அதிபதியாக வேண்டும்.

## கண்டம் கநுச

தேவதை - க - ந, அக்னி, ச - சு இந்திரன். ரிஷி - க - ந. வசிஷ்டன். ச-சு வத்ஸ காண்வன்.

எவன் தன் ஸ்தானத்தில் ஒளியுடனுக்கப்பட்டு பிரகாசமாயுளானே எவன் வானம் பூமியின் நடுவே அதிகப் பிரகாசத்துடனுகி பெருமையுடன் அழைக்கப்பட்டு எங்குஞ் செல்லுகிறானே அந்த இளைஞனை நமஸ்காரத்துடன் அணுகியுளோம். உ. அவன் மகா பலத்தால் எல்லா தீமைகளையும் தாண்டிக்கொண்டு அக்னி ஜாத வேசன் எங்கள் இருதயத்தில் துதிக்கப்படுகிறான். அவன் துதி செய்பவர்களையும் எங்களையும் நிந்தனையினின்று நலமற்ற செயலினின்றும் ரட்சிக்கட்டும். மேலும் ஐசுவரியமுள்ளவன் எங்களைக் காக்கட்டும். ந. அக்னியே! நீ வருணனும் மித்திரனுமாகும், [1]வசிஷ்டர்களால் தங்கள் மதிச் செயல்களால்—உன்னை வளர்க்கிறார்கள்; விளக்குகிறார்கள். உன்னில் (என்னால்) சுகமான பொருள்களும் புவனங்களு மாகட்டும். நீங்கள் எங்களை எப்பொழுதும் சுபமான செயல்களால் காப்பாற்றவும்.

ச. இந்திரன் பலத்தால் பெருமையுடனாய் மழையுடனான [2] பர்ஜன்யனைப் போல் வத்சனின் துதிகளால் வளர்க்கப்படுகிறான்—பிரகாசமாகிறான். ரு. [3] கண்வர்கள் இந்திரனை [4] தோமங்களால் யக்ஞ சாதனாய் செய்யுங்கால் [5] ஆயுதங்களைப் பிரயோசனமில்லை எனச் செல்லுகிறார்கள். சு. எப்பொழுது—[6] ருதத்தின் பிரசையை, பூர்ணமாக்கும் ஒளி

---

1 நன்றாய் வசிப்பவர்களால். 2 மழை யாரோப புருஷன். 3 அறிஞர்கள். 4 தோத்திரக் கூட்டங்களால். 5 சாதகமற்ற ஆயுதங்களை. 6 சத்தியத்தின்.

சுமப்பவர்களான மேதாவிகள் சத்தியத்தின் தரிப்பதாலாகும்—திடத்தில் சாய்ந்துள்ளார்களோ—அப்பொழுது ஆயுதங்களை பயனில்லை எனச் சொல்லுகிறார்கள்.

---

## கண்டம் கரு

**தேவதை - க -சு பவமான சோமன். ரிஷி - க - ரு சதம் வைகாநசன் ச -சு சப்த ரிஷிகள்.**

எங்கும் செல்லும் தேச சுடனாய் [1] தொலைப்பவனை ஹரியின் சந்தோஷமளிப்பதும் துக்கம் நசிப்பதுமான [2] ரசிமிகள் உற்பத்தியாகின்றன. உ. பவமான ரதமுள்ளவன், சுபமான தேசசுகளோடு சிறப்பான கீர்த்தியுள்ளவன், ஹரிச்சந்திரன் மருத்து கணங்களோடு சேர்ந்தவன். ௩. பவமானனே! ரசிமிகளால் எங்கும் வியாப்தமாகவும். பலத்தை அளிப்பவனாய் துதிப்பவரில் தூயமான வீரத்தை அளித்துக்கொண்டு எங்கும் வியாப்தமாகவும்.

ச. சோமனை இனிமேல் தெளிக்கவும். அவன்-அதி-உத்தம அளிப்பாகிறான், அவன் மனிதர்களின் நண்பனாகி ஆகாச நடுவில்-சலத்தினுள்ளே-செல்லும் சோமனை கற்களால்-வச்சிராயுதங்களால்-பல புருஷர்கள் விளக்குகிறார்கள். ரு. இம்சிக்கப்படாதவனாய் மிகச் சுகந்தமுள்ளவனாய் புனிதமாகிக் கொண்டு சூரியர்களால் இங்கு பெருகவும். நீ பொழியும் பொழுது ரசத்தோடும் பசுக்களோடு உன்னைக் கலந்து உன்னில் உன் சலங்களில் நாங்கள் சந்தோஷமுடனாகிறோம். சு. இந்துவானவன் எங்கும் பார்ப்பவன், செயல்செய்பவன், தேவர்களை சந்தோஷமாக்குபவன், அனைவரும் காண அவன் சப்திக்கப்படுகிறான்.

---

1 சத்துருவை. 2 காரணங்கள் சாதனங்கள்.

## கண்டம் கரு௯

தேவதை - க - ௩ பவமான சோமன். ச - எ இந்திரன். ரிஷி - க - ௩ வசு பாரத்துவாஜன். ச - ரு நிருமேதன். ௬-எ பர்கபிராகாதன்,

க. சிகப்பான விருஷபனுன ஹரியான சோமன் அரசனைப்போல் பொழியப்படுகிறான். துஷ்டர்களை தண்டித்துக்கொண்டு—இந்த அதிசயன் பசுக்களுக்குச் சப்தஞ்செய்கிறான். நெய்யுடனுன நிலயத்தில் கருடனைப்போல் உட்கார நீ புனித மாகுங்கால் ரசிமிகூட்டம் வழியாய் செல்லுகிறாய். இலையுடனுன மகிஷன். பிதா பர்ஜன்யனுகும், அவன் பூமியின், நடுவில் மலைகளில் வசிக்கிறான், சகோதரிகள் 1 2 பசுக்களுக்கு 3 சலங்களும் செல்லுகின்றன, ஒளியுடனுன யக்ஞத்தில் 4 கற்களோடு செல்லுகிறான், வசிக்கிறான். ௩. சோமனே கவியான நீ அறிந்தவனுய் மகா மேன்மையிலே செல்லுகிறாய். சுத்தஞ் செய்யப்பட்ட குதிரையைப்போல் ஜயத்தை நோக்கி ஓடுகிறாய். சோமனே ! தீமைகளை துரத்திக்கொண்டு எங்களுக்கு திவ்யமானவற்றை—சுகமானவற்றை செய்யவும், நெய்யுடை யணிந்து சுத்த சொருபத்திற்குச் செல்லுகிறாய்.

ச. ரசிமிகள் சூரியனை அடைவதுபோல் இந்திரனின் எல்லா—ஐசுவரியங்களையும்—அனுபவிக்கவும், சக்தியோடு சனனமாகப் போகிறவன் சனனமாகுங்கால் ஐசுவரியங்களை எங்கள் பிறப்புரிமையாக நாடுகிறோம். ரு. துரித தாராளத்தோடு ஐசுவரியமளிக்கும் இந்திரனைத் துதிசெய்யவும். இந்திரனுடைய ஐசுவரியங்கள் சுகமளிப்பதாகும். அவன்

---

1 சாதனங்கள். 2 பிராணிகளுக்கு. 3 பிரசை யுண்டாக்கும் சக்தியும். 4 வச்சிராயுதங்களோடு.

விருப்பத்தைத் திருப்தி செய்பவனிடம் கோபமுடனுவதில்லை. அளிப்பதற்கு அவன் உங்கள் மனத்தைத் தூண்டுகிறான்.

சு. இம்சிப்பவர்களிடமிருந்து பயப்படும் எங்களை அபயமன்னியில் செய்யவும், [1] மகவானே! நீ ரட்சிக்கவும். உன் பலத்தால் எங்களைக் காக்கவும், துவேஷிகளையும் இம்சிப்பவர்களையும் நாசஞ் செய்யவும். எ. ஐசுவரிய பதியே! நீ மகத்தான ஸ்தானத்தையும் மேன்மையான ஐசுவரியத்தையும் த்ரிக்கும் தலைவனுயிருக்கிறாய்: மகவானே! இந்திரனே! துதிகளை விரும்புபவனே! பொழியப்பட்ட சோமனோடு உன்னை அழைக்கிறோம்.

---

## கண்டம் கஙஎ

தேவதை-க-கரு பவமான சோமன். ரிஷி-க-ங பரத்வாஜன் ச-சு மனுராப்ஸவன். எ-க அம்பரீஷ ரிஜிகள் கO-கஉ-அக்னேயே திஷ்ணய ஐசுவரர்கள் கங-கரு அமஹீயுன்.

க. இனிமையுடன் யக்ஞத்தில் வன்மையுடனுன நீ தாரையுடனிருக்கிறாய். நீ மகத்தான ஐசுவரியங்களை அளித்துக்கொண்டு பெருகவும். உ. ராஜாவான நீ அதிசய சந்தோஷமுள்ளவன், சந்தோஷமளிப்பதில் சிறந்தவன், இந்துவான நீ பலர்களை ஜயிப்பவன். ஜயிக்கப்படாதவனுன—நீ அனைவர்களையும் — தரிக்கிறாய். ங. வச்சிராயுதங்களால் பொழியப்பட்டு ஒளியுடனுன பலத்தை தரித்துக்கொண்டு கர்ச்சனை செய்பவனுய் இங்கு எங்களுக்குப் பெருகவும்.

ச. இந்துவே! தேவர்கள் அனுபவிக்க திடமுடனுன தாரைகளோடு இங்கு பெருகவும். சோமனே! மதுரசமுட

---

1 ஐசுவரிய முள்ளவனே.

ஞை நீ 1 கலசத்தில் உட்காரவும். ரு. சலத்தில் நனையும் துளிகள் இன்பத்திற்கு 2 இந்திரனை வளர்க்கின்றன. அமுதத்திற்கு தேவர்கள் உன்னைப் பருகுகிறார்கள். சு. தெளிந்தவனே! துளிகளுடனானவனே! புனிதமாக்கப்பட்ட நீ எங்களுக்கு ஐசுவரியத்தை பாய்ச்சவும். சுவர்கத்தை காணும் நீ வானத்தினின்று பிரசைகளில்—சலங்களில்—மழையைப் பொழியவும்.

எ. பலர்களால் விரும்பப்படும் மாநிறமுள்ள ஹரியை ரசிமி கூட்டத்தால்-காற்று சமூகத்தால்—சுத்தஞ் செய்கிறார்கள். இன்பமளிக்கும் ரசத்தால் அந்த ஹரி எல்லாதேவர்களையுமடைகிறான். அ. வச்சிராயுதங்களால் அமிழ்த்தப்பட்டு தன் சுவய சோதியால் ஒளியுடனாகி இந்திரன் பிரியமுடன் விரும்பும் நண்பனான—சோமனை—அலைகளும் பத்து சகாக்களும் பெருமையாய் சேவை புரிகிறார்கள். கூ. விருத்திரனைக் கொல்லும் இந்திரனுக்கு—அவன் பருகவும்,—தட்சிணையளிக்கும் வீரனுக்கு யக்ஞத்தில் உட்காரும் வீரனுக்கு—அவன் பருகவும்—நீ பொழியப்படுகிறாய்.

ய. சோமனே வேகமுடனான குதிரையைப்போல் 3 ஸ்னானஞ் செய்யப்பட்டு மகத்தான வன்மைக்கு ஐசுவரியத்திற்குப் பெருகவும். யக. அமிழ்த்துபவர்கள் ஆனந்தத்திற்கும் அளவற்ற கீர்த்திக்கும் சோமனான உன் ரசத்தை தெளிவாக்குகிறார்கள். யஉ. தேவர்களுக்கு புனிதத்தில் சிசுவான சோமனான சன்மமான ஹரியான இந்துவை சுத்த மூட்டாக்குகிறார்கள்.

யஙு. புலனான சத்துருவை துரிதமாய்க் கொன்று கொண்டு பசுக்களால் அலங்காரமாய் நன்குதோன்றும்

---

1 தேகத்தில். 2 வன்மையுள்ள புருஷனை. 3 அறிஞர்கள் மனத்தை சுத்தஞ் செய்துகொண்டு தெரிந்து கொள்ளுகிறார்கள்.

இந்துவை தேவர்கள் அணுகியுளார்கள். ௪௯. எவன் இந்திரன் இருதயத்தை ஜயிக்கிருனோ, தாய் பசுக்கள் கன்றுகளைப்போல எங்கள் மொழிகள், அவனை வன்மையுடனுக் கட்டும். ௫௰. சோமனே! எங்கள் பசுக்களில் சுகத்தைப் பொழியவும்; பாலுடன் பெருகும் உணவை அளிக்கவும், துதிப்பதற் கருகதையானவனே! சமுத்திரத்தைப் பெருக்கவும்.

---

## கண்டம் கரு௮

தேவதை - க - ௯ இந்திரன். ரிஷி - க - ௩ திரிசோக காண்வன். ௪ - ௬ கோதம ராஹூகணம். ௭ - ௯ மதுச்சந்த வைசுவாமித்திரன்

க. எவர்கள் அக்னியை மூட்டுகிருர்களோ எவர்கள் சத்துரு தேகத்தை துவம்சஞ் செய்கிருர்களோ அவர்கள் நண்பனுய் இந்திரனுகிருன். உ. காளையான இந்திரன் எவர் நன்பனு யிருக்கிருனோ அவர் சமித்துப் பெரியதாகும். அவர் ஆயுதம் நிறைவுள்ளதாகும். அவர்கள் துதியும் விரிந்ததாகும். ௩. எவர் நண்பன் இளைஞனை இந்திரனோ அவர் சண்டையில் கீழ் சாயாதவனுய், வீரத் தலைவர்களோடு சூரனுய் சைன்யத்தை அழைத்துச் செல்லுகிருன்.

௪. எவன் ஒருவனே தானமளிப்பவர்களில் தாணியிலுள்ளோர்க்கு ஐசுவரியத்தை அளிக்கிருனோ அவனே துரிதமான பிரதிகூல மன்னியிலுள்ள இந்திரன் என்னும் [1] ஈசனுகும். ௫. வெகு மனிதர்களிடமிருந்து எவன் பொழியப்பட்ட சோமனேடு உன்னை சேவை புரிகிருனோ அந்த சேவையால் [2] இந்திரன் உக்கிரமான பலத்தைத் துரித

1 தலைவனுகும். 2 இந்திரனை நாடுபவன்.

மாய் அடைகிறான். ௬. ஐசுவரியமளிக்காத [1] மனிதனை களைப்புல்லைப்போல் எப்பொழுது மிதிப்பான்? எங்கள் மொழிகளைத் துரிதமாய் இந்திரன் எப்பொழுது செவி கொடுப்பான்?

௭. [2] சதக்கிரதுவே! உன்னை [3] உத் காத்திரிகள் கானஞ்செய்கிறார்கள். [4] ஹோத்திரிகள் இந்திரனைத் துதி செய்கிறார்கள்; உயர்ந்த் கம்பத்தைப்போல் பிராமணர்கள் உன்னை [5] உன்னத மாக்குகிறார்கள். ௮. நீ ஒரு மலையுச்சியினின்று வேறு உயரிய நிலயத்திற்கு செல்லுங்கால் அவன் உன் கஷ்டங்களை நன்கு அறிகிறான். இந்த அந்த உன் விருப்பத்தை அறிந்து வன்மையுடனான அவன் மருத்துக் கணங்களோடு — உன் ரட்சிப்பிற்கு — வருகிறான். ௯, இடைநிறையும் வயிறுடனும் கேசங்களுடனுமான பலமான குதிரைகளை, சோமபானம் பருகுபவனே! பூட்டவும், துதிகளைக் கேட்க எங்களிடம் வரவும்.

---

## கண்டம் ௧௩௬

தேவதை - ௧ - ௪ அக்னி. ரு - ௭. ஆதித்யர்கள். ௮ - ௧0 இந்திரன். ரிஷி ௧ - ௪ மேதாதிதி. ரு - ௭ வசிஷ்டன், ௮ . ௧0, பிரகாதகாண்வன்,

௧. அக்னியே! நீ நன்றாய் எழுச்சியாகி நலமுடன் அளிப்பவர்க்கு தேவர்களைக்கொண்டு வரவும், புனிதமான ஹோதாவே, அவற்றை நாடவும். ௨. கவியே! தனூனபதனே! இன்று தேவர்களில் எங்கள் ரட்சிப்பிற்கு இனி

---

1 சத்துருக்களை. 2 நூறுசெயல்கள் செய்பவனே. 3 உயரிய கானஞ் செய்கிறவர்கள். 4 யக்ஞபுருஷர்கள். 5 மேன்மையாக்குகிறார்கள்.

மை நிறைந்த யக்ஞத்தை அளிக்கவும். ௩. பிரிய [1] ந்ரசம்ச ஞய் இனிய நாக்குடன் யக்ஞத்தை அளிப்பவனை — அக்னியை — எங்கள் யக்ஞத்தில் அழைக்கிறோம். ௪. அக்னியே! துதிக்கப்பட்டு, உனது சுகமுடனை ரதத்தில் [2] தேவர்களைக் கொண்டுவரவும், நீ [3] மனுவால் ஸ்தாபிக்கப்பட்ட [4] ஹோதாவாகும்.

௫. இன்று சூரிய உதயத்தில் பாவம் பிரிந்த [5] மித்திரன் அர்யமான், பகன், சவிதா, எங்களுக்கு ஐசுவரியத்தைப் பிரேரிக்கட்டும். ௬. எங்கள் நிலயம் நன்ருய் காக்கப்படட்டும், பிரதிதினமும் எங்கள் கஷ்டங்களை கடந்து செலுத்தும் கொடையாளர்களான நீங்கள் முன் செல்லவும். ௭. [6] அநாசமான விரதத்தின் சுவராஜர்களாய் அதிதியாய் எவர்கள் உண்டோ அவர்கள் மகத்தான ராஜ்யத்தை அரசுபுரிகிருர்கள்.

௮. உன்னை சோமர்கள் உற்சாகத்தி லாக்கட்டும். வச்சிராயுதனே! நீ ஐசுவரியத்தை விளக்கவும், [7] பிரம துவேஷிகளைப் பாழாக்கவும். ௯. ஐசுவரியம் கொண்டுவராத சூது சுபாவமுள்ளவர்களை உன் பாதத்தால் புதைக்கவும்; உனக்குச் சமானமானவன் வேறு எவனுமில்லை. ௰. நீ அரசர்களின் சுவாமி, தேவர்களின் தலைவன், நீ சனங்களின் பிரபுவாகும்.

---

1 மனிதர்களால் போற்றப்படுபவனுய். 2 திவ்யமான பொருள்களை. 3 உன்னுல். 4 நீயே உன் தலைவனுகும். 5 நட்பு, நியாயம், செல்வம், சோதி. 6 அகண்டித சரித்திரம். 7 பலம் வெறுப்பவனை.

## கண்டம் கசாo.

தேவதை - க ரு, பவமான சோமன், ச - எ இந்திரன் எ - கரு பவமான சோமன், ரிஷி க - ரு, பராசரன், ச - ரு பிரகாத கௌர காண்வன், சு - எ மேத்யாதிதி, அ - கo, திரயருண திரச தஸ்யுனன். கக - கரு அக்னேயே திஷ்ணயன்.

விழிப்புடனான சத்தியமாய், சித்தங்களின் சிறப்பான சோமன் செம்மையாக்கப்படுங் கால் புனிதத்தில் உட்கார்ந்துளான்: அவனை விருப்பமுடன் இணைந்து, யக்ஞத்தின் தலைவர்கள் நல்ல கைகளுடனான [1] அத்வர்யுக்கள் சோமனை அனுசரிக்கிறார்கள்—பரிசிக்கிறார்கள். உ. அவன் புனிதமாகி சூரியனுக்கு ஐசுவரியங்களை தரித்துக்கொண்டு வானம் பூமியை தன் மகிமையால் பூர்ணஞ்செய்கிறான். அவற்றைத் திறந்துளான்; பிரியமான சோமனின் அன்பு தாரைகள் எமது ரட்சிப்பதற்காகின்றன. [2] ஜயித்தவனுக்குப் போல் அந்த சோமன் எங்களுக்கு ஐசுவரியமளிக்கிறான். ரு. எதில் முதன்மையான பிதுருக்கள் பதங்களை அறிந்து சோதியை அறிகிறார்களோ, எந்த மலையில் பசுக்களான—அதன் ரகசிய மறிவிக்கும்மொழிகளை - காண்கிறார்களோ அங்குள்ள சோமன் புனிதமாகி வளர்ச்சியும் வன்மையுமளிக்கும் வர்ஷிக்கும் அவன் தன் தேசசால் எங்களை ரட்சிக்கிறான்.

ச. நண்பர்களே! அந்நியர்களைப் புகழவேண்டாம், [3] அதனால் ஒரு ஹிம்சையும் உங்களுக்குத் தோன்றாது; வாழ்க்கையில் வர்ஷிப்பவனான இந்திரனையே—வன்மையை

---

1 யக்ஞ புருஷர்கள் பெரிய செயல் செய்பவர்கள், 2 ஜயமடைபவர்கள் தோல்வியடைந்தவர்களால் ஐசுவரியமளிக்கப்படுவதுபோல். 3 புகழாதிருப்பதால்.

யே, துதிசெய்யவும் நாடவும்; அவனையே அடிக்கடி அணுகவும். ௫. [1] விருஷபத்தைப்போல் துரிதமாய் சத்துருக்களை ஹிம்சிப்பவனும், [2] விருஷபனும் மனிதர்களை [3] சாசனஞ் செய்பவனும் துஷ்டர்களை தண்டிப்பவனும் சிரேஷ்டர்களின் ஆசிரயனும், சத்துரு, சாந்தத்தின், காரணனுய் [4] இருவர்களுக்கும் மேன்மையுடன் அளிப்பவனுன அந்த இந்திரனையே நாடவும்.

௬. இந்த மது நிறைந்த மொழிகள் தோத்திரங்கள் உனக்கு ஏறுகின்றன; வன்மையைப் புலனுக்கும் சதா காலம் ஜயிக்கும் ரதங்களைப்போல் ஐசுவரியமளித்து [5] க்ஷயமற்ற ரட்சிப்பை அளிக்கவும். ௭. [6] பிருதுக்கள் [7] கண்வர்களைப்போல் சூரியனைப்போல், மனஞ் சாய்ந்த சர்வத்தையும் அடைகிறுர்கள்: [8] பிரிய புத்திகளுடனுன—பிரியமேதசர்களான—மனிதர்கள் தோத்திரங்களால் இந்திரனை பூஜித்துக்கொண்டு போற்றுகிறுர்கள்.

௮. சோமனே! விருத்திரர்களை ஜயித்துக்கொண்டு சண்டைக்குச் செல்லவும்: கடன்களை நெருக்குபவன்போல் சத்துருக்களை துவம்சஞ் செய்துகொண்டு நீ துரிதமாகிறுய். ௯. பவமானனே! பலத்தால் நீ சூரியனை உண்டாக்குகிறுய், தரிக்கும் வானத்தில் மழையையும், பசுக்களால் துரிதமாகி வன்மையோடு நீ க்ஷணத்திலே செய்கிறுய். ௰. சோமனே! போரில் பெருமையுடனுக பொழியப்பட்ட உன்னில் நாங்கள் ஆனந்த முடனுகிறோம். பவமானனே! நீ பெருஞ்செயல்களில் நுழைகிறுய்.

---

1 பலமுள்ள புருஷனைப்போல், 2 வர்ஷிப்பவனும் 3 அரசுபுரிபவனும் 4 நன்மை புன்மைசெய்பவர்களுக்கும். 5 நாசமில்லாத 6 பாபம் பிரியும் பெரியார்கள் 7 கல்வி நிறைந்தவர்கள் 8 அறிஞர்களான.

கக. சோமனே! இனிமையான நீ இந்திரனுக்கு பூஷணனுக்கு பகனுக்கு எங்கும் பெருகவும். கஉ. வெண்மையுடன் திவ்யமாயும் பருகத் தகுந்தவனுன நீ மகத்தான அமிருதம் வசிக்கும் நிலயத்திற்குப் பெருகவும். கங. சோமனே! சோமனது உன் ரசத்தை அறிவிற்கு இந்திரன் பருகட்டும், தேவர்கள் பலத்திற்குப் பருகட்டும்.

---

## கண்டம் கசக.

**தேவதை - க - ங, பவமான சோமன், ச - கூ அக்னி, எ - கூ காயத்ரீ. ரிஷி க - ங, ஹிரண்யஸ்தூபன், ச - கூ, வசிஷ்டன், எ - கூ சார்ப ராக்ஞீ (சர்ப்பராணி)**

க. சூரியனின் கிரணங்களைப்போல் மனிதர்களை துரிதமாகத் தூண்டிக்கொண்டு பெருகுங்கால் சந்தோஷமளித்துக்கொண்டு வேகமாய் சமஸ்த விசாலமான அனைத்தையும் வியாப்தமாகும் தாரைகள் ஒன்று சேர்ந்து புறப்படுகின்றன, [1] இந்திரனை விட்டுவிட்டு வேறு எந்த தேவ சரீரத்தையும் நோக்கி அவை செல்லுவதில்லை. உ. அறிவுடன் அது இணைக்கப்பட்டுள்ளது, மது மொழியப்பட்டுளது, சோபனதாரை, வாயிலே — முகத்தில் — பிரேரிக்கப்படுகிறது, மொழியப்படுபவனின் சப்தம்போல் பவமானனுன மது நிறைந்த துளிகள் பிராணக்கூட்டத்தில் பெருகுகிறார்கள்.

ங. விருஷபங்கள் சப்தஞ் செய்கின்றன, பசுக்கள் அருகில் வருகின்றன, தேவர் ஸ்தானத்தை தேவிகள்— துதிகள்—அணுகுகிறார்கள், வெண்மையான ரசிமிக் கூட்டங்கள் வழியாய் சோமனுனவன் ஆக்கிரமித்துளான்,

---

1 இந்திரனை விட வேறு எந்தவடிவமும் அப்படி சுத்தமாய்த்தோன்றுவதில்லை.

தன் கவசம்போல் தன் நிலயத்தைப்போல் எதையும்—கவர்கிறுன்.

ச. தூரங்காணும் தூரிய சுடருடனுன வீட்டின் தலைவனுன அக்னி இரண்டு கட்டைகளினின்று கைகளால் தூண்டப்பட்டு கருத்துக்களால் பெரியார்கள்—அவனே குணமாக்குகிறுர்கள். ரு. வீட்டில் எப்பொழுதும் துதிக்கப்படவேண்டியவும், பார்ப்பதற்கு பெருமையுடனுகி அக்னியை எந்த திசையினின்றும் ரட்சிப்பிற்கு வீட்டிலே வசுக்கள் வைக்கிறுர்கள். சூ. இளைஞனுன அக்னியே! நல்ல எழுச்சியுடனுகும் நீ எப்பொழுதும் விழாமலுள்ள சுவாலேயோடு எங்கள் முன் ஒளியுடனுகவும், உன்னை தபஸ்விகளும் திடமானவர்களும் நாடுகிறுர்கள்.

எ. இந்த வியாப்த ஒளியுடனுன பசு உதயமாகி பூர்வத்தில் தாய்முன் 1 பிதாவான சுவர்கத்திற்கு சென்று கொண்டு உட்கார்கிறுன். அ. சூரியனின் ஒளியின்கண் பிராணுபான நடுவில் ஆகாச பூமியின் மத்தியிலும் சூரியனது பிராணுத்மா செல்கிறுன். கூ. இரவின் சப்த எழுச்சியில் எல்லாநாட்களிலும் 2 முப்பது ஸ்தானங்களையும் அவன் அரசு புரிகிறுன்; பட்சியான அவனுக்கு கான மளிக்கப்படுகிறது.

---

## கண்டம் கசஉ

தேவதை க - எ, அக்னி. அ - க0 பவமான சோமன் ரிஷி - க - ச, கோதமராஹுகணம். ரு - எ பரத்வாஜ பார்ஹஸ்பத்யன் அ - க0 பிரஜாபதி.

க. தூரத்தினின்றே கேட்கும் அவனுக்கு அக்னிக்கு யக்ஞத்திற்காகச் செல்லுங்கால் மந்திரத்தை மொழிவோம்.

---

1 தோன்றி. 2 நாட்களையும்.

உ. எவன் புராதனத்தினின்று சத்துருப் பிரசைக் கூட்டங்களில், வதைசெய்ய நாடுபவர்களுக்கு ஐசுவரியத்தை அளிப்பானே—அவனுக்கு மந்திரத்தை மொழிவோம். ௩. அந்த சாந்தமுள்ளவன் எங்கள் மக்கள் முதலியவர்களை ஐசுவரியத்தை ரட்சிக்கட்டும். மேலும் எங்களை துக்கத்தினின்று நீக்கட்டும். ௪. ஒவ்வொரு யுத்தத்திலும் ஐசுவரியத்தை ஜயிக்கும் விருத்திரனைக் கொல்லும் அக்னி பிறந்துளான் என சனங்கள் சொல்லட்டும்.

௫. தேவரே! சாதகர்களான உனது குதிரைகளை இணைக்கவும், துரிதமான உன் குதிரைகள் உன் ரதத்தை வகிக்கின்றன. ௬, [1] ஹவிர்லட்சண உணவை சோமனைப் பருக தேவர்களைக் கொண்டுவரவும், இங்கு நோக்கவும். ௭. [2] பரதர்களின் அக்னியே, வாடாத வன்மையோடு ஓங்கிச் சுடருடனாகவும், நித்திய ஒளியுடன் நீ பிரகாசமாகவும்.

௮. சோமனுடைய ரசத்தை பொழிபவனுக்கு பிரசித்தமான இந்த மொழியை மனிதனைப்போல் இரக்கட்டும். [3] மக்களை [4] பிருகு புத்திரர்கள் துரத்தியதுபோல் சாதகமற்ற நாயை துரத்தவும். ௯. (பிதாக்களின் ரட்சணையான) கைகளில் மகன் சேர்வதுபோல் சகோதரி(யான சோமன்) உடையில்—உற்சாகத்தில்—ஆசிரியமாகிறான். காதலன் காதலியைப்போல் மணங் கேட்போனைப்போல் தன் நிலயத்தைப் பற்றச்செல்லுகிறான். ௰. எவன் இரு உலகங்களைத் தாங்கியுளானோ பல சாதனமான ஹரியான அந்த வீர அறிஞன் தன் நிலயத்தில் புனிதத்தில் [5] அவனை நிலையாக்கச் சுற்றிக்கொள்ளுகிறான்.

---

[1] அளிக்கும் லட்சணமுடைனை, [2] புவி போஷிப்பின், [3] நீச சுபாவத்தை, [4] அறிய தவமுள்ளவர்கள், [5] தன்னை.

## கண்டம் கசரு

தேவதை க - ரு, இந்திரன். கூ-எ, பவமான சோமன்.
ரிஷி க - உ, சோபரி காண்வன். ரு - ரு மேதாதிதிமேத்யாதிதி காண்வன் கூ - எ, ரிஜிசுவன் ஊர்த்வசத்மன்.

இந்திரனே! நீ! சன்மத்தினின்றே 1 சகோதரனில்லாதவன், 2 பந்துத்வமில்லாமல் சதாகால மிருக்கிறாய், நீ போரினாலேயே பந்துத்துவத்தை விரும்புகிறாய். உ. ஐசுவரியமுள்ள நண்பனை நீ ஆசிரயிப்பதில்லை, சுராபானம் செய்யும் அவர்கள் உன்னை நிந்திக்கிறார்கள், நீ இடிமுழக்கஞ் செய்யும்பொழுதும் ஒன்று சேர்க்கும் சமயத்திலும் பிதாவைப்போல் நீ அழைக்கப்படுகிறாய்.

ரு. உன் பொன் ரதத்திற்கு ஆயிரமும் நூறுமான குதிரைகள் இணைக்கப்பட்டுள்ளன, 3 பிரமத்தால் பூட்டப்பட்டு 4 நீண்ட கேசங்களுடனான குதிரைகள் சோமனைப் பருக உன்னைச் சுமந்து வரட்டும்.
ச. பொன்மயமான ரதத்திற்குப் பூட்டப்பட்டு மயில் தோகை வால்களுடனும், வெண்மை முதுகுகளுடனான குதிரைகள் எங்களை நன்கு பேசச் செய்யும் அமிருத ரசத்தைப் பருக உன்னை இங்கு கொண்டு வரட்டும். ரு. பாக்களால் பற்றப்படுபவனே! முதன்மையானவன் போல் இந்த அமிருத ரசத்தைப் பருகவும்; நன்றாய் செய்யப்பட்ட இந்த ரசத்தின் ரசப்பெருக்கு சுபமானதாகும், உன்னுடைய சந்தோஷத்திற்குத் தயாரிக்கப்படுவதாகும்.

சு. அவனை அமிழ்த்தவும் பொழியவும், குதிரையைப் போல் கண்ணியமாக்கத் தகுந்தவன். தேசசுகளைத்

---

1 போட்டி யில்லாதவன். 2 உதவியன்னியில். 3 பலத்தால் 4 நிறை தேசசுகளுடன்.

தூண்டி சலத்தைப் பிரேரிப்பவன், சலத்தில் செல்பவன் வனத்தில் வசிப்பவன்: எ. எவன் சத்தியத்தில் பிறந்து சத்தியத்தால் வளர்கிறானோ அவ(ே)ன் ராஜா. தேவன். தலையோங்கும் சட்டமாகும், அவன் தேவர்களுக்குப் பிரியனாய் ஆயிரம் தாரைகளோடான அந்த விருஷபன் மழையை அமிருத்தைப் பொழிகிறான்.

---

## கண்டம் கசச

**தேவதை க - ங அக்னி. ச - சு பவமான சோமன். எ - கூ - இந்திரன். ரிஷி க - ங பரத்வாஜ பார்ஹஸ்பத்யன். ச - சு வசிஷ்டன். எ - கூ - திரஸ்சினன்.**

க. விசேஷ துதியால், பொருள்களில் சாய்ந்து, நன்கு மின்னி வெண்மையுடனாய் அழைக்கப்படும் அக்னி விருத்திரனைக் கொல்லட்டும். நித்தியமான தாயின் கர்ப்பத்தில் பிரகாசித்துக்கொண்டு பிதாவின் பிதாவான அக்னியானவன் சத்தியத்தின் நிலயத்தில் சாய்ந்துளான். ங. சோதியுலகிலும் பிரகாசிக்கும் புத்திர பௌத்திரர்களை அளிக்கும் [1] பிரமத்தை, விசேஷமாய் பார்க்கும் ஜாதவேதசனே கொண்டுவரவும்.

ச. மனிதன் தூண்டுதலினால் பிரேரணையால் புனிதமாக்கப்பட்டு தேவரசம் [2] தேவர்களோடு தோய்கிறார், பொழியப்பட்டுள்ள அவர் கானஞ் செய்துகொண்டு புனிதப் பொருளில் பசுக் கொட்டத்திற்கு ஹோதா செல்வதுபோல் போகிறார். ரு. சுபமான சண்டைக்கு யோக்கிய

---

1 பலத்தை, அறிவை. 2 புலன்களோடு. எப்படி நீர் சம பந்தமான நரம்புகளால் செவியுறுகிறோமோ அப்படியே திவ்யமான ரசங்களின் சேர்க்கையினால் எல்லா அங்கங்களிலும் செம்மையாகிறோம்.

உடையான தேசசால் தரித்துக்கொண்டு மகானுன மேதாவி மொழிகளை மலர்ந்தவனாய் தேவர்கள் புசிக்கும் இடத்தில் விசேஷமாய் பார்ப்பவனுகவும் விழிப்பவனுகவும் விழிப்புள்ளவனுயுள்ள உன்னை புனிதஞ் செய்யுங்கால் சர்மங்களில் சகங்களில்-நீ பிரவேசிக்கவும். சு. பிரியமானவன் உயரமான ரசிமியில் புனிதமாக்கப் படுகிருன்; அவன் எங்களில் பெரியவன். புகழ் நடுவே பெருமையானவன்; நீ புனிதமாகுங்கால் சப்தஞ் செய்யவும், முன் பெருகவும், சதாகாலம் எங்களை ரட்சணைகளோடு காக்கவும்.

எ. துரிதமாய் வரவும், சுத்த சாமனுல் புனித காரணங்களான சாஸ்திரங்களால்—இந்திரனை—துதிக்கிருேம். சாமனுல் பாபமில்லாததனுல் பெரியவனை இந்திரனை சாஸ்திரங்களோடு சாய்ந்த சோமன் சந்தோஷமாக்கட்டும். அ. இந்திரனே ! சுத்த சொரூபனே ! எங்களில் வரவும், புனித பாதுகாப்போடு நீ புனிதமான நீ வரவும். சுத்தமான ஐசுவரியத்தை எங்களில் ஸ்தாபிக்கவும். 1 சோமார்ஹனே ! சுத்தமான நீ—சோமனுல்—சந்தோஷ முடனுகவும். கூ. சுத்தனுன நீ எங்களுக்கு ஐசுவரியத்தை அளிக்கவும். புனிதமான நீ உன்னை நாடுபவர்களுக்கு ரத்னங்களை அளிக்கவும். பாபம் பிரிந்த நீ சத்துருக்களைக் கொல்கிருய். எங்களுக்கு ஐசுவரிய முதலியவைகளை அளிக்க விரும்புகிருய்.

---

1 சோமனுக்கு அருகதையானவனே,

## கண்டம் கசரு.

தேவதை - க - ங அக்னி. ச - சு பவமான சோமன். எ - அ இந்திரன். கூ - ய. அக்னி. ரிஷி க - ங சுதம்பரான் ஆத்ரேயன். ச - சு. வசிஷ்டன். எ - அ நிருமேத புருமேதர்கள். கூ - க௦. சோபரி காண்வன்.

க. ஐசுவரியங்களை விரும்பி சோதி பரிசிக்கும் தேவனை அக்னியின் சித்தமான துதியை இன்று மனனஞ்செய்கிறோம். உ. எந்த அக்னி ஹோதாவாய் மனிதர்களில் மலர்ந்து எங்கள் மொழிகளைக்கேட்கிறானோ அவன் திவ்ய குணமுள்ள சனத்தை சந்தோஷ முடனாக்குகிறான். ங. அக்னியே நீ நாடத் தகுந்தவனாயும் ஹோதாவாயும் பிரியனாயும் அனைவரிலும் பெரியவனாயுமிருக்கிறாய், உன்னால் யக்ஞத்தை பூர்ணமாக்குகிறார்கள்.

ச. மூன்று சிகரத்தலைவன், சக்தி யளிப்பவன் வயதளிப்பவனான அங்கங்களில் வசிப்பவனை துதிவடிவமொழிகள் சப்தித்தன. வருணனைப்போல் [1] வனங்களை கவர்ந்துகொண்டு ஐசுவரியமளிக்கும் நதியைப்போல் அவன் நன்மைகளையெல்லாம் அளிக்கிறான். ரு. சோமனே! ஜயிப்பவனே, சூரர் சுற்றியுள்ளவனே! சர்வ வீரனே! சஹன சீலமுள்ளவனே! ஐசுவரியங்களை அளிப்பவனாய் பெருகவும், கூரிய ஆயுதங்களோடு துரித வில்லுடன் சண்டையில் ஜயிக்கப்படாதவனாய் சத்துருக்களைப்போரில் ஜயிப்பவனாய் பெருகவும். சு. விரித்த சகத்தின் தலைவனே அபயமளித்து பூர்ணமுடனான—வானம் பூமியை எமக்கு—பரஸ்பரம் நிலையாக்கி-பெருகவும், சலங்கள் உஷசை, உயரிய சோதி பசுக்களைப் பொழிந்துகொண்டு, மகத்தான வன்மைகளையெல்லாம் எங்களுக்கு மொழியவும்.

---

1 சலங்களை.

எ. இந்திரனே! நீ கீர்த்தி யுள்ளவன், பலத்தின் பதியாகும்,—தர்ம மார்கத்தில்—தூண்டுபவனாகும், நீயே மனிதர்களின் ஒருபொழுதும் ஜயிக்கப்படாத பாதுகாப்பனாகும், எதிர்ப்பு சூன்யமான நீ சத்துருக்களை எல்லாம் ஒழிக்கிறாய். அசுரனே! அசுரனைப்போல் பலமுள்ளவனே! இந்திரனே! பாகத்தைப்போல் தந்தை பொருள்களில் பாகத்தை பிள்ளைகள் நாடும் வண்ணம்—பெருமையான ஞானமுள்ள உன்னையே—ஐசுவரியத்தை—தர்மசாதனமான பொருளை—யாசிக்கிறோம். உன் கீர்த்தி மகத்தான சரணம்போலுண்டு, உன் சுகங்கள் எல்லாம் எங்களை அணுகட்டும்.

கூ. தேவர்களின் நடுவே — அதிசய — தேவனும் ஆனந்த மளிப்பவனும், விநாச மற்றவனும், யக்ஞத்தின் நன்மையைச் செய்பவனும், யக்ஞஞ் செய்பவர்களில் சிறந்தவனான உன்னை நாடுகிறோம். ௰. சலத்தின் மகனும் 1 சுபகனும்—ஐசுவரிய சம்பன்னனும் சிறந்த சோதியுடன் ஓங்கிய தேசசுடனான அக்னியை—நாடுகிறோம். அவன் சோதியுலகில் மித்திரன் வருணனின் சலங்களின் சுகத்தை அளிக்கட்டும்.

---

## கண்டம் கசசு.

தேவதை - க - ங அக்னி. ச - சு பவமான சோமன். எ - அ, இந்திரன். கூ - கக, பவமான சோமன். ரிஷி - க - ங சுனச்சேபன் ஆஜீர்கதி. ச - சு நோதர்கள். எ - அ மேதாதிதி காண்வன். கூ - கக ரேணுவைசுவாமித்ரன்.

க. அக்னியே! எவனைப்போர்களில் ரட்சிக்கிறாயோ, எவனை சண்டையில் காக்கிறாயோ தூண்டுகிறாயோ, அவன்

1 சுபச்செல்வன்.

நித்தியமான உணவை அடைகிறான். உ. எவனுக்கு சிறப்புடனான வன்மையுண்டோ [1]விக்னம் விலக்குபவனே! அவன் — உணவை — அவன் எவனாயிருந்த போதிலும்— எவனும் ஆக்கிரமிப்பதில்லை. ௩. எங்கும் பார்க்கும் அவன் குதிரைகளால் சண்டையை ஜயிப்பவனாகட்டும, மேதாவிகளால் பலன் அளிப்பவனாகட்டும்.

௪. ஒருமையுடன் ரசம் தெளிக்கும் சகோதரிகள், (சோமனை) அலங்கரிக்கிறார்கள், தீரனின் பத்து அறிவுகள்-அவனை—சுத்தஞ் செய்கின்றன. சூரியனின் ஹரியானவன் திசையை நோக்கிச்செல்லுகிறான், அவன் வேகமுடனான குதிரையைபோல் [1] துரோண கலசத்தை வியாபகமாகிறான். ௫. தாய்களோடு குழந்தையைப்போல், தேவர்களை—விரும்பும் பலர்களால் விரும்பப்படுபவன் சலங்களோடு—சாதனங்களால்—செல்கிறான். மனிதர்கள் யுவதியை நாடுவதுபோல் அவன் பால்களுடன் கலந்து நன்றாய் செய்யப்பட்டதன் ஸ்தானஞ்செல்பவனாய் கலசத்தில் ஒன்றுசேர்கிறான். ௬. மேலும் பசுவின் ஸ்தனம் பூர்ணமாயிருக்கிறது. சோபன அறிவுடனான இந்து தாரைகளோடு இங்கு வருகிறான். நனைந்த வஸ்திரங்களால்—மூடுவதுபோல்—சுத்தமாக்கப்பட்ட செல்வங்கள்போல்—பாத்திரங்களில் பசுக்கள் சோமனை சலத்தால்—பாலால்—மூடுகின்றன.

எ. இந்திரனே! ரசமான சோமனை எங்கள் பசு-பால் சம்பந்தங்களோடு பருகவும், திருப்தியாகவும், யக்ஞத்தில் வியாப்தமாய் பந்துவாய் எங்கள் அபிவிருத்திக்கு போதமுடனாகவும். உன் அறிவுகள் எங்களைக் காப்பாற்றட்டும். அ. நாங்கள் உனது—அனுக்கிரஹ நலமுடனான—அறிவுகளில் பலமுடனாகவேண்டும், சத்துருக்களுக்காக—அவர்கள் சிறப்

---

1 இடையுறு நீக்குபவனே. 1 தேகத்தை.

பிற்காக—எங்களை ஹிம்சிக்கவேண்டாம், கஷ்டத்திற்குள்ளாக்காதே: [1] யதேஷ்டமாய் அதிசய ரட்சணைகளால் எங்களை ரட்சிக்கவும்; எங்களை சுகங்களில் [2] ஸ்தாபிக்கவும்.

௬. பரம நிலயத்தில், — ஆகாசத்தில் — [1] மூன்று ஏழான பசுக்கள் சத்தியமான பாலை கறக்கிறார்கள். அவன் ருதத்தால் பெருகும்பொழுது வேறு சுந்தரமான நான்கு புவனங்களை மங்களத்திற்காக அவன் செய்கிறான். ௰. அவன் கவிச்சயல்களினால் கல்யாணமான அமிருதத்தை அனுபவித்துக்கொண்டு வானம் பூமியை அதனதன் ஸ்தானத்தில் ஸ்திரமாக்குகிறான், தேவரின் ஸ்தானத்தை அவர்கள் பலத்தால் அறியும்பொழுது, அதிசய தேசசுகளுடனான சலங்களில் தன் மேன்மையால் மறைகிறான். ௰௧. அமிருதமான, இம்சிக்கப் படாததான சோம ரசிமிகள் ஸ்தாவர சங்கமங்களை அனுசரித்து ரட்சிக்கட்டும். எந்த ரசமிகளால் பலமான தேவர்ஹ உணவுகள் பிரேரிக்கப் படுகிறதோ அந்த ராஜனை— சோமனை —மனனீயமான துதிகள் கிருகிக்கின்றன.

---

## கண்டம் ௧௬௭

தேவதை - ௧ - ௩, பவமான சோமன். ௪ - ௬ இந்திரன். எ - ௯ இந்திரன். ரிஷி - ௧ - ௩ த்ருத்ஸன். ௪ - ௬ நிருமேத புருமேதர்கள். எ - ௯ அகஸ்தியர்கள்.

௧. சோமனே! துதிக்கப்படும் நீ வாயுவை அருந்துவதற்குப் பெருகவும், புனிதமாகி மித்திரன் வருணன் பானத்திற்குப் பெருகவும். அறிவு புலனுக்கும் ரதத்திலுள்ள மனிதனை அணுகவும், பிரேரிக்கவும். வர்ஷிக்கும்

---

1 வெகு மிக 2 நிலையாக்கவும். 1 அறிபவன் அறியச் செய்பவன் அறிவு ஐந்து இந்திரியங்கள் மனம் ஆன்மா.

1 வச்சிரபாஹுவான இந்திரனை அணுகவும். உ. சோபன வஸ்திர ஸஹிதமான ஐசுவரியங்களை அளிக்கவும், புனிதத்தால் நீ நல்ல பாலை அளிக்கும் பசுக்களை கொடுக்கவும், தேவரே! 2 சோமனே! சந்திரங்களான—சந்தோஷமளிப்பதான—செல்வங்களை எங்கள் போஷணைக்குப் பொழியவும்; ரதமுடனான குதிரைகளையும் கொடுக்கவும். ௩. எதனால் ஐசுவரியத்தை அடைந்து 3 ஜமதக்னியைப்போல் ஆர்ஷ பதவியை அடைவோமோ அதற்கான புனிதமாக்கப்பட்ட நீ திவ்யமான ஐசுவரியங்களை எங்களுக்குப் பொழியவும், பூமியிலுள்ள அனைத்தையும் 4 வர்ஷிக்கவும்.

௪. அபூர்வ—நிகரில்லாத—மகவானே, விருத்திரனைக் கொல்ல நீ விளங்குங்கால் நீ பூமியை வெகு விரிவுடனுக்குகிறாய், மேலும் அப்பொழுது சோதி யுலகத்தையும்—ஆகாசத்தால்—தாங்குகிறாய். ஸ்தாபிதஞ் செய்கிறாய் ௫. அச் சமயத்திலேயே உனக்காக யக்ஞம் தொன்றுகிறது, சந்தோஷ சூசகமான மந்திரமும் துதியும் புலனாகின்றன. எது உண்டோ உண்டாகப்போவதோ அந்த அனைத்திலும் உன் மகிமையால் நீ யிருக்கிறாய். ௬. அபக்குவ பசுக்களில் பரிபக்குவ பாலை-நீ பிரேரிக்கிறாய், சோதி யுலகில் நீ சூரியனை ஏறச்செய்கிறாய், சுபமான துதிகளால் இந்திரனைக் கூர்மையாக்கவும், பாக்களை விரும்பும்—இந்திரனுக்கு 5 பிரீதிகரமாய் பெரியதாயுள்ள சாமனை கானஞ் செய்யவும்.

௭. பாத்திரத்திலுள்ள சந்தோஷமளிக்கும் ரசம் — எப்படி — பருகப்படுகிறதோ — அப்படி ரசம்போலுள்ள-குதிரைகளுள்ளவனே! நீ களிப்புடனாகவும். மது சாதனமான திருப்தி செய்வதான வர்ஷிப்பதான இந்துவானவன்

1 வச்சிராயுதனனே. 2 சந்திரன்போல் சந்தோஷனே. 3 சிறந்த அக்னி புருஷனைப்போல். 4 பொழியவும். 5 அன்பு அளிப்பதாய்.

வன்மையுள்ளவன், ஆயிரம் பொருள்களை அளிப்பவன். அ. வர்ஷிப்பதாயும் இன்பமளிப்பதாயும், நாடத் தகுந்ததாயும் சஹாயமளிப்பதாயும் சேவிப்பதற்கு அருகதையாயும் சத்துரு சேனைகளை ஜயிப்பதாயும் இன்ப சாதனமான ரசம் இந்திரனே! உன்னை அணுகட்டும். கூ. நீயே சூரனும், அளிப்பவனும், மனிதரின் ரதத்தை துரிதஞ்செய்பவன், சுவாலையுடனான பாத்திரம் போல் நீ சகாவுடனாகி [1] விரதமில்லாத [2] தஸ்யுக்களை எரிக்கவும்.

---

## கண்டம் கசஅ

**தேவதை க – ரு. பவமான சோமன். கூ - ச இந்திரன் ரிஷி - க - ரு கவி பார்கவன். சு – கூ பரத்வாஜ பார்ஹஸ்பத்யன்.**

க. சோதியினின்று மழையை எங்களுக்கு மேன்மையுடன் பொழியவும், ரோகமற்று அதிகமாயுள்ள உணவையும் சலங்களின் அலையையும ஆகாசத்தினின்று பொழியவும் உ. எதனால் பசுக்கள் எங்களுக்கு வருகின்றதோ அந்த தாரையோடு நீ பெருகவும்; மனிதர்களுக்கு ஹிதஞ் செய்யும் பொருள்களும் எங்கள் கிருகத்திலாகட்டும். ந. யக்ஞங்களில் தேவப்பிரியனான நீ எங்களுக்கு [3] நெய் தாரையோடு பெருகவும், மழையையும் பொழியவும். ச. நீ எங்கள் பலத்திற்கு சூரிய மயமான பாத்திரத்தில் தாரையால் ஓடிவரவும். தேவர்கள் உன் சப்தத்தைக் கேட்கிறார்கள். பவமானன் பெருகுங்கால் தனது புராதன காந்தியை பிரகாசித்துக் கொண்டு ராட்சதர்களை அடித்துத் துரத்துகிறான்.

ரு. பருக விரும்பி சகலத்தையும் அறிந்து பின் தயங்காதவனைச் சுற்றுபவனாய் அருகில் துரிதமாய் வரும் வீரனை

---

1 சங்கற்பமில்லாத 2 அடிமைகளை. 3 ஒளி.

தேவனான இந்திரனுக்கு ஆகுதியை, சோமனை — அளிக்கவும். எ. சோமர்களோடு சோமன் பருகுபவனாய் சோமபாத்திரங்களோடு உக்ரனாயும் பொழியப்பட்ட இந்துக்களுடன் இந்திரனை நோக்கிச் செல்லவும். அ. பொழியப்பட்ட துளிகளுடனான சோமர்களோடு இந்திரனை நோக்கி நீ செல்லுங்கால், மேதாவியான அவன்—இந்திரன்—உனது—அனைத்தையு மறிகிறான், அப்பால், சத்துருக்களைகொன்றுகொண்டு அந்த அந்த விருப்பங்களை யெல்லாம் பூர்ணமாக்குகிறான். ௯. [1]அத்வர்யுவே! அவனுக்கே சோம லட்சணரசத்தை அளிக்கவும். சகலமாய் சிறந்ததாய் செருக்குள்ள சத்துருவின் வெகு கெட்ட இம்சையினின்று எங்களை அவன் காக்கட்டும்.

---

## கண்டம் ௧௪௯.

தேவதை - ௧ ௬ பவமான சோமன். எ - ௯, இந்திரன் ௧ - ௬ அஸித காசியப தேவலன். எ - ௯ சுகக்ஷன்,

௧. வெண்மை நிறமான, சுதந்திர பலமுடனான, சிகப்பு வர்ணத்தோடு சோதி பரிசிக்கும் சோமனுக்கு காதையை—துதி வடிவ மொழிகளைக்—கூறவும். உ. கை துரிதமாகும் [2] கற்களால் பொழியப்பட்ட சோமனைப் புனிதமாக்கவும். மதுவில் மதுவான—பாலைப் பொழியவும். ௩. நமஸ்காரத்தால் சோமனை அணுகவும், [3] தயிரினால் அதைக் கலக்கவும். இந்திரனில் இந்துவை ஸ்தாபிக்கவும். சோமனே! சத்துருவைக் கொல்பவனே! விசேஷமாய் பார்ப்பவனே! தேவர்களின் விருப்பத்தை செய்பவனே! எங்கள் பசுக்களில் சுகத்தைப் பொழியவும். சோமனே! உன்னை இந்திரன் பருகி சந்தோஷமுடனாகை சோமனே! சித்தமறிபவனே! சித்தத் தலைவனே! நீ பொழியப்பட்டுளாய். ௬.

---

[1] யக்ஞபுருஷனே [2] வச்சிராயுதங்களால் [3] தியானத்தால்.

இந்துவே, பவமானனே! நீ நல்ல வீரத்தையும் செல்வத்தையும் இந்திரனின் சகாயத்தையும் சோமனே அளிக்கவும்.

எ. சூரியனே! சிறந்த செல்வமுடனான விருஷபனான, மனிதர் ஹிதஞ் செய்பவனான சத்துருவை ஒழிப்பவனான மனிதனை நோக்கி நீ உதயமாகிறாய். அ. அவன் தன் கைபலத்தால் ஒன்பதும் தொண்ணூறு கோட்டைகளை உடைக்கிறான், அவன் [1] விருத்திரனையும் அகினையயும் கொல்கிறான் — இப்படிச் செய்பவனை நோக்கி சூரியன் உதயமாகிறான். கூ. அவன் நமது சிவமான — கல்யாணமான—நண்பனாகும், குதிரைகள் பசுக்கள் தானியங்கள் நிறைந்த ஐசுவரியங்களை வெகு பசு தாரைகள்போல் அவன் அளிக்கிறான்.

---

## கண்டம் கநு0

**தேவதை க - ந சூரியன் ச - எ இந்திரன். ரிஷி க - ந விப்ராட சௌர்யன். ச - சு வசிஷ்டன். கூ - எ பர்க பிராகாதன்.**

க. விசேஷமாய் ஒளிவீசுபவன், [2] குடிலமற்ற ஆயுசை யக்ஞபதிக்கு அளித்துக்கொண்டு பெரியதான சோமமய மதுவை பருகட்டும்; மகா வாயுவினால் பிரேரித்துக்கொண்டு சகத்தை—பாதுகாக்கும் அவன் சுவயமாகவே பிரசைகளை போஷித்துக்கொண்டு பெருமையுடன் ஒளி வீசுகிறான். உ. பிரகாசமாயும், பெரியவனாயும், [3] சுபிஷ்டனாயும் பலத்தை அளிப்பவனாயும் தர்மத்தில்— வாயுவினால் தரிக்கப்படுபவனாயும்—சோதி யுலகத்தின் ஆசிரயித்தில்—ஆதாவில்—அர்ப்பிதனான—நிலைப்பவனான—சத்தியனாயும், சத்துருக்களையும்

---

1 சத்துருவை. 2 கோணலான குணங் கழிந்த. 3 நல்ல புஷ்டனாயும்.

சிநேகிதமற்றவர்களை கொல்பவனும், தஸ்யுக்களை தொலைப்பவனும், அசுரர்களை அழிப்பவனும் பகைவர்களை பாழாக்குபவனுமுள்ள பெருஞ் சோதி புலனாகிறான். ௩. இந்த சிறந்த சோதிகளின் சோதி, உத்தமன், உலகத்தை ஜயிப்பவன், ஐசுவரிய மடைபவன் பெரியவன் என சொல்லப்படுகிறான். [1] விசுவம் பிரகாசிப்பவன் ஒளி வீசுபவன், மகானான சூரியன் பார்வைக்குப் பரந்தவனாய் அழிவற்ற ஜயத்தையும்—தேஜோவடிவமான—பலத்தையும் விஸ்தார மாக்குகிறான்.

௪. இந்திரனே! பிதாபிள்ளைகளுக்கு சிட்சிப்பதுபோல் பொருள் முதலியன அடையும் வழியை கற்பிப்பது போல்—எங்களுக்கு செயலையும் அறிவையும் அளிக்கவும். [2] புருஹூதனே! சீவர்களான நாங்கள், யக்ஞத்தில் சோதியான உன்னை தினந்தோறும் அடையட்டும். ரு. அறியாதவர்களும், ஹிம்சை செய்பவர்களும் துஷ்டந் தோய்ந்தவர்களும் எங்களை அமிழ்த்தாமலிருக்கட்டும்; சூரனே! நாங்கள் உன்னால் கீழ்நோக்கி விழும் வெகு [3] சலங்களைத் தாண்ட வேண்டும்.

௫. இன்று இத்தினம் நாளை தினம் நாளை மறுநாளும் இந்திரனே! எங்களைக் காக்கவும. சந்தூக்களின் பதியே! எல்லா நாள்களிலும் இரவும் பகலிலும் எங்க்ள் தோத்திரஞ் செய்பவர்களை நீ காப்பாற்றுகிறாய். [4] மகவான் நாசஞ்செய்யும்—நொறுக்கித்தள்ளும் — வீரனாகும்; மேன்மையான ஐசுவரியமுள்ள தன் எல்லா வீர்யமுடனும் சேர்ந்துளான்; சதக்கிரதுவே! வச்சிராயுதத்தைப்பற்றியுள்ள உன் கைகள் வெகு விருப்பங்களை வர்ஷிப்பதாகும்.

---

1 எல்லா நிலயங்களிலும். 2 வெகு முறை அழைக்கப்படுபவனே. 3 கஷ்டங்களை. 4 இந்திரன்.

## கண்டம் கருக

தேவதை. க-ங-ரஸ்வான். உ, சரஸ்வதி ங-ரு சவிதை. சு-அ பிரமணஸ்பதி க-கக அக்னி. ரிஷி-க-, வசிஷ்டன். உ, பரத்வாஜ பார்ஹஸ்பத்யன். ங-ரு விசுவாமித்ரன். சு-அ மேதாதிதி காண்வன். க-கக சதம் வைகாநசர்கள்.

க. மனைவிகளை விரும்பும் விவாகமாகாத புருஷர்களைப் போலும், மக்கள்களை நாடும் மேன்மையான தானஞ் செய்பவர்களைப் போலும் நாங்கள் சரஸ்வனை—மத்தியம ஸ்தானத்தை—அழைக்கிறோம்.

உ. மேலும் எங்கள் பிரியர்களின் நடுவே பிரியமான [1] ஏழு—சகோதரியுடனும்—நன்றாய் சேவிக்கப்பட்டவளுமான சரஸ்வதி துதிப்பதற்கு அருகதை யாகிறாள்.

ங. எவர் எங்கள் புத்தியை பிரேரிக்கிறாரோ அந்த தேவ சவிதாவின் துதிப்பதற் கருகதையான தேசசை நாங்கள் தியானஞ் செய்கிறோம். ச. பிரமண ஸ்பதியே! ஔசிசனின் மகனை கட்சி வந்தன்—தேவர்களில் பிரசித்தமாயிருப்பதுபோல்—சோமன் அனுசரித்த என்னை, பிரகாசமுள்ளவனுகச் செய்யவும். ரு. அக்னியே! எங்களில் ஆயுசைப் பொழிகிறாய்; எங்களில் உணவையும் பலத்தையுமளிக்கவும். சத்துருக்களை வெகு தூரத்திலேயே வேதனை செய்யவும்.

சு. அவர்கள் எங்களுக்கு பூமியின் சோதியின் மகத்தான ஐசுவரிய சக்தியை தரிப்பதில் சமர்த்தர்கள்—அளிப்பதில் வன்மையுள்ளவர்கள். நீங்கள் தேவர்களில் மகத்தான பூஜ்யர்களாகும். எ. [3]ருதத்தால் ருதத்தைப் பற்றிக்

---

1 ஏழு சந்தசுடனும். 2 பிராணனின் மகனை சுவாதீனன்போல். 3 சத்தியத்தால்.

கொண்டு பிரேரணை செய்யும் பலத்தை அவர்கள் வியாபகமாகிறார்கள். கள்ளங்கபட மன்னியிலுள்ளவர்களான நீங்கள் பலமுடனாகவும். அ. மழை வானத்தோடு வெள்ளம் பொழிந்துகொண்டு அளிப்பதற் கருகர்களாய் உணவின் சுவாமிகளான [1] மித்திர வருணர்கள் மிகவும் மேன்மையான ரதத்தை அடைகிறார்கள்.

௬. ஆதித்திய வடிவத்தாலுள்ளதும் அக்னி வடிவத்தோடிருப்பதும்—வாயு ரூபத்தால் எங்கும்—சுற்றும்—இந்திரனை—சுற்றிலுமுள்ள—பிராணிகள் எல்லாம்—இணைக்கிறார்கள்;—அந்த, ஒளி வீசும்—நட்சத்திரங்களுடனான இந்திரன்—சோதியுலகில்—பிரகாசிக்கிறார். ௭. அவனுக்குப் பிரியமான, ரக்த வர்ணமான, வீரமுடனான, சூரனை சுமப்பதான இரு குதிரைகளை—இந்திரனின்—ரதத்தில்—சாரதிகள்—இணைக்கிறார்கள். ௰௧. மரிப்பவர்களே:—இரவின் முடிவில்—பிரக்ஞான மில்லாததற்கு— காலையில்—பிரக்ஞையை செய்துகொண்டு, உருவமில்லாததற்கு—இருண்ட இரவில் எதற்கும் வடிவமில்லை — உருவத்தை செய்துகொண்டு—சூரியோதயத்தில் பதார்த்தங்களின் வடிவம் தோன்றுவதால்—நீ உஷைகளோடு ஒருமையுடன்—தினந்தோறும்—உதயமாகிறாய்.

---

## கண்டம் ௧௫௨

தேவதை: க - ௩ மித்ர வருணர்கள். ௪ - ௬, இந்திரன். ௭ - ௯ பவமான சோமன். ரிஷி - க - ௩, யஜத ஆத்ரேயர்கள். ௪ - ௬ மதுச்சந்த விசுவாமித்ரன். ௭ - ௯ உசனர்கள்.

க. இந்திரனே! உனக்காக இந்த சோமன் பொழியப் பட்டுள்ளது, உனக்காகவே இது பாய்கிறது, இதன் ரசத்

---

1 பிராணாபானர்களுக்குப் பெயர்.

தைப் பருகவும். உன் சந்தோஷத்திற்கும் சகாயத்திற்கும் நீயே செய்துள்ள, நாடியுள்ள, இந்து சோமன் பெருகுகிறான். உ. அந்த மகான் வெகு ஐசுவரியங்களை அளிப்பதற்கு— எல்லா—பாரத்தின் பளுவை வகிக்கும் ரதத்தைப்போல் அவன் இணைக்கப்படுகிறான், அப்பால் சுவர்க லாப யுக்த மான சண்டைக்கு சர்வமான [1]நஹுஷ சம்பந்தமானவர் கள்—விரோதிகளை—நாடிக்கொண்டு செல்லட்டும். ந. திவ் யமான பிரசைகள் நிந்தனை யன்னியில்—எப்படி செல்லுகிறார் களோ அப்படி—பலவானான நீ—மருத்துக்களின்—சக்தியுட னான மருத்துக்களைப்போல் பெருகவும். சலத்தைப்போல் துரிதமாய் பாயும் நீ எங்களுக்கு நல்ல எண்ணமுடனாகவும்; வெகு வடிவங்களாகும் நீ சைன்னியத்தில் ஜயிக்கும் இந்தி ரனைப்போல் நீ பூஜிக்கத் தகுந்தவனாகிறாய்.

ச. தேவர்களால் மனிதர்களின் சனத்தில்—நீ நாடப் படுவதுபோல்—அக்னியே! நீ எல்லா யக்ஞங்களின் ஹோதா வாகிறாய்—சந்தோஷமளிப்பவனாகிறாய். ரு. நீ எங்கள் யக் ஞத்தில் சந்தோஷமுடனான, துதிகளுடனான நாக்குக் களால்—காலி, கராலி, மனீஜவை, சுலோகிதன், சுதூமவர் ணன், ஸ்புலிங்கினீ, விசுவரூபை—மகத்தான தேவர்களை நாடவும். தேவர்களைக் கொண்டுவரவும். அவர்களுக்கு யக்ஞப் பொருள்களை அளிக்கவும். சு. ஒழுங்கு செய்ப வனே! சுபமான செயலுள்ளவனே! தேவரே, நீ யக்ஞங் களில் பெரிய வழிகளையும் சிறிய வழிகளையும் உத்தம சுபா வங்களால் அறிகிறாய்.

எ. ஹோதாவாய், மரண ரஹிதனாய் தேவனாய் சமூ கங்களை—சமூகச் செயல்களை—அறியவேண்டிய—தூண்டிக் கொண்டு மாயையால்—செயல் விஷய ஞானத்தோடு—வழியை

---

1 மனித சம்பந்தமானவர்கள்.

அவன் காட்டுகிறான்—செயல் செய்யுங்கால் வருகிறான். ௮. பலவானான அவன் போர்களில்—நிலைக்கப்படுகிறான். யக்ஞங்களில் அவன் அழைத்துச் செல்லப்படுகிறான். [1]விப்ரனான அவன் யக்ஞத்தின் சாதனமாகிறான். ௯. அறிவினால் அவன் செய்யப்படுகிறான், எல்லாப் பிராணிகளின் கர்ப்பத்தை தரிக்கிறான், பிதாவை பலத்தின் பிள்ளையால்—சந்ததியால்—தரிக்கிறேன்.

---

## கண்டம் ௧௫.

தேவதை ௧-௩ அக்னி. ௪-௬ அக்னி. ௭-௯ அக்னி ஹவிஷ்கள் ரிஷி - ௧-௩ ஹர்யதன் ௪-௬ அதர்வபிநஹுத்திவன் ௭-௯ கிருத்ஸமதன்.

௧. வானம் பூமிக்குத் துரிதமாகும் சம்பத்தை—பாலை—சோமனில் பொழியவும்: ரசத்தில் வர்ஷிக்கும் — அக்னியை தரிக்கவும். ௨. கன்றுகள் தாய்களுடன்போல் இவர்கள் தங்கள் நிலயத்தை அறிகிறார்கள் அவர்கள் ஒருமையுடன் பந்துக்களோடு வருகிறார்கள். ௩. சுவாலைகளில் புசிப்பவனின் தரிக்கும்—உணவை—சோதிபுலகில் செய்கிறார். சுவர்கத்தில் இந்திரன் அக்னியை நமஸ்கரிக்கிறான்.

௪. அவனே இந்த புவனங்களில் [2]சேஷ்டனாயிருக்கிறான், அவனிலிருந்து பெரிய பலமுடைனை உக்கிரனை—சூரியனை இந்திரன்—தோன்றுகிறான்: அவன் தோன்றி துரிதமாக சத்துருக்களை கொல்கிறான், அவனை நாடி எல்லா சனங்களும் பிராணிகளும் சந்தோஷமாகிறார்கள். ௫. பலத்துடன் அவன் பெருமையாய் வளர்ந்து வெகு வன்மையுள்ளவனாகி சத்துருவாகி தாசருக்காக பயத்தை உண்டு பண்ணுகிறான். சுவாசிக்கும் சுவாசிக்காத பிராணிகளை

---

1 அறிஞன். 2 மூத்தவனாயிருக்கிறான்.

யெல்லாம் புனிதமாக்குகிறுன். உன் சந்தோஷத்தில் எல்லாப் பிராணிகளும் நமஸ்கரிக்க ஒருமையுடனுகிறுர்கள். சு. ஒருவரோ இருவர்களோ உன்னை நாடும் எல்லா பிரசைகளும் பிராணிகளும உன்னில் அவர்கள் செயலை—அறிவை-முடிக்கிறுர்கள் — தியானஞ்செய்கிறுர்கள், இனிமையால் இனிமையானதை யுண்டாக்கவும். அந்த மதுவை-இனிமையை—இனிய இனிமையால் இன்பமுடனுக்கவும்.

எ. திரிகத்துருகங்களில் மகா பூஜ்யன், வெகு பலமுள்ளவன் [1] யவமிசிரத்தை யனுபவித்து விஷ்ணுவோடு பொழியப்பட்ட சோமனை அவன் சக்திக்கேற்றவாறு பருகுகிறுன். அவன் மகத்தான செயலைச்செய்ய அந்த சோமன்-தேஜசால் விஸ்தாரமான இந்திரனை—இப்படி அவன் பருகுவதால்—சந்தோஷமாக்குகிறுன். இப்படி தேவன் தேவனை அடைகிறுர். சத்தியமானது இந்த சக்தியமான இந்திரனை சேர்கிறுர். அ. பெருமையான ஞானமுள்ளவனே! செயலுடன்-சிறந்த அறிவுடன்—சனித்து பலத்தோடு புலனுகி நீ பிரமாண்டத்தை வகிக்கிறுய். உன் வீரங்களோடு இணைந்து மகத்தான சத்துருக்களையெல்லாம் வசியஞ் செய்கிறுய். விசேஷமாய் பார்ப்பவனே! துதிப்பவனுக்கு நீ விரும்பப்படும் ஐசுவரியத்தை அளிப்பவனுகும். இப்படி தேவன் தேவரை நாடட்டும், சத்தியமான இந்து சத்தியமான இந்திரனை—அணுகட்டும். கூ. இப்பால் ஒளியுடனுன இந்திரன் பலத்தால் கிருவியை — கிணற்றிலிருப்பதை—யுத்தத்தால் ஜயிக்கிறுன். வானம் பூமியை அவன் சுவதேசசால் பூர்ணமாக்குகிறுன். அதன் பலத்தால் பெருமையாய் வளர்கிறுன். அன்யத்தை—ஒரு பாகத்தை—தன் வயிற்றில் தரிக்கிறுன். மற்றொன்றை விட்டு விடுகிறுன். எங்களை சேதன முடனுக்

1 தான்யம் கலந்த. 2 அதிகாரஞ் செய்கிறுய்.

கவும், அவன் தேவனாய் இந்துவாய் சத்தியனாய் அந்த தேவனான சத்தியமான இந்திரனை அடைகிறான்.

---

## கண்டம் கருச

**தேவதை க - ங, ச - ரு, கஉ - கச, இந்திரன். சா - அ பவமான சோமன், கூ - கக அக்னி. ரிஷி . க- ங, பிரிய மேதன். ச - ரு நிருமேத புருஷமேதர்கள். சா - அ திரிய ருண திரஸதஸ்யுனன். கூ - கக சுனச்சேபன். கஉ - கச வத்ஸகாண்வன்.**

*சத்தியத்தின் மகனாயும் சத் புருஷர்களின் பதியான இந்திரனை [1] கோபதியை உண்மையான அறிவிற்கு துதியால் பூஜிக்கவும். உ. எங்கு அவனுக்கு கானஞ் செய்கிறோமோ அங்கு அவன் குதிரைகள் அனுப்பப்படுகின்றன. சிகப்பு குதிரைகள் [2] புல்லிலே இருக்கின்றன. ங. எப்போது அவன் கோசத்தில் தரித்திருக்கிறானோ அப்போது வச்சிராயுதனான இந்திரனுக்கு மதுவையும் பாலையும் பசுக்கள் அளிக்கின்றன;*

*ச. ஒவ்வொரு யுத்தத்திலும் அழைக்கப்பட வேண்டிய இந்திரன் சமீபமாகட்டும். பரமனே! விருத்திரனைக் கொல்பவனே! ரிஷிகளின் துதிக்கருகனே! எங்கள் துதி யக்ஞங்களில் வரவும். ஐசுவரிய மளிப்பவர்களில் நீ முதன்மையானவன்; உன்னை நாடுபவர்களை ஐசுவரியமுள்ளவர்களாகச்செய்து சத்தியமுள்ளவனாயிருக்கிறாய்; வெகு கீர்த்தியுள்ளவனுடைய பலத்தின் மகனான மகத்தான உன் ஐசுவரியங்களை நாடுகிறோம்.*

*சா. துதிக் கருகதையான ரசத்தை சோதியுலகத்தினின்று தேவர்களால் பருகத் தகுந்த பழைய அபூர்வமான அதை மகத்தான ஆழமான சோதியுலகினின்று அவர்கள்*

---

1 பசுபதியை, புவிபதியை. 2 எங்கள் உணர்விலே.

கறக்கிறார்கள்; அதன் சன்மத்தில் இந்திரனுக்கு அவர்கள் துதி செய்கிறார்கள். எ. அப்பால் அவர்கள் பார்க்குங்கால் திவ்யமாய் ஒளியுள்ளவர்கள் அவர்களுடன் பந்துத்வத்தை கோஷஞ் செய்கிறார்கள்; சவிதாவானவன் இருளான வானத்தைத் துரத்துகிறான். அ. பவமானனே! கூட்டத்திலே விருஷபம் எப்படி தலைமையுடனிருக்கிறதோ அப்படியே நீ வானம் பூமி எல்லா புவனங்களையும் உன் பலத்தாலே [1] வியாப்தமாகிக்கொண்டு நீ பிரகாசமாய் விளங்குகிறாய்.

௯. அக்னியே! எங்கள் இந்த ஐசுவரியத்தையும் சேவிக்கப்படவேண்டிய புதிய துதியையும் [2] தேவர்களில் பெருமையுடன் புலனுக்கவும். ௰. [3] சித்திரபானுவே! நீ விசேஷமான ஐசுவரியங்களை அளிப்பவனாகவும். எப்படி நதியின் அருகில் அலை (பிரவாகத்தை அளிப்பதுபோல்) அப்படி மனிதர்களுக்கு எப்பொழுதும் பொழிகிறாய். ௰க [4] பரமங்களிலுள்ள ஐசுவரியங்களை அடையச் செய்யவும்; நடுவிலுள்ளவையிலும் பூலோகத்தில் இருப்பவையிலும் உள்ள ஐசுவரியங்களை அளிக்கவும்.

௰உ. [5] பிதாவான ருதத்தின் சத்தியத்தினுடைய மேதையை அடைந்துள்ளேன். அதனால் நான் [6] சூரியனைப் போல் பிறப்பவனாகும். ௰௩. கண்வரைப்போல் நானும் பழைய வழிபோல் துதிகளை அலங்காரஞ்செய்கிறேன்; அதனால் [7] இந்திரன் சத்துருக்களைக் கொல்லும் பலத்தை அடைகிறான். ௰௪. எந்த ரிஷிகள் உம்மைத்துதிசெய்வதில்லையோ, அல்லது எவர்கள் துதிசெய்கிறார்களோ அவர்களின் நடுவேயுள்ள என் துதிகளால் நன்றாய் துதிக்கப்பட்டு நீ வளர்ந்தோங்குகிறாய்.

---

1 பூர்ணமாக்கிக்கொண்டு. 2 திவ்யமான புருஷர்களில். 3 அதிசய ஒளியுள்ளவனே. 4 பெரிய நிலயங்களிலுள்ள. 5 அறிவை 6 கல்வியுள்ளவனைப்போல். 7 இந்திரனை என் ஆன்மா.

# கண்டம் கருரு

தேவதை - க-ங, விசுவே தேவர்கள். ச-சு பவமான சோமன். எ-கூ, இந்திரன். க0-இந்திரன். ரிஷி-க-ங, அக்னி தாபஸன். ச-சு திரயருண திரஸதஸ்யுனன். எ-கூ விசுவ மனுவையசுவன், க0 பிரியமேதன்,

க. பலத்தால் புலனாகும் அக்னியே! உன் எல்லா ஒளியோடும் என் துதிகளை அங்கீகரிப்பாயோ? தேவர்கள் மனிதர்களோடு அவர்களுடன் இருப்பவையோடு எங்கள் மொழிகளை மேன்மையுடனாக்கவும். உ. எங்கள் புத்திர பௌத்திரர்களுக்கு வன்மைகளோடு சூழ்ந்துகொண்டு பல ங்களுடன் இருக்கும் அக்னி எல்லா அனல்களோடு எங்களு க்கு வரட்டும். ங. அக்னியே! உன் அனல்களால் எங்கள் யக்ஞத்தையும் [1] பிரமத்தையும் விருத்திசெய்யவும். நீ எங்கள் தேவர்கள் யாகத்தின் நிமித்தம் ஐசுவரியத்தைப் பிரேரிக்கத் தூண்டவும்.

ச, பழைய ஒழுக்கமுள்ள மனிதர்கள் மகத்தான பலத்திற்கும் சிறப்பிற்கும் உமக்கு தியானத்தை அளிக்கி றார்கள்; வீரனே! எங்களுக்கு வீரமுடனான பலத்திற்கான செயல்களைத் தூண்டவும். ரு. மனிதர்கள் பருக [2] அக்ஷய மாயுள்ள ஊற்றைப்போல் கீர்த்தியுடன் எங்களைப் பிறச் செய்யவும்; கைகளின் சரக்கூடுகளால் செல்பவன் துளைப் பதுபோல் எங்களை பிறச்செய்யவும். கூ. மனிதர்களுக்கு, சுபமுடனான அமிருதத்திற்கு தர்மத்தைக் காப்பதற்கும் அமுதனே! நீ அவனை உண்டு பண்ணுகிறாய்; நீ எங்களுக்கு [3] போரைப் பெருக்கிக்கொண்டு எப்பொழுதும்செல்லுகிறாய்.

---

1 பலத்தையும் 2 அழிவன்னியிலுள்ள 3 போரில்லா மையல் மனிதன் புனிதமாக மாட்டான். ஆதலால் அதைப் பெருக்குவது மனிதர்கள் புனிதமாய் பெரிய நிலையிலாக சந்தர்ப்ப மளிப்பதாகும்,

எ. 1 இந்திரனுக்கு இந்துவை வர்ஷிக்கவும், அவன் இனிமையான மது ரசத்தைப் பருகட்டும். அவன் தன் மகத்துவத்தால் ஐசுவரியங்களைத் தூண்டுகிறான். 2 பொன் நிற குதிரைகளின் பதியாய் ஐசுவரியம் அளிப்பவனுடன் நான் பேசுகிறேன்; அவர் உன்னைத் துதிசெய்யுங்கால் 3 அசுவத்தின் மகனே! செவிபுறவும். கூ. உன் விட பலமுள்ள வீரன் எப்பொழுதும் பிறப்பதில்லை; ஐசுவரியத்திலும் பெருமையிலும் உனக்கு நிகரானவன் எவனு மில்லை.

ய. நீங்கள் ருக்குக்களின் உபதேச மளிக்கும் வேத வாணிகளின் தலைவராகும். எப்பொழுதும் நாசமாகாத பசுக்களின் பதியான உன்னை ஆசிரியிக்கட்டும்.

---

## கண்டம் கருசு.

**தேவதை - க - கக அக்னி. ரிஷி - க - உ வசிஷ்டன். ங-ரு சோபரிகாண்வன். சு - அ சதம் வைகாநசன். கூ - கக வசூயவன் ஆத்ரேயர்கள்.**

க. ஐசுவரியங்களை அளிக்கும் தேவர் நிரப்பப்பட்ட பூரணமான அளிப்பை பெற்றுக்கொள்ளட்டும்; அதை வெளியில் கொட்டவும்; அப்பால் நிரப்பவும்; ஏனெனில் தேவர் (இப்படி) உங்களைச் சுமக்கிறார் காப்பாற்றுகிறார். உ. அக்னியானவன் அவனை நாடுபவர்களுக்கு ஐசுவரியத்தையும் வீரத்தையு மளிக்கிறான்; தாராளமாய் கொடுக்கும் ஜனங்களுக்கும் அவற்றைக் கொடுக்கிறான்: இதற்காக தேவர்கள் பெரிய அறிஞனை, ஆகுதி எடுத்துச் செல்லுபவனை அவனை யக்ஞத்தின் ஹோதாவாகச் செய்கிறார்கள்.

ங. எவனில் விரதங்களைச் சாய்க்கிறார்களோ, அந்த அதிசயமார்க்கங்களை அறிபவன் தோன்றியுளான்; சூரியர்

---

1 ஆத்மாவிற்கு திவ்யரசத்தை. 2 புலன்களின். 3 வேகத்தின்.

களுக்கு பலத்தைக் கொடுக்கத் தோன்றிய அக்னியின் அருகே எங்கள் துதிவடிவமான மொழிகள் செல்லட்டும். ச. எவன் பெரிய செயல்களை செய்யுங்கால் அவனைக் கண்டு சாதாரண சனங்கள் நடுங்குகிறார்களோ, யக்ஞத்தில் ஆயிரம் ஐசுவரிய மளிக்கும் அந்த [1] அக்னியை செயல்களால் நமஸ்கரிக்கவும்.

ரு. சோதி யுலகத்தில் தோன்றும் அக்னி பிரகாசமாகி சூரியனுக்குச் சமானமாய்பலத்தோடு தாயான பூமியை அனுசரித்துச் செல்கிறான்; அவன் ஆகாசத்தின் ஆசிரயத்திலே நிற்கிறான் திரமாயிருக்கிறான்.

சு. அக்னியே! நீ வாழ்நாட்களை வர்ஷிக்கிறாய்; எங்களுக்கு பலத்தையும் உணவையும் பொழியவும்; துஷ்டர்களை வெகுதூரம் துரத்தவும். எ. அக்னி ரிஷியாகும், பவமானனாகும்; [2] ஐந்து சனங்களின் புரோகிதனாகும்: மகத்தான ஐசுவரியமுள்ள அவனைத் துதிக்கிறோம். அ. போஷிக்கும் ஐசுவரியத்தை அளித்துக்கொண்டு சுபமான செயலுடனான நீ அக்னியே! ஒளியுடன் சிறந்தோங்கும் வீரத்தைப் பொழியவும்.

கூ. அக்னியே! தேவர்களை திருப்தியாக்கும் ஒளியுடனான சுடரோடு நீ சுத்தஞ் செய்பவனாகும்; தேவரே! தேவர்களை திவ்யமான பொருள்களைக் கொண்டுவரவும்; அவற்றை மேன்மையாக்கவும். ய. ஒளியினா லுதிப்பவனே: சித்திரபானுவே! எதையும் பார்ப்பவனான உன்னை துதி செய்கிறோம். அனுபவிப்பதற்குத் தேவர்களைக் கொண்டுவரவும். யக. கவியே! அக்னியே! பிரிய யக்ஞனையும் ஒளியுடனுள்ளவும் மகானுயுமுள்ள உன்னை [3] யக்ஞத்தில் நன்றாய் எழுச்சியாக்குகிறோம்.

---

1 பெரிய வீரனை. 2 ஐந்து புலன்களின். 3 யுத்தத்தில்.

## கண்டம் கடு௭

தேவதை - க - கக அக்னி. ரிஷி க - ௩ கோதம ராஹூகணம். ச - அ கேதுராக்னேயம். கூ - கக. விருப ஆங்கிரசன்.

க. எல்லா செயல்களிலும் நமஸ்கரிக்க அருகதையான அக்னியே! காயத்திரியின் போஷணைச் செயலில் ரட்சைகளால் எங்கள் சமஸ்த செயல்களிலும் ரட்சிக்கவும். உ. தரித்திரத்தை துரத்தும் அனைவராலும் நாடப்படும் எல்லாப் போர்களிலும் சத்துருக்களால் ஜயிக்க முடியாத ஐசுவரியத்தை அக்னியே கொண்டுவரவும். ௩. அக்னியே! சுகத்திற்குக் காரணமாயும் நிரந்தர போஷணைக்கு ஐசுவரியத்தை எங்கள் வாழ்க்கைக்கு சுபமான ஞானத்தோடான பொருளை ஸ்தாபனஞ் செய்யவும்.

ச. போர்களில் துரிதமாய்ச் செல்லும் குதிரையைப் போல எங்கள் செயல்கள் அக்னியைத் தூண்டட்டும்; அந்த அக்னியால் எல்லா ஐசுவரியங்களையும் நாங்கள் ஜயிப்போம். ரு. ஐசுவரிய இலாபத்திற்கு அக்னியே! சேனை வடிவமான உன் ரட்சிப்பால் பசுக்களை அடைகிறோம்; அதற்கான அந்த (ரட்சிப்பின் வழியை) எங்களுக்குத் தூண்டவும். சூ. அக்னியே! திரமாயும் விஸ்தாரமாயும் பசுக்களுடனும் குதிரைகளுடனுமான ஐசுவரியத்தை யளிக்கவும். வானத்தை மழையால் [1]பொழியவும்; ஆயுதத்தை விரோதிகளில் செலுத்தவும். எ. பிராணிகளுக்கெல்லாம் பிரகாசத்தை யளித்துக்கொண்டு அக்னியே! நித்திய நட்சத்திரனை சூரியனை சோதி யுலகத்தில் ஏறச் செய்கிறாய். ஸ்தாபிதஞ் செய்கிறாய். அ. துதிப்பவர்களுக்கு வாழ்நாட்களை அளித்துக்கொண்டு அக்னியே! சனங்களின் (அறி

---

1 மேன்மையுடனுக்கவும் பயனுள்ளதாகச் செய்யவும்.

விற்கு) சேதனமளிப்பவனு யிருக்கிறுய். யக்ஞ ஸ்தானத்தில் உட்கார்ந்துகொண்டு பிரியனுயும் சிறந்தவனுயு மிருக்கிறுய்.

சு. [1] அக்னி தலைவனுகும்; சோதியின் உச்சனுவான்; பூமியின் அரசனுவான்; இந்த அக்னியானவன் தாவர சங்கமப் பொருள்களை பிரேரிக்கிறுன். ௰. அக்னியே! நீ சுவர்கத்தின் சுவாமியாகும்; நீயே. நாடப்படும் பொருள்களின் தலைவனுகும் சுகத்தின் நிமித்தம் உன் சரணத்திலாகி துதி செய்பவனுக நான் ஆகட்டும். ௰க. அக்னியே! உன் நிர்மலமான வெண்மையான ஒளியுடனுன சுவாலைகள் உன் தேசசுகளை உயரமாக்குகின்றன.

---

## கண்டம் கநு அ.

**தேவதை அக்னி. ரிஷி க - ந கௌதம ராஹு௱ கணம். ச - சு விசுவாமித்திரன். எ - கூ - விரூப ஆங்கிரஸன். கூ - கக பர்கபிராகாதன்.**

க. சனங்களின் நடுவே உன் பந்து யார்? உனக்கு யக்ஞஞ் செய்பவன் எவன்? அக்னியே நீ யார்? நீ எவனில் ஆசிரயமாயிருக்கிறுய்? உ. அக்னியே! நீ என் நினைவில் வடிவமாய் தோன்ற முடியாத போதிலும் எல்லா சனங்களின் பந்துவாயிருக்கிறுய், நீ பிரியமான நண்பனுமாகும். துதிகளால் துதிக்கப்படும் நீ நண்பர்களின் நண்பனுயிருக்கிறுய். ந. மித்திரனை வருணனை எங்களுக்குக்கொண்டு வரவும், எங்கள் பெரிய யக்ஞத்திற்கு தேவர்களையும் கொண்டு வரவும்; அக்னியே! அவர்களை உன் [2] வீட்டிற்குக் கொண்டுவரவும்.

---

1 சிறப்பாவான். 2 சரீரத்திற்கு.

௪. துதிக் கருகதையாயும் நமஸ்காரத்திற்கு யோக்கியமாயும் இருளை தூரஞ்செய்பவனும் சுந்தரமாயுமுள்ள அக்னி, விருஷபனான அவன் நன்றாய் எழுச்சியாக்கப்பட்டுளான். ௫. தேவர்களை வகிக்கும் குதிரையைப்போல விருஷபனான அக்னி நன்றாய் எழுச்சியாக்கப்படுகிறான்; அந்த அக்னியை மனிதர்கள் ஆகுதிகளோடு நாடுகிறார்கள். ௬. விருப்பங்களை வர்ஷிக்கும் அக்னியே! பல முடனுள்ள நாங்கள் வீரனே! உம்மை எழுச்சியாக்குவோம்.

௭. உத்தமமாய் ஒளியோங்கும் உன் தேஜோமயமான பெரிய சுவாலைகள் எழுச்சியாகின்றன ௮. அன்புடனான அக்னியே! என் நெய் நிறைந்த அகப்பைபோலுள்ள இந்திரியங்கள் உன் அருகிலாகட்டும். எங்கள் அளிப்புக்களை அங்கீகரிக்கவும். சந்தோஷ வடிவனான ருத்விக்காயும் சித்திரபானுவாயும் ஒளி ஐசுவரியமுள்ள அக்னியை நான் துதிசெய்கிறேன்; அவன் கேட்கட்டும்.

௧0. அக்னியே! ரிக்வேதத்தால் எங்களைக் காக்கவும்; யஜுஸினால் எங்களைக் காக்கவும்; ரிக்கு யஜு சாமன்களால் எங்களைக் காக்கவும்; பலத்தின பதியே! ஐசுவரியமுள்ளவனே! நான்கு வேதங்களால் எங்களைக் காக்கவும். ௧௧. அக்னியே! ஒன்று மளிக்காத எல்லா துஷ்டர்களிடமிருந்து எம்மைக்காப்பாற்றவும்; போர்களிலும் எம்மைக் காக்கவேண்டும். ஏனெனில் தேவர்கள் சேவைக்கும் எங்கள் அபிவிருத்திக்கும் வெகு அருகிலுள்ள உன்னை பந்துவாக எண்ணி அடைகிறோம்.

---

## கண்டம் கருகூ

தேவதை அக்னி. ரிஷி - க - ௩ சிதன். ச - ரு உசன காவ்யன். எ - அ, பர்கப் பிராகாதன். கூ - க0 சுதித புருமீளன்.

க. 1 ராஜாவே! நீ ஈசுவரனுகும்; எங்கும் வியாபகமாயுள்ளவன்; நன்ருய் ஒளியுடனுகி துஷ்டர்களை தண்டிப்பவனுன நீ இவர்களின் பொருட்டு உத்தம சன்மத்தை அளிக்கும் அழகுள்ள நீ யான அவன் அனைவராலும் காணப்படுகிருன்; அவன் சர்வக்ஞனுகி மகத்தான ஒளியோடு பிரகாசிக்கிருன். அவன் காந்தியுடனுன ஒளியோடு கருமையான இரவைத் துரத்திக்கொண்டு வருகிருன். உ. கருமையான இரவை தன் சுவாலையால் ஜயித்துக்கொண்டு மகத்தான பிதாவின் மகளான உஷையை புலனுக்கிக்கொண்டு அந்த, 2 கமன சீலனுன அக்னி சோதியுலகத்தின் ஐசுவரியங்களால் சூரியனின் சோதிமயக் கூட்டத்தை உயரத்தில் ஸ்தாபனஞ்செய்துகொண்டு பிரகாசிக்கிருன்.

௩. சுகமளிப்பவன் எல்லா சுகத்தோடும் சாய்ந்து வருகிருன்; அப்பால் சத்துருவை நாசஞ் செய்யும் அக்னி 3 சகோதரியை அனுசரிக்கிருன், வியாப்தமாக்குகிருன். அவன் உயர்ந்த விக்ஞான மயங்களான தேசசுகளால் எங்குமாகி வெண்மையான மனேகர ஒளிகளோடு வடிவங்களோடு ஆனந்திப்பதற்கான இவ்வுலகத்தை நடத்துகிருன்.

ச. அங்கிரசனே!—எங்கும் செல்பவனே—அக்னியே! பலத்தின் மகனே! தேவரே! அனைவராலும் நாடப்பட்டு நினைப்பிற் கருகதையான உன்னை எந்த துதியால் துதிசெய்வோம். பலத்தின் மகனே! ரு. எந்த யக்ஞத்தின்

---

1 அக்னியே ராஜாவாகும். 2 செல்லும் சுபாவமுள்ள.
3 சகோதரியான அறிவை.

மனத்தால் உன்னை சேவை புரிவோம்? எந்த நமஸ்கார மொழியால் நான் பேசுவேன்? அப்பால், பரமனே! சு. நிச்சயமாக எங்களுக்கு உத்தம ஸ்தானங்களையும் எங்கும் ஒளியுடனாகும் ஐசுவரியங்களான மொழிகளையும் எங்களுக்கு நீ யளிக்கிறாய்.

எ. அக்னியே! உன் அக்னியோடு இங்கு வரவும். தேவர்களை சந்தோஷஞ் செய்யும் ஹோதாவாய் உன்னை நியமிக்கிறோம். சிறந்த யக்ஞ புருஷனான உன்னை [1]தர்ப்பையில் உட்காரச் செய்து [2]நெய்யுடனான, அளிப்புக்களுடனான [3]கைகள் உன்னை வியாப்தமுடனாக்கட்டும். அ. பலத்தின் மகனே! அங்கிரசனே! உன்னை யாகத்தில் அடைய [4]அகப்பைகள் இங்கு மங்குமாகின்றன; ஒளியுடனான கேசத்தோடும் யக்ஞத்தில் புராதனமாயுமுள்ள அக்னியை பலத்தின் மகனைத் துதி செய்கிறோம்.

கூ. கொழுந்து விட்டெரியும் சுவாலையோடு அழகாயும் ஒளியுடன் உள்ளவன் அருகே எங்கள் துதிகள் செல்லட்டும். எங்கள் யக்ஞங்கள் நமஸ்காரத்தோடு அதிக ஐசுவரியமுள்ளவனும் அதிகமாய் துதிக்கப்படுபவனான அவனுக்கு எங்கள் ரட்சணைக்காக செல்லட்டும். ய. பலத்தின் மகனும், ஜாத வேதசனும் உள்ள அக்னியை நாடுவதற்கு அருகதையான தானத்திற்கு (எங்கள் துதி செல்லட்டும்). எவன் அமிருதனாகி மரணப் பிராணிகளிலும் அவற்றிற்கு சுகமளிப்பவையிலும் [5] இருவனாகி சமஸ்த பிரசைகளிலும் ஆனந்தமளிக்கிறானோ அவனுக்கு இந்தத் துதிகள் செல்லட்டும்.

---

1 தேகத்தில். பெரிய செயலில். 2 பற்று, பசை. 3சாதனங்கள். 4 மனங்கள் 5 அழிப்பவன் அளிப்பவனாகி.

## கண்டம் கசுO

தேவதை அக்னி. ரிஷி - க - ௩ விசுவாமித்திரன். ச - ரு சோபரி காண்வன் சு - அ கோதம ராஹூ கணன்.

க. மனிதர்களின் பிரசைகளின் துரிதஞ் செல்பவனுயும் ரதனுயும் சதா புதியவனுயுமுள்ள அக்னி நாசமாகாதவன்; முதன்மையாய் செல்பவன். உ. அளிக்கும் மனிதன் புனிதமான சோதியுடனுன அவனால் உணவுகளையும் நிலயத்தையும் அடைகிறுன். ௩. அதிசய ஐசுவரியமுள்ளவனுயும் சமஸ்த சத்துருக்களையும் நாசஞ் செய்பவனுய் அக்னி தேவர்களின் காரியங்களை சம்பாதிப்பவனுய் நாசமற்றவனு யிருக்கிறுன்.

ச. அழைக்கப்பட்ட அக்னி எங்களுக்குக் கலியாணமளிக்கட்டும்; சோபன ஐசுவரிய அக்னியே! சுபமான ஐசுவரியத்தை எங்களுக்கு அளிக்கவும; யக்ஞம் ஆனந்தத்தை அளிக்கட்டும, எங்கள் துதிகள் சுகத்தை அளிக்கட்டும். ரு. எதனுல் சண்டையில் நீ ஜயிக்கிறுயோ, போரிலே ஜயமளிக்கும் அந்த மனத்தைப் புலனுக்கவும்; சத்துருக்களின் [1] திருடமான ஆசைகளை யெல்லாம் வீழ்த்தவும்; மனேபிஷ்டத்திற்கு உன் சரணத்தை அடைகிறேும்.

சு. பலத்தின் மகனே! பசுபலங்களின் ஈசனுகும் நீ, எங்களில், ஜாத வேதசனே! மகத்தான ஐசுவரியத்தை அளிக்கவும். எ. அக்னி ஒளி வீசுபவன், அனைத்தின் நிலயமாவான், கவியாகும், துதியால் துதிக்கப்பட வேண்டியவன். அநேக வடிவங்களுடன் நீ ஒளி வீசவும்; ஐசுவரியத்தோடு எங்களில் பிரகாசமாகவும். அ. ராஜனே! அக்னியே! உன் சுவயமான ஒளியால் ராட்சதர்களை இரவிலும் உஷா காலத்திலு ம் ஓடச் செய்யவும்; கூர்மையான முகமுள்ளவனே! அந்த ராட்சதர்களை பஸ்மீகரிக்கவும்.

---

1 நிலையான.

## கண்டம் கசுக

தேவதை அக்னி. ரிஷி - கோபவன ஆத்ரேயன். ச - சு பரத்வாஜ பார்ஹஸ்பத்யன். எ - கு பிரயோக பார்கவசந்ததி.

க. நீங்கள் வன்மையை விரும்பிக்கொண்டு எல்லாப் பிரசைகளின் அதிதியாயும் வெகு பிரியமுடனுன அக்னியை (நாடுகிறீர்கள்.) உங்களுக்காக 1 கிருகஹிதமான அக்னியை பலத்தின் சாதனங்களாலும் மனன ஸ்தோத்திரங்களாலும் மொழியில் துதிக்கிறோம். உ. ஞானமுள்ள புருஷர்கள் நண்பனைப்போல் 2 நெய்யால் 3 ஆகுதஞ்செய்யப்பட்ட அக்னியை துதிகளால் தோத்திரஞ் செய்கிறார்கள். ந. எவன் தேவர்களுக்கு ஹிதஞ்செய்து சோதியுலகத்தில் 4 ஹவ்யங்களைத் தூண்டுகிறானோ அவனே அதிகமாய் துதிக்கப்படும் ஜாதவேதசனாகும்.

ச. நன்றாய் ஒளியுடனுள்ள அக்னியை 5 சமித்தான துதியால் நான் துதிக்கிறேன்; 6 சுவயம் சுத்தனும் அனைவரையும் சுத்தஞ் செய்பவனும் நிலையாயுள்ள அக்னியை யக்ஞத்தின் முதன்மை ஸ்தானத்தில் வைக்கிறேன்! மேதாவியாயும் ஹோதாவாயும் பிரசைகளின் ரட்சகனாய் அனைவருக்கும் அனுகூலனாய் கவியாய் ஜாதவேதசனாயுள்ள அக்னியை சுகமான 7 துதிகளால் நாடுகிறோம். ரு. மரண் ரகிதனும் ஹவிஸை எடுத்துச் செல்பவனும் பாலனஞ் செய்பவனும், தூதனும் உன்னை ஒவ்வொரு

---

1 உங்கள் குடும்பத்திற்கு ஹிதஞ் செய்பவனான 2 ஒளியால் உயரிய அறிவால். 3 அழைக்கப்பட்ட. 4 பொருள்களை. 5 நலமுடனளிக்கப்படும் செயலால் நாடுகிறேன். 6 தானாகவே. 7 துதிகளான திவ்ய செயல்களால்.

[1] யுகத்திலும் அக்னியே! மனிதர்கள் செய்கிறார்கள்! எப்பொழும் விழிப்பவனாயும் பெரிய கிருகபதியாய் மனிதர்களும் தேவர்களும் நமஸ்காரத்துடன் உன் அருகிலாகிறார்கள்.

சு. அக்னியே! தேவர் மனிதர்களை அலங்காரஞ் செய்துகொண்டு யக்ஞங்களில் இரு உலகங்களையும் தேவர்களின் தூதனாய் சுற்றுகிறாய்; உன்னையே துதியும் தியானமும் செய்கிறோம். நீ [2] மூன்று ரூபங்களாகி எமக்கு சுகமளிப்பவனாகவும்.

எ. யக்ஞம் செய்பவரின் சகோதரிகள் சொற்கள் உன்னைத் துதிசெய்துகொண்டு சர்வ வியாபகமான உன் அருகில் வருகின்றன. அ. [3] மூன்றான புல் எங்கு எல்லையன்னியிலும் தடையன்னியிலும் பரவியுள்ளதோ அங்கு சலங்களும் தங்கள் நிலயமாக சேர்கின்றன. கூ. விருப்பங்களை வர்ஷிக்கும் தேவரின் ஸ்தானமானது ஜயிக்க முடியாத அவன் ரட்சிப்பால் சூரியனைப்போல் [4] சௌந்தர்யமாயுள்ளது.

---

## கண்டம் கசு உ

தேவதை - க - உ, எ - க0 இந்திரன். கக - அக்னி. ரிஷி - க - உ மேதாதிதி காண்வன். ரு - சு விசுவாமித்திரன். எ - க0 பர்கன். கக - கஉ சோபரி காண்வன்.

க. மனிதர்கள் முதன்மையாய் பருகுவதற்கு துதிகளால் உன்னைப் போற்றுகிறார்கள்; ரிபுக்கள் ஒருமையுடன் சுவரத்தை எழுச்சியாக்குகிறார்கள். ருத்திரர்கள் உன்

1 விடியிலும், அறிந்து கொள்ளுகிறார்கள். 2 சிருட்டிப்பவனாய் செம்மையாக்குபவனாய் சகமழிப்பவனாகி 3 தேகம் மனம் ஆன்மாவான நிலயம், 4 அழகாயுள்ளது.

னையே முதன்மையாக கானஞ்செய்கிறார்கள். உ. யக்ஞத்தில் இந்திரன் இந்த ரசத்தின் சந்தோஷத்தில் தன் வீரமான பலத்தை அபிவிருத்தி செய்துகொள்ளுகிறான். பழைய காலத்தைப்போல் இப்பொழுதுள்ள மனிதர்களும் அந்த மகானையே துதிசெய்கிறார்கள்.

௩. 1 இந்திரா - அக்னியே! துதிப்பதில் சிறந்தவர்கள் துதிகளோடு உங்களையே போற்றுகிறார்கள்; உங்கள் இருவர்களையும் உணவிற்காக நான் பஜிக்கிறேன். ச. இந்திராக்னியே! தாசர்கள் பற்றிருந்த கூ0 கோட்டைகளை ஒரு பெருஞ்செயலுடன் சாய்ந்து சிதறடித்தீர்கள். ரு. இந்திராக்னியே! அறிஞர்கள் சத்தியத்தின் மார்கத்தை அனுசரிக்குங்கால் புனித செயலினின்று அவர்கள் துதிகள் உங்களை அணுகட்டும். சூ. இந்திராக்னியே! பலமும் ஞானமும் உங்களுடன் சேர்ந்துள்ளன. உங்கள் இருவர்களிலும் பிரேரிக்கும் சக்தியுமுண்டு.

எ. பலத்தின் பதியே! இந்திரனே! உன் எல்லா ரட்சிப்புக்களாலும் எங்கள் இஷ்டப்பூர்த்திகளைச் செய்யவும்; சூரனே! ஐசுவரியங் காண்பவனே! வீரிய சுவரூபனே! செல்வத்திற்குச் சமானமான உன்னை அனுசரிக்கிறோம். அ. குதிரைகளைப் பெருக்குபவன் நீ, பசுக்களையும் அபிவிருத்தி செய்யும் நீங்கள் பொன் கிணறுபோல் தேவரே! நீங்கள் தோன்றுகிறீர். உன்னில் நிலைக்கப்பட்டுள்ள தானத்தை ஒருவரும் இம்சிப்பதில்லை; நான் நாடும் எதையும் நீங்கள் கொண்டு வரவும்.

கூ. 2 இந்திரனே! உன்னை நாடுபவனிடம் வரவும்: எங்களைச் செல்வமுடனாக்க ஐசுவரியத்தை அளிக்கவும்: மகவானே! நாங்கள் பசுக்களை அடைய நீ பொழியவும்; குதிரைகளை அடைய நீ பொழியவும். ய. உன் தான

1 வன்மையே அறிவே 2 வீரியவடிவமுள்ளவனே

மான வெகு நூறு பசுக்கூட்டங்களை அளிக்கிறாய்; வெகு பல ஆயிரங்களையும் நீ அளிக்கிறாய்; சத்துருக் கோட்டைகளை சிதறடிக்கும் இந்திரனை ரட்சிப்பிற்காக மேதாவி மொழிகளோடு துதிசெய்து கொண்டு வருகிறோம்.

௧. தேவர்களுக்கு ஹோதாவாய் சந்தோஷமளிப்பவனாய் எல்லா ஐசுவரியங்களை சனங்களுக்குத் தருபவனை அந்த அக்னிக்கே மது நிறைந்த முதல் பாத்திரங்கள்போல் துதிகள் செல்லட்டும். ௨. அழகனே! எல்லாப் பிரசைகளின் பதியே! அக்னியே! தேவரை விரும்பும் நல்ல தானமளிப்பவர்கள் துதிகளால் ரதத்தை இழுக்கும் குதிரையைப் போல் உன்னை அலங்கரிக்கிறார்கள். ஞானம் செல்வம் நிறைந்தவர்களின் புத்திர பௌத்திரர்களில் ஐசுவரியத்தை வர்ஷிக்கவும்.

---

## கண்டம் ௧௬௩.

**தேவதை - ௧, வருணன். ௨. ௩, ௪, இந்திரன். ௫, விசுவகர்வன். ௬ - ௮, பவமான சோமன். ரிஷி. ௧. சுனச்சேபன். ௨, சுகக்ஷின். ௩ - ௪, மேதாதிதி. ௫, விசுவகர்ம பௌவனன். ௬ - ௮, அவானத பாருச்சேபி.**

௧. வருணனே! இந்த என் அழைப்பை செவி கொடுக்கவும்: இன்று எங்களைச் சுகமுடனாக்கவும். உதவி விரும்பி உன்னை நாடுகிறேன்.

௨. உன்னைத் துதிப்பவர்களுக்கு ஐசுவரியத்தை எந்த வழியால் கொண்டு வருவாய்? வீரனே! எந்த உதவியால் எங்களை சந்தோஷமுடனாக்குவாய்.

௩. இந்திரனே தேவர்களின் சேவைக்கு, இந்திரனே யக்ஞம் நடக்குங்கால், இந்திரனே உன்னை நாடுபவர்களாக நாங்கள் ஐசுவரிய லாபத்திற்கு சிறந்த போரிலே நாங்கள்

அழைக்கிறோம். வானத்தையும் பூமியையும் பலத்தால் இந்திரன் விஸ்தாரஞ் செய்கிறான். சூரியனையும் தன் சக்தியால் பலமுடனாக்குகிறான். இந்திரனில் எல்லா புவனங்களும் அடங்கியுள்ளன; இந்திரனில் சோமதுளிகளான முக்தர்கள் சந்தோஷ மனுபவிக்கிறார்கள்.

௫. விசுவகர்மனே! என்னால் அளிக்கப்பட்ட செயல்களால் தலையோங்கி என் யக்ஞத்தில் வானம் பூமி ஆசிரதமான எல்லாப் பொருள்களையும் நாடவும். என்னைச் சுற்றிலுமுள்ளவர்கள் மதியற்றவர்களாகட்டும். எங்கள் யக்ஞத்தில் [1] மகவான் ஆத்ம ஞானோபதேசஞ் செய்பவனாகட்டும்.

௬. சூரியன் தனது ரசிமிகளால் இருளை நாசஞ் செய்வதுபோல், சோமனானவன் பொன்நிற இந்த ஒளி தாரையால் சர்வமான ராட்சதர்களை அழிக்கட்டும். எழு ரச கிரகண சுபாவங்களோடு வாய்களோடான துதி செய்பவர்களுடன் எல்லாவடிவங்களையும் அவன் ஆக்ர மித்தவுடன் ரசத்தின் தாரையால் தானே புனிதமாகிக்கொண்டு பொன் நிறமாயும் சிகப்பு நிறமாயும் அவன் பிரகாசிக்கிறான்.

௭. அவன் அறிந்தவனாய் கீழ்த்திசை செல்லுகிறான்; மிகவும் அழகான தேவர்களில் உள்ள உன் ரதம் சூரிய ரசிமிகளோடு ஒன்று செல்லுகிறது: திவ்யமான ரதம். நீ ஜயிக்கப்படாமலிருக்க, உன் வச்சிராயுதமும் நீயும் ஜயிக்கப்படாமலிருக்க பலமுடனான தோத்திரங்கள் ஜயத்திற்காக இந்திரனை அணுகும்; போரிலே ஜயிக்கப்படாமல் இருவருமாகவும்.

௮. [2] பணிகளது ஐசுவரியத்தை நீங்கள் காண்கிறீர்கள்; மேலும் சத்தியத்தினது செயல்களுடனான தாய்மார்

[1] ஐசுவரியமுள்ளவன் [2] ஒளி கிரணங்களுடைய

களால் உங்கள் யக்ஞத்தில் நன்ருய் பரிசுத்த முடனுகின்றீர்; சாமன் எப்படி தூரத்தினின்றும் கேட்கப்படுகின்றதோ அப்படியே உன் மகிமையும்; எந்த சப்தத்தில் யக்ஞ புருஷர்கள் ஒளியுடன் ரமிக்கின்ருர்களோ அங்குள்ள அவன் 1 மூன்று தாதுக்களோடு பலத்தை தோத்திரஞ் செய்பவர்களுக்கு அளிக்கிருன்.

---

## கண்டம் கசுச

தேவதை - க, பூஷணன். உ, மருத்துக்கள். ந, விசுவே தேவர்கள். ச - சு, தியவாப்பிருதிவீ. எ - கஉ, இந்திரன். ரிஷி - க, பரத்வாஜ பார்ஹஸ்பத்யன். உ, கோதம ராஹூகணன். ந, ரிஜிசுவன். ச - சு, வாம தேவன். எ - கூ, சுனச்சேப ஆஜீகர்தி. க0 - கஉ, ஹர்யதன்

க. பூஷணனே! பசுக்களையும் குதிரைகளையும் பலப் பொருள்களின் பெருக்கையும மனிதத்தனமையுடன் எங்களுக்கு உதவிபுரிய புத்தியையும் எங்களில் செய்யவேண்டும்.

உ. சத்தியமான பல முள்ளவர்களே! மருத்துகளே! உழைத்து வியர்வையுடனுன நாடுபவனது விருப்பப்பொருள்களை யளிக்கவும்.

ந. விசுவேதேவர்களே! அமிர்தனது பிள்ளைகள் எங்கள் துதிகளைக் கேட்கட்டும். எங்களுக்கு அதிக சுகமளிப்பவர்களாகவும்.

ச. வானமும் பூமியே! ஒளியுடனிருப்பவர்களே! உங்களைத் துதிசெய்ய எங்கள் மகத்தான துதிகளை உங்கள் இருவர்களுக்கும் கொண்டு வருகிறோம். ரு. உங்கள் சுவய பலத்தால் பரஸ்பரம் புனிதஞ்செய்துகொண்டு அரசுபுரிகிறீர்கள்; யக்ஞத்தை சதாகாலம் வளர்ச்சியாக்கவும்.

---

1 மனம் வாக்கு காயம்.

மகிமையுள்ளவர்களே! ௬. நண்பனது சத்தியத்தை செழித் தோங்கச்செய்து பூர்ணஞ் செய்து கொண்டு சாதிக்கவும்; எங்கள் யக்ஞத்தைச் சுற்றி உட்காரவும்.

எ. இந்திரனே! இது உன்னுடையதாகும்; புரு தன் காதலியினிடம் செல்வதுபோல் நீ சமீபத்திலாகிறாய். எங்கள் துதியையும் நீ அடைகிறாய் கவனிக்கிறாய். அ. ஐசுவரியங்களின் பதியே! துதிகளால் துதிக்கப்படுபவனே! வீரனே! உன்னைத் துதி செய்பவனுக்கு சத்தியமும் சிறப்புமாகட்டும். நூறு சண்டைகளின் பதியே! இந்தப்போரில் எமது ரட்சிப்பிற்கு எழுச்சியாகவும். வேறு சண்டைகளில் பரஸ்பரம் இணைவோம்.

௯. பசுக்களே! மகா வீரனின் பாத்திரத்தைப் போற்றவும். இது யக்ஞத்தின் பலத்தை யளிக்கும். 1 இக்குண்டத்தின் 2 இரு செவிகள் பொன்னால் செய்யப்பட்டவையாகும். ௧௦. அறிஞர்கள் அமிழ்த்தும் 3 கற்கள் வேலையிலாயுளார்கள். மது 4 புஷ்கரத்தில் ஊற்றப்படுகிறது. மகா வீரனது 5 பெருந்தியாகத்தில் மது ஊற்றப் படுகிறது. ௧௧. 6 கீழ் முகமுடன் அழிவன்னியிலுள்ள மேலான 7 சக்கிரமுடன் சுற்றும் 8 கிணற்றை 9 வணக்கத்தால் தெளிக்கிறார்கள், 10 நனைக்கிறார்கள்.

---

1 தேகத்தின். 2 செவிகொடுத்து கேட்பதினாலேயே சகல செல்வ முண்டாவதால் சீலமான புருஷனின் செவிகள் பொன்னால்செய்யபட் டுள்ளதென சொல்வதுண்டு. 3 வச்ராயுதங்களை பிரயோகஞ்செய்யும். 4 போரில். 5 பெருந்தியாகமான செயலில், 6 கபாலம். 7 மேல்பாகத்திலுள்ள சக்கிரம் 8 சுக்கிலம்போல் அதி பலமுள்ள பால்சேரும் நிலயத்தை. 9 தன்னையே தானழியும் முயற்சியால். 10 நிரப்புகிறார்கள்.

# கண்டம் கசு௫

தேவதை - க - சு இந்திரன். எ - கஉ பவமான சோமன். ரிஷி - க, ஹர்யத பிரகாத தேவாதிதி காண்வன். ௩ - ச, மேத்யாதிதி. ௫ - சு புஷ்டி குகாண்வன். எ - கூ பர்வத நாரதர்கள். க0 - கஉ அத்திரி.

க. இந்திரனே! உக்கிரனது நட்பிலே நாங்கள் பயமன்னியிலாக வேண்டும்: ஆயாச மன்னியிலுமாகவேண்டும். [1] துர்வசனையும் யதுவையும் நாங்கள் பார்க்கட்டும். வர்ஷிப்பவனே! உன் பெரிய செயல் போற்றப்பட வேண்டியதாகும். உ. வர்ஷிக்கும் இந்திரனானவன் இடது இடுப்பில் தானாகவே சாய்ந்திருக்கிறான் ;—கர்ப்பத்தில் தானாகவே எங்கும் வியாபகமா யிருக்கிறான்—தானமும் அவனை ஹிம்சிப்பதில்லை. [2] மதுகரத்தினது தேனோடு இப்பாலானது சேர்ந்துளது, துரிதமாய் இங்கு வரவும்; வேகமாய் இதைப் பருகவும்.

௩. வெகு ஐசுவரிய முள்ளவனே! எனது இந்த மொழிகள் உன்னை மேன்மையுடனாக்கட்டும். அக்னிக்குச் சமானமாய் ஒளியுள்ளவர்கள் புனிதமான அறிஞர்கள் ஸ்தோமங்களால் உன்னைத் துதிக்கிறார்கள். ச. இந்த இந்திரன் ஆயிரம் ரிஷிகளால் பலமுடனாக்கப்படுங்கால் தானாகவே சமுத்திரத்தைப் போல் விஸ்தாரமாகிறான்! யக்ஞங்களில் போர்களில் துதிசெய்யும் [3] விப்ர ராஜ்யத்தில் அவன் சத்தியமும் சக்தியும் போற்றப்படுகின்றன.

௫. எவனுக்கு இந்த சர்வமான ஆரிய புருஷர்கள் தாசர்கள் உரிமையோ அவன் எல்லா ஐசுவரியங்களின் பதியாகும். ருசும பவீரவிகளான உனக்கே இந்த எல்லா ஐசுவரி

---

1 பெரிய பலமுள்ளவர்களை ஜயிக்க முயலட்டும் 2 தேன் ஈயின் 3 அறிஞர் ராஜ்யத்தில்

யங்களும் அருகிலாகின்றன. கூ. துரிதமாய்ச் செல்லும் அறிஞர்கள் மதுநிறைந்து ஒளிவீசும் துதியை கானஞ்செய்கிறார்கள். எதற்காக? எங்களில் ஐசுவரியமும் வீரமும் ஓங்க; எங்களோடு சோம துளிகளும் பெருக.

எ. நல்லபலமுள்ளவனே! இந்துவே! பசுகுதிரைகளான ஐசுவரியங்களோடு சோமனான நீ எங்களுக்குப் பெருகவும். பசுக்களில் பால்களில் உன் ஒளியுடனான நிறத்தை தரிக்கவும், தரிப்பாயோ சாய்ப்பாயோ? அ. பொன் நிற குதிரைகளின் பதியே! இந்துவே! திவ்ய ஒளியோடான நீ ஹிதஞ் செய்யும் நண்பனுக்குச் சமமாய் எங்கள் தேசசுகளை தலையோங்கச் செய்பவனாகவும். கூ. இந்துவே ஒவ்வொரு அதேவனையும் ஒவ்வொரு பட்சிக்கும் சத்துருவையும் தூரமாக்கவும். அவர்களை ஜயித்து பொய்யை தூரத்திலாக்கவும்.

ய. அவனை [1] ஸ்னானஞ் செய்கிறார்கள்; நன்றாய் விளக்குகிறார்கள்; நலமுடன் அவனை ஸ்னானஞ் செய்கிறார்கள். மதுவினால் அவனை நனைத்து பலமுடனான அவனைச் சீராட்டுகிறார்கள்; நதியின் உச்ச சுவாசத்தில் சுவாசம் நிற்கும் நிலயத்தில் பறக்குங் குதிரையைப் பற்றுகிறார்கள். பொன்னால் சுத்தஞ்செய்து பசுவை சலத்தில் கிரகிக்கிறார்கள். யக. மேதாவியான பவமானனுக்குக் கானஞ் செய்யவும். பெரிய தாரையைப்போல் ரசமானது பெருகுகின்றது. பழைய [2] சர்மத்தினின்று பாம்பைப்போல் செல்லுகிறான்; பொன் நிறமான விருஷபன் விளையாடும் குதிரையைப்போல் போகிறான். யஉ. முன் செல்பவனாய் ராஜாவாய் சீவர்களில் நாட்களை அளப்பவனாய் நிலைக்கப்பட்ட அவன் சலங்களில் வசிக்கும் அவன் தன் பலத்தைப் புல

1 தேகத்தில் நன்றாய் அவனை தம்மில் தோய்த்துக் கொள்ளுகிறார்கள் 2 நிலயத்தினின்று

ணுக்குகிறான்; ஹரியான அவன் ஒளி ஸ்னனாய் சுந்தரனாய் ஞானியாய் சோதி வடிவமாகி ஐசுவரிய அதிகாரியாகி பரமபத அருகனாகி சுற்றுகிறான்.

---

## கண்டம் ௧௬௬

தேவதை - ௧ - ௩, ௭, ௮, அக்னி. ௪ - ௬, இந்திரன். ௯ - ௧௧, விஷ்ணு. ரிஷி, ௧ - ௩, சுனச்சேபன், ௪ - ௬, மதுச்சந்தவைசுவாமித்திரன். ௭ - ௮, சம்யுபர்ஹஸ்பத்யன். ௯-௧௧, வசிஷ்டன்.

௧. அக்னியே! உன் எல்லா அனல்களோடு இந்த எங்கள் யக்ஞத்தை இந்த எங்கள் மொழியை, பலத்தின் மகனே! நாடி ஐசுவரியத்தை எங்களுக்கு அளிக்கவும். ௨. நித்யமாய் எம்மால் நானாவிதமான தேவர்கள் பூஜிக்கப்பட்டபோதிலும் அந்த அளிப்புகள் எல்லாம் [1] உன்னையே அடைகின்றன. ௩. அவன் எங்கள் பிரியமான அரசனாகட்டும்; அவன் சந்தோஷனாய் சிறந்த ஹோதாவாகட்டும்; ஒளியான அனல்களோடு நாங்கள் அவனுக்குப் பிரியமுடனாகட்டும்.

௪. உமக்காக ஒவ்வொரு பக்கத்தினின்றும் மற்ற மனிதர்களினின்றும் இந்திரனை அழைக்கிறோம். அவன் எங்களுடனாகட்டும்; எப்பொழுதும் தாராளமாயுள்ளவனே! வன்மையுடனான வீரனே! சத்துருவால் ஜயிக்கப்படாதவனே! மேகத்தைச் சிதறடிக்கவும். ௫. ஈசனாய் ஜயிக்கப்படாதவனாய் இந்திரன் விருஷபம் பசுக்கூட்டங்களை நடத்துவதுபோல் தன் பலத்தால் சனங்களை எழுச்சியாக்குகிறான்.

---

1 பகவத்கீதை கிருஷ்ணன் சொல்வதை கவனிக்கவும்

எ. அதிசயனே! வசுவே! உன் ரட்சையால் எங்களுக்கு ஐசுவரியங்களைத் தூண்டவும்; அக்கினியே! இப்பூமியின் ஐசுவரியத்தினுடைய ரதமாகும் நீ, எங்களது சந்தானங்களுக்கு நிலையான ஐசுவரியத்தை அளிக்கவும். அ. அக்னியே! ஹிம்சிக்கப்படாதவனாய் பராமுகமாயில்லாத நீ, தனிமையாயில்லாத நீ, உன் ரட்சிப்பு சாதனங்களால் எங்கள் புத்திர பௌத்திர சனங்களை பாலனஞ்செய்யும், தேவசம்பந்தமான கோபங்களினின்றும் அதேவ சங்கடங்களினின்றும் எங்களை தூரத்திலாக்கவும்.

௯. நான் சிபிவிஷ்டன் என நீ சொல்லுங்கால் விஷ்ணுவே! உன் பெயர் எப்படி பெருமையுடனாகிறது; எங்களிடமிருந்து உன் வடிவத்தை மறைக்கவேண்டாம்; அதை இரகசியமாகவும் வைப்பதவசியமில்லை; ஏனெனில் போரில் வேறு வடிவத்தை தரிப்பது யாவரும் மறிந்த விஷயம். ௧௦. சிபிவிஷ்டனே! உன் விஷ்ணு என்னும் பெயரே பிரசித்தமானதாகும். அந்த சுவாமியான உன்னை அறிஞர்கள் அறிந்துளார்கள். நானும் அப்படியே அறிந்து துதி செய்கிறேன். பலமுடனான உன்னை இவ்வுலகத்திற்கப்பால் வசிக்கும் உன்னை பல மன்னிபிலுள்ள நான் துதிக்கிறேன். விஷ்ணுவே, உனக்கு [1] வஷட் சப்தஞ்செய்கிறேன்: சிபிவிஷ்டனே! என் அளிப்பு உன்னை சந்தோஷமுடனாக்கட்டும் என் சுபமான மொழிகள் உன்னை மேன்மையுடனாக்கட்டும் நீங்கள் விநாசமற்ற சுகங்களால் எங்களை எப்பொழுதும் ரட்சிக்கவும்.

---

1 திவ்யமான மொழிகள்

## கண்டம் கசுஎ

தேவதை - க - ௩. இந்திரவாயு. ச - சு, பவமான சோமன். எ-கூ, அக்னி. க0 - கக, இந்திரன். ரிஷி - க - ௩, வாமதேவன். ச - சு, ரேபஸுனு காசியபர்கள். எ - கூ, சுனச்சேபன், க0 - கக, நிருமேதன்.

க. வாயுவே! திவ்யமான யக்ஞங்களில் மதுவின் சிறந்ததை வெண்மையானதை நான் அளிக்கிறேன்; தேவனே! நாடுவதற்கு அருகதையான நீ உன் ரத குதிரையோடு சோம ரசத்தைப் பருக வரவும். உ. வாயுவே! நீயும் இந்திரனும் சோமனைப்பருக அருகர்களாகும்; பள்ளத்தில் சலம் சேர்வதுபோல் உங்களுக்கு சோம துளிகள் செல்லுகின்றன. ௩. வாயு - இந்திரனே! வன்மையுடனுன இருவர்களே: பலத்தின் பதிகளே! குதிரையுடனுன சமான ரதத்தில் ஏறிக்கொண்டு சோம ரசத்தைப் பருகுவதற்கும் எங்களை ரட்சிப்பதற்கும் வரவும்.

ச. விசுவ வசனது நிலத்தினின்று பொன்நிறமுள்ளவனை, ஹரியை, அறிவு துதிகள் தூண்டுங்கால், இரவிலுல் மிகவும் இரம்மியமான நீ பெரிய செயல்களில் எல்லாம் பிரவேசிக்கிருய். ௫. எதைப் பசுக்கள் புராதனத்தில் பருகிற்ருே எதை துதிசெய்பவர்கள், மன்னர்கள் இப்பொழுது பருகுகிருர்களோ இந்திரன் முதன்மையாய் பருகும் அப்பானத்தை சந்தோஷமளிக்கும் இந்த அவன் பானத்தை நாங்கள் சோதனை செய்கிரும் சுத்தஞ்செய்கிரும். சு. புனிதமாகும் சோமன் புராதனத்தில் செய்யப்பட்ட துதிகளால் துதி செய்யப்படுகின்றன; தேவர்களது நாமங்களை வகிக்கும் துதிகள் அவனைக் 1 கெஞ்சுகின்றன.

---

1 நாடுகின்றன

எ. யக்ஞத்தின் ராஜாவாய் வால் குதிரை போலுள்ள அக்னியை நமஸ்காரங்களால் நான் வணங்குகிறேன். அ. பலத்தின் மகனுய் ஐசுவரியங்களை மழையைப்போல் வர்ஷிப்பவனுய் இன்பத்தை அளிக்கும் நண்பனுய் எங்கும் வியாபகனுயுள்ள அவன் எமக்காகவேண்டும். கூ. பூர்ணயுசையளிப்பவனே, தூரத்தினின்றும் சமீபத்தினின்றும் நீ பாபிகளிடமிருந்து எம்மைப் பாதுகாக்கவும்.

ய. இந்திரனே ! நீ போர்களில் எல்லா சத்துருசேனைகளையுமடக்குகிறுய். சத்துருவை நாசஞ்செய்பவனே துஷ்டர்களையும் ஹிம்சிப்பவர்களையும் நீ தண்டிப்பவனுகும். அரசர்களை ஜயிப்பவனே! நீ தந்தைபோலாகும். தாயும் குழந்தையும் தங்கள் குழந்தையினிடம்போல் வானமும் பூமியும் உன் ஜயமுடனுன பலத்திலே சாய்ந்திருக்கின்றன ; நீ விருத்திரனை எதிர்க்குங்கால் இந்திரனே ! உன் கோபத்தில் எல்லா சத்துருசேனைகளும் சின்னபின்னமாகின்றன.

---

## கண்டம் கசூஅ

தேவதை க - சூ, இந்திரன். ரிஷி க - ரு, எ - கூ கோஷூக்த அசுவ சூக்த காண்வாயனர்கள். க - சூ சுருதகக்ஷன் சுகக்ஷன்.

க. வானத்தையும் பூமியையும் மழை முதவியவற்றுல் பல வேலைகளைச் செய்தபொழுது சோதியுலகமான வானத்தில் தன்னை மேன்மையாக செய்துகொள்ளும் இந்திரனை யக்ஞமானது அபிவிருத்தி யாக்குகிறது. உ. [1] வாலனை அங்கமங்கமாய் அவன் துண்டித்தபொழுது சோமனின் சந்தோஷத்தில் ஒளியுலகத்தையும் விஸ்தாரஞ் செய்கிறுன். ந. அங்கிரசர்களுக்கு, மறைந்துள்ளதை பிரகாசஞ்செய்து

1 மேகத்தை.

கொண்டு பசுக்களைத் துரத்துகிறான்; வாலனை அவன் தலை கீழாய்த் தள்ளுகிறான்.

ச. சத்துருக்களை சதா ஜயிக்கும் இந்திரன் எல்லா தோத்திரங்களிலும் விஸ்தரிக்கப்பட்ட அவன், அவனை என் ரட்சிப்பிற்காக நீ துரிதமாக்குகிறாய். ஒருவராலும் ஹிம்சிக்கப்படாதவன், ஜயிக்கப்படாதவன்; சோமபானம் பருகுபவன், எதிர்ப்பில்லாத வன்மையின் தலைவனை நாடுகிறோம். இந்திரனே! அறிஞனே! செயலுக் கருகனே! எங்களுக்கு ஐசுவரியங்களை அளிக்கவும்; சத்துருக்களின் சண்டையில் உதவியுமளிக்கவும்.

எ. அந்தப் பிரசித்தமான பலமும் என் வன்மையும் உன் சக்தியும் விக்ஞானமும் மேன்மையான வச்சிராயுதமும் —இவற்றை—தோத்திரமானது கூர்மையாக்கு கின்றன. அ. இந்திரனே! வானமும் பூமியும் உன் பலத்தையும் பெருமையையும் பெருக்குகின்றன; மலைகளும் சலங்களும் உன்னை எழுச்சியாக்கித் தூண்டுகின்றன. கூ. [1] மகாநிவாச ஹேதுவான [2] விஷ்ணுவும் [3] மித்திரன் [4] வருணனும் உன்னைத் துதிசெய்கிறார்கள்; மருத்துக்களின் பலம் உன்னில் சந்தோஷமாகின்றன.

---

## கண்டம் கசுகூ

தேவதை - க - ௩ அக்னி. ச - சு இந்திரன். எ - கூ ஏதத்ஸாமன். ரிஷி க - ௩ விரூபன். ச - சு வத்ஸ காண்வன். எ - கூ ஏதத்சாமன்.

க. தேவரே! அக்னியே! பலத்திற்காக மனிதர்கள் உன்னைத் துதி செய்கிறார்கள்; உன் பலத்தால் சத்துருக்

---

1 பெரிய நிலயகாரணமான. 2 வியாபக பொருளும் 3 நண்பனும். 4 காலனும்.

களை நாசஞ் செய்யவும். உ. அக்னியே! பசுக்களை அடைய உதவி யளிப்பாயோ? ஐசுவரியத்தை அளிக்கவும்; பெரிய செயல்கள் செய்பவனே! எமக்குப் பெரிய செயல்களைச் செய்யவும். சுமை தரிப்பவன் தன் சுமையை எறிவது போல் யுத்தத்தில் என்னை நீக்கவேண்டாம். சத்து ருக்களின் எல்லா ஐசுவரியத்தையும் ஜயிக்கவும்.

ச. நதிகள் சமுத்திரத்திற்குப் போல் அவன் கோ பத்தின் முன் எல்லா சனங்களும் எல்லா மனிதர்களும் நமஸ்கரிக்கிறார்கள், நூறு தாரை திடங்களுடனான பெரிய வச்சிராயுதத்தால் கோரமாய்ச் செல்லும் விருத்திரனின் தலையை துண்டிக்கிறான். வானத்தையும் பூமியையும் சர் மத்தைப்போல் நன்றாய்க் கொண்டுவரும் பொழுது அவன் பலத்தின் பெருமையானது நன்றாய்ப் புலனாகின்றது.

எ. நல்ல கண்களுள்ளவனே: எல்லா செயல்களையும் செய்பவன் பிராணன் முதலியவற்றின் தலைவன். உத்தம மாய் நினைப்பவனான உன்னை நாடுகிறேன். அ. அழ குள்ளவனே! வர்ஷிப்பவனே! ரதத்தை இழுக்கும் இந்த மங்களமான குதிரைகளை பூட்டவும். இவை உம்மை நன்றாய் சேவிக்கட்டும் உம்மை இவை நன்றாய் [1] சேவை புரிகின்றன. பத்து [2] விரல்களால் திசையை புலனாக்கிக் கொண்டு சலத்தின் நடுவில் ரச இந்திரன் நிற்கிறான்; அவ னுக்கு நமஸ்காரம் புரியவும்.

---

1 நாடுகின்றன. 2 சாதனங்களால்.

# கண்டம் கஎ0

தேவதை - க - ௩, ச - ௬, க0 - கஉ இந்திரன் எ - கூ அக்னி ரிஷி க - ௩ மேதாதிதிகாண்வன். ச - ௬ சுநுதகக்ஷன் சுகக்ஷன். எ - கூ சுனச்சேபன். க0 - கஉ சம்யுர் பர்ஹஸ்பத்யன்.

க. அத்வர்யுக்கள் வீரனுக்கு சூரனுக்கு சந்தோஷத்திற்காக எங்கும் துதிப்பதற்கருகதையான சோமனை அளிக்கிறார்கள். உ. பிரமத்தால் இணைக்கப்பட்ட சக்தியுடனுன இரண்டு குதிரைகள், பாக்களால் பெருமை நண்பனுன இந்திரனை துதிகள் வழியாய் கொண்டுவரட்டும். ௩. விருத்திரனைக் கொல்பவன் சோமனைப் பருகுகிறுன்; அவன் தூரத்தில் ஆகவேண்டாம்; சதமூர்த்தி சத்துருக்களைத் திரஸ்கரிக்கட்டும்; ஐசுவரியங்களைக் கொண்டுவரட்டும்.

ச. சமுத்திரத்தில் நதிகள் வீழ்வதுபோல் சோம துளிகள் உன்னில் பிரவேசிக்கட்டும். இந்திரனே! உன்னை விட சாமர்த்தியவான் எவனுமில்லை. இந்திரனே; விழிப்புள்ளவனே! உன் பலத்தால் சோமனை புசித்துளாய்; அது இப்பொழுது உன் வயிற்றிலிருக்கிறது. ௬. இந்திரனே! விருத்திரனைக் கொல்பவனே! சோமன் உன் [1] குக்ஷிக்குத் தயாராகட்டும்; சோம துளிகள் உன் பல சரீர வடிவங்களுக்கு ஆயத்த மாகட்டும்

எ. துதியால் அறியப் படுபவனே! அனைவரின் நன்மையின் பொருட்டு எங்கும் எல்லாப் பிரசைகளிலும் பிரவேசிக்கவும்; யக்ஞத்தின் பொருட்டு ருத்திரனுன உனக்கு சுந்தரமான துதிகளை கானஞ் செய்கிறோம். அ. மகனும், அளவற்றும், தூமகேதுவாயும் வெகு அழகுடனுன

1 வயிற்றிற்கு.

அக்னி செயலுடனுன அவன் பலத்தின் பொருட்டு எங்களைத் தூண்டட்டும். அக்னியானவான் துதிகளோடு எங்களை பிரஜா பாலகனுய் தேவ சம்பந்தனுய் தூதனுய் பெரிய சூரியனுய் ஐசுவரியங்களை அளிக்கும் ராஜாவைப் போல் கேட்கட்டும்.

௰. நீங்கள் சோமனில் பலர்களால் அழைக்கப்படும் சத்துருக்களை ஜயிக்கும் இந்திரனுக்கு எதனுல் சக்தியுள்ள வன் பசு சுகமுடனுவனே அந்த தோத்திரத்தை கானஞ் செய்யவும். ௰௧ அவன் நமது கானங்களை செவியுற்றுல் வெகு ஐசுவரியமுள்ள இந்திரன் பசுக்களுடனுன ஐசுவரிய தானத்தை கொடுக்காமலிருப்பதில்லை. ௰௨. தஸ்யுவைக் கொல்லச் செல்லும் எவராயிருந்தபோதிலும் அந்த எமக்கு பசுக்களுடனுன நிலயத்தைஅவன் பலத்தால் திறக்கட்டும்.

---

## கண்டம் ௧௯௧

தேவதை - ௧ - ௬ விஷ்ணு எ - ௧௦, இந்திரன் ௧௧ - ௧௩ பவமானசோமன் ௧௪ - ௧௫ இந்திரன். ரிஷி ௧ - ௬ மேதாதிதி காண்வன் எ - அ வசிஷ்டன் ௯ - ௧௦ ஆயுக்காண் வன் ௧௧ - ௧௩, அம்பரீஷ ரிஜிசுவன் ௧௪ - ௧௫ வசிஷ்டன்.

௧. இதையெல்லாம் கடந்து விஷ்ணுவானவன் மூன் றுல் தன் பாதத்தை வைக்கிறுன்; அவன் புழுதி நிறைந்த பாதத்தில் அனைத்துமாகும். ௨. ஒருவராலும் இம் சிக்க முடியாத அனைத்தையும் ரட்சிப்பவனுன விஷ்ணுவான வன் தர்மங்களை தரித்துக்கொண்டு மூன்று பாதங்களை செய்கிறுன். ௩. எதனுல் இந்திரன் இணைந்த நண்பன் தன் விரதங்களைப் பார்க்கச் செய்கிறுனே விஷ்ணுவின் அந்த செயல்களைப் பார்க்கவும். ௪. பசுவில் பெருகும் கண் ணைப்போல் அறிஞர்கள் விஷ்ணுவின் பரமபதத்தை எப்

பொழுதும் பார்க்கிறார்கள். ரு. துதிசெய்பவர்கள் எப்பொழுதும் எழுச்சியுடனாகி விஷ்ணுவின் எந்த பரமபதம் உண்டோ அதை மேதாவிகளானவர்கள் நன்றாய் ஒளியுடனாக்குகிறார்கள். சு. விஷ்ணுசெய்த பூமியின் உயரபாகத்தினின்று தேவர்கள் எம்மை ரட்சிக்கட்டும்.

எ. உன்னை நாடும் எவர்களும் எங்கள் வெகு தூரத்தில் உன்னைத்தாமதம் செய்யவேண்டாம், ரமிக்கவேண்டாம். வெகு தூரத்திலிருந்தாலும் எங்கள் யக்ஞத்திற்கு வரவும். அருகிலிருந்தால் எங்களைக் கேட்கவும். அ. தேனிலுள்ள ஈயைப்போல் உன் சோமனில் அறிஞர்கள்—மூன்று வித்தைகளைச் செய்பவர்கள்—உட்கார்கிறார்கள். ரதத்தில் பாதத்தை வைப்பதுபோல் ஐசுவரியம் நாடும் துதிப்பவர்கள் இந்திரனில் தங்கள் விருப்பத்தை நாட்டுகிறார்கள்.

௯. பரமனுக்கே கானஞ்செய்யப்படுகிறது. பூர்வமாயும் பிராசீனமாயும் மனனஞ்செய்ய அருகதையாயு மான பிரமத்தை சொல்லவும். பூர்வமான சத்தியத்தின் [1] பிருஹத்துக்களை கானஞ் செய்புங்கால் துதி செய்பவர்களின் பிரஜைகள் உற்பத்தியாகின்றன. ௰. இந்திரனானவன் பெரிய ஐசுவரியங்களை பிரேரிக்கிறான்; பூமியும் எமக்குப் பிரேரிக்கட்டும். சூரியனும் எமக்குச்செய்யட்டும். நிர்மலமாயும் வெண்மையாயும் பாலுடன் கலந்த சோமன் இந்திரனை சந்தோஷமாக்குகிறது.

௰௧. விருத்திரனைக்கொல்லும் இந்திரனுக்கு அவன் பருகுவதற்கு சோமனான நீ பொழியப்படுகிறாய்; தட்சிணையளிப்பவனான வீரனுக்கும் யக்ஞத்திலுட்கார்ந்துள்ள மனிதனுக்கும் சோமனே நீ பொழியப்பட்டுளாய். ௰௨. நண்பர்களே! அறிவுள்ளவர்கள் வெகு ஒளியுடனும் நல்லகந்த

1 பெரியசாமான்களை

முடனுனவற்றை நீங்களும் நாங்களுமடையவேண்டும். பலத்தின் நிலயினை அடையலாமோ? ௬. சந்தோஷமளிக்கும் எவன் எல்லா தேவர்களுக்கும் பாய்கிறுனே அவனை 1 ரோம கூட்டத்தில் புனிதஞ்செய்கிறுர்கள். அவன் செந்நிறமுள்ளவன், பொன்னன். அனைவராலும் விரும்பப்படுபவன்.

௭. இந்திரனே! ஐசுவரியனே! உன்னை எந்த மனிதன் எதிர்க்கமுடியும்? மகவானே! உன்னில் சிரத்தையாகி பலமுள்ளவன் 2 கடைசிதினத்தில் பலத்தை அடைகிறுன். ௮. உனக்கு பிரியமான ஐசுவரியங்களை எங்கள் பெரியவர்களை சத்துருக்களோடு போர்களில் தூண்டவும். பொன் குதிரைகளுள்ளவனே! அறிஞர்களோடு எல்லா கஷ்டங்களினின்றும் நாங்கள் நீங்கட்டும்.

---

## கண்டம் ௧௭௨

**தேவதை**-௧ - ௩. **அக்னி**. ௪ - ௫, **உஷைகள்**. ௬ - ௭, **அசுவினிகள்**. ௮-௯, **அக்னி**. ௧0-௧௨, **உஷைகள்**. ௧௩-௧௫, **அசுவினிகள்**. **ரிஷி** - ௧ - ௩, **விசுவமனு வையுசுவன்**. ௪-௫, **சௌபரி காண்வன்**. ௬-௭, **சப்த ரிஷிகள்**. ௮-௯, **கலிப்பிரகாதன்**. ௧0 - ௧௨, **விசுவாமித்திரன்**. ௧௩ - ௧௫, **மேதாதிதி காண்வன்**.

௧. யக்ஞஞ் செய்பவனே! சோமரசத்தினுடைய பானங்களை செம்மையாக்கவும்; எப்பொழுதும் ஐசுவரியமளிக்கும் வீரனை அவன் துதிக்கப்படுகிறுன். ௨. குதிரைகளின் ஸ்தாபகனே! உன் பூர்வத் துதியை ஒருவரும் பலத்தால் அடையமுடியாது; எந்த நல்ல செயல்களாலும் அடைய இயலாது. ௩. சதாகால யக்ஞத்தால் விருத்தி செய்யப்படவேண்டிய—துதிக்கப்படுவதற்கான—கீர்த்தியை

1 மனத்தில் 2 பெரிய சோதியில்.

விரும்பும் நாங்கள் உங்கள் பலத்தினுடைய தலைவனான அவனை அழைக்கிறோம்.

ச. சோதியின் தலைவனுக்குத் துதிசெய்யவும்: தேவர்களுக்கு ஹவிஸைக் கொண்டுபோகும் தேவரைத் துதிகளால் தேவர்கள் அடைகிறார்கள். ரு. அறிஞனே! [1] சோபரியே! வியாப்தமான ஐசுவரியமுள்ளவனும் தானமளிப்பவனும் அதிசய தேசசுள்ளவனான அக்னியை பெருமையுடன் போற்றவும்; யாகத்திற்கு சோமனது அறிவின் ஸ்தாபகனாய் பூர்வனான அக்னியை துதிசெய்யவும்.

சு. சோமனே! கற்களால் அமிழ்த்தப்பட்ட நீ [2] ஆட்டுரோமங்கள் வழியாய் தூண்டப்பட்டு மனிதர்கள் கோட்டையைப்போல் [3] பலகைகளை நுழைந்துகொண்டு பொன் நிறமுள்ளவன் கலசங்களில் நிலையாகிறான். எ. மேதாவிகளால் மகிழ்ச்சிக்கு அருகனாய் அறிஞரான வேதிகளால் ஆனந்தருகனான சோம பாவமானன் [4] சங்கிராம குதிரையைப்போல் பலத்தை யளிக்கும் ஆட்டின் சூட்சம ரோமங்களைத் தாண்டிக்கொண்டு தானாகவே அலங்காரஞ் செய்துகொள்ளுகிறான்.

அ. நேற்று நாங்கள் வச்சிரயுக்தனான இந்திரனை பருகச் செய்தோம்; இன்று யக்ஞத்தில் பொழியப்பட்ட சோமனைக் கொண்டுவரவும்; செவிகொடுக்கத் தயாராகவும். கூ. காட்டு ஓநாய் ஆட்டைப் பிளப்பதும் அவன் ஆக்ஞையையே அனுசரிக்கின்றது; இந்திரனே! எங்கள் துதியை பிரியமுடன் ஏற்றுக்கொண்டு, அதிசய நினைவோடு எங்களிடம் வரவும்.

ώ. இந்திராக்னியே! சுவர்கத்தின் நிலயங்களை ஒளிவீசும் நீங்கள் போர்களில் எங்கும் அலங்காரஞ் செய்கிறீர்

1 சிறந்த வழியால் அறிவைத் தரிப்பவனே. 2 புனிதங்களின் வழியாய். 3 நிலயங்களில். 4 போர்குதிரை.

கள். உங்கள் வீரியமே அந்த போர் விஜயத்தை ஞாபகஞ் செய்கிறது. ௰௧. இந்திராக்னியே! அறிஞர்கள் சத்திய மார்கத்தை அனுசரிக்குங்கால் புனித செயலினின்று அவர்கள் துதிகள் உங்களை அணுகட்டும். இந்திராக்னியே! பலமும் ஞானமும் உங்களுடன் சேர்ந்துள்ளன. உங்கள் இருவர்களிலும் பிரேரிக்கும் சக்தியுமுண்டு.

௰௫. சோமனில் சேர்ந்து பருகிக்கொண் டிருக்கும் இந்திரன் எத்தனை பலத்தை அடைகிறான் என எவர் அறிவதில்லை. சோமனில் திருப்தியாகிக்கொண்டு பலத்தால் கோட்டைகளை இடிக்கும் சுந்தரவதனமுடனான தேவர் இவர்தான். ௰௬. காட்டானை மதத்தால் இங்கும் அங்கும் ஓடிப் பாய்வதுபோல் (நீயும் இருப்பதால்) உன்னை எவரும் அடக்கமுடிவதில்லை. நீ இந்தச் சோமனில் வரவும். நீ மகானாய் பலத்தால் செல்கிறாய். உக்கிரமானவன் சத்துருக்களால் ஜயிக்கப்படாதவன் திரமானவன் யுத்தத்திற்கு நன்றாய் அலங்காரஞ் செய்யப்பட்டவனான இந்திரன் மகவான் துதிசெய்பவனின் அழைப்பை செவியுற்றால் அவன் தனிமையாய் நிற்பதில்லை, வருகிறான்.

---

## கண்டம் ௧௭௫

**தேவதை - ௧ - ௩ உஷைகள். ௪ - ௬ தீர்க்கதமன் ஔசத்யன். ௭ - ௯ பவமான சோமன். ௧0 - ௧௨ அக்னி. ரிஷி ௧ - ௩ நீத்ருவிகாண்வன். ௪ - ௬ விசுவாமித்திரன். ௭ - ௯ பரத்வாஜ பார்ஹஸ்பத்யன். ௧0 - ௧௨ ஏதத்சாமன்.**

௧. ஒளியுடனான சோம துளிகள் பவமானர்கள் சர்வமான காவ்யங்களுக்கு பொழியப்பட்டுளார்கள். ௨. பவமானர்கள் சோதி யுலகினின்றும் ஆகாசத்தினின்றும் பூமி

யின் உச்ச ஸ்தானத்தில் தேவ யஜனத்தில் பொழியப்பட்டுள. ௩. எல்லா சத்துருக்களையும் துரத்திக்கொண்டு துரிதமாய் அழகுள்ள சோமதுளிகள் பவமானர்கள் பொழியப்படுகின்றன.

௪. சத்துருக்களைக் கொல்பவர்களான விருத்திரர்களைக் அழிப்பவர்களான ஜயிப்பவர்களான எவர்களாலும் ஹிம்சை செய்யப்படாதவர்களான அதிசயமாய் பலத்தை அளிப்பவர்களான இந்திராக்னியை அழைக்கிறேன். ௫. இந்திராக்னியே, கான மறிபவர்கள் துதி செய்பவர்கள் வேத புருஷர்கள் உங்களை உபாசனை செய்கிறார்கள்; பலத்திற்காக உங்களை நாடுகிறேன். ௬. இந்திராக்னியே! தாசர்கள் பற்றியுள்ள ௯௰. கோட்டைகளை ஒரே ஒரு பெரிய செயலால் இருவரும் சேர்ந்து நடுநடுங்கச் செய்கிறீர்கள்.

௭. பலத்தாலும் சாதனத்தாலும் தோன்றுபவர்களே! ஹவிஷுக்களோடு நாங்கள் அழகுள்ள உனக்கு அக்னியே! உச்சாரணை செய்கிறோம். ௮. பொன்னைப்போல் மின்னும் உன் சரணத்தை அதிக வெயிலின்று நிழலை நாடுவதுபோல் அடைகிறோம். ௯. சரங்களால் சத்துருக்களைக் கொல்லும் உக்கிரனைப்போல் கூர்மை கொம்புகளுடனான விருஷபத்தைப்போல் அக்னியே! நீ கோட்டைகளைத் தகர்க்கிறாய்.

௰. சத்தியத்தால் துதிக்கப்படுபவனான வைசுவாநரனான சோதியின் பதியான நித்திய தர்மனான உன்னை நாங்கள் உபாசிக்கிறோம். ௰௧. அவன் யக்ஞத்தின் புருஷனுக்கு சோதியை யளித்துக்கொண்டு சகத்திலுள்ள எதையும் செய்கிறான்; — எங்கும் பெருமையுடனாகிறான் — வசிகரஞ் செய்யும் ருதுக்களையும் பொழிகிறான். ௰௨. தன் பிரியமான நிலயங்களில் வடிவங்களில் அக்னி இருப்பதின் இருக்கப் போவதின் விருப்பப் பொருளால் ஒரே அரசனாய் பிரகாசிக்கிறான்.

# கண்டம் கஎசு

தேவதை - க - ௩ அக்னி. ௪ - எ பவமான சோமன். அ - கசு, இந்திரன். ரிஷி - க - ௩ விரூப ஆங்கிரஸன். ௪ - எ அவத்சாரன். அ - க0, விசுவாமித்திரன். கக - கஉ தேவாதிதி காண்வன். க௩ - கசு கோதமோ ராஹூ கணம்.

க. கவியான அக்னியானவன் புராதன துதியால் தன் அங்கத்தை சோபனஞ் செய்துகொண்டு மேதாவிக ளால் மேன்மையாக்கப்படுகிறான். உ. அகிம்சையற்ற இந்த யக்ஞத்தில் புனிதமான வெண்மையான சோதியுட னான அக்னியை பலத்தின் மகனை நான் அழைக்கிறேன். ௩. எங்கள் தர்ப்பையில் தேவர்களோடு, நண்பர்களில் செல்வமுள்ளவனே சுவாலையான தேஜஸோடு நீ உட்காரவும்.

௪. வச்சிராயுதனான நீ உன் வன்மைகள் சத்துருக்க ளைப் பிளந்துகொண்டு மேன்மையாகின்றன; எங்களைச் சூழ்ந்துள்ள சத்துரு சேனைகளைத் துரத்தவும். இந்த பலத்தால் சத்துருக்களைக் கொல்லும் சீலமான உன்னை எங்கள் ரதங்களின் சங்கத்திலும் சத்துருக்களிலுள்ள ஐசு வரிய நிமித்தத்திற்கும் அச்சமன்னியிலுள்ள மனத்தால் உன்னைத் துதிசெய்வோம். ரு. பவமானனது விரதங்களை துர்புத்தியுள்ள எவனும் தீமை புரியாமலுள்ள நீ, உன்னோடு போர்புரிய எண்ணமுள்ளவனைப் பாழாக்கவும். எ. சந் தோஷமளிக்கும் பொன் நிறமாய் பலமுடனான இன்பம் தருவதான இந்துவை நதிகளில் இந்திரனுக்காக பிரேரிக்கி றார்கள்.

அ. இந்திரனே! மயில் தோகைகள் போலான வால் களோடு, சந்தோஷமுமான குதிரைகளோடு இங்கு வரவும். வேடர்கள் பட்சிகளை தடுப்பதுபோல் ஒருவரும் உன்

கதியை அடக்கவேண்டாம். பாலை வனங்களில் யாத்திரிகர் துரிதமாய் செல்வதுபோல் நீ அவற்றைத் துரிதமாய் கடந்துகொண்டு வரவும். ௯. விருத்திரனைப் புசிப்பவன், மேகத்தை சேதித்து கோட்டைகளை இடிக்கிறான். சலங்களை பிரேரிக்கிறான்; குதிரை கனைக்குங்கால் ரதத்தில் இந்திரன் ஏறி திருடமாய் நிலைத்துள்ள பொருள்களையும் அலறச் செய்கிறான். ௰. ஆழ்ந்து சலம் நிறைந்துள்ள [1] சலாசயம்போல், நன்றாய் காக்கப்பட்டு புற்றரைக்கு பசுக்கள் செல்வதுபோல் ஏரியை அடையும் சிற்றாறுபோல் ஆழ்ந்த ஊற்றிலுள்ள நீரைப்போல் உன் மனோவன்மைவற்றாத செல்வமாகும்.

௰க. வனத்திலுள்ள காளை தாகமாகுங்கால் பாலைவனத்தின் சலத் தேக்கத்திற்கு செல்வதுபோல் காலையிலும் மாலையிலும் இங்கு துரிதமாய் வரவும்; கண்வர்களது பாத்திரங்களில் நன்றாய் பருகவும். ௰உ. மகவானே! இந்துக்கள் உங்களை சந்தோஷமுடனாக்கட்டும், பொழிபவனுக்கு ஐசுவரிய மளிக்கவும். [2] பலகைகளில் பொழியப்பட்டுள்ளதை பலவந்தத்துடன் நீ பருகுகிறாய்: அதனால் சிறந்த பலத்தை நீ தரிக்கிறாய் ஜயிக்கிறாய்.

௰௩. பலமுடனான இந்திரனே! தேவரே, நீ மனிதர்களை மேன்மையுடனாக்குகிறாய்; மகவானே: உன்னைக்காட்டிலும் சுகமளிப்பவன் வேறு எவனுமில்லை. உனக்கே என் துதிகளைச் சொல்லுகிறேன். ௰௪. வசுவே! உன் சம்பந்தமான ஐசுவரியங்கள் உன் உதவிகளும் எப்பொழுதும் எங்களுக்குத் தவிரவேண்டாம்; மனிதர்களுக்கு ஹிதஞ் செய்பவனே! மந்திரங்காணும் எங்களுக்கு எல்லா ஐசுவரியங்களையும் அளிக்கவும்.

---

1 கலந் தேக்கம்போல். 2 மனோ நிலயங்களில்.

## கண்டம் கஎ௫.

தேவதை - க - ௩ உஷைகள். ௪ - ௬ அசுவினிகள். எ - ௯ உஷைகள். ௧௦ - ௧௨ அசுவினிகள். ரிஷி - க - ௩ வாமதேவன். ௪ - ௬ பிரஸ்காண்வ காண்வன். எ - ௧௨ கோதம ராஹூ கணம்.

க. அளிக்கும் நலமுடனான இப்பெண் சகோதரியான இரவின் மேல்பாகத்தில் ஒளி வீசுகிறாள்; சோதியின் பெண் அனைவராலும் பார்க்கப்படுகிறாள். உ. குதிரையைப்போல் சிகப்பாய் ரம்மியமாய் ரசிமிகள் தாயான ஹிதஞ் செய்பவளான உஷை அசுவினிகளின் நண்பனாகிறாள். ௩. உஷையே! நீங்கள் அசுவினிகளின் நண்பர்; பசுக்களுடைய தாயாகும். நீங்கள் ஐசுவரியப் பொருள்களை அரசுபுரிபவராகும்.

௪. இப்பொழுது எங்களால் பார்க்கப்படும் பிரியமான அபூர்வமான உஷையானவள் சோதியின் வானத்தில் வந்து இருளை நீக்குகிறாள். அசுவினிகளே உங்கள் மகத்தைத் துதி செய்கிறோம். ௫. சமுத்திரத்தினுடைய குழந்தைகளே! ஐசுவரியங்களைக் காண்பவர்களே! தேவர்களே! பெரியவர்களே! எங்கள் அறிவான செயலால் ஐசுவரிய மளிப்பவர்களே உங்களுக்குத் துதிசெய்கிறோம். ௬. உங்களது ரதம் குதிரைகளால் பூமியின் உத்தம ஸ்தானத்தில் வருங்கால் உங்களுடைய உத்தம துதிகள் சொல்லப்படுகின்றன;

எ. குழந்தைகளையும் குழந்தைகளின் குழந்தைகளையும் எதனால் ஆதரிப்பேமோ அந்த அதிசய ஐசுவரியத்தை பொருள் நிறைந்தவளே! உஷையே! எங்களுக்குக் கொண்டு வரவும். அ. பசுக்களோடு குதிரைகளோடு ஒளிக்கூட்டமுள்ள உஷையே! ரம்மிய வாணியுள்ளவளே! எங்களுக்கு

ஐசுவரியத்தைத் திறக்கவும். கூ. ஐசுவரியம் நிறைந்த உஷையே! இன்று உன் ரதத்திற்கு சிகப்பு குதிரைகளை இணைக்கவும். எங்களுக்குக் எல்லா சௌபாக்கியங்களையும் கொண்டுவரவும்.

கO. பசு பொன் ஐசுவரியம் நிறைந்த எங்கள் வீட்டிற்கு உங்கள் இரதத்தை ரோகங்களை நீக்கும் நீங்கள் ஒருமையுடன் எங்களிடம் நியமிப்பீர்களோ? கக. காலையில் எழுச்சியாகுப்பவர்கள் இங்கு ஆரோக்கிய மளிக்கும் நோய் நீக்கும் ஆத்மாவை பிரேரிக்கும் தேவர்கள் சோமனைப் பருகக் கொண்டுவரட்டும். கஉ. சோதியினின்று மனிதர்களுக்கு சோதியளிக்கும் சோதியான சுலோகத்தைக் கொண்டுவந்த நீங்கள் அசுவினிகளே! எங்களுக்கு பலத்தைக் கொண்டுவரவும்.

---

## கண்டம் களசு

**தேவதை க - ரு அக்னி. சு - சு உஷைகள். எ - கூ, அசுவினிகள். ரிஷி க - ரு வசுசுருத ஆத்ரேயன். சு - சு சத்திய சுரவ ஆத்ரேயன் எ - கூ அவஸ்யாத்ரேயன்.**

க. வசுவான எவனை பசுக்கள் தங்கள் நிலயமாக நாடுகின்றதோ எவனைத் துரித குதிரைகள் லாயமாக சேர்கின்றதோ நித்திய பலமுடன் பொருள்களுள்ளவர்கள் தங்கள் வீடாக எண்ணிச் செல்லுகின்றார்களோ அந்த அக்னியை நான் எண்ணுகிறேன்: உன்னைத் துதிப்பவர்களுக்குக் கீர்த்தியைக் கொண்டுவரவும். உ. நிச்சயமாய் பிரஜைகளின் ஹிதத்திற்காக அக்கினியானவன் பலமுடனான புருஷன் குதிரையை யளிக்கிறான்; எங்கும் காணும் அவன் [1] பிரேமையுடன் தன்னை ஆசிரயித்துள்ளவர்க்கு ஐசுவரியத்தை

---

1 அன்புடன்.

அளிக்கிறான்; தோத்திரஞ் செய்பவர்கள் நாடுவதற்கு அருகதையான பெருமையைக் கொண்டுவரவும். ௩. கூட்டங்களாய் எவனை நோக்கி பசுக்கள் வருகின்றதோ எவனை நாடி துரிதர்களும் குதிரைகளும் செல்லுகின்றதோ சுபமாய்த்தோன்றிய மேதாவிகள் எவனை நோக்கிச் செல்லுகின்றார்களோ பிரியமானவனாய் போற்றப்படும் அவனான நீயே உன்னைத் துதிப்பவர்களுக்கு உணவை கீர்த்தியைக் கொண்டுவரவும்.

௪. இன்று உஷாதேவியே! ஒளியுடனான நீ முன்னர் செய்ததுபோல் மகத்தான ஐசுவரிய மடைய எங்களை எழுச்சியாக்கவும். சுபமான சன்மமுள்ள பிரியசத்தியான்மாவாயுள்ள வாயு மகனான எங்களது சத்திய சங்கற்பத்தில் சந்தோஷமளிக்கும் உன் குதிரைகளோடு வரவும். ௫, [1] சோசத்திரதன் மகனான [2] சுநீதனில் சோதி மகளான நீ உதயமானதுபோல் உன் குதிரைகளுடன் சந்தோஷமாய் மேன்மையுடன் பிறந்த வாயுவின் மகனான சத்திய சிரவசனான ஆத்மாவில் இன்னும் சிறப்புடன் ஒளிவீசவும் இருள் நீக்கவும். ௬. ஐசுவரியங்கொண்டு வந்துகொண்டு சோதியின் மகளே! இன்று எங்களில் ஒளிவீசவும்; பலமுடனாய் சத்திய [3] சிரவமாய் வாயுவின் மகனாய் நன்றாய் பிறந்தவனில் வெகு பலமுடனான நீ குதிரைகளுடன் சந்தோஷமுடனான நீ உதயமாகிறாய்.

௭. அசுவினிகளே! உங்கள் பிரியமான விருப்பத்தை அளிக்கும் ஐசுவரியம் சுமக்கும் ரதத்தைத் துதி செய்பவன் ஆத்ம துதிகளால் அலங்காரஞ் செய்கிறான். மது வித்தையை அறிபவர்களே! எங்கள் அழைப்பை செவிகொடுக்கவும். ௮. அசுவினிகளே! அனைவர்களையும்

---

1 முக்தனின். 2 நல்லவழி யுள்ளவனில். 3 செல்வமுடனாய்.

(எல்லா வேதனைகளையும்) கடந்துகொண்டு என்னிடம் துரிதமாய் வரவும்; நான் உன்னை அடையலாமோ? சத்துருக்களை கொன்றுகொண்டு உன் பொன் ரதத்தோடு சிறந்த ஐசுவரியமுடன் நதிகளை பிரவாகங்களை பிரேரிப்பவனைப் மது நிறைந்த சனுதனமான நீங்கள் எங்கள் அழைப்பை செவி கொடுக்கவும். ௯. அசுவினியான இருவர்களே! உங்கள் ஐசுவரியங்களைக் கொண்டுவரவும். ருத்திரர்களே! உங்கள் பொன் ரதங்களில் பேரானந்தமுடன் ஐசுவரியங்களோடு மதுநிறைந்து அதை விரும்பும் நீங்கள் யக்ஞம் சேவிக்கும் எங்கள் மொழியை செவிகொடுக்கவும்.

---

## கண்டம் ௬௭௭

தேவதை - க - ௩, அக்னி, ௪ - ௯ உஷைகள். ௭ - ௯ அசுவினிகள். ரிஷி - க - ௩ புதகவிஷ்டிராவத்ரேயர்கள் ௪ - ௯ குத்ஸ ஆங்கிரஸன். ௭ - ௯ அத்திரி.

க. பசுவைப்போல் வரும் உஷாகாலத்தைக் காண சனங்கள் சமித்துக்களால் அக்னி எழுச்சியாகிறான்; உயரத்தில் கிளைகிளைப்பும் சின்ன மரங்களைப்போல் சோதியின் ஆகாசம் நோக்கி அவன் சுவாலைகள் செல்லுகின்றன. தேவரின் உபாசனைக்கு—யக்ஞ செயலுக்கு, ஒருமையுடனுக்கு வதற்கு ஹோதாவான அக்னி எப்பொழுதும் எழுச்சியாகிறான்: அவன் காலையில், உயரத்தில் உயரிய மனத்துடன் உதித்துளான்; எழுச்சியாகி ஒளியுடனான அவன் சுவாலை தோன்றுகிறது; அந்த மகத்தான தேவன் இருளினின்று உலகத்தை விடுதலையாக்குகிறான். ௩. அக்னியானவன் எல்லாப் பொருள்களையும் வசமாக்கிக்கொண்டு சுத்தமான ரசிமிகளால் எல்லா சகங்களை பிரகாசஞ் செய்யுங்கால் ஐசுவரியங்களுடனான தட்சிணைகளை இணைத்தவனாகிறான். அவன்

உத்தம பொருள்களை தன் தானங்கள் வழியாய் உயர்ந்தவனாய் தரிக்கிறான்.

ச. சோதிகளின் நடுவே சிறந்தவன் இந்த சோதி வந்திருக்கிறான்; எங்கும் அதிசயமான ஒளி சோதி சன்மமாயுளான். சவிதாவின் எழுச்சிக்கு இரவு அனுப்பப்பட்டு காலைக்கு சனனஸ்தானத்தை அளிக்கிறாள். ரு. சுந்தரமும் சோதியுமான அவள் தன் வெண்மையான குழந்தையோடு வந்திருக்கிறாள்; அவளுக்கு கருமையான இரவும் தன் நிலயத்தைவிட்டு விட்டாள்; சமான பந்துவாய் சாசுவதமாய் பரஸ்பரம் தொடர்ந்துகொண்டு அவர்கள் நிறங்களை மாற்றிக்கொண்டு இரண்டு சோதி யுலகங்களும் முன் செல்லுன்றன, சூ. சமானமான [1] அனந்தமே, சகோதரி வழிகளாகும். தேவர்களால் கற்பிக்கப்பட்டு மாறிமாறி அவர்கள் யாத்திரை செய்கிறார்கள். சுப சரீரமுடன் பல நிறங்களுடனும் ஒரே மனத்துடன் இரவும் உஷையும் பரஸ்பரம் ஹிம்சை செய்துகொள்வதில்லை; கொஞ்சமேனும்—நியமிக்கப்பட்ட காலத்திற்குப் பிறகு—நிற்பதில்லை—சதாகாலமும் செல்லுகிறார்கள்.

எ. உஷையின் ஒளிமுகமான அக்னி பிரகாசிக்கிறான்; மேதாவி தேவர்களை விரும்பும் மொழிகள் எழுச்சியாகின்றன; ரதத்தில் ஏறியுள்ள அசுவினிகளே! இங்கு எங்கள் பக்கம் நோக்கவும், பொழியும் தர்மத்திற்கு வரவும். அ. [2] உபஸ்துதர்களே! நன்றாய் செய்யப்பட்டுள்ள தர்மத்தை அவர்கள் இகழ்வதில்லை; இப்பவும், போற்றப்படும் அசுவினிகள் நமது அருகில் உளார்கள்: துரிதமான ரட்சையோடு காலையிலும் மாலையிலும் அவர்கள் வருகிறார்கள். வந்து யக்ஞ புருஷர்களுக்கு சுகத்தை யளிப்

---

1 எல்லை யில்லாததே சாசுவதமானதே. 2 அருகில் துதிப்பவர்களே.

பவர்களாகவும். கூ. யுத்தத்தில், பால் கறக்கும் சமயத்தில், காலையில் நடுப் பகலில் சூரியன் அஸ்தமத்தில், பகலாலும் இரவிலும் சுகமுடனுன ரட்சையோடு நீங்கள் வரவும். வேறு தேவர்களை இல்லை. அசுவினிகளையே உத்தேசித்து பானம் இழுக்கப்பட்டுள்ளது.

---

## கண்டம் களஅ

தேவதை - க - ங உஷைகள். ச - கூ அசுவினிகள். எ - க0 பவமான சோமன். ரிஷி - க - ங கோதமோ ராஹூகணம்: ச - கூ தீர்கதம ஔசத்யன். எ - க0 பவமான சோமன்.

க. இந்த உஷைகள் தங்கள் கொடியை எழுச்சியாக்குகிறார்கள். ஆகாசத்தின் கீழ் பாகத்தில் பிரகாசத்தைப் பரப்புகிறார்கள். தங்கள் ஒளியால் தரணியை நன்றாய்ச் செய்யும் பசுக்களை யுத்தத்திற்கு ஆயுதங்களைத் தயார் செய்யும் வீரர்களைப்போல் ஒளியினுடைய தாய்களான உஷைகள் தினந்தோறும் வருகிறார்கள். உ. ஒளியுடன் ரக்த வர்ணமான ரசிமிகள் தாமாகவே எழுச்சியாகின்றன. அப்பால் இணைப்பதற்கு சுகமுள்ள சிகப்பான பசுக்களை அவை இணைக்கின்றன. இந்த பசுக்களுடனுன இரதத்தை ஏறி பூர்வகாலத்தைப்போல் எல்லாப் பிராணிகளின் ஞானங்களை செய்கின்றன புலனுக்குகின்றன; அப்பால் ஒளியுடனுன உஷை சோதியுடனுன சூரியனை ஆசிரயமாகிறாள். ங. சுவதேசசுகளுடனுன சமான இணைப்பால் வெகு தூரத்தினின்றும் ஆயுதமுள்ளவள் எங்கும் வியாபகமாவதுபோல் அவர்கள் (நடுப்பாகத்தை) அர்ச்சிக்கிறார்கள்; சோமன் பொழியும் யஜமானனுக்கு எல்லாப் பொருள்களையும், நன்மை

செய்யும் நன்றாய் அளிப்பவனுக்கு கீர்த்தியை உணவைச் சுமந்துகொண்டு வருகிறார்கள்.

ச. அக்னி எழுச்சியாகிறான்; பூமியினின்று சூரியன் எழுச்சியாகிறான். மகத்தான உஷைகள், உயர்ந்த தேஜசுகளால் சந்தோஷஞ் செய்பவர்களாய்—இருளை நீக்குகிறார்கள். அசுவினிகள் அவர்கள் ரதத்தை ஆத்மாவை அடைய இணைத்துளார்கள், ஆயத்தஞ் செய்துளார்கள்: சவிதா தேவர் அவரவர் வழிகளில் சகலமான பிராணிகளை எழுச்சியாக்குகிறார். ரு. அசுவினிகளே! அனைத்தையும் வர்ஷிக்கும் ரதத்தை நீங்கள் தயார் செய்யும்பொழுது எங்களுக்கு ராஜ்யத்தை—வீரத்தை—நெய்யால் மதுவால் பொழியவும்; எங்கள் பிரசைகளில் பிரமத்தை பெரும் பலத்தை பிரேரிக்கவும். யுத்தங்களில் எல்லா ஐசுவரியங்களையும் நாடுகிறோம். சு. மூன்று சக்கிரங்களுடனும் மதுவைச் சுமந்துகொண்டும் துரிதமான குதிரைகளால் இழுக்கப்பட்டும், மூன்று ஆசனங்களுடனுள்ளதும் எல்லா சௌபாக்கியங்களுடனான அசிவினிகளது ரதம் எங்கள் எதிரில் வரட்டும்; அந்த இரதம் அணுகி எங்களுக்கு பசுக்களையும் மக்களையும் மேன்மையையும் சுமந்துகொண்டு வரட்டும்.

எ. சோமனே! சோதியினின்று மழையைப்போல் உன் அழியாத தாரைகள் ஆயிர ஐசுவரியங்களைக் கொண்டு வரப்பொழிகின்றன. அ. ஹரியானவன் சமஸ்த பிரியமான செயல்களைப் பார்ப்பவனாய் தன் ஆயுதங்களைப் பிரேரித்துக் கொண்டு பாய்கிறான். கூ. நல்ல விரதமுள்ள அவன் மனிதர்களால் அச்சமன்னியிலுள்ள ராஜாவைப்போல், சுத்தஞ் செய்யப்படுங்கால் வனத்தில் கருடனைப்போல் உட்கார்கிறான். ய. இந்துவே; நீ புனிதமாகுங்கால் வானம் பூமியிலுள்ள எல்லா ஐசுவரியங்களையும் எங்களுக்குக் கொண்டு வரவும்.

## கண்டம் களக.

தேவதை க - ங பவமான சோமன். ச - சு - இந்திரன். கO - கரு அக்னி. ரிஷி க - நிருமேதன்; ச - சு - ஏதத் சாமன். எ - கூ பிரியமேதன். கO - கஉ தீர்க்தம ஔசத்யன் கங - கரு வாமதேவன்.

அனைத்தையும் வர்ஷிக்கும் பொழிபவன் தேவர்களை தன் வசமாக்கிக்கொள்ளும் இந்த பலத்தினுடன் தாரைகள் எங்கும் பிரவாகமாகின்றன. உ. துதிப்பதற்கருதையாய் சோதியாய் சனித்துள்ள அவன் குதிரையை காண்வர்கள் அலங்கரிக்கிறார்கள். அறிஞர்கள் அவனை கானங்களால் துதி செய்கிறார்கள். ங. சோமனே! துதிப்பதற்கருகனே! அதிக ஐசுவரியமுள்ளவனே! உன்னைப் புனிதஞ் செய்யுங்கால் உன் தேசசுகள் சோபன மளிப்பவையாகின்றன - சில மற்ற சம்ஸ்காரங்களை யழிப்பவையாகின்றன; அதனால் சமுத்திர சமான அவனை நீ பூர்ணமாக்கவும்.

ச. ருதுக்களில் உதயமாகும் இந்திரன் இந்த பிரமாவாகும். பெயர் போன அவனை நான் துதி செய்கிறேன். ரு. பலத்தினது பதியே! உன்னையே! சாதகஞ்செய்யும் துதிகளைப்போல அனைத்தும் அணுகுகின்றன. சு. சலதாரைகள் போக்கின்போல் உன் ஐசுவரியங்கள் இந்திரனே உன்னிடமிருந்து பெருகட்டும்.

எ. எங்கள் ரட்சிப்பிற்கு சுகத்திற்கு சக்தியுள்ளவனே! பல வீரச்செயல்களைச் செய்து இம்சிப்பவனைக் கொல்பவனாய் சிறந்த தலைவனான உன்னை இரதத்தைப் போல் இழுக்கிறோம். அ. அதிக பலமுள்ளவனே! வெகு விசித்திர அறிவுகளுடனானவனே! பல செயல்களுள்ள

வனே! 1 விசுவ வியாப்தமான மகத்துவத்தால் நீ எங்கும் பரி பூர்ணமாயிருக்கிறாய். ௯. மகத்தான மேன்மையால் உன் கைகள் எங்கும் வியாபகமாகி பொன்மயமான வச்சிரா யுதத்தை தரித்துள்ளாய்.

௰. 2 சதாத்மாவுடனான சூரியனைப்போல் சோதியுடனாகி ஆகாசத்திலுள்ள வாயுவிற்குச் சமானமாய் குதிரையைப்போல் கவியான (அக்னி) மனிதரது புரியில் பிரகாச மாயிருக்கிறான். ௰௧. துவி சன்மாவான அக்னியானவன் மூன்று சோதி யுலகங்களையும் பிரகாசஞ்செய்துகொண்டு எல்லா நிலயங்களிலும் விளங்குகிறான். ஹோதாவான அவன் யக்ஞ கர்த்தாவாகி சலஞ்சேரும் நிலயத்திலுமிருக்கிறான். ௰௨. ஹோதாவாய் துவிசன்மனானவன் சமஸ்தமாய் சிறந்த கீர்த்தியுடனான செய்ல்களை யெல்லாம் தரிக்கிறான்: எந்த மனிதன் இவன் நிமித்தம் எதையும் சமர்ப்பிக்கின்றானோ அவன் உத்தம சந்ததியுள்ளவனாகின்றான்.

௰௩. குதிரையைப்போல் வகித்துச் செல்பவனாய், கர்த்தாவைப்போல் உபகாரஞ்செய்பவனாய், ஒளியுடனாய் இருதயமனனுகும் அக்னியே! இப்பொழுது இந்த ஊஹகான துதிகளால் உன்னைத் துதி செய்கிறோம், ௰௪. சுபமான பலமான சாதகமான மகத்தான யாகத்தினது தலைவனாய் இப்பொழுது அக்னியே நீ இருக்கிறாய். ௰௫. அக்னியே! சூரியனைப்போல் சோதியுடனாகி சமஸ்தமான தேசசுகளால் சுபமனத்துடனான நீ துதிகளால் எங்கள் அருகிலாகவும்.

---

1 எங்கும் பெருகும். 2 அக்னியே எல்லா தேவர்களும் என ஒரு சுருதி வாக்கியமுண்டு—சாயனர்.

## கண்டம் க௮௰

தேவதை - க - உ அக்னி அசுவின உஷைகள். ௩ - ௫ இந்திரன். ௬ . ௮ மருத்துக்கள். ௯ - க௦ சூரியன். ரிஷி. க-உ பிரஸ்கண்வ காண்வன். ௩ - ௫ பிருஹதுக்த வாமதேவ்யன். ௬ - ௮ பிந்துபூத தக்ஷன். ௯ - க௦ ஜமதக்னி பார்கவன்.

க. அமிருதனுன ஜாத வேதசனே! உஷாகாசத்தினது சோதியான செல்வனே! அளிப்பவர்களுக்கு அதிசய உஷா தேவி அறிவை அக்னியே! கொண்டுவரவும். உ. அக்னியே! நீ யக்ஞங்களின் தலைவனுகும், அறிஞர்களால் சேவிக்கப்படு பவன், ஹவிஷு எடுத்துச் செல்பவன், தூதனுயுள்ளாய்; அசுவனிகளோடும் உஷசோடும் சேர்ந்து எங்களுக்கு சிறந்த வீரத்தையும் விசால ஞானத்தையு மளிக்கவும்.

௩. விதியைப்போல் வெகு சத்துருக்களை அழிப்பவனுன சூரியன் சந்திரனை எழுச்சி யாக்குகிறுன். காலாத்மா வான இந்திரனது சாமர்த்தியத்தைக் காணவும்: நேற்று மரித்தவன் இன்று சீவித்துளான். ச. பலத்தால் அருணுன சுபர்ணன்—பட்சி—பலமுட னிருக்கிறுன், பழையகாலத்தி னின்று அவன் வசிப்பதற்கு ஒரு நிலயமுமில்லை; அவன் எதை அறிகிறுனே அது சத்தியமாகும்: அது பயனற்றுவ தில்லை: விரும்பப்படும் ஐசுவரியத்தை சத்துருக்களிட மிருந்து ஜயிப்பவனுகி துதிப்பவர்களுக்கு அளிக்கிறுன். ௫. இந்திரன் மருத்துக்களோடு [1] பலங்களை அளிக்கிறுன்; தன் வசஞ் செய்துகொள்ளுகிறுன், விருத்திரனைக் கொல்வ தற்கு வச்சிராயுதன் வர்ஷிக்கிறுன்: செய்வதற்கருகதை யான பெருஞ் செயல்களால் சத்திய செயலில் இவர்கள் மருத்துக்கள் உதயமாகிறுர்கள்.

---

1 பயன்களை.

சு. இங்கு சோமன் பொழியப்பட்டிருக்கிறது, இதை சுவராஜனுன மருத்துக்கள் பானஞ்செய்கிறார்கள். மேலும் அசுவினிகளும் பானஞ்செய்கிறார்கள். எ. மித்திரன் அர்யமான் வருணன், சந்தோஷ முதயமாக்கும், சனனமளிக்கும், புனிதமாக்கப்பட்ட மூன்று நிலையங்களிலுள்ள இதன் ரசத்தைப் பருகுகிறார்கள். அ. ஹோதாவைப்போல், காலையில் இந்திரன் நிச்சயமாய் கோ சம்பந்தமான ரசத்தை சேவைசெய்து சந்தோஷமுடனுகிறான்.

கூ. சூரியனே! நீ நிச்சயமாய் மகானுகும். வாஸ்தவமாய் ஆதித்தியனே நீ பெரியவனுகும், அதிசய துதிகளால் துதிக்கப்பட்டு மகத்தாயுள்ள உனது மகிமை துதிசெய்பவர்களால் துதிக்கப்படுகிறது; தேவரே! நீ மகத்துவத்தால் அனைவராலும் பூஜிக்கருகனுகிறாய். ய. சூரியனே நீ சிறப்பினுல் பெரியவனுகும். உண்மைதான். தேவரே! தேவர்களது நடுவே மகத்துவத்தால் (எப்பொழுதும்) மேன்மையுடனுள்ளாய். நீ அசுரர்களைக் கொல்பவன், தேவர்களது புரோகிதன், உன் சோதி எங்கும் வியாப்தமாகி, எதனுலும் இம்சிக்கமுடியாமலுள்ளது.

---

## கண்டம் கஅக

தேவதை - க - கக, இந்திரன். ரிஷி - க - உ, சுகக்ஷின். ச - கக, வசிஷ்டன்.

க. சந்தோஷத்தின் தலைவனே! உங்கள் குதிரைகளோடு எங்கள் யக்ஞத்திற்கு வரவும்; எங்கள் ரசத்திற்கு வரவும். உ. விருத்திரனைக் கொல்லும் சத செயல்கள் செய்யும் அவனை இருவிதமாய் அறிகிறேன். எங்கள் சோமரசத்திற்கு உங்கள் குதிரைகளோடு வரவும். ங. விருத்திரனைக் கொல்லுபவனே! நீயே இந்த சோமர்களைப்

பருகும் கர்த்தாவாகும்; எங்கள் ரசத்திற்கு உங்கள் குதிரைகளோடு வரவும்.

௪. நீங்கள் மகத்தாய் ஐசுவரியத்தை அபிவிருத்தியாக்கும் மேன்மையான இந்திரனுக்கு— அனைத்தையும் கொண்டுவரவும். துதியையும் செய்யவும், சனங்களைப் பூரணமாக்குபவனுகை எல்லாப் பிரசைகளுக்கும் நீ செல்லவும். ௫. விப்ரர்கள் எங்கும் வியாபகமான மகத்தான இந்திரனுக்கு உத்தம விருத்தியான பிரமத்தைச் சொல்லியுளார்கள். அறிஞர்கள் அவன் விரதங்களை நியமங்களை மீறுவதில்லை. ௬. சர்வசகத்தினது அரசனுன எதிர்க்க முடியாத கோபமுள்ளவனுன இந்திரனை வேதவாணி நிறைந்தவர்கள் சத்துருக்களை ஒழிக்க ஸ்தாபனஞ் செய்வார்கள். நீயும் குதிரைகளின் தலைவனின் பொருட்டு உன்னை நேசிப்பவர்களை பந்துக்களை பெருமைபுடனுக்கவும்.

௭. உன்னைப்போல் மகத்தான ஐசுவரியத்தின் அதிபதியாய் நான் இருந்தால் ஐசுவரிய மளிப்பவனே! துதிப்பவனை தரிப்பேன்; அவனை க்ஷீணதிசைக்குள்ளாக்கமாட்டேன். ௮. எந்த இடத்திலிருந்தபோதிலும் என்னைத்துதி செய்பவனை தினந்தோறும் ஐசுவரியமுடனுக்குவேன்; மகவானே! உன்னைவிட மேன்மையான பந்து எவனுமில்லை; பாதுகாப்பவனும் உன்னைவிட வேறு எவனுமில்லை.

௯. சோமன் பருகும் கல்லின் அழைப்பை கேட்கவும், பிராக்ஞனை துதிப்பவரது துதியை அறிந்து கொள்ளவும்; இந்த உபாசனைகளை உன் சகாயத்தால் இந்த சுப விருப்பங்களை உன் அந்தராத்மாவிலே செய்துகொள்ளவும். ௰. சத்துருக்களை இம்சை செய்யும் உனது மொழிகளையும் மேன்மைகளையும் நான் அறிந்து ஒரு பொழுதும் விட்டு விடுவதில்லை. அசதாரணமான யசசுள்ளவனே உன் நாமத்தை எப்போழும் சொல்லுகிறேன். ௰௧. மக

வானே! மனிதர்களில் உன் ஐசுவரியங்கள் வெகு பலவா கும்: மனனசீல புருஷர்கள் உன்னையே பலமுறை அழைக் கிறார்கள், நீ எங்களிடமிருந்து எப்போதும் தூரமாக வேண்டாம்.

---

## கண்டம் க௲உ

தேவதை - க - கூ இந்திரன், க௦ - கஉ பவமான சோமன். ரிஷி - க - ௩ சுதாஸபைஜவனன். ௪ - ௬ மேதா திதி காண்வன். க௦ - கஉ ஜமதக்னி.

க. ரதத்தை பலத்தில் ஸ்தாபிக்க இந்திரனுக்கு பலத்தையே போற்றவும். அவன் அருகிலுள்ள சண்டை யிலும் நிலையை யளித்து காப்பவன், சண்டையில் விருத் திரர்களைக் கொல்பவன். எங்களுக்கு ஐசுவரியங்களை அளித்துக்கொண்டு எங்கள் செயல்களை அறிந்து கொள்ள வும், பலமற்ற வில் கயிறுகள் எங்கள் பலமற்ற சத்துருக் களது விற்களில் (ஞா) பிளக்கட்டும். உ. ஆகாசத்திலுள்ள மேகமான ராட்சதனை நீ கொல்லுகிறாய்; பூமியின் நிமித் தம் நீ சலங்களை விழச் செய்கிறாய்; இந்திரனே! நீ சத் துருவன்னியில் சனிப்பவன்; எல்லா சிறந்த பொருள்களை யும் நீ போஷிக்கிறாய். இப்படிப்பட்ட உன்னை நாங்கள் அணைகிறோம், எங்கள் பலமற்ற சத்துருக்களது விற் களில் பலமற்ற ஞாண்கள் பிளக்கட்டும். ௩. சமஸ்த சத் துரு வடிவமான உசிதமற்றவர்களும் சத்துரு சிந்தனைகளும் நாசமாகட்டும். இந்திரனே! எங்களைக் கொல்லும் சத் துருக்களில் உன் வச்சிராயுதத்தை வீசுகிறாய், உன் ஐசு வரிய சுபாவம் எங்களுக்கு பொருள்களை அளிப்பதாகட் டும்; பலமற்ற எங்கள் பகைவர்களது விற்களில் பலமற்ற ஞாண்கள் பிளப்பதாகட்டும்.

ச. குதிரை தலைவனே! ஐசுவரிய புருஷனை நாடுபவன் ஐசுவரியவானாகிறான், ஞான புருஷனை நாடுபவன் ஞானியாகிறான். உன்னைப்போல் ஐசுவரியவான், ரசாமுதம் நிறைந்தவனான உன்னைப்பற்றி வேறு என்ன தான் சொல்வது—உன்னை நாடுபவனும் அப்படியாவான். ரு. தோத்திரஞ் செய்யாதவர்களது ஐசுவரியம் சிறந்த ஆயுதங்களை அறிவதில்லை. கானஞ் செய்யும் சாமனையும் அறிவதில்லை. சு. இம்சை செய்யும் சத்துருவிலும் அல்லது கர்வமுள்ளவனிலும் என்னை விட்டுவிட வேண்டாம்; பலவானான இந்திரனே! பலங்களால் எங்களுக்குக் கற்பனை யளிக்கவும்.

எ. இந்திரனே! உன் குதிரைகளோடு இங்கு வரவும்; கண்வரது கனிந்த ஸ்துதிக்கு வரவும். சோதியுலகில் சாஸனஞ் செய்யும் இந்திரனை துதி செய்கிறேன். ஒளியுடனான இந்திரனே! நீங்கள் சுவர்கத்தை செல்லுகிறீர்கள். அ. ஓநாயானது ஆட்டை அலறச் செய்வதுபோல் இந்த எல்லைப் பொருள்கள் சோம லதையை அலறச் செய்கின்றன; ஒளி செய்யும் அரசுபுரியும் இவனையே சோதிமயமான சீவர்கள் செல்லுகிறார்கள். கூ. சோமன் கல் கோஷமுடன், கூறும்பொழுது உன்னைக் கொண்டு வரட்டும்; ஒளியுடனான தேவரே! சோதியினது ஆக்ஞையால் நீங்கள் சோதியுலகை அடைந்திருக்கிறீர்கள்.

ய. ஆனந்த மளித்துக்கொண்டு, சோமனே! மது நிறைந்தவனாய் இந்திரனுக்காக நீ பெருகவும். கக. மேதாவிகளான வெண்மையான சோமர்கள் வாயுவை பெருக்கியுளார்கள். கஉ. போர் செய்யும் ரதத்தைப்போல் தேவர்கள் பானஞ்செய்ய அவர்கள் அனுப்பப்பட்டுளார்கள்.

## கண்டம் க௲௩

தேவதை - க - ௩, அக்னி. ரிஷி க - ௩ பருச்சேபோ தேவோ தாஸன்.

க. அதிக ஐசுவரிய மளிப்பவனும் பலத்தின் மகனும் மேதாவியைப் போலுள்ளவனும் சாதவேதசனும் ஆனந்த மளிக்கும் அக்னியை சுவீகாரஞ் செய்கிறேன். சுவாலையால் சுபமான யக்ஞத் தலைவனும் தேவரை நோக்கும் சாமர்த்தியத்துடன் அதி ஒளியுடனுன சர்வ வியாபியான ஆகுதி செய்த நெய்யைப்போல் பெருஞ் சோதியான அவன் பிரகாசமா யிருக்கிறுன். அவனை சுவீகாரஞ் செய்கிறேன். உ. விப்ரனே! நாங்கள் ஒளியுடனும் உபாசிப்பதில் உயர்ந்த [1] அங்கிரசர்களில் மேன்மையான உன்னை மனனஞ் செய்யும் மந்திரங்களால் அழைக்கிறோம். சர்வ வியாபகனும் தேசசுவடிவுடன் மனிதர்களின் ஹோதாவாய் சுவாலையான கேசமுடன் வர்ஷிப்பவனும் இந்த சகல சீவர்கள் நாடும் உன்னையே அழைக்கிறோம்,

௩. விசேஷ ஒளி யுள்ளவனும் பலத்தால் மிகவும் அதிக ஒளியோடு பிரகாசமாகிக்கொண்டு மரங்களைவெட்டும் கோடரியைப்போல் சத்துருக்களை அழிக்கிறுன். அவன் சம்பந்தத்தால் [2] திருடப் பொருள்களும் தனிமையாகின்றன. நிலையானதும் மரங்களைப்போல் நாசமாகின்றன; போரில் நல்ல வில்லாளன் பின்வாங்காததுபோல் தயங்காமல் அனைவரையும் ஜயித்துக்கொண்டு தான் நிலையாய் நிற்கிறுன்.

---

1 அக்னி அறிபவர்களில். 2 நிலையான பொருள்களும்.

# கண்டம் க௲௪

**தேவதை - க - ௬, அக்னி. ரிஷி. அக்னி பாவகன்.**

க. அக்னியே! பலமும் பெருமையும் உன்னுடையது. அதி ஒளியுள்ள தேவரே! பிரகாசமாய் உன் ஒளிகள் கிளம்புகின்றன. பெருமையான ஒளியுள்ளவனே! கவியே! பலத்தால் துதிப்பதற் கருகதையான ஐசுவரியங்களை உன்னை நாடுபவர்களுக்கு அளிக்கிறாய். உ. புனிதஞ் செய்யும் ஒளியோடு நிர்மல சோதியுடன் சம்பூர்ண தேசசூடனான அக்னியே! பிரகாசத்துடன் நீ உயரக் கிளம்புகிறாய். தாய்மார்களை அடைந்துகொண்டு மகனைப்போல் அவர்களைக் காப்பாற்றுகிறாய். வானத்தையும் பூமியையும் நீ இணைக்கிறாய். ௩. பலத்தின் மகனே! ஜாத வேதசனே! எங்கள் நல்ல துதிகளால் சந்தோஷமுடனாகவும், எங்கள் செயல்களால் ஹிதமுடனாகவும். பல வடிவமான மனோகர மதியுள்ளவர்கள் மேன்மையுடன் சனித்தவர்கள் உன் நிமித்தம் நானாவித ஹவிஷுகளை சேர்க்கிறார்கள்.

௪. அக்னியே! நீ சந்துக்களில் நீ அரசு புரிபவனாய்க்கொண்டு மரணமில்லாதவனே! எங்களுக்கு ஐசுவரியமளிக்கவும், விஸ்தரிக்கவும். சுந்தரமாய் சோதியின் சரீரத்தால் நீ பிரகாசிக்கிறாய். சுந்தரமான செயலை எங்களுடன் இணைக்கிறாய். ௫. யக்ஞத்தைப் பிரேரிப்பவனாய் பெருமையான ஞானத்துடன் மகத்தான ஐசுவரியத்தின் அதிபதியாய் உத்தம சிரேஷ்டபொருள்களை அளிப்பவனை நாங்கள் துதிசெய்கிறோம். சௌபாக்கியமுடனான சிறப்பான சிரேயஸை, பரஸ்பரம் பிரித்து போகிப்பதற்கான ஐசுவரியத்தை துதிசெய்பவர்களுக்கு அளிக்கிறாய். ௬. சனங்கள் சத்திய ஞானத்துடனான மேன்மையான எங்கும் அனைவராலும்

பார்க்கப்படுவனுன அக்னியை ஞானத்தின் பொருட்டு முன்னிலேயிலாக்குகிருர்கள். செவியுறும் காதுகளிருப்பவன் போலுள்ள அதிசய பெயர் போனவனுய் தெய்வீகமான உன்னே துதிகளால் ஆண் பெண்கள் எல்லாம் துதி செய்கிருர்கள்.

---

## கண்டம் கஅ௫

**தேவதை - க - உ அக்னி. ௩, ச, எ - கூ இதி சாமன், கo - கஉ அக்னி. ௫, சு, விசுவேதேவர்கள். ரிஷி க - உ சோபரி காண்வன். ௩, ச, எ - கூ இதிசாமன். ௫ - ச அவசார காசியபன். கo - கஉ வத்ஸப்ரீ.**

க. அக்னியே! வீரமக்களேக் கொண்டு வரும் உன் உதவியால் அவன் ஜயிக்கிருன், எவனது நட்பை நீ அடைகிருயோ அவன் பெரிய செயல்களேயும் செய்கிருன். உ. தெளிப்பதில் தீரனே! உனது திரவமான ரசம் ஆசிரயமளிப்பதாய் காந்தி வடிவமாய் [1] ருதுக்களிலிருப்பதாய் நன்ருய் எழுச்சியாக்கப்பட்டு அது கிரகிக்கப் படுகின்றது; மகத்தான உஷசுகளது பிரியமான நண்பனுயிருக்கிருய். துக்கம் நாசஞ்செய்யும இராப் பொருள்களில் நீ பிரகாசிக்கிருய்.

௩. ருதுப் பிராப்தமாய் கர்ப்ப பூதமாய் பிரகிருதியான அக்னியை ஔஷதிகள் தரிக்கின்றன. அந்த அக்னியை தாய் ஸ்தானமான சலங்கள் சனனஞ் செய்கின்றன; அப்படியே கர்ப்பம் தரிக்கும் மலர்களும், செடி கொடிகளும் அவனே எப்பொழுதும் கர்ப்பம் தரிக்கின்றன.

ச. அக்னியானவன் இந்திரனுக்காக பெருகுகிருன், வெண்மையாய் ஆகாசத்தில் பிரகாசிக்கிருன், [2] மகிஷைப் போல் பல பொருள்களேயும் புலனுக்குகிருன்.

---

1 பருவகாலங்களிருப்பதாய். 2 மேன்மையானதை.

ரு. எப்போதும் விழித்துள்ளவனை ருக்குக்கள் விரும்புகின்றன. அப்படி விழித்துள்ளவனுக்கே சாமதுதிகளும் வருகின்றன உன் நட்பிலே நான் வாசஞ் செய்கிறேன், என இந்த சோமனும் விழித்துள்ளவனுக்குச் சொல்லுகிறான்.

சு. அக்னி விழிப்புள்ளவனா யிருக்கிறான், அவனை ருக்குக்கள் விரும்புகின்றன; அக்னி விழிப்புள்ளவனா யிருக்கிறான். அவனை சாமகானங்கள் அடைகின்றன. அக்னி விருப்புள்ளவனா யிருக்கிறான். அவனிடம் சோமன் சொல்வதாவது—நான் உன் நட்பில் [1] நிவாச ஸ்தானமடைந்து ஆசிரயிக்கிறேன்.

எ. பூர்வத்தில் உட்கார்ந்துள்ள நண்பர்களுக்கு நமஸ்காரம், ஒருமையுடன் உட்கார்ந்துள்ளவர்களுக்கும் நமஸ்காரம், நூறு பதமுடனான, பல வழிகளையும் புலனாக்கும் ருக்கை நான் இணைக்கிறேன். அ. நூறு மார்க்க தோத்திரத்தை நான் இணைக்கிறேன், [2] காயத்திரி, திரிஷ்டுபு சகதியுடனான ஆயிரம் வழிகளுள்ள சாமவேதத்தை கானஞ் செய்கிறேன். கூ. காயத்திரி, திரிஷ்டுபு சகதீக்கள்களே சமஸ்த வடிவங்களாக செய்யப்பட்டுள்ளன. தேவர்கள் இவற்றையே ஆசிரத ஸ்தானங்களில் செய்து கொள்கிறார்கள்.

க0. அக்னி சோதியாகும், சோதி அக்னியாகும். இந்திரன் சோதியாகும். சோதி இந்திரனாகும். சூரியன் சோதியாகும். கக. சோதி சூரியனாகும். அக்னியே! பலத்தோடு எங்களை மறுபடியும் நோக்கவும், உணவோடும் உயிர் நீட்டத்தோடும் எங்களை மறுபடியும் நோக்கவும். மறுபடி

---

1 நிலயத்தை. 2 சந்தசு அல்லது இயல்போடு இணையும் வழிகள்.

யும் எங்களைப் பாபத்தினின்று பாதுகாக்கவும். கஉ. அக்னியே! ரமணீயமான ஐசுவரியத்தோடு எங்களை மறுபடியும் அணுகவும்: உன் எதையும் தரிக்கும் தாரையோடு எல்லாப் பக்கங்களினின்றும் எங்களுக்குப் பெருக்கவும் திருப்தியுடனுக்கவும்.

---

## கண்டம் கஅசு

தேவதை - க - ங இந்திரன். ச - சு ஆபன், எ - கூ வாயு. க0 - கஉ, இதிசாமன். கங - கடு வேனன். ரிஷி - க - ங கோஷூக்த அசுவ சூக்தினர்கள், ச - சு திரிசிராத் வாஷ்டிர சிந்துத்வீப அம்பரிஷர்கள். எ - கூ உலோதாயனன், கங - கடு வேனன்.

க. இந்திரனே! ஐசுவரியங்களின் ஒரே ஈசனாய் உன்னைப்போலிருந்தால் என்னைத் துதிசெய்பவன் பசுக்களோடிருப்பான். உ. சக்திவானான இந்திரனே! நான் கோக் கூட்டத்தின் பதியானால் மதியுள்ள மனிதனுக்கு அளிக்கவும் ஐசுவரியமுடனுக்கவும் விரும்புவேன். ங. ரசத்தைப் பொழியும் யக்ஞர்களுக்கு இந்திரனே! உனது சத்திய வடிவமான பசு புஷ்டிசெய்து கொண்டு பசுக்களையும் குதிரைகளையு மளிக்கின்றன.

ங. சலங்களே! சாந்தியும் சௌபாக்கியமும் செய்பவர்களாகவும், பெருமையான ரமணீயத்தைப் பார்ப்பதற்கு பலமுடனுகவும் உதவிபுரியவும். மக்களை விரும்பும் தாய்மார்கள் (எப்படி பாலை அடைகிறார்களோ) அப்படியே, சுகமளிப்பதாய் உன்னிடமுள்ள உன் ரசத்தின் பகுதியை எங்களுக்களிக்கவும். சு. எந்த பாபத்தைப் பிரிக்க நீ பிரேரிதஞ் செய்கிறாயோ அந்த ரசத்தை அடைவதற்கு உன்னை

1 பசுக் கூட்டத்தின்.

நலமுடன் அடைகிறோம். சலங்களே! எங்களுக்கு புத்திர பௌத்திர (உற்பத்தி) பலத்தை யளிக்கவும்.

எ. ரோகத்தை நீக்கிக்கொண்டும் சுகத்தை இருதயத்திற்கு செய்துகொண்டும் வாயு ஔஷதம் வீசுபவனுகட்டும். எங்கள் ஆயுள்நாட்களை அவன் நீடிக்கட்டும். அ. வாதனே! எங்கள் பிதாவாகும், நீ எங்கள் சகோதரனும் சிநேகிதனுமாகும், நாங்கள் சீவனுடனிருக்க வன்மையை யளிக்கவும். கூ. வாயுவே! உனது கிரகத்தில் அங்கு வைக்கப்பட்டுள்ள மறப்பதற்கு முடியாத அந்த அமிருதத்தை நாங்கள் சீவனுடனிருப்பதற்கு அளிக்கவும்.

ய. சுபமுடனுன கருடன்போல் சக்தி வாய்ந்தவனுகி விசுவசுரூபமுடன் அக்னி பொன்மயமான சனன ஸ்தானமான உடையை ஆத்மாவை சுமந்துகொண்டு புஷ்டியாக்கிக்கொண்டு ருதுகாலத்தை அனுசரித்து சூரியனது தேசசை தரித்துக்கொண்டு தானுகவே மேதையை அறிந்துகொள்கிறுன். கக. விசுவ ரூபமான தேஜசானது சலங்களில் ரேதஸாகி ஆசிரயமாகிறது. அப்பால் பூமியும் சேர்ந்து விருத்தியாகின்றது. அந்தரிட்சத்தில் தன் மகிமையை ஸ்தாபிதஞ் செய்துகொண்டு எல்லா வீர்யங்களை வர்ஷிக்கும் குதிரையின் (ஈசனது) ரேதஸை சப்தஞ் செய்கிறுன், விளக்குகிறுன்.

யஉ. சுவர்கம் சகத்தின் ஆதரவாய் பிரசைகளின் பதியாய் நூறு ஆயிரம் ஐசுவரியங்களை அளிப்பவன் ஆயிரம் சுவாலைகளை தரித்துக்கொண்டு யக்ஞத்தைப்போல் தேகத்தை சூரியன் தேசசை தரிக்கிறுன்.

யங. சுபமான ஆகாசத்தில் பறக்கும், சிறகுகளுடன் உன்னில் பொன் சிறகுகளோடு வருணனின்—சலசம்பந்தமான—யமனின்—மின்னலக்னி—நிலயத்தில் பட்சிவடிவமாய்ச் செல்லும் அனைத்தையும்போஷிப்பவனுய், வேனனே!

உன்னை இருதயத்தால் வெகு தாகத்தோடு துதிசெய்பவர்கள் அந்தரிட்சத்தில் நோக்குகிறார்கள். ௧௪. உயர்ந்த ஸ்தானத்தி லிருந்துகொண்டு கந்தர்வன்—சலத்தை தரிப்பவன்-தன் அதிசய ஆயுதங்களை தரித்தவனாய் எங்கள் எதிர்முகமாகி எங்களுக்குப் புலனாக்கிக்கொண்டு ஆகாசத்தில் நிற்கிறான். பார்ப்பதற்கு சுகந்த ஆடை—சோபன ஆத்மிய வடிவமாய் எங்கும் கவர்ந்துகொண்டு— அணிந்தவனாய் சோதியைப்போல் அவன் பிரியமான நாமங்களை சனனஞ் செய்கிறான். ௧௫. அவன் ஈசனது அந்தரிட்சத்தில் பட்சியினது சூரியனது கண்ணால் ஒளியால் பார்த்துக்கொண்டு துளியாய் சமுத்ரத்தை—மேகத்தை—அணுகும்பொழுது சூரியனுக்குச் சமானமாய் சுத்த தேஜசுடன் ஒளிவீசிக்கொண்டு மூன்றாவதான உலகத்தில் பிரியமான பொருள்களை பூர்ணமாக்குகிறான், புலனாக்குகின்றான்.

---

## கண்டம் ௧௮௭.

**தேவதை ௧ - ௩ - ௫ - ௬ ௭, ௧௦, ௧௬, ௧௭, ௧௮ - ௨௧, ௨௨, ௨௩, ௨௫. இந்திரன். ௧௧. இந்திரர்கள் எல்லா தேவர்கள். ௪, பிருஹஸ்பதி ௧௩-௧௫ அப்த்வன் அகன், ௧௨, மருத்துக்கள். ௨௨, சோமவருணன் ௮, ௯, ௧௮, ௨௧, ௨௭, எல்லா தேவர்கள். ரிஷி - ௧ - ௧௨, அபிரதிரத இந்திரன் ௧௩-௧௫ அபிரதிரத இந்திரன் பாரத்வாஜன். ௧௬ . ௧௮, பாயு பாரத்வாஜன். ௧௯ - ௨௧ சாசோ பாரத்வாஜன், ௨௨ - ௨௪ பாயுர் பாரத்வாஜன். ௨௫ - ௨௭ ஜயன்.**

௧. துரிதனாய் திகில் அளிப்பவனாய் கோரமான விருஷபத்தைப்போல் சத்துருக்களைக் கொல்லுபவனாய் மனிதர்களைத் தூண்டுபவனாய் அலறச் செய்பவனாய் சண்டைக்கு அழைப்பவனாய் ஆலஸ்ய ரகிதனாய் ஒரு வீரனாய் ஒரே மூச்சில் நூறு சைன்னியங்களை இந்திரன் ஜயிக்கிறான்.

உ. வீரர்களே! சத்துருக்களை அழச்செய்யும் கண் கொட்டாத விஜய சீலமாய், வீரமாய், ஜயிப்பதற்குக் கடின மாய் சண்டைக்கு எழுச்சியாக்குபவனான கைகளில் அம்புக ளுள்ள பலவானான [1] இந்திரனோடு சண்டையிலே ஜயிக்கவும் சத்துரு பலத்தை யொழிக்கவும். ௩. சோமபானம் பருகு பவன் வெகு பலமுடனான கைகளுள்ளவன், உயரிய வில் லோடு சத்துருக்களில் பிரேரிக்கப்பட்ட அம்புகளால் ஒன் றும் குறி தப்பாமல் அடிப்பவன். தன் கூட்டத்தோடு சைன் யங்களை ஒருமையுடன் கொண்டு வருபவனாய் இந்திரன் கத்தி, அம்பு, தரிப்பவர்களோடு சாசனஞ் செய்கிறான், வசீ கரிக்கிறான்.

ச. பிருஹஸ்பதியே! உன் ரதத்தோடு ராட்சதர்களைக் கொன்றும் எங்கள் சத்துருக்களை துரத்திக் கொண்டும் இங்கு வரவும். சத்துருக்களைச் சிதறடிப்பவனே; யுத்தத் தில் ஜயிப்பவனே, நாசஞ்செய்பவனே எங்கள் இரதங்களது பாது காப்பவனாகவும். ரு. பலத்தால் பெருமையுள்ள வனே! திருடனே! பெருமையுடனான வீரனே! பெருஞ் சாமர்த்தியனே! உக்கிரனே! வீரத் தலைவர்களை அனுசரிப் பவனே! பலத்தின் மகனே! பசுக்களை ஜயிப்பவனே! ஜய மளிக்கும் ரதத்தை, இந்திரனே! ஏறவும்.

சு. மேகங்களைப் பிளப்பவன், ஜலத்தை ஜயிப்பவன். வச்சிராயுதன். சத்துருவை ஜயித்து பலத்தால் பாழாக்கு பவன்—இப்படிப்பட்ட—இந்திரனை சகோதரர்களே! அனு சரிக்கவும். பின் தொடரவும்: யுத்தத்தில் வீரர்களைப்போல் செயல்களைச் செய்யவும். பரஸ்பரம் நட்புடனாகி நீங்கள் இந்திரனைப்போல் வீரம் உணர்வைக் காட்டவும்.

1 வன்மையின் உதவியோடு.

எ. இந்திரன் மேகக் கூட்டங்களை பலத்தால் பிளந்து கொண்டு நிர்தயனான வீரன் நூறு கோபங்களோடு கூடிய வன். யுத்தத்தில் ஜயிப்பவன். அசைக்க முடியாதவன். எதிர்க்க முடியாதவன். எங்கள் யுத்தங்களில் எங்கள் சைன்னியங்களை அவன் பாது காக்கட்டும். அ. இந்திரன் எங்கள் சைன்னியங்களின் நாயகனாயிருக்கட்டும். அவர்கள் முன் சைன்னியங்களின் சிறந்தவனாயிருக்கட்டும். அவர்கள் முன் சைன்னியங்களின் முன்பாகத்தில் பிருஹஸ்பதி, சோமன் [1] தட்சிணை யக்ஞன் செல்லுகிறார்கள்; ஜயித்து துவம்சஞ் செய்யும் தேவசேனைகளின் மருத்துக் கணங்கள் முன்பாகத்தில் செல்லட்டும். கூ. வர்ஷிக்கும் இந்திரனது, ராஜாவான வருணனது மருத்துக்களது ஆதித்தியர்களது உக்கிரமான பலம் எங்களுடையதாகட்டும்; உதார மனத்துடன் உலகங்களை நடுங்கச் செய்யும் ஜயிக்கும் தேவர்களுடைய ஜயகோஷமானது உயரக் கிளம்பட்டும்.

௰. [2] மகவானே! எங்கள் ஆயுதங்களை உற்சாகமுடன் உயரத்திலாக்கவும், எங்கள் சைன்னியங்களின் மனங்களை மகிழ்வுடனாக்கவும், விருத்திரனைக் கொல்லுப்பவனே! குதிரைகளின் பலத்தைப் பெருக்கவும். ஜயமளிக்கும் ரதங்களின் கோஷங்கள் உச்சத்தில் செல்லட்டும். கக. எங்கள் கொடிகள் சத்துருக்களை, சேருங்கால் இந்திரன் எங்களைக் காப்பாற்றட்டும், எங்கள் சைன்னியங்களின் அம்புகள் ஜயமுடனாகட்டும், யுத்தத்தில் எங்கள் வீரர்கள் மேன்மையுடனாகட்டும் ஜயிக்கட்டும். தேவர்களே! போர்களில் எங்களையே காப்பாற்ற வேண்டும். கஉ. மருத்துக்களே! பலத்தோடு முயன்றுகொண்டு எங்களை யணுகும் சத்துருக்களின் சைன்னியத்தை மறைக்கவும், விடப்பட்ட சங்கற்ப

1 அளிப்பவன். 2 எங்கள் வன்மையே.

செயல்களுடனுன இருளால், பரஸ்பரம் அறிந்துகொள்ளாத வண்ணம் அவர்களை மறைத்துவிடவும்.

கங. அகனே! சத்துருக்களின் சித்தத்தை புலன்களை பிரமிக்கச் செய்து அவர்களது அங்கங்களைப்பற்றி அப்பால் நீ செல்லவும்; அவர்களை எதிர்த்து இருதயங்களை துக்கங்களால் தீயிலாக்கவும், எங்கள் சத்துருக்கள் கருமையான இருளிலாகட்டும். கச. தலைவர்களே! முன் செல்லவும், ஜயிக்கவும் இந்திரன் உங்கள் கவசமாகட்டும்; உங்கள் கைகள், நீங்கள் ஒருவராலும் தீமையுடனுகாமலிருக்க, உபத்திரவமுடனுகாமலிருக்க உக்கிரபலமுடனுகட்டும். கரு. எங்கள் துதியால் கூர்மையாகி அம்பே:—ஆயுதமே! வில் ஞாணினின்று நீ தளர்ந்து சத்துருக்களில் பாயவும்; சத்துருக்களின் சரீரங்களில் சாயவும்; ஒருவனையும் சீவனுடன் விட்டு விடாதே.

கசுா. 1 கங்கங்களான கழுகுகளும் கருடர்களும் சத்துருக்களை நாடட்டும், அந்த சைன்னியம் கழுகுகளின் உணவாகட்டும்; இந்திரனே! அங்கு ஒருவனும் உயிருடன் தப்ப வேண்டாம், பாபஞ் செய்யும் ஒருவனையும் விட்டு விடாதே! அவர்கள் பின் எல்லா கழுகு முதலிய பட்சிகளும் ஒன்று சேரட்டும். கஎ. மகவானே! சத்துரு வடிவமாய் இப்பகைவர் கூட்டத்தை விருத்திரனைக் கொல்லுபவனே! இந்திரனே! அக்னியே! நீங்கள் பஸ்மமுடனுக்கவும். கஅ. சிகை நீங்காத சிறுவர்கள்போல் அம்புகள் பாயும் இடத்தில் பிரமணஸ்பதி அதிதி அமைதியை யளிக்கட்டும் எப்பொழுதும் ஆனந்த முடனுக்கட்டும்.

ககூ. இந்திரனே! ராட்சதர்களை விநாசஞ் செய்யவும், சண்டை செய்யும் சத்துருக்களையுமொழிக்கவும்;

1 பெரிய பறவைகள்.

விருத்திரன் தாடைகளை துண்டு துண்டாக்கவும்; விருத்திரனைக் கொல்லுபவனே! எங்களை நாசஞ் செய்யும் சத்துருக்களின் கோபத்தைக் கொல்லவும். உ௦. இந்திரனே! சண்டை செய்யும் சத்துருக்களை நாசஞ் செய்யவும். எங்களை எதிர்க்கும் சேனைகளை சத்துருக்களைத் தாழ்மையுடனுக்கவும்; தாசர்களாக்குபவனை பாழான பெரும் இருளில் போகச் செய்யும். உக. இந்திரனின் கைகள் சதாகால யௌவனமுடனிருக்கின்றன, திடமாயிருக்கின்றன. அவன் சுந்தரமாய் ஒருவராலும் எதிர்க்க முடியாமல் எப்பொழுதும் அழிக்க முடியாத கைகள் உள்ளவனுகும்; எவற்றால் அசுரர்களின் அதி பலம் அழிக்கப்படுகிறதோ அந்தக் கைகள் எங்களில் அவசியம் வரும்பொழுது பிரயோகஞ் செய்யட்டும்.

உஉ. உன் கவசத்தால் மர்ம ஸ்தானங்களை நான் மறைக்கிறேன்; சோம ராஜன் அமிருதத்தால் உன்னை ரட்சிக்கட்டும். வருணன் அதிகத்திற்கதிகமான சுகத்தை உனக்களிக்கட்டும்; உன் ஜயத்தில் தேவர்கள் சந்தோஷமுடனுகட்டும். உ௩. தலையில்லாத பாம்புகளைப் போல் சத்துருக்களே! கண்களில்லாதவர்களாகவும். அக்னிச்சுடர் உங்களைப் பற்றுங்கால் உங்களில் சிறந்த ஒவ்வொருவனையும் இந்திரன் கொல்லட்டும். உச. எங்களைக் கொல்லும் எவனும் அவன் அன்னியனுனாலும் சரி, அல்லது எங்களில் ஒருவனுனாலும் சரி அவனை எல்லா தேவர்களும் இம்சிக்கட்டும். [1] பிரமமானது—பலமானது—என் அகக்கவசமாகட்டும், அது எனக்கு நெருங்கிய காப்பும் காயரட்சையுமாகட்டும்.

கரு. மலையில் திரியும் சிங்கத்தைப்போல் இந்திரனே! நீ பயங்கரமா யிருக்கிறாய்; நீ வெகு தூரத்திலிருந்து

---

1 பலமானது.

எங்களை அணுகி யுளாய். உன் அம்பைக் கூர்மையாக்கி வச்சிராயுதத்தைத் தீட்டி, இந்திரனே! சத்துருக்களை துவம்சஞ் செய்து வெறுப்பவர்களை சிதறடிக்கவும்.

உசு. தேவர்களே! சுபமானவற்றை எங்கள் செவிகள் கேட்கட்டும், புனித தேவரே! எங்கள் கண்கள் கல்யாணங்களை காணும் வன்மைகளுடனாகட்டும், திர அங்ககங்ளால் தேகங்களால் உன்னைத் துதிசெய்து தேவர்களால் ஸ்தாபிதமான 'ஆயுளை' நாங்கள் அடையட்டும்.

உஎ. விஸ்தார சிரேயசுடனான இந்திரன் ந்ரசமற்றதை அளிக்கட்டும். விசுவப் பொருள்களை அறியும் பூஷணன் எங்களை சுவஸ்தியுடன்—சுபமுடனாக்கட்டும், அகிம்சையுடனாய் சக்கர வளையக் கட்டையுடனான,—ரதமுடனான—தார்க்ஷியன்—திருக்ஷ மகன் கருடன் திருடமான பலம்—எங்களுக்கு அமுத மளிக்கட்டும். பிருஹஸ்பதி எங்களுக்கு பெருமை அளிக்கட்டும்.

ஓம், சாந்தி: சாந்தி: சாந்தி:

# க. ஸாம கண்ணாடி

சில கடினமொழி உரைகளையும் திருத்தங்களையும் இக் கண்ணாடியில் காணலாம். பல முறைவரும் ஒரு கடின மொழிக்கு ஒரு இடத்திலேயே உரை செய்துளோம். வேதத்திலுள்ள எல்லா தேவர்களும் சாதாரணமாய் ஒரே ஒரு ஈசனைக் குறிப்பதால் அவர்களின் உரைகளை அடிக்கடி கூற வில்லை. எண்ணிக்கைகள் கண்டம் மந்திரங்களைக் குறிக்கும்.

## க—கஅஎ

(க) க. அக்னியே=ஈசனே. ங. அழைக்கிறேன் என்பதை அழைக்கிறோம் எனப் படிக்கவும். (உ)—க. பிரிய மற்றவர்களை பிரியமற்றவனை எனப் படிக்கவும். (ங)—உ. சத்துருவை=அந்தகாரத்தை. சீரழிக்கட்டும் என்பதற்கப்பால் அக்னி எங்களில் ஐசுவரியத்தை அளிக்கட்டும் என சேர்த்துக்கொள்ளவும். அ. மொழிகளை=காயத்திரியை எனப் படிக்கவும். கங. தேவி=திவ்யமான ஈசன், ஸ்ஞனத்திற்கு=மனேஸ்ஞனத்திற்கு. பானத்திற்கு=சத்தியம்பருக. கச. சத்துருக்களின் பதியே என்பதை சத்துக்களின்=சிறந்தவர்களின் பதியே எனப் படிக்கவும். பிரம செயல்களை=அறிவு செயல்களை. (ரு) ச. மருத்துக்களே=பாமரர்களே. பிராமணஸ்பதி=அறிஞனே. எ. இந்திரனைப்போல்=வன்மை வடிவன் போல். (சூ) க. ஈசனிடத்தில் நீ அனைத்தையும் பெற்றுக் கொள்ளவும். உன்னிடமிருப்பதை தானமளிக்கவும், பிறகு நீ அதிகம் சம்பாதிக்கவும். இப்படிச் செய்வதால் நீ அபிவிருத்தியாவாய். இதுதான் இம்மந்திரக் கருத்து. அ. சலத்தின் மகனை=பிராணனின் வடிவமான. (எ)—க. ஹவிஷுகளால்=துதிகளால். நிலை நாட்டவும்—நினைவிலாக்கவும். ச. ஜாதவேதசன்=எதையுமறிபவன். ௯. சிரோபூதன்=தலை

வன். கூ. கர்ச்சிக்கிறுன்=கற்பிக்கிறுன். க0. கைகளால்= சாதனங்களால். (௮) க. உஷா காலத்தை=அறிவு உதயத்தை. ௩. இரவு பகல் என உனக்கு இரண்டு வடிவங்களுண்டு. ௪. சிறந்தோங்கட்டும் எனப் படிக்கவும். (௯)—௪. அடைகிறுய்=அடைந்துள்ளாய். க0. கவி=அனைத்தையுமறிபவன் (௧0) கூ. ருத்திரர்களைக்குப் பிறகு ஆதித்தியர்கள் என்னும் பதத்தைச் சேர்த்துக்கொள்ளவும். அக்னியே=மனிதனே. பசுக்களை=நிலயங்களை. ருத்திரர்கள்=ஐந்து தூல புலன்கள், சூட்சமபுலன்கள், ஆத்மா. ஆதித்தியர்களை=கஉ மாதங்களை. துதிக்கவும்=நாடவும்.

(௧௧) பசுக்கள்=புவனங்கள். அ. ஈசனுன அக்னி நாடுபவனை எவனும் அடிமையாக்குவதில்லை. (௧உ) க. வெண்மையாய்=புனிதனுய். ௫. ஆஹுதத்தால் = நாடுவதால். எ. அரக்கர்களை அரக்கரை எனத்திருத்தவும். (௧௩) மூன்றுவது மந்திரக் கருத்து—பசுக்களே!—மனிதர்களே—யக்ஞ ஸ்தானத்தில் வரவும், வானம் பூமி யக்ஞத்தின் உயரிய பயன்களை அளிப்பதாகும். இவை பொன்ஞல் போலுள்ள ஐசுவரியங்களை யடைய சாதன பூதங்களாகும். (௧௪)க. வீரர்களைக்காண எறுகிறுய்=வீரர் மனத்தில் விளங்குகிறுய். (௧௫) க. மருத்து ...சப்தஞ் செய்வதானது=பிராண சாதன கருவிகளின் சப்தமானது.௪-இந்திரனை வன்மையுள்ள ஆன்மா நன்மைகளை வர்ஷிக்கபூஷணன் என்னும் நிலமான தேகம் உதவி யளிக்கிறுன். ௫.பசு=மனது. ௰, சோமனும் சூரியனும்=மனமும் ஆத்மாவும். (௧எ) க. கானங்களால்=ஒழுக்கங்களால். உ: சோமபானஞ் செய்யும் உங்கள் மனத்தைப் பருகும் ஆத்மா. எ. விருஷபனே=எல்லாம் பொழிபவனே. (௧௮) க. சோமனே= உங்கள் ஆத்ம ரசம். உ. பலமுட னிருக்கட்டும்=பலமுள்ளவனு யிருக்கிறுன். இந்திரன்=உங்கள் ஆத்மா. ௰. மருத்துக்களும் அசுவினிகளும்=பிராணன்களும் செவிகளும் அல்லது இரு தோற்றமான புலன்களும். (உ0) ௫. சரஸ்வதி=அறிவு கூ. சோமனுல்=நல்ல செயலால். மித்ரன், அர்யமான், வருணன்=பிராணன், வியானன், அபானன்.

(உக) உ. இந்திரனே=ஆத்மாவே. ச. சலதுளிகள்=துதிகள். கூ. பூஷணன்=இந்திரன். (உஉ) ச. மேகங்களில் சித்தங்களில். உஎ. தான்யத்தோடு=நோக்கத்தோடு. தயிருடன்=தியானத்துடன், பிண்டங்களுடன்=சாதனங்களுடன். தோத்திரத்தோடு எனப் படிக்கவும். அ. ஜயித்தபொழுது =ஜயிக்கும்பொழுது. கூ. சோமபானங்கள்=ஆன்ம சிந்தனைகள். (உ௩) ௩. உங்கள் மனத்தில் இந்திரனை ஆத்மாவை அறிந்தால் நம்மை எதிர்க்க எவனுலும் முடியாது. ௫. அருணன்=அறிவு. ௫. மித்ர வருணர்களே=பிராணனும் அபானனுமே. அ. பசுக்கள் முழங்காலாழம்=சனங்கள் திருப்தியாகும்வரை. மருத்துக்கள்=வேதோபதேசங்கள், இங்கு விஷ்ணு என்பது ஈசனின் ஒரு சக்தியான சூரியனைக் குறிக்கும். அவன் கிரணங்கள் எங்கும் செல்லுகின்றன- கூ. காலை பகல், மாலையின் கிரணங்கள் அவன் மூன்று பாதங்கள் போலாகும். உன் ஒரு சக்தியிலே சகமெல்லாம் ஒன்று சேர்கின்றது. (உச) க. யக்ஞத்தில்=செயலில். சோமனைப் பருகவும் = சித்தத்தைக் கவரவும், ௩. தோத்திரஞ் செய்யாதவருடைய ஆயுதத்தை எனப் படிக்கவும். ஐசுவரியம் என்பதற்கு சத்துரு எனப் படிக்கவும். (உ௫) திரப்பொருள்களின் என்பதை திரப்பொருள் எனப் படிக்கவும். உ. குதிரைப் பந்தயத்தில்=புலன்களின் ஜயத்தில். எ. சம்பந்தங்களால் சம்பந்தத்தால் எனத் திருத்தவும். ௰. உங்கள் ஆயுதங்களை அடிக்கடி பயன்செய்யவும். (உசு) சதாகாலம் செயல் செய்பவனை சித்த புருஷனுக்கு அவன் அதிகமாய்ப் புலனாகிறான். நீங்கள் கடின ச்செயல்கள் செய்தாலொழிய அவனைக் காணமுடியாது. உ. இந்திரனை ஆன்மா நீங்கியவுடன் வேறு தேகத்தில் தோய்கிறான். ௩. குதிரைகள்= பலங்கள். பிரமத்தால் = பலத்தால். நீண்ட ரோமங்களுடனை=அதிக் தேசசுடன்களான. சோமனை=மதுவித்தையை. ச. மயில் ரோமங்களுடனை=சுந்தர ஒளிகளுடனை. ௰. கண்வர்களோடு = கனிந்த கருத்துக்களோடு. (உஎ) உ. தோத்திரஞ் செய்பவனை எனப்படிக்கவும். ௩. மித்திரனுக்கு

=நட்பிற்கு அரியமானுக்கு = நியாயத்திற்கு. வருணனுக்கு= காலனில், ராஜர்களில்=கனிந்த செயல்களில். ச. ரிபுக்கள்=அறிஞர்கள். ருத்திரர்கள்=வீரர்கள். ரு. மருத்துக்களே =பிராணன்களே. இந்திரனை — — செய்யவும் = இந்திரனை உன் ஆத்மா திருப்தியாக பலத்தை எப்பொழுதும் பிரயோகஞ் செய்யவும். ய. ஐந்தாவது சனங்களிடம்=ஐம்புலன்களுக் குரியதான. (உஅ) க. மாடுபோல் முட்டிச்சென்று =பலமுள்ளவன் சுபாவம். உ. குதிரைகளோடான எனப் படிக்கவும். ச. மூன்றுவித பூமியை=மூன்று தாதுக்களை. எ. துதிகளை அலங்கரிக்கவும் = பல சாதனங்களை நாடவும். க. புரந்தரனே=ஆத்மாவே. ய. நேற்று செய்தோம்=மூன்று காலங்களிலும் செய்வோம்.

(௩க) ச. மலைகள்=கஷ்டங்கள். சு. விரதமற்றவனை= சங்கற்ப மற்றவனை. கூ. குதிரைகளை=சாதனங்களை. மருத்துக்களோடு=பிராணன்களோடு. (௩உ) க. உஷை=சோதியின் பிரகாசம். உ. அசுவினிகளே=பிராணன்களே. ௩. சோமனால் அழிப்பவன்=சோமனால் சின்ன விஷயங்களை அழித்துக் கொள்பவன். சு. அத்வர்யு=யக்ஞ புருஷன். (௩௩) க. பால் கலந்த=புனிதம் தோய்ந்த. உ. இந்திரனே=ஆத்மாவே. ஊற்றை=தேகத்திலுள்ள அமுதரசத்தை. தானவர்களை=தமோ குணங்களை. ரு. கோபதியே=பிராணிகளின் தலைவனே. எ. பிரியமேதர்கள்=அறிஞர்கள். (௩ச) க. அம்சுமதியில்=சேதன நிலயத்தில். கூ. எரிவதற்கான என்பதை எறிவதற்கான எனப் படிக்கவும், ஸ்தனத்தினின்று=சக்கரத்தினின்று. (௩ரு) ௩, தாடியை அசைத்துக் கொண்டு=பலத்தைப் புலனாக்கிக் கொண்டு. எ. பிரமாவே= அறிஞனே. பிதாக்களின் என்பதை பிதாவின் எனப் படிக்கவும். (௩சு)-சு. இந்திர வன்மை......=உங்கள் தேகபலம் ஆத்மபலம் சமூகபலம் உன்னை அறியும் அறிவு எங்களுக்குப் பூர்ணமாகட்டும். (௩எ)-ரு குதிரைகள்=புலன்கள். ததிக்கரா வணத்தை=தேவ ஸ்துதியை. (௩அ) க. இந்துவிற்கு= ஆத்ம ரசத்திற்கு. செயல்களை, செயல்களால், என்பதை

செயலை செயலால் எனப் படிக்கவும், (௩௯) ௪. துதியை= வெத மொழிகளை. (௪௦) ௪ திருத ஆப்தனேடு=தியான ஆத் மாவோடு, எ. ஆதித்தியர்களே=ஒளிகளுடனுன ஈசனே. அ. அமிழ்த்தப்படுபவர்களின்=தியானிப்பவர்களின்.

(௪௨) ௪. குதிரைகளின்=சக்திகளின், சோமனுக்கு= சிறந்த பொருளிற்கு. ௬. மருத்துக்கள்=பிராணன்கள். (௪௩) ௩. அபிவிருத்தி யாக்காப்பட்டான்=அறியப்படுகிருன். ௯. இங்கும் வானம் பூமி அசுவினிகள் எல்லாம் ஈசனைக் குறிக்கும். (௪௪) க. சமித்தானது=சித்தமானது. உ. அமைக்கப்பட்ட தர்ப்பையோடு=ஒழுக்கமான இருதயமுடன். ௩. சத்திய சிரவையில்=சத்திய அறிவில், ரு. பீமனுன=பயங்கரனுன. ரு. ஹனுமானுய் என்பதற்கு வேதத்திலிருப்பது சுந்தர முகம்=சுந்தர சுபாவமுள்ளவள். ௬. பசுக்களை=பிராணன் களை. பொன் குதிரைகளை=புனித வன்மைகளை. அ. அர்ய மான்=நியாயம், மித்ரன்=நட்பு, வருணன்=காலன். (௪ரு) ௪. குதிரையைப்போல் நனைந்தவனுய்=பலத்திற்குப் போல் வியர்வை புலனுக்குபவனுய். ரு. காந்தப் பிரக்ஞனை=தீகர் தரிசியான அ. ஊஹ கானங்களால்=தயாராக்கப்பட்ட கானங்களால். ௯. சவிதாவின்=சோதியின். (௪௯) க. உன்னை யாசிக்கிறோம் எனப் படிக்கவும். உ. பிரமனை=பலமுள்ள வனை. ௪. துவஷ்டா=எதையும் சூட்சமமாய் செய்பவன். எ. உஷையே=அறிவுடனுன ஈசனே. ௬. உன்நட்பு சட்டம் சத் தியோடு உயரிய எல்லாப் பொருள்களையு மளிக்கவும். (௪அ) க. திரிக தூர்க்கங்களில்=மூவ்வுலகங்களில், யவ அரிசி=உணவு சம்பந்தம், சோமனைப் பருகுகிறுன்=சத்தியத்தைப் பருகிய வண்ணமாயுளான். ரு. வாயுவை=வியாபகனை, (௪௯) ௩. இந்திரனுக்கு=உன் ஆத்மாவிற்கு. எ. மலையில்=மேன்மை யான ஸ்தானத்தில், கருடனை=பலமுள்ளவனை (ரு௦) உ. வனங்களின் எருமைகளை=சலங்களில் சாய்ந்துள்ள சக்திகளை.

(ருக) ரு. காயத்தை=சர்மத்தை=கருத்தை. (ருஉ) க. சத்தஞ் செய்வான்=அறிவிப்பான், ௬. ரிஷிகள்=உண்மை கள். ௯. மனிதர்களால்=மனங்களால், (ரு௩) க. பொன்

ஞல்=புனிதத்தால், உ. கனத்தப் பொருள்களால்=கனிந்த தியானங்களால், ௰உ. பவமானர்கள்=புனித சோமர்கள் (ருசு) உ. வராகன்=எல்லா சத்துக்களின் ஆரோபம், ரு. சோமன்=சர்வேசன், சு. வனத்தில்=சலத்தில், வருணனை= சட்டத்தை (ருகூ) கூ. சகோதரிகள்=சாதனங்கள். (ருகூ) ௩. இந்திரனுக்கு=ஆன்மாவிற்கு. (ருஎ) ௰. புல்லில்=உணர்வில், ௰க. அவனை அறிய தங்களை சுத்தஞ் செய்து கொள்கிருர் கள். ௰க. பசுவை=பிராணனை. (ருஅ)-ரு. நதிகளின்=ஒட்டங் களின் ரு. (கூ0) க. ஐசுவரியத்தை எனப் படிக்கவும். ச - கூ. வருணன் முதலிய பெயர்கள் இந்திரனையே குறிக்கும்

(கூக) ரு பிரதன்=விஸ்தரிப்பவன்=பிராணன். அபிர தனை சப்பிரதன், அனுஷ்டபினுடைய என்பதை அனுஷ்டுபி னுடைய எனப் படிக்கவும், சப்பிரதன்=அபானன். அனுஷ்டு பினுடைய=இசையினுடைய. ரதன்தரத்தை=புலனை. கூ. வீட்டிற்கு ஆத்மாவிற்கு. (கூஉ) ௩. செய்தாய்=செய்கிருய். நீக்கினய்=நீக்குகிருய். ரு. மூன்று எழான=உக சந்தசுகளுட னை. ௰உ. நெய்யாகும்=ஒளியுள்ளதாகும். அமுதலாணி யுடன் பேசுவேன். (கூ௩) ச. மூன்று பாதங்கள்=மூன்று காலங்கள். கூ. அபானனுன எனப் படிக்கவும். கஉ. இந்த சலம் சுகமான சுவாசமாகட்டும் எனத் திருத்தவும். (கூசு)உ. சூரியன்=ஈசன். ௩. தேவர்களின்=புலன்களின். மித்ரன்= பிராணன். அக்னியின்=ஆத்மாவின். ௩. பசு=சீவன். தாய் =பூமி, ரு. பகலில்=அறிவில்: ௰௩. பெண்களான=ரசிமி களான. கச. (கூரு) இந்திரன் ஈசன் புருவசுவே=வெகு ஐசுவரியமுள்ளவனே. (கூகூ) பூஷணன் முதலியவர்கள் ஈச னையே குறிக்கும். (கூஎ) க. இந்துவிற்கு=ஈசனுக்கு. ௩. அதர்வணர்கள்=அறிஞர்கள், சோமர்கள் = சத்தியத்திவலை கள். கூ சமுத்திரத்தை=சர்வேசனை. (கூஅ) புற்களில்— புல்லில்=இருதயத்தில். உ. சமித்துக்களால்=செயல்களால். ச. சோமனைப் பருகவும்=ஆத்மாவைக் கவரவும். அ. ரோ மங்களுடனை=ஒளிகளுடனை. கஉ. சோமனின்=சீவனின் (கூகூ) உ. இந்திரனுக்கு=ஆத்மாவிற்கு. ரு. ஸ்தனத்தை=

சக்கிரத்தை. (எ0) ரு. அணுகுவாயே என்பதை அணுகுவாயோ எனப் படிக்கவும். கூ. சுபமான நாசியுள்ள=சுபமான ஒளியுடனுன. (எக) கூ. நாயை=மொழியை. நாக்குள்ள=சப்தமுள்ள. கஉ. மூன்ருவதில்=மூன்று குணங்களுக் கப்பால்.

(எஉ) கூ. உன் மகிமை எங்கள் மனத்தில் எழுச்சியாக்குகின்றன. க0. குதிரைகளே=சாதனங்களே. (எரு). கக. எழான சனங்கள்=ஐந்து புலன்கள், நினைவும், நாட்டமும். சோமனுக்கு=சந்தோஷத்திற்கு. கஉ. திரிக துர்க்கங்களில்=மூன்று உலகங்களில். (எச) ங. குண்டபய்யனுக்கு=அனுபவிக்கு=சாதனத்திற்கு. சிருங்க விருஷனின் மகன்=ஆத்மா. ச. கைகளுடனுன=சாதனங்களுடனுன. (எரு) ங, இருவயிறு=எங்கும். ச. சூரியன்=ஞானம். உஷையோடு=அறிவோடு (எகூ) ரு. அசுவினிகளே=தூல சூட்சம புலன்களே. (எஎ) க. ரிஷியினிடமிருந்து=சத்தியத்திடமிருந்து. வெண்மையான பாலை = புனிதமான அறிவை. உ. எழு ஒட்டங்கள் = ஐம்புலன் மனம் ஆத்மா. (எஅ) க. எருமை = பல வடிவம். ச. தண்டின் =நாடியின். ரு. அர்ச்சுனன்=அழகன். அ. திருதனின் பெண்கள்=ஆத்மாவின் ரசிமிகள். கக. மக்களை——. =அறியாமையை அறிவுஅகற்றுவது போல். நாயை = அடிமை விரும்புபவனை. (எகூ) க0. புனிதமாக்கப்பட்டு = அறியப்பட்டு. (அ0) இரண்டாவது வரியில் கூ என்பதை நீக்கி, அப்பால் மேதாதிதி எனப் படிக்கவும்.

(அக) ரு· செடியை=நாடியை. (அங) ஐந்து சனங்கள் =ஐந்து புலன்கள். (அச) ங. மூன்று=மூன்று காலங்களின். எழு——தாரையை=ஐம்புலன் மனம் ஆத்ம சத்தை. (அரு) கூ. களைப்பன்னியில் எனப் படிக்கவும். கக. பட்சி கொண்டு வந்தது=பிராணயாமப் பயிற்சி கொண்டுவரும். (அகூ) மித்ர வருணர்களே=நன்மை புன்மையே. (அஎ) உ. சூடற்றவன் =உணர்ச்சி யில்லாதவன். கூ. உஷையை=உதய அறிவை. (கூ0) எ. சர்மத்தை=அறியாமையை.

(கூஉ) சு. கற்களால் தியானங்களால். (கூங) ங திரிஸ் தானம் = தேகம் மனம் ஆத்மா. ச. வருணனே = நாசகாரியே. எ. ததீசியின் = தியாகத்தின். அ. தலையை = முதன்மையானதை. அ. சயர்ணவதி = இருதயம். கூ. சந்திரனின் = மனத்தின். பசுவின் = பிராணனின். துவஷ்டாவினுடைய = வடிவத்தின். (கூரு) ரு. மேஷத்தை = ஈசனே. அ. புருஹன் மனனே = ஆன்மாவே. (கூசு) க. வனத்தில் = ஈரத்தில். கஙகூ வது பக்கத்தில் கண்டம் சுஎ. என்பதை கூஎ எனப் படிக்கவும். (கூஎ) எ. அடிப்பவனே = பிரயோகஞ் செய்துக்கொள்பவனே.

(க0ங) க. மலையில் = உயரத்தில். சு. பெண்களின் = அறிவுகளின். (க0சு) கங. துவஸ்ரவர்களிடமிருந்து—— —. = சமான சுபாவர்களிடமிருந்து. (ககஎ) க. வத்ஸன் = மகனை நான். (கககூ) ரு. இந்துக்கள் = சோம துளிகள் = சத்தியமென்னும் துளிகள் எ. தன்னை = ஆத்மாவை.

(கஉச) ச. ஹரி = சத்துருவை யழிப்பவன். (கஉசு.) ச. சுவர்கத்தின் = நன்மையின்.

(கஙச) ரு. செல்லுகிறார்கள் என்பதை சொல்லுகிறார்கள் எனப் படிக்கவும். (கஙரு) உ. ஹரிச்சந்திரன் = அழிப்பவனும் ஆனந்த மளிப்பவனும் (கஙசு) க. பசுக்களுக்கு = பிராணிகளுக்கு. ககூச பக்கத்தில் கண்டம் கஙசு ஐ கஙகூ எனப் படிக்கவும்.

(கசரு) ச. மூன்று சிகரத்தலைவன் = மூன்று காலத்தலைவன். (கருங) ங. சுவர்கத்தில் = நன்மையில். இந்திரன் = மனிதன். அக்னியை = ஈசனே. எ. திரிகத்துருகங்களில் = மூன்று உலகங்களில்.

(கசுசு) கூ. சிபிவிஷ்டன் = ஒளிக்கூட்டத்திலிருப்பவன். (கசுஎ) எ. வாலுள்ள குதிரையை = சாதன சத்தியை.

(கஎஎ) க. சமித்துக்களால் = சாதனங்களால். (கஎஅ) க. உஷைகள் = அறிவு. (கஎகூ) உ. குதிரையை = சத்தியை. காண்வர்கள் = அறிஞர்கள், அலங்கரிக்கிறார்கள் = நாடுகிறார்கள். (கஅஎ) ச. பிருஹஸ்பதியே = பெரிய தலைவனே.

# ௨. ஸாமன் குறிப்பு

| ஸாம | ஸாமன் | | ஸாம | ஸாமன் | | ஸாம | ஸாமன் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| எ | க | ம | எ | க | ம | எ | க | ம |
| ௧ | ௧ | ௧௦ | ௨௭ | ௩௮ | ௧௦ | ௫௪ | ௬௩ | ௧௨ |
| ௨ | ௭ | ௧ | ௨௮ | ௩௯ | ௩ | ௬௨ | *௬௫ | ௧௯ |
| ௩ | ௯ | ௧௦ | ௨௯ | ௪௫ | ௯ | ௬௩ | †௬௬ | ௧ |
| ௪ | ௧௦ | ௨ | ௩௦ | ௪௬ | ௧ | ௬௪ | ௬௭ | ௭ |
| ௫ | ௧௦ | ௩ | ௩௧ | ,, | ௨ | ௬௫ | ,, | ௮ |
| ௬ | ௧௬ | ௧௦ | ௩௨ | ,, | ௫ | ௬௬ | ௯௭ | ௯ |
| ௭ | ௧௮ | ௮ | ௩௩ | ,, | ௮ | ௬௭ | ௧௫௫ | ௧ |
| ௮ | ௨௦ | ௬ | ௩௪ | ,, | ௯ | ௬௮ | ,, | ௨ |
| ௯ | ௨௨ | ௨ | ௩௫ | ,, | ௧௦ | ௬௯ | ௧௬௬ | ௭ |
| ௧௦ | ,, | ௬ | ௩௬ | ௪௭ | ௩. | ௭௦ | ,, | ௮ |
| ௧௧ | ,, | ௯ | ௩௮ | ,, | ௪ | ௭௧ | ,, | ௯ |
| ௧௨ | ௨௪ | ௨ | ௩௯ | ,, | ௭ | ௭௨ | ௧௭௩ | ௧௦ |
| ௧௩ | ,, | ௪ | ௪௦ | ,, | ௯ | ௭௩ | ,, | ௧௧ |
| ௧௪ | ,, | ௯ | ௪௧ | ,, | ௧௦ | ௭௪ | ,, | ௧௨ |
| ௧௫ | ௩௦ | ௬ | ௪௨ | ௪௮ | ௨ | ,, | ,, | ,, |
| ௧௬ | ௩௧ | ௨ | ௪௩ | ௬௦ | ௩ | ,, | ,, | ,, |
| ௧௭ | ,, | ௭ | ௪௪ | ,, | ௫ | ,, | ,, | ,, |
| ௧௮ | ,, | ௮ | ௪௫ | ,, | ௬ | ௭௫ | ௧௮௪ | ௫ |
| ௧௯ | ௩௨ | ௩ | ௪௬ | ,, | ௯ | ௭௬ | ௧௮௫ | ௬ |
| ௨௦ | ௩௩ | ௯ | ௪௭ | ௬௨ | ௭ | ௭௭ | ,, | ௭ |
| ௨௧ | ௩௪ | ௫ | ௪௮ | ,, | ௧௦ | ௭௮ | ,, | ௮ |
| ௨௨ | ௩௫ | ௫ | ௪௯ | ௬௩ | ௧ | ௭௯ | ,, | ௯ |
| ௨௩ | ,, | ௬ | ௫௦ | ,, | ௨ | ,, | ,, | ,, |
| ௨௪ | ௩௭ | ௨ | ௫௧ | ,, | ௯ | ,, | ,, | ,, |
| ௨௫ | ௩௭ | ௫ | ௫௨ | ,, | ௧௦ | ,, | ,, | ,, |
| ௨௬ | ௩௮ | ௨ | ௫௩ | ,, | ௧௧ | ௮௦ | ௧௬௬ | ௧௦ |

* மகா நாம்னியார்சிகம் † பஞ்சபுரீஷாபதங்கள்

| ஸாம ஸாமன் | | | யஜுர் ஸாமன் | | | அதர்வ ஸாமன் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| எ | க | ம | எ | க | ம | எ | க | ம |
| அக | ,, | கக | அகூ | கஅ௫ | க௪ | அஎ | ௪அ | அ |
| அஉ | ,, | கஉ | | | | அஅ | ௪உ | க |
| ,, | ,, | ,, | | | | அகூ | ௪௩ | அ |
| ,, | ,, | ,, | | | | கூ0 | கஅஎ | கஉ |
| ,, | ,, | ,, | | | | ,, | ,, | ,, |
| அ௩ | கஅ௫ | க0 | | | | | | |
| அ௪ | ,, | கக | | | | | | |
| அ௫ | ,, | கஉ | | | | | | |

ரிக் ஸாமன்:—மிகுதி ரிக்கிலிருந்து எழுதியவையாகும்.

ஸாம ஸாமன் என்றால் வேறு மூன்று வேதங்களிலுமில்லாத மந்திரங்கள். யஜுர் ஸாமன், அதர்வசாமன், ரிக் ஸாமன் என்றால் முறையே யஜுர், அதர்வம் ரிக்வேதத்தினின்று எடுக்கப்பட்டவை. எ=தொடர்ச்சி நம்பர்கள். க=கண்டங்கள். ம=மந்திரங்கள்.

இச்சாம வேதத்துடன் ஆசிரியர் வேத சந்திரிகை யஜுர் வேதக் கதைகள் உபநிஷத்தக்கதைகள் கடோபநிஷதம் யோகாசனத்தைப் படிக்கவும். ஜம்புநாதன் புஸ்தகசாலை, க௪, பள்ளியப்பன் தெருவு, சௌகார் பேட்டை, சென்னை.